# நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல்

பாடங்களும் படிப்பினைகளும்

கலாநிதி முஸ்தபா ஸிபாஈ



தமிழில்: அஷ்ஷெய்க் அம்ஜத் ஜுனைத் (நளீமி)

இலவச வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAIZAL FAREED
AHATHTHIMURIPPU

# நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல்

## பாடங்களும் படிப்பினைகளும்

கலாநிதி முஸ்தபா ஸிபாஈ

தமிழில்: அம்ஜத் ஜுனைத் (நளீமி)

MMC

**Meelparvai Media Centre**

49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09, Sri Lanka.
Tel: 011 2691258, 077 2227569
Email: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Title:** Nabi (Sal) Awarhalin Waalviyal - Paadangalum Padippinaihalum
**Author:** Dr. Musthafa Sibayi, **Translated by:** Amjad Junaid (Naleemi)
**Pages:** 210, **First Edition:** January 2010, **Second Edition:** May 2014,
**Copies:** 1500, **Layout & Cover Design:** Azar Wazeer,
**Printers:** A.J. Prints (Pvt) Ltd,
**Publishers:** MMC, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09
**Copyright:** © MMC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்

| | |
|---|---|
| நூலாசிரியரின் முன்னுரை | 1 |
| மொழிபெயர்ப்பாளர் உரை | 5 |
| பதிப்புரை | 8 |
| இரண்டாம் பதிப்புரை | 10 |
| ஸீறாவின் சிறப்பம்சங்கள் | 13 |
| ஸீறாவின் அடிப்படை மூலாதாரங்கள் | 26 |
| நபித்துவத்துக்கு முந்திய வரலாறு | 33 |
| நபித்துவம் கிடைத்ததிலிருந்து ஹபஷா ஹிஜ்ரத் வரை | 45 |
| ஹபஷா ஹிஜ்ரத் முதல் மதீனா ஹிஜ்ரத் வரை | 55 |
| ஹிஜ்ரத் முதல் மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் நிலைகொள்ளும் வரை | 65 |
| நபி (ஸல்) அவர்கள் கலந்துகொண்ட யுத்தங்கள் | 85 |
| மக்கா வெற்றி கொள்ளப்பட்டது முதல் நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகள் | 149 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் முன்னுரை

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே, அவன் மனித குலத்தை இருளிலிருந்து ஒளியின்பால் மீட்டெடுக்கவும் அவனது நேரான பாதையில் வழிநடத்திச் செல்லவுமே, நேர்வழியையும் அத்தாட்சிகளையும் வழங்கி இவ்வுலகுக்கு தூதர்களை அனுப்பி வைத்தான்.

அந்தத் தூதர்களில் மிகவும் சிறப்புக்குரியவராக விளங்கும் எமது தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக. அல்லாஹ் அவர்கள் மூலமாகவே தூதர்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தான். அவர்களது வாழ்க்கையை முஃமினுடைய வாழ்க்கை யின் சிறிய பெரிய கூறுகள் அனைத்துக்கும் முன்மாதிரியாக அமைத்து வைத்தான். அனைத்து ஷரீஆக்களையும் அவர்கள் மூலமாகவே பூரணப் படுத்தி விட்டான். மேலும், அவர்களது தூதை எல்லாக் காலங்களிலும் சூழல்களிலும் வாழுகின்ற அனைத்து மக்களின் தேவைகளுக்கும் முழுமை யாக வழிகாட்டக் கூடிய பூரணத்துவமான தூதாகவும் அமைத்து வைத்தான். அல்லாஹ், அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லி அருள்வானாக.

அவர்களின் அழைப்பை ஏற்று நேர்வழிபெற்ற, உறுதியான ஈமானுட னும் அர்ப்பணிப்புடனும் என்றென்றும் அவர்களுக்குத் துணையாக நின்ற தோழர்களான ஸஹாபாக்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக. ஏனெனில், அவர்களே பூமியின் எல்லாத் திசைகளிலும் உள்ள சமூகங்களுக்கு இஸ்லாத்தின் தூதைச் சுமந்து சென்று எத்தி வைத்தவர்களாவர். அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்தவர்களாவர். அந்த வகையில் மனித குல வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமட்டும் அவர்களுக்கென்று தனித்துவமான அந்தஸ்தும் சிறப்பும் உள்ளன. இந்த உலகம் அழியுமட்டும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாவர். அல்லாஹ் அவர்களையும் அவர்களை நேசித்து மறுமைநாள் வரை இந்த அழைப்புப் பணியை சுமந்து செல்லக் கூடிய அனைவரையும் பொருந்திக் கொள்வானாக.

இவை ஷரீஆ (இஸ்லாமிய சட்ட) பீடத்தில் கற்கின்ற முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்கிய விரிவான விரிவுரைகளைத் தொடர்ந்து அவசர மாக எழுதி முடித்த குறிப்புக்களாகும். நான் அவ்வேளை கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தேன். நான் (ஸல்) அவர்களின் (ஸீறா) வாழ்க்கைச் சரிதையில் மிகத் தெளிவான முன்மாதிரிகள் காணப்படுகின்றன என்பதை இதில் விளக்கியுள்ளேன்.

இஸ்லாமிய ஷரீஆ துறையை கற்பவர்கள், அல்லாஹ்வின் பாதையில் அழைப்புப் பணியில் ஈடுபடக்கக்கூடிய அழைப்பாளர்கள் மட்டுமன்றி அனைத்து முஸ்லிம்களும் இவற்றை ஆழமாகக் கற்றுக்கொள்வதும் அவற்றை வாழ்க்கையில் எடுத்து நடப்பதும் அவசியமெனக் கருதுகின் றேன். அப்போதுதான் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றிய சிறப்பை அடைந்துகொள்வார்கள். அவர்கள் மேற்கொள்ளும் தஃவாப் பணி வெற்றியடைவதற்கான பாதைகள் திறந்து விடபடும். மேலும், அவர்கள் அல்லாஹ்வினுடைய அங்கீகாரத்தையும் திருப்தியையும் பெற்று நபிமார் களுடன் சுவனத்திலே நிரந்தரமாக வாழ்ந்து சிறப்படைவதற்கான வாய்ப்புக் கள் கிட்டும். இதனையே அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

> ''யார் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பின்பற்றுகிறாரோ அவரை அல்லாஹ் ஆறுகள் ஓடுகின்ற சுவனங்களிலே நுழையச் செய்வான். அவர்கள் அவற்றிலே நிரந்தரமாக இருப்பார்கள். அதுவே மிக உயர்ந்த வெற்றியாகும்.'' (அந்நிஸா : 13)

அந்த வகையில், எனது இந்த ஆய்வைப் பின்வரும் ஒழுங்கில் அமைத்துள்ளேன்:-

1. முன்னுரை: இது இரண்டு ஆய்வுகளை உள்ளடக்கியுள்ளது.

அ) நபி (ஸல்) அவர்களுடைய ஸீறாவின் (வாழ்க்கை வரலாற்றின்) சிறப்பும் அதனைக் கற்பதனால் கிடைக்கின்ற பயனும்.

ஆ) ஸீறாவைக் கற்பதற்கான ஆதாரபூர்வமான மூலாதார நூல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நபியவர்களின் வாழ்க்கை வரலாறு. இது பத்துப் பிரிவுகளைக் கொண்டது.

i) நபித்துவத்துத்துக்கு முந்திய அவர்களின் வரலாறு

ii) நபித்துவம் கிடைத்ததிலிருந்து ஹபஷா ஹிஜ்ரத் வரையிலான காலப்பிரிவு.

iii) ஹபஷா ஹிஜ்ரத் முதல் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ளும் வரையான (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு.

iv) மதீனா ஹிஜ்ரத் முதல் அங்கு நபி (ஸல்) நிலை கொள்ளும் வரையான காலப்பிரிவு.

v) பத்ரு யுத்தம் முதல் மக்கா வெற்றி வரையான நபி (ஸல்) அவர்ளின் போராட்ட வரலாறு.

vi) மக்கா வெற்றியைத் தொடர்ந்து அறபுத் தீபகற்பத்தில் இஸ்லாம் பரவுதல்.

vii) மக்கா வெற்றி முதல் வபாத் வரையிலான கால கட்டம்.

viii) மதீனாவில் அறிமுகமான இஸ்லாமிய சட்டவாக்கத்தின் சிறப்பம் சங்கள்.

ix) நபி (ஸல்) அவர்களின் பண்புகளும், அவர்களுக்கெதிரான கீழைத்தேயவாதிகள், கிறிஸ்தவர்களின் கட்டுக் கதைகளும்.

x) நபி (ஸல்) அவர்களும் அவர்களது தூதும் உலகில் ஏற்படுத்திய தாக்கம்.

ஷரீஆ பீடத்தில் ஸீறா பாடத்தைக் கற்பதன் அடிப்படை இலக்கை அடைந்துகொள்ளக் கூடிய வகையிலே நபி (ஸல்) அவர்களின் ஸீறாவை சீராக ஆராய்வதற்கான அருளை இந்தக் குறுகிய, அவசரமான காலப் பகுதியில் அல்லாஹ் எனக்குத் தந்தருள்வானாக. இதன் மூலம் இத்துறை சார் மாணவ மாணவியருக்கு நபி (ஸல்) அவர்களின் தூய வரலாற்றை ஆழமாகக் கற்றுக்கொள்வதற்கான வேட்கையை அருள்வானாக, மேலும் அதன் பாடங்களையும் படிப்பினைகளையும் தமது உள்ளங்களில் ஆழமாகப் பதித்து, தமது சீரான வாழ்க்கை முறை மூலம் சிறந்த வழிகாட்டி களாகவும், முன்மாதிரிகளாகவும் திகழ அருள்பாலிப்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் வாழ்வில் இருளடைந்த பக்கங்களை ஒளியூட்டவும் அவர்களது உள்ளங்களுக்கும் அறிவுக்கும் நடைமுறைகளுக்கும் வழி காட்டவும் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வழியமைக்கும். இதன் பயனாக முஸ்லிம் சமூகம் அதன் தூய்மையையும் சீர்மையையும் உயர்வையும் மீளப் பெற்று உலக சமூகங்களுக்குத் தலைமைத்துவம் வழங்கக்கூடிய முதன் நிலை சமூகமாக மாற்றமடையும். அல்லாஹ் முஸ்லிம்களாகிய எங்களைப் பார்த்து பின்வருமாறு கூறிய வார்த்தைகள் மீண்டுமொரு முறை உண்மைப்படுத்தப்படும்.

''மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சமூகங்களில் நீங்கள் சிறந்த சமூகமாக இருக்கிறீர்கள் (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்.''
*(ஆல இம்றான் : 110)*

முஸ்தபா ஸிபாஈ
டமஸ்கஸ்
ரமழான் மாதம் ஹிஜ்ரி 1381

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பாளர் உரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்துப் பரிபாலிக்கும் வல்ல அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். முழு மனித இனத்துக்கும் வழிகாட்டியாக வந்த இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலாமும் ஸலவாத்தும் கூறுவோமாக.

நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு குறித்து ஆரம்ப காலம் முதல் இன்று வரை தொடர்ந்தும் பல்வேறு நூல்கள் வித்தியாசமான கோணங்களில் இருந்து எழுதப்பட்டு வருகின்றன. உதாரணமாக, சில நூல்கள் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்வில் இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகளைத் தொகுத்துத் தருவனவாக உள்ளன. மேலும் சில நூல்கள், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலிருந்து பெறக் கூடிய பிக்ஹ் சட்டங்களை அடையாளப்படுத்திக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. ஆனால், கலாநிதி முஸ்தபா ஸிபாஈ அவர்களினால் எழுதப்பட்ட இந்நூல் வித்தியாசமானதொரு கோணத்திலிருந்து எழுதப்பட்டுள்ளது. அதாவது நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளை சுருக்கமாக எடுத்துக் கூறியதன் பின்னர், அவற்றினால் பெறக்கூடிய படிப்பினைகளைக் குறிப்பிட்டுள்ளார். குறித்த படிப்பினைகள் தற்காலத்தில் இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடக் கூடியவர்கள் பயனடையும் வகையில் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

கலாநிதி முஸ்தபா ஸிபாஈ அவர்கள் நடைமுறை உலக நிகழ்வுகளிலிருந்து ஒதுங்கி நின்று தன்னைச் சுற்றியுள்ள நூல்களை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் இந்நூலை எழுதவில்லை. மாறாக பலஸ்தீனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்த கலாநிதி அவர்கள், சிரிய இஸ்லாமிய அமைப்பின் முக்கிய பங்காளாராகவும் செயற்பட்டார். மேலும், டமஸ்கஸ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடையாற்றிய அவர், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஷரீஆத் துறை மாணவர்களுக்குக் கற்பித்துக் கொடுக்கக் கூடியவராகவும் விளங்கினார்.

மாத்திரமன்றி, இஸ்லாமிய தஃவாப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அவர், அல்லாஹ்வின் திருப்தி ஒன்றை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்படக் கூடியவராகவும் காணப்பட்டார். இதன் காரணமாக, போராட்டக் களத்திலும் தஃவா களத்திலும் கிடைத்த அனுப வங்களை ஸீறாவிலிருந்து பெற்றுக் கொண்ட படிப்பினைகளோடு இணைத்துக் கூறி, தஃவாப் பணியில் ஈடுபட விரும்பும் ஒவ்வொருவரும் அதிகம் பயன்பெறும் வகையில் அமைந்த தனது கருத்துக்களையும் உபதேசங்களையும் குறித்த நூலில் அழகுற முன்வைப்பதற்கு அவருக்கு வாய்ப்பேற்பட்டது.

இஸ்லாத்தின் தூதை மனித குலத்திற்கு எத்திவைக்க விரும்புகின்ற எவரும், நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு குறித்து ஆழமாகக் கற்றிருப்பதும், அவர்கள் எவ்வாறு தனது தஃவாப் பணியை முன்கொண்டு சென்றார்கள் என்பதைத் தேடிப் படிப்பதும் மிக அவசியமானதாகும்.

நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய சீரிய வாழ்க்கை வரலாற் றின் மீதும் கலங்கம் கற்பிக்கும் நோக்கில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இக்கால கட்டத்தில் நபி (ஸல்) அவர்களின் வரலாற்றை கற்றுக் கொள்ள வேண்டியதன் தேவை ஒவ்வொரு முஸ்லி மின் மீதும் கட்டாயக் கடமையாக உள்ளது.

எமது உயிரிலும் மேலான நபி (ஸல்) அவர்களின் ஸீறாவைக் கற்பதன் ஊடாக மாத்திரமே அவர்கள் எவ்வாறு எதிரிகளை பொறுமையோடு இருந்து எதிர்கொண்டார்கள், இஸ்லாமிய தூதை எத்திவைப்பதற்காக அவர்கள் எவ்வாறு, எத்தகைய தியாகத்தை மேற்கொள்ளத் தயாராக இருந்தார்கள்? அடிப்படை விடயங்களில் எத்தகைய விட்டுக் கொடுப்பு மின்றி மிகத் தெளிவான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதையெல்லாம் இந்த ஸீறாவின் ஊடாகவே எங்களால் கற்றுக்கொள்ள முடியமாகிறது.

இந்நூல் மிகச் சுருக்கமாக விடயங்களை முன்வைத்த போதிலும் அவற்றினூடாக நாம் நிறையவே கற்றுக் கொள்கிறோம். கலாநிதி அவர்கள் ஸீறாவின் மிக முக்கியமான நிகழ்வுகளை மாத்திரம் சுருக்கமாகக் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றினூடாக நாம் பெறக் கூடிய படிப்பினைகளை இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

கலாநிதி அவர்களின் இம்மேலான முயற்சியை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக. அவனது பொருத்தத்தையும் ஜன்னத்துல் பிர்தவ்ஸ் எனும் உயரிய சுவனத்தையும் அவர்களுக்கு வழங்கியருள்வானாக.

இது போன்றதொரு ஆக்கபூர்வமான பணியைச் செய்ய வேண்டும் என்ற ஆசை மனதுக்குள் நெடுநாளாகவே இருந்தது. அந்த வகையில் இம்மொழிபெயர்ப்புப் பணியை அழகுற நிறைவு செய்வதற்கு அருள் பாலித்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். மேலும் இதற்காகப் பங்களித்த அனைவருக்கும் அல்லாஹ்வின் மேலான பாவமன்னிப்பும் நற்கூலிகளும் கிட்டட்டும். நபி (ஸல்) அவர்களின் ஸீறாவை தமிழ்மொழி மூல வாசகர் களுக்கு முன்வைக்க மேற்கொள்ளப்பட்ட இந்த சிறு முயற்சியை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக, ஆமீன்.

அம்ஜத் ஜுனைத்
56, கெடகும்புர, பம்பரதெனிய.
hamjad622@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

அல்குர்ஆன் என்ற கொள்கை விளக்க நூலின் பிரயோக வடிவமாக அமைந்திருந்த நபி (ஸல்) அவர்களது வாழ்வு, கால-தேச வர்த்தமானங் களைக் கடந்து மனித இனத்துக்கு என்றும் அவசியமான அடிப்படை வழிகாட்டல்களைத் தந்து நிற்கிறது. அந்த வாழ்வினை பல்வேறு கோணங்களில் அணுகி, அதிலுள்ள படிப்பினைகளையும் இஸ்லாமிய வாழ்வியல் தத்துவங்களையும் எடுத்து விளக்குகின்ற பல படைப்பாக்க முயற்சிகள் அண்மைக் காலங்களில் அதிக முனைப்புப் பெற்று வருவதைக் காண முடிகிறது.

அறபு மொழியில் அமைந்த அத்தகைய நூலொன்றை தமிழ் வாசகர் களுக்கு முன்வைப்பதில் பெரும் மகிழ்வடைகிறோம். எகிப்து நாட்டு இஸ்லாமிய அறிஞர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க ஒருவரான கலாநிதி முஸ்தபா ஸிபாஈ அவர்கள் எழுதிய 'ஸீறா நபவிய்யா -துறூஸ் வ இபர்' என்ற அந்நூலே 'நபி (ஸல்) அவர்களின் வாழ்வியல் -பாடங்களும் படிப் பினைகளும்' என்ற தலைப்பில் இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்களது வரலாற்றை நிகழ்வு வாரியாக அணுகி, அதிலுள்ள பாடங்களையும் படிப்பினைகளையும் சுருக்கமாக வெளிக் கொணர முயல்கிறது இந்நூல். இஸ்லாத்தின் தூதரை இழிவுபடுத்துவத னூடாக இஸ்லாம் என்ற உன்னத வாழ்க்கை நெறியை விகாரப்படுத்திக் காட்ட முனையும் எதிரிகளின் பிரயத்தனங்களுக்கு இவ்வாறான வெளியீடுகள் சிறந்த எதிர்வினையாற்றுவது மட்டுமன்றி, அவர்களது வரலாறு தொடர்பான சிறந்த தெளிவுகளைப் பெறவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே 'மீள்பார்வை' பத்திரிகையில் தொடராக வெளிவந்த இம்மொழிபெயர்ப்பு பல வாசகர்களது வேண்டுகோளுக்கிணங்க இங்கு நூலுருப் பெற்றுள்ளது.

இதனை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்து, நூலாக வெளியிடவும் ஒத்துழைத்த சகோதர் அஷ்ஷெய்க் அம்ஜத் ஜுனைத் அவர்களுக்கு எமது ஆழ்ந்த நன்றிகள்.

நூலின் மொழியைச் செம்மைப்படுத்துவதிலும், ஒப்புநோக்கிச் சரிபார்ப்பதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொண்ட சகோதர்களான எம்.எச்.எம். நாளிர் ஆசிரியர், அஷ்ஷெய்க் நாஸிக் மஜீத் ஆகியோருக்கும், தளக்கோலம் மற்றும் அட்டைப் படம் ஆகியவற்றை வடிவமைத்த சகோதரர் அஸார் வஸீர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இப்பணியை வல்ல அல்லாஹ் அங்கீகரிப்பானாக!

**பதிப்பாசிரியர்**
20.01.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பதிப்புரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்விற்கே அனைத்துப் புகழும். அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவரது குடும்பத்தார், தோழர்கள், நல்லடியார்கள் மீதும் உண்டாவதாக.

முஹம்மத் (ஸல்) அவர்களை அல்லாஹ் அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பினான். இதனை அல்குர்ஆன் இப்படிக் குறிப்பிடுகின்றது. ''உலக மக்களுக்கோர் அருட்கொடையாகவே உம்மை நாம் அனுப்பி வைத்தோம். *(அல் அன்பியா: 107)*

நபியவர்கள் மூலம் அல்லாஹ் நபித்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தான். மறுமை வரைக்கும் மானிட சமுதாயத்திற்கு நேர்வழிகாட்டும் பொறுப்பை அன்னாரிடம் ஒப்படைத்தான். எனவே முஹம்மத் (ஸல்) அவர்கள் மனித வாழ்வின் அனைத்துப் பகுதிக்கும் வழிகாட்டும் ஏக வழிகாட்டியாக திகழ்ந்தார்கள். அம்மாமனிதரின் முழு வாழ்வியலுமே மனித குலத்திற்கான அழகிய முன்மாதிரிகளால் நிரம்பி வழிந்தன. இந்த உண்மையைத்தான் அல்குர்ஆன் இப்படிக் குறிப்பிடுகின்றது.

''அல்லாஹ்வின் தூதருடைய வாழ்வில் உங்களுக்கு அழகிய முன்மாதிரிகள் காணப்படுகின்றன'' *(அல் அஹ்ஸாப்: 21)*

மனித வரலாற்றில் பல்வேறு தலைவர்கள் தோன்றி மறைந்திருக்கின்றார்கள். ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களைப் போன்ற ஒரு தலைவரை மனித வரலாறு கண்டதே இல்லை. அவரது அழகிய முன்மாதிரிகளுக்கும், நற்பண்புகளுக்கும் அவரே நிகரானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிச்சயமாக நீங்கள் உயர்ந்த பண்பாடுகளைக் கொண்டவர்" (அல்கலம்:04) என்று அல்லாஹ்வே சான்று பகரும் அளவுக்கு சீரிய நற்பண்புகளாலும், நல்லொழுக்கங்களாலும், அழகிய முன்மாதிரிகளாலும் இஸ்லாத்தை பரப்பிய ஓர் ஏக தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள். எனவே அவரது வாழ்க்கை சரிதம் சாதாரண ஒரு மனிதனின் சுய சரிதமல்ல. மாறாக அது இஸ்லாமிய நாகரீகத்தின் வரலாறு, அழகிய முன்மாதிரிகளின் பொக்கிஷம், மானுட வியலுக்கான ஒரு கலைக்களஞ்சியம். அனைவ ராலும் மீட்டி மீட்டிப் படிக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நடை முறைப்படுத்தப்பட வேண்டியது.

இஸ்லாத்தின் மீதும், முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் காட்புணர்ச்சி கொண்ட இஸ்லாத்தின் எதிரிகள் அன்று தொடக்கம் இன்று வரை முஹம் மத் (ஸல்) அவர்களுக்கு எதிராக பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். நவீன சியோனிசத்தின் இன்றைய போராட்டம் ஒரு வித்தியாசமான பரிமாணத்தை பெற்றிருக்கின்றது. உலக ஊடக வியலில் தன்னாதிக்கம் செலுத்தும் இவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் புனிதமான வாழ்வியலையும், அவரது ஆளுமையையும் சிதைத்து, வர லாற்றை களங்கப்படுத்த ஊடகப் போராட்டம் ஒன்றை நடாத்தி வரு கின்றார்கள்.

ஆபாச கேலிச்சித்திரங்களில் ஆரம்பித்து, ஆபாச சினிமாவாக பிர வேசமெடுத்துள்ள அப்போராட்டம் சியோனிசத்தின் அநாகரீகத்தையே எடுத்துக்காட்டுகின்றது. உலகில் கருத்துச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் என ஊளையிட்டுக் கொண்டிருக்கும் சியோனிச ஓநாய்கள் மதச் சுதந்தி ரத்தை மீறி ஒரு கோடி முஸ்லிம்களின் உணர்வுகளை அவமதித்த இச் செயலை சியோனிசத்தின் காடைத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே இத்தகைய ஒரு போராட்டத்தை எதிர்கொள்ளவும், முஹம்மத் (ஸல்) அவர்களின் மீது அன்பு கொள்ளவும், அவரது ஸீறாவை பாதுகாத்து அடுத்த பரம்பரைக்கு ஒப்படைக்கவும் நாம் நபியவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆழமாகவும் தெளிவாகவும் படித்து நடைமுறைப்படுத்துவது காலத்தின் அவசியத் தேவையாகும்.

அந்த வகையில் மதிப்பிற்குரிய கலாநிதி முஸ்தபா ஸிபாயி அவர்கள் எழுதிய "அஸ்ஸீரா அன்னபவிய்யா துரூசுன் வஇபருன்" என்ற இந்நூலை காலத்தின் அவசியத் தேவையை கருத்திற் கொண்டு அதன் தமிழாக்கத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். நபியவர்களின் ஸீறாவை சரியாக விளங்கவும், படிப்பினைகளைப் பெற்று அன்னாரின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றையும், நேசத்தையும் ஏற்படுத்துவதற்கும் இந்நூல் வழிகாட்டும் என நம்புகின்றோம்.

இந்நூலை வெளியிடுவதற்கு பணவுதவி செய்த குவைத் நாட்டில் இயங்கிவரும் லஜ்னதுஸ் ஸனாபில் அல்-ஹைரிய்யா என்ற நிறுவனத்திற்கும் எமது தலைமைக் காரியாலயமான ஜம்இய்யதல் இஸ்லாஹ் இஜ்திமாஈ இற்கும் உரிய காலத்தில் இந்நூலைத் தொகுத்துத் தந்து, இதனை நூலாக வெளியிடுவதற்கு அனுமதியும் வழங்கிய மீள்பார்வை ஊடக மையத்திற்கும், எமது ஆழ்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். அல்லாஹ் இந்த முயற்சியை பொருந்திக் கொள்வானாக, அதனது பயனை அனைவருக்கும் சென்றடையச் செய்வானாக! ஆமீன்.

மோர்ஸி லங்கா
த.பெ.இல: *01*
மதுரங்குளிய.
*2014.05.08*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம்

## ஸீறாவின் சிறப்பம்சங்கள்

நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பல்வேறு சிறப்பியல்பு களைக் கொண்டது. அதனைக் கற்பதன் மூலம் மனிதன் ஆன்மீக, அறிவு, வரலாற்று ரீதியான தெளிவைப் பெற்றுக்கொள்கிறான். மட்டுமன்றி ஷரீஆத்துறை அறிஞர்கள், அழைப்பாளர்கள், சமூக சீர்திருத்தப் பணியில் ஈடுபடுபவர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரையும் இச்சிறப்பம்சங்கள் வரலாற்றை அவசியம் கற்றுக் கொள்ளத் தூண்டுகிறது. அப்போதுதான் நபியவர்கள் ஷரீஆவை முன்வைத்த ஒழுங்கில் மக்களிடம் முன்வைப்ப தற்கு உத்தரவாதமளிக்க முடியும்.

மக்களின் உள்ளங்கள் அழைப்பாளர்களுக்கு முன்னால் விரிவடையும்; அவர்கள் மேற்கொள்ளும் சீர்திருத்தப் பணி மிகச்சரியாக அமைவதற்கும் வெற்றியளிப்பதற்கும் வழியமைக்கும். இந்த வகையில் நபி (ஸல்) அவர் களின் வாழ்ககை வரலாற்றில் காணப்படக்கூடிய மிக முக்கியமான சிறப்பியல்புகள் சிலவற்றை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகிறோம்.

*(1)* உலகில் தோன்றிய நபிமார்கள் சீர்திருத்தவாதிகளின் வரலாறு களில் நம்பகத்தன்மை வாய்ந்ததும் மிகச் சரியானதுமான வரலாறாக நபி அவர்களின் வாழ்க்கை வரலாறு மாத்திரமே காணப்படுகின்றது. மேலும், நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றறிவு ஆதாரபூர்வமான அறிவிப்புக்களினூடாகவே எமக்குக் கிடைத்துள்ளது. -ஸீறாவின் அடிப்படை மூலாதாரங்கள் என்ற பகுதியில் இதனை நாம் நோக்கவுள் ளோம்- அவர்களது வரலாற்றில் இடம்பெற்ற எந்தவொரு முக்கியமான, பெரிய நிகழ்வுகளிலும் சந்தேகம் ஏற்படுவதற்கான எத்தகையதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தையும் அவை விட்டுவைக்கவில்லை. பிற்பட்ட காலங்களில் நபியவர்களின் வாழ்க்கைச் சரிதையில் புகுத்தப்பட்ட அற்புதங்கள் அல்லது நிகழ்வுகளைப் பகுத்து நோக்கி பிரித்தறிவதை இலகுபடுத்தும் வகையில் அவ்வறிவிப்புக்கள் காணப்படுகின்றன. உண்மையில் அல்லாஹ் தன்னுடைய தூதருக்கு வழங்க நாடிய தூய ரிஸாலத், உயரிய அந்தஸ்து, கலங்கமற்ற வரலாறு என்பவற்றுக்கு மேலாக வேறு சில திடுக்கிடும் பண்புகளை இணைப்பதற்கு நாட்டம் கொண்ட மடையர்கள் தான் வரலாற்றில் சிலவற்றைத் திணிக்க முனைந்திருக்கிறார்கள்.

எத்தகைய சந்தேகமற்ற, நம்பகத்தன்மை கொண்ட வரலாறாக நபி (ஸல்) அவர்களின் வரலாறு அமைந்து காணப்படுவது சிறப்பம்சமாகும். ஏலவே அனுப்பப்பட்ட எந்தவொரு தூதருடைய வரலாற்றுக்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பம்சமாக இது காணப்படுகிறது. மூஸா (அலை) அவர்களுடைய வரலாற்றைப் பொறுத்தவரையில், அவர்களுடைய வாழ்வில் இடம்பெற்ற நம்பகத் தன்மை கொண்ட நிகழ்வுகளோடு யூதர்களினால் புனையப்பட்ட இடைச்செருகல்களும் கலந்துள்ளன. எனவே, மூஸா (அலை) அவர்களுடைய உண்மையான வாழ்க்கை வரலாற்றை தற்போதுள்ள தவ்ராத்தினூடாக எமக்குப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

மேற்கத்தேய விமர்சகர்கள் கூட தவ்ராத்தின் பிரதிகள் குறித்து சந்தேகங்களை எழுப்ப ஆரம்பித்துள்ளனர். அவை மூஸா (அலை) அவர்கள் வாழும் போதோ அல்லது அதற்குப் பின்னரான கிட்டியதொரு காலத்திலோ எழுதப்படவில்லை எனவும், மாறாக அவர்கள் வபாத்தாகி நீண்ட காலத்துக்குப் பின்னரே வரலாற்றில் அறியப்படாத சிலரினால் அவை எழுதப்பட்டனவெனவும் உறுதியாகக் குறிப்பிடப்படுகின்றன.

தவ்ராத்தில் இடம்பெற்றுள்ள மூஸா (அலை) அவர்களின் வரலாற்றின் உண்மைத் தன்மையிலே சந்தேகம் கொள்வதற்கு இது ஒன்றே போதுமானதாகும். எனவே முஸ்லிமைப் பொறுத்தவரை அவன் அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் மூஸா (அலை) பற்றி இடம்பெற்றுள்ள விடயங்கள் மாத்திரமே உண்மையானவை என நம்பிக்கை கொள்ள வேண்டியுள்ளது.

இதே கருத்தினைத் தொடர்புபடுத்தித்தான் ஈஸா (அலை) அவர்களின் வரலாற்றையும் குறிப்பிட முடியும். கிறிஸ்தவ ஆலயங்களினால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ள இன்ஜீல் உண்மையில் ஈஸா (அலை) மரணித்து பல நூறு வருடங்கள் கழிந்த பின்னரே பிரதிசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. குறித்த இந்த வேத நூல் அக்காலத்தில் கிறிஸ்தவர்களிடையே பரந்து காணப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுக்கணக்கான இன்ஜீல் வேத நூல்களை அடிப்படையாகக் கொண்டு எத்தகைய அறிவுபூர்வமான வழிமுறையையும் பின்பற்றாமலே உருவாக்கப்பட்டது. இதனை எழுதியவர்கள் யாவர் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்க அமைப்பில் அறிவுபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், அதன் உள்ளடக்கம் தொடர்பு அறுபடாத அறிப்பாளர்களினூடாக அதனை எழுதியவர்களுக்கு அறிவிக்கப்படவுமில்லை. இந்த வகையில் இதனை எழுதியவர்கள் யாவர்? அவர்கள் எக்காலத்தில் வாழ்ந்தார்கள் என்பதில் மேற்கத்தேய விமர்சகர்களிடையே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன.

உலகில் பரந்து காணப்படும் மதங்களைச் சுமந்து வந்த தூதர்களினுடைய வரலாறுகளின் நிலைமையே இவ்வாறெனின், உலகில் பல நூறு மில்லியன் சனத்தொகையினர் பின்பற்றும் தத்துவஞானிகள், மதங்களை உருவாக்கியவர்களின் வரலாறுகள் எவ்வளவு தூரம் சந்தேகங்களுக்கிடமானவையாக இருக்க முடியும் என்பதை எம்மால் ஊகித்துக் கொள்ள முடியும். உதாரணமாக புத்தர், கன்பியூஷியஸ் போன்றவர்களை எடுத்து நோக்குவோம். இவர்களது வரலாறுகள் தொடர்பாக இவர்களைப் பின்பற்றுவோர் தமக்கிடையே பரிமாறிக்கொள்ளும் அறிவிப்புக்கள் எந்த வகையிலும் அறிவாராய்ச்சியின் கண்ணோட்டத்தில் எத்தகைய அடிப்படைகளும் அற்றனவாகவே காணப்படுகின்றன.

உண்மையில் இவற்றை அவர்களது மதத்தலைவர்கள் பொய்யாகப் புனைந்துரைத்திருக்கிறார்கள். கட்டுக்கதைகளும் போலிகளும் நிறைந்த அந்த வரலாறுகளில் அவர்களைத் தொடர்ந்து வந்த ஒவ்வொரு பரம்பரையும் மேலும் பல பிற் சேர்க்கைகளை சேர்த்து வந்துள்ளனர். குறித்த மதங்களில் தீவிரம் காட்டாத பகுத்தறிவுள்ள எந்தவொரு மனித ஜீவனும் இந்த வரலாறுகளை உண்மைப்படுத்த மாட்டான். மாறாக றஸூல் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையை தொடர்பு அறுபடாத அறிவிப்புக்களைக் கொண்ட மிக உறுதியான நம்பத்தகுந்த வாழ்கை வரலாறாக நாம் இனங்காணுகிறோம்.

*(02)* றஸூல் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு, அதன் எல்லாக் கட்டங்களிலும் மிகத் தெளிவானதாக உள்ளது. நபி (ஸல்) அவர்களுடைய தந்தை அப்துல்லாஹ், தாயாரான ஆமினாவை மண முடித்ததிலிருந்து ஆரம்பித்து நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகும் வரையுமான அனைத்துக் கட்டங்களிலும் இதனை அவதானிக்க முடியும். நபி (ஸல்) அவர்களுடைய பிறப்பு, சிறுபராயம், இளமை, நபித்துவத்துக்கு முந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு நிலை, மக்காவுக்கு வெளியில் மேற்கொண்ட பயணங்கள், அல்லாஹ் அவர்களுக்கு நபித்துவம் வழங்கி தூதுவராக அமர்த்தியமை எனப் பல்வேறு அம்சங்கள் குறித்து நாம் அதிகம் அறிந்து வைத்திருக்கிறோம்.

நபித்துவம் கிடைத்ததைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்திலும் நடந்த அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வு களையும், நிலைகளையும் பூரணமாகவும், தெளிவாகவும், நுணுக்கமாக வும் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். இது நபி (ஸல்) அவர்களது வாழ்க்கைச் சரிதையை சூரியன் போல மிகத் தெளிவாகப் புலப்படுத்தி யது எனலாம். இதனையே மேற்கத்தேய விமர்சகர்கள் ''சூரிய ஒளியைப் போன்ற தெளிவான வரலாற்றோடு உலகில் தோன்றிய ஒரேயொரு மனிதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மாத்திரமேயாவார்'' எனக் குறிப்படுகின்றனர்.

நபியவர்களது வருகைக்கு சிறிது காலத்துக்கு முன்தோன்றிய, அல்லது அவர்களுக்கு முன்னர் தோன்றிய அவர்களைப்போன்ற எந்தவொரு தூதருடைய வரலாற்றிலும் இத்தகையதொரு தெளிவைக் காண முடியாது. உதாரணமாக: மூஸா (அலை) அவர்களைப் பொறுத்தவரை அவர்களது நபித்துவத்திற்கு முந்திய சிறுபராயம், இளமைக் கால வாழ்க்கை குறித்த எத்தகையதொரு பின்னணியையும் எம்மால் பெற்றுக்கொள்ள முடிவ தில்லை. ஏன், நபித்துவத்துவத்துக்குப் பிந்திய அவர்களுடைய வாழ்க்கை குறித்துக் கூட சொற்ப அளவே எமக்கு அறியக் கிடைத்துள்ளது. இது அவருடைய ஆளுமை குறித்த முழுமையானதொரு தோற்றத்தை எமக்கு வழங்கவில்லை.

ஈஸா (அலை) அவர்களுடைய வரலாறு குறித்தும் இதனையே குறிப்பிட வேண்டியுள்ளது. அவர்களுடைய சிறு பராயத்தை பொறுத்த வரை இன்று புழக்கத்திலுள்ள இன்ஜீல் வேதம் குறிப்பிடுகின்ற சில விடயங்களை மாத்திரமே நாம் அறிந்து வைத்திருக்கின்றோம். அவர் யூத ஆலயத்தினுள் (ஹைறல்) நுழைந்து அவர்களது மதத் தலைவர்களோடு வாதம் புரிந்த நிகழ்வை மாத்திரமே ஈஸாவின் சிறுபராயம் குறித்து இன்ஜீல் குறிப்பிட்டுள்ளது.

மட்டுமன்றி நுபுவ்வத் கிடைத்ததன் பின்னரான அவர்களுடைய வரலாற்றைப் பொறுத்தவரையில், அவர்களது தஃவாவுடன் தொடர்பு பட்ட விடயங்களையும், வாழ்க்கை ஒழுங்கு குறித்த ஒரு சில விடயங் களையும் மாத்திரமே எம்மால் அறியக் கூடியதாக உள்ளது. இவை ஏனைவை தவிர ஈஸா (அலை) தொடர்பாக குறிப்பிடப்படுகின்றவை அனைத்தும் வெறும் கட்டுக் கதைகளாகவே தெரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுடைய தூதர் (ஸல்) அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து நம்பகத்தன்மையுள்ள ஸீறா மூலாதார நூல்கள் குறிப்படுகின்ற மிக நுணுக்கமான விடயங்களோடு இந்த வரலாறுகளை ஒப்பிட்டுக் கூடப் பார்க்க முடியாது. அவர்கள் எவ்வாறு சாப்பிட்டார்கள்? எழுந்து நின்றார்கள்; அமர்ந்தார்கள்; ஆடை அணிந்தார்கள்; அவர்களுடைய தோற்றமும் அமைப்பும் எவ்வாறு இருந்தன? தனது குடும்பத்தினரோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள்? எவ்வாறு வணக்கத்தில் ஈடுபட்டார்கள்? அவர்களுடைய தொழுகை எவ்வாறு இருந்தன? எவ்வாறு தனது தோழர்களோடு கூடிப்பழகினார்கள் என ஒவ்வொரு சிறு சிறு பகுதியையும் அவை விளக்கியுள்ளன. நபி (ஸல்) அவர்களது ஸீறாவை அறிவிப்புச் செய்த அறிவிப்பாளர்கள் நபி (ஸல்) அவர்களின் தாடியிலும், தலையிலும் எத்தனை முடிகள் நரைத்து இருந்தன என்பதைக் கூட குறிப்பிடத் தவறவில்லை.

*(03)* றஸூல் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதை, அல்லாஹ் தூது வழங்கி கண்ணியப்படுத்திய மனிதப் புனிதரொருவரின் உன்னத வரலாற்றையே எடுத்துப் பேசுகின்றது. அந்த வரலாறு மனிதப் பண்புகளிலிருந்து அவரை தூரமாக்கி விடவுமில்லை; அவருடைய வாழ்க்கையோடு கட்டுக் கதைகளை சேர்த்துவிடவுமில்லை. அது அவருக்கு சிறிய அளவிலோ பெரிய அளவிலோ (உலூஹிய்யத் எனப்படும்) அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரித்துடையதான ஏகத்துவப் பண்பை அவருக்கு இணைத்துவிடவுமில்லை.

கிறிஸ்தவர்கள் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாகவும், பௌத்தர்கள் புத்தர் தொடர்பாகவும், சிலை வணங்கிகள் தாம் வணங்கி வரும் தெய்வங்கள் தொடர்பாகவும், அறிவிக்கும் தகவல்களோடு இந்த வரலாற்றை ஒப்பிட்டு நோக்கலாம். அப்போது நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதைக்கும் இவர்களுடைய வரலாறுகளுக்குமிடையிலுள்ள வேறுபாட்டை மிகத் துள்ளியமாக விளங்கிக் கொள்ள முடியும். அவர்கள் தம்மைப் பின்பற்றியோரின் தனிப்பட்ட, சமூக நடத்தைகளில் தாக்கம் செலுத்துவது அசாத்தியமாகியது. ஈஸா (அலை) அவர்களுக்கும் புத்தருக்கும் தெய்வீகப் பண்பு (உலூஹிய்யத்) இருப்பதாக அவர்களைப் பின்பற்றுவோர் வாதிடுகின்றனர். இது மனிதனுடைய தனிப்பட்ட, சமூக வாழ்க்கைக்கான முன்மாதிரியாக இருப்பதிலிருந்து அவர்களைத் தூரமாக்குகிறது. ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை, யார் சுயமாகவும், குடும்பத்திலும், சூழலிலும் சந்தோஷமாகவும், சுபீட்சமாகவும் வாழவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விரும்புகின்றாரோ அவருக்கான பூரண மனிதத்துவப் பண்புகள் நிறைந்த சிறந்த முன்மாதிரியாக தொடர்ந்தும் அவர்கள் இருந்திருக்கிறார்கள்; இருந்து கொண்டுடிருக்கிறார்கள். இதனையே அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

''உங்களில் அல்லாஹ்வையும் மறுமைநாளையும் எதிர்பார்த்திருக்கின்றவர்களுக்கு அல்லாஹ்வுடைய தூதரிடத்திலே சிறந்த முன்மாதிரி இருக்கிறது.'' *(அஹ்ஸாப் : 21)*

*(04)* நபி *(ஸல்)* அவர்களுடைய வாழ்க்கை வரலாறானது மனித வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கிய பூரணத்துவமிக்க வரலாறாகும். அவ்வரலாறு, றிஸாலத் எனும் தூதை அல்லாஹ் வழங்கி கௌரவிக்க முன்னர், சீரான நம்பிக்கைக்குரிய இளைஞராக இருந்த நபி அவர்களுடைய வாழ்க்கை குறித்து பேசுகிறது. அதேபோல் அல்லாஹ்வுடைய தூதராக இருந்து தனது அழைப்புப்பணி அங்கீகாரம் பெறுவதற்காக பயன்மிக்க எல்லா வழிமுறைகளையும் கையாண்ட, தனக்கு வழங்கப்பட்ட தூதை எத்திவைப்பதற்காக முழுப்பலத்தையும் பிரயோகித்து முயற்சி செய்த நபி (ஸல்) அவர்களின் தஃவா வாழ்க்கையை எமக்கு சித்தரித்துக் காட்டுகிறது. மேலும் ஒரு தேசத்தின் தலைவராக இருந்து செயற்பட்ட அவர் களுடைய வீர வரலாற்றையும் எமக்குச் சொல்கிறது.

இந்த வகையில் நபி *(ஸல்)* அவர்கள் தனது நாட்டுக்கு மிகச் சரியான ஒழுங்குகளையும், திட்டங்களையும் வகுத்ததுடன், அதற்கு வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் விழிப்புடனும் தூய்மையாகவும் உண்மையாகவும் செயற்பட்டார்கள் என அவ்வரலாறு குறிப்பிடுகின்றது. மேலும் கணவனாக, தந்தையாக, நின்று செயற்பட்ட அவர்களது வரலாறு குறித்தும் அது பேசுகிறது. இந்த வகையில் அவர்கள் தனது குடும்ப அங்கத்தினர்களுக்கு இரக்கம் காட்டக் கூடியவர்களாகவும் அவர்களோடு நல்லமுறையில் நடந்து கொள்ளக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். கணவன்-மனைவி-பிள்ளைகளுக்கிடையில் பேணப்பட வேண்டிய உரிமைகள் கடமைகள் போன்றவற்றை மிகத் தெளிவாகப் பிரித்தறிந்து செயலாற்றக் கூடியவர்களாகக் காணப்பட்டார்கள் எனவும் விளக்குகிறது.

அதேநேரம் பயிற்றுவிப்பாளராக, வழிகாட்டியாக செயற்பட்ட அவர்களுடைய வாழ்வு பற்றியும் அது குறிப்பிடத் தவறவில்லை. இந்த வகையில் முன்மாதிரியுள்ள சிறந்த பயிற்றுவிப்பினூடாக தனது தோழர்களைப் பயிற்றுவிப்பதில் அவர்கள் மிகுந்த அவதானமாக இருந்தார்கள் எனவும், இதனூடாக அவர்களுடைய ஆன்மாக்களோடும் உள்ளங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடும் தன்னுடைய ஆன்மாவையும் உள்ளத்தையும் பிணைத்துக் கொண்டிருந்தார்கள் எனவும் அவ்வரலாறு சுட்டிக் காட்டுகின்றது.

இது ஒவ்வொரு சிறிய பெரிய விடயங்களிலும் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதற்கு அவர்களைத் தூண்டியது எனலாம். அது போலவே நண்பனாக இருந்து செயற்பட்ட நபி அவர்களது வரலாற்றையும் அது எமக்குச் சொல்கின்றது. அவர்கள் தோழமைக்குரிய கடமைகளை பூரணமாக நிறைவேற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். அதன் ஒழுங்கு களையும் ஒழுக்கங்களையும் முழுமையாகப் பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். இதுவே ஸஹாபாத் தோழர்கள் தம்மையும் தமது குடும்பத்தினரையும் இனபந்துக்களையும் நேசிப்பதை விட மேலாக நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு வைக்கத் தூண்டியது என அவ்வரலாறு கோடிட்டுக் காட்டுகின்றது. மேலும் அது நபி (ஸல்) அவர்களை துணிச்சல் நிறைந்த போராளியாகவும் வெற்றிவாகை சூடிய இராணுவத் தளபதியாக வும், வெற்றி பெற்ற அரசியல்வாதியாகவும், நம்பிக்கைக்குரிய பக்கத்து வீட்டாராகவும், உடன்படிக்கைகளை மதித்து நடக்கும் உண்மையாளராக வும் அடையாளப்படுத்திக் காட்டுகிறது.

சுருங்கக் கூறின் றஸூல் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாறா னது சமூகத்தில் காணப்படும் மனித இயல்போடு கலந்த -எல்லாப் பகுதி களையும் உள்ளடக்கிய- பூரணத்துவமிக்கதொரு வரலாறாகும். அது நபி (ஸல்) அவர்களை ஒவ்வோர் அழைப்பாளனும், தலைவனும், தந்தையும், கணவனும், நண்பனும், பயிற்றுவிப்பாளனும், அரசியல்வாதியும், நாட்டுத் தலைவனும், ஒவ்வொரு சமூக அங்கத்தவனும் சிறந்த முன்மாதிரியாக ஏற்றுப் பின்பற்ற வேண்டிய ஒருவராக அடையாளமிட்டுக் காட்டியது.

இத்தகையதொரு பூரணத்துவத்தை நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு கிட்டிய காலத்துக்கு முன் தோன்றிய தூதர்களின் (எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள) வரலாறுகளிலோ, மதங்களை நிறுவியவர்கள், முற்கால அல்லது பிற்பட்டகால தத்துவஞானிகள் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளிலோ கண்டுகொள்ள முடியாதுள்ளது. மூஸா (அலை) அவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தனது சமூகத்தை அடிமைத்து வத்திலிருந்து காப்பாற்றி, அதன் ஒருமைப்பாட்டுக்கான அடிப்படைகளை யும், விதிகளையும் விளக்கிய சமூகத் தலைவனாகவே வரலாற்றில் குறிப்பிடப்படுகிறார். ஆனால், அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையில் போர் வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அரசியல்வாதிகள், நாட்டுத் தலைவர் கள், பெற்றோர்கள், கணவன்மார்கள் எனப் பல்வேறு தரப்பினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளும் வகையிலான முன்மாதிரிகளை எம்மால் கண்டு கொள்ள முடியாதுள்ளது.

ஈஸா (அலை) அவர்கள், வீடுவாசல் சொத்து செல்வங்கள் எதுவுமற்ற, உலகத்தை ஒதுக்கித் துறந்த ஓர் அழைப்பாளருடைய வரலாற்றையே பிரதி நிதித்துவப்படுத்துகிறார்கள். கிறிஸ்தவர்களிடமுள்ள அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையானது அவர்களை -நபி (ஸல்) அவர்களுடைய வரலாற்றில் காணப்படுவது போல- ஒரு படைத்தலைவனாக, ஒரு நாட்டின் தலைவராக, தகப்பனாக, கணவனாக, (ஏனெனில் அவர்கள் திருமணம் முடிக்கவில்லை). சட்டவாக்குநராக, பிரதிநிதித்துவப்படுத்திக் காட்டும் வகையில் அமைந்திருப்பதை அவதானிக்க முடியவில்லை.

வரலாற்றிலே தோன்றிய புத்தர், கன்பியூஷியஸ், அரிஸ்டோட்டில், நெப்போலியன் போன்ற பெரும் மனிதர்களின் வரலாறுகள் குறித்தும் இவ்வாறே குறிப்பிட வேண்டியுள்ளது. அவர்கள் முன்மாதிரிகளாகக் கொள்ளப்படுவதற்கு எந்தவகையிலும் பொருத்தமற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அவ்வாறுதான் அவர்கள் முன்மாதிரிகளாகக் கொள்ளப்பட்டாலும் கூட அவர்கள் பிரபல்யமடைந்த வாழ்க்கையின் ஒரு பகுதிக்கு மாத்திரமே முன்மாதிரியாக கொள்ளப்பட முடியுமாக உள்ளது. எனவே, சமூகத்தில் காணப்படுகின்ற அனைத்துப் பிரிவினர்களுக்கும் அதாவது முழு மனித சமூகத்தினருக்கும் முன்மாதிரியாக இருப்பதற்குப் பொருத்தமாக இருக்கக் கூடிய வகையில் வரலாற்றில் தோன்றிய ஒரேயொருவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மாத்திரமேயாவார்.

(05) முஹம்மத் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதை மாத்திரமே நபி (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத்தையும் அவர்கள் கொண்டு வந்த தூதையும் உண்மைப்படுத்துவதற்குப் போதுமான ஆதாரமாகும். தனது அழைப்புப் பணியினூடாக தொடர்ச்சியாக வெற்றி நடைபோட்ட ஒரு பூரணமான மனிதரின் வரலாறாக அவர்களுடைய வரலாறு காணப்படுகிறது. அவர்கள் அந்த வெற்றிகளை அற்புதங்கள், வழமைக்குப் புறம்பான செயற்பாடுகளினூடாக அடைந்து கொள்ளவில்லை. மாறாக முழுக்க முழுக்க இயற்கை வழிமுறைகளைக் கையாண்டே அவற்றைப் பெற்றுக் கொண்டார்கள். எனவேதான் அவர்கள் அழைப்புப் பணியை மேற் கொண்டார்கள். அந்தப்பாதையிலே துன்புறுத்தப்பட்டார்கள். தனது தூதை தொடர்ச்சியாக எத்திவைப்பதற்காகவே சில தோழர்கள் கிடைக்கப் பெற்றார்கள். பின்னர் போராட்டத்துக்கு நிர்ப்பந்திக்கப்பட்டபோதே போராடினார்கள். இதன்போது அறிவுக் கூர்மையுள்ளவர்களாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம் வழங்குவதில் வெற்றி பெற்றவர்களாவும் அவர்கள் காணப்பட்டார்கள். அவர்கள் வபாத்தாகின்ற வேளையில் அவர்களுடைய தஃவாப் பணியானது முழு அறபுத் தீபகற்பத்தையும் சூழ்ந்திருந்தது. இது உண்மையில் ஆக்கிரமிப்பு, அடக்குமுறையினூடாக இடம்பெறவில்லை. மாறாக ஈமானிய வழிமுறையினூடாகவே சாத்தியமானதாகி இருந்தது.

அறபிகள் பல்வேறு நம்பிக்கைகளையும் வழக்காறுகளையும் கொண்டிருந்தார்கள். அவர்கள் நபி (ஸல்) அவர்களின் அழைப்புப் பணியை பல்வேறு வழிகளிலும் எதிர்த்து நின்றார்கள். அவர்களைக் கொலை செய்வதற்குக் கூட திட்டமிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்டு வெற்றிபெற்ற அனைத்துப் போராட்டங்களிலும், அவர்களுடைய அணியினருக்கும் எதிர்த்து போராடியவர்களுக்குமிடையில் பாரிய வேறுபாடு காணப்பட்டது. அவர்கள் 23 வருட குறுகிய காலப் பிரிவுக்குள் தனது தூதை எத்திவைத்து தன்மீது ஒப்படைக்கப்பட்ட பணியை வெற்றிகரமாக முடித்துக்கொண்டார்கள்.

இவ்விடயங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய எவரும் நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே என்பதை உறுதியாக நம்பிக்கை கொள்வர். அவர்கள் உண்மை நபியாக இருந்ததனாலேயே அல்லாஹ் அவர்களுக்கு உறுதியையும், பலத்தையும் வழங்கியதோடு, அவர்களுடைய பணிக்கு தாக்கத்தையும், வெற்றியையும் வழங்கினான் என்பதை விளங்கிக் கொள்வர். ஏனெனில், அல்லாஹ் தன்னைப் பொய்ப்பிக்கின்ற ஒருவருக்கு வரலாற்றிலே இத்தகைய அரிதான - தனித்துவமான உதவியைப் புரிந்ததில்லை. எனவே நபி அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையானது. அவர்கள் கொண்டுவந்த தூது உண்மையானது என்பதை பகுத்தறிவு ரீதியாக எமக்கு முழுமையாக உறுதிப்படுத்திக் காட்டுகின்றது.

நபி அவர்களுடைய வாழ்வில் இடம்பெற்ற அற்புதங்கள் எவையுமே அறபிகள் அவர்களுடைய அழைப்புப் பணியை நம்பிக்கை (ஈமான்) கொள்வதற்கான பிரதான அடிப்படையாக இருக்கவில்லை. மட்டுமன்றி, பிடிவாதம் பிடித்த நிராகரிப்பாளர்கள் எந்தவொரு அற்புதத்தையும் கண்டு ஈமான் கொண்டார்கள் என்ற எத்தகையதொரு சம்பவத்தையும் எம்மால் கண்டு கொள்ளவும் முடியாது. ஆனால் சட ரீதியான அற்புதங்களானது அதனைக் கண்டு கொள்ளக் கூடியவர்களுக்கான ஆதாரமாக மாத்திரமே காணப்பட்டன. நபி (ஸல்) அவர்களையோ, அவர்களுடைய அற்புதங்களையோ, நேரடியாகக் காணாத முஸ்லிம்களைப் பொறுத்தவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நபி (ஸல்) அவர்களுடைய தூதையும், நுபுவ்வத்தையும் பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களின் அடிப்படையில் இருந்து கொண்டே நம்பிக்கை (ஈமான்) கொண்டார்கள். புனித அல்குர்ஆன் இத்தகைய ஆதாரங்களுள் ஒன்றாக காணப்படுகின்றது. அது பகுத்தறிவு ரீதியானதொரு அற்புத மாகும். அது பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனையும் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய ரிஸாலத்தை நம்பிக்கை கொள்ளுமாறு கட்டாயப் படுத்துகின்றது.

இந்த வகையில் ஏனைய நபிமார்களைப் பின்பற்றுகின்றவர்கள் வைத்திருக்கின்ற, குறித்த நபிமார்கள் பற்றிய வாழ்க்கைச் சரிதைகளுடன் ஒப்பிடும்போது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரிதை முற்றிலும் வேறுபட்டு இருப்பதை அவதானிக்கலாம். அதாவது அற்புதங்கள், வழமைக்கு மாறான செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே மக்கள் அந்த நபிமார்களை நம்பிக்கை கொண்டனர். இந்த விடயத்தில் அவர்கள் குறித்த நபிமார்களின் தஃவா அடிப்படைகளை பகுத்தறிவுக்குட்படுத்தி அதற்கமைய அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை குறித்த வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஈஸா (அலை) அவர்களுடைய வரலாற்றில் இதற்கான தெளிவான உதாரணத்தைக் கண்டுகொள்ள முடியும். ஈஸா (அலை) தனது தூதின் உண்மைத் தன்மை குறித்தும், அதனை யூதர்களை ஏற்றுக்கொள்ளச் செய்வ தற்கும் பின்வரும் அடிப்படை வழிமுறையை கையாண்டதாக அல்குர்ஆன் குறிப்படுகிறது. அதாவது அவர்கள் வெண்குஷ்டம், தொழுநோய் போன்ற பல நோய்களை குணப்படுத்தக் கூடியவர்களாகவும், இறந்தவர்களை உயிர்ப்பிக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். மேலும் சாப்பிடுகின்ற வற்றையும் வீடுகளில் சேமித்து வைத்திருக்கின்றவற்றையும் அறிவிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இவையனைத்தையும் அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அனுமதியின் பேரிலேயே மேற்கொண்டார்கள்.

மக்கள் அனைவரும் ஒரே தடவையில் அவர்களை ஈமான் கொள்ள முழு முதல் காரணியாக அமைந்தது இந்த அற்புதங்களே என்பதை புழக் கத்திலுள்ள இன்ஜீல் வேதம் குறிப்பிடுகின்றது. மேலும், -அல்குர்ஆன் குறிப்படுவது போல - அவரை அல்லாஹ்வின் தூதர் என்ற அடிப்படையில் வைத்து அவர்கள் ஈமான் கொள்ளவில்லை, மாறாக அவரைக் கடவுள், கடவுளின் மகன், (இந்த இணையிலிருந்து அல்லாஹ் தூய்மையானவன்) என்ற அடிப்படையிலேயே ஈமான் கொண்டனர். இந்தவகையில் கிறிஸ்த வம் ஈஸா (அலை)க்குப் பின்னர் அற்புதங்கள், வழமைக்குப் புறம்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளினூடாகவே பரவியது. எனவே கிறிஸ்தவர்கள் ஏற்றுப் பின்பற்றுகின்ற கிறிஸ்தவ மதம் அற்புதங்களின் அடிப்படை யில் உருவான ஒரு மதமேயன்றி பகுத்தறிவின் அடிப்படையில் உருவான ஒன்றல்ல என கூறுவதில் பிழையேதும் இருக்கமாட்டாது.

இந்த அடிப்படையில் இருந்து நபி (ஸல்) அவர்களுடைய ஸீறாவின் தனித்துவமான சிறப்பை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதாவது எந்தவொரு அற்புத நிகழ்வையும் அடிப்படையாக வைத்து நபி (ஸல்) அவர்களை எவரும் ஈமான் கொள்ளவில்லை. பகுத்தறிவின் அடிப்படை யிலேயே அவர்களை மக்கள் ஈமான் கொண்டார்கள் என வரலாறு குறிப்படுகிறது. அல்லாஹ் தனது தூதருக்கு அற்புதங்களை வழங்கியமை யானது அவர்களை கண்ணியப்படுத்துவதற்கும், பெருமைபிடித்த பிடி வாதக்காரர்களின் வாயை அடைத்து விடுவதற்குமேயாகும்.

அல்குர்ஆனை நன்கு ஆராய்கின்ற எவரும், நபி (ஸல்) அவர்கள் மக்களை திருப்திப்படுத்துவதற்கு பகுத்தறிவையும் புலன்களுக்கு உட்பட்ட அல்லாஹ்வின் படைப்புக்களின் ஆற்றல்களையும் அவற்றின் பாரிய தன்மைகளையும் எடுத்துக் காட்டுகின்ற வழிமுறையையே சார்ந்திருந்தார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வர். மேலும், நபி (ஸல்) அவர்கள் எழுத வாசிக்கத் தெரியாதிருந்த நிலையிலேயே அல்குர் ஆனைக் கொண்டு வந்தார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவர்களுடைய தூதின் உண்மைத் தன்மைக்கான ஆதாரமாக அமையும். அல்லாஹ் ஸூறதுல் அன்கபூத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

> ''அவருடைய இறைவனிடமிருந்து அவர் மீது அத்தாட்சிகள் ஏன் இறக்கப்படவில்லை என்றும் அவர்கள் கேட்கிறார்கள். அத்தாட்சி களெல்லாம் அல்லாஹ்விடம் உள்ளன. ஏனெனில் நான் வெளிப் படையாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவன்தான் என்று (நபியே!) நீர் கூறுவீராக.''
>
> ''அவர்களுக்கு ஓதிக் காட்டப்படும் இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியிருக்கிறோம் என்பது அவர்களுக்குப் போதாதா? நிச்சயமாக அ(வ் வேதத்)தில் ரஹ்மத்தும், ஈமான் கொண்ட சமூகத்தாருக்கு (நினைவூட்டும்) நல்லுபதேசமும் இருக்கின்றன.'' *(அன்கபூத்: 50,51)*

குறைஷியர், முன்னைய சமூகங்களைப் போல அற்புதங்களை நிகழ்த் திக் காட்டுமாறு நிபந்தனை விதித்தபோது அல்குர்ஆன் நபி (ஸல்) அவர் களுக்கு ''என்னுடைய இரட்சகன் மிகத்தூய்மையானவன் (அவர்களுக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு மனிதத் தூதனாகவல்லவா இருக்கிறேன்.'' *(அல் இஸ்ரா : 93)* என்று விடையளிக்குமாறு கட்டளையிட்டது.

இது தொடர்பாக ஸூறதுல் இஸ்ராவில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

''இன்னும், அவர்கள் கூறுகிறார்கள் நீர் எங்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு நீர் ஊற்றைப் பீறிட்டு வரும்படி செய்யும் வரையில், உம்மீது நாங்கள் நம்பிக்கை கொள்ள மாட்டோம். அல்லது பேரீச்சை மரங்களும், திராட்சைக் கொடிகளும் (நிரம்ப) உள்ள தோட்டம் ஒன்று உமக்கு இருக்க வேண்டும். அதன் நடுவே ஆறு களை நீர் ஒலித்தோடச் செய்ய வேண்டும். அல்லது நீர் எண்ணுவது போல் வானம் துண்டு துண்டாக இடிந்து எங்கள் மேல் விழச் செய்யும் வரை அல்லது அல்லாஹ்வையும் மலக்குகளையும் (நமக்கு முன்) நேருக்கு நேராகக் கொண்டு வந்தாலன்றி, அல்லது ஒரு தங்க மாளிகை உமக்கு இருந்தாலன்றி (உம் மீது நம்பிக்கை கொள்ள மாட்டோம்) அல்லது வானத்தின் மீது நீர் ஏறிச் செல்ல வேண்டும், (அங்கிருந்து) எங்களுக்காக நாங்கள் படிக்கக் கூடிய ஒரு (வேத) நூலை நீர் கொண்டு வந்து தரும் வரையில், நீர் (வானத்தில்) ஏறியதையும் நாங்கள் நம்ப மாட்டோம் என்று கூறுகின்றனர். என் இறைவன் மிகத் தூயவன், நான் (இறைவனுடைய) தூதனாகிய ஒரு மனிதனே தவிர வேறெதுவுமாக இருக்கின்றேனா? என்று (நபியே! நீர் பதில்) கூறுவீராக *(அல் இஸ்ரா : 91-93)*

இவ்வாறு முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு மனிதத் தூதர் என்பதையும், அவர்கள் தனது தூதை உண்மைப்படுத்துவதற்கு ஒருபோதும் அற்புதங்களிலும் வழமைக்கு மாற்றமான செயற்பாடுகளிலும் தங்கியிருக்கவில்லை என்பதையும் மாற்றமாக, அவர்கள் உள்ளங்களோடும் அறிவோடுமே பேசினார்கள் என்பதையும் அல்குர்ஆன் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளது.

''யாருக்கு அல்லாஹ் நேர்வழிகாட்ட விரும்புகிறானோ, அவருடைய உள்ளத்தை இஸ்லாத்தின்பால் விரிவுபடுத்தி விடுகின்றான்.'' *(அல் அன்ஆம்: 125)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸீறாவின் அடிப்படை மூலாதாரங்கள்

நபி (ஸல்) அவர்களுடைய ஸீறாவைக் கற்றுக்கொள்வதற்கு அங்கீ கரிக்கப்பட்ட பிரதானமான மூலாதாரங்களாக பின்வரும் நான்கு மூலாதாரங்களையும் வரையறுத்துக் கூற முடியும்.

### *01.* புனித அல் குர்ஆன்

நபி (ஸல்) அவர்களுடைய ஸீறாவின் அடிப்படைகளைப் பெற்றுக் கொள்கின்ற பிரதான மூலாதாரமாக புனித அல்குர்ஆன் அமைகின்றது. இந்த வகையில் அல்குர்ஆன் நபி (ஸல்) யவர்களுடைய ஆரம்ப காலம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறது:

"(அல்லாஹ்) உங்களை ஓர் அநாதையாகக் கண்டு புகலிடம் வழங்க வில்லையா? உங்களை வழிதவறிய நிலையில் கண்டு அவன் உங்களுக்கு நேர்வழி காட்டவில்லையா?" (ஸூறா அல் ளுஹா: 6,7) அவர்களுடைய உயர்ந்த பண்பாடுகளை பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது:

*நீர் உயர்ந்த பண்பாடுகளுடன் காணப்படுகின்றீர். (அல்கலம்: 4)*

மேலும், நபியவர்கள் தமது அழைப்புப்பணியின் போது சந்தித்த கஷ்டங்கள், துன்பங்கள் குறித்தும் அல்குர்ஆன் பேசுகிறது. நிராகரிப் பாளர்கள் அல்லாஹ்வினுடைய தீனை தடுத்து நிறுத்துவதற்காக அவர்களுக்கெதிராக சூனியம் செய்தமை, அவர்களைப் பைத்தியக்காரர் என வர்ணித்தமை போன்றன குறித்தும் குறிப்பிடுகின்றது. அது மாத்திர மன்றி நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணம் அதனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட மிக முக்கியமான போராட்டங்கள் குறித்தும் அது பேசியுள்ளது. இந்தவகையில் பத்ர், உஹத், அஹ்ஸாப், ஹுதைபியா உடன்படிக்கை, மக்கா வெற்றி, ஹுனைன் போன்ற போராட்டங்களைப் பற்றி அது குறிப்பிட்டுள்ளது. அதுபோலவே நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட இஸ்ரா, மிஃராஜ் (விண்ணுலக யாத்திரை) போன்ற அற்புத நிகழ்வுகள் பற்றியும் பேசியுள்ளது.

சுருங்கக் கூறின், அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகள் குறித்துப் பேசியுள்ளது. இந்தப் பூமியில் இருக்கின்ற மிகவும் நம்பத்தகுந்த ஒரேயொரு நூலாக அல்குர்ஆன் மாத்திரமே உள்ளது. புத்தியுள்ள எந்த மனிதனும் அதில் இடம்பெற்றுள்ள வசனங்கள் குறித்தோ அல்லது அதனது வரலாற்று ரீதியான உறுதிப்பாடு குறித்தோ சிறிதேனும் சந்தேகிக்க முடியாதவாறு ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டுள்ளது. எனவே நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிடுகின்ற மிகவுமே நம்பத் தகுந்த அடிப்படை மூலாதாரமாக அல்குர்ஆன் விளங்குகின்றது.

எனினும் அல்குர்ஆன் ஸீறாவின் நிகழ்வுகள் அனைத்தையும் விலாவாரி யாகக் குறிப்பிடாது பொதுப்படையாகவும், சுருக்கமாகவுமே குறிப்பிட் டுள்ளது. அந்தவகையில், அல்குர்ஆன் சில சந்தர்ப்பங்களில் ஒரு போராட் டத்தைப் பற்றிப் பேசுகின்றபோது அதற்கான காரணங்கள் பற்றியோ, அதிலே கலந்து கொண்ட முஸ்லிம்கள், முஷ்ரிக்குகளின் எண்ணிக்கை குறித்தோ, முஷ்ரிக்களில் கொலை செய்யப்பட்டவர்கள், சிறைப்பிடிக்கப் பட்டவர்கள் தொடர்பாகவோ மௌனம் சாதிக்கும். மாற்றமாக குறித்த போராட்டத்திலிருந்து பெறக்கூடிய பாடங்கள், படிப்பினைகள் குறித்தே அது குறிப்பிட்டுக் காட்டும்.

அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள முன்னைய நபிமார்கள், சமூகங்கள் குறித்த கதைகள் அனைத்தும் இந்த அடிப்படையைப் பேணியே அமைந்துள்ளன. எனவே, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரிதை (ஸீறா) தொடர்பாக அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள வசனங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை பற்றிய முழுமையான வடிவத்தை பெற்றுக்கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*02. ஸுன்னா*

இஸ்லாமிய உலகில் அங்கீகாரம் பெற்ற ஹதீஸ் துறை அறிஞர்கள் நபி (ஸல்) அவர்களுடைய ஸுன்னா தொடர்பாக எழுதிய நூல்களை இதற்கு ஆதாரமாகக் குறிப்பிட முடியும்.

அந்த வகையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆறு ஹதீஸ் கிரந்தங்களான புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், நஸாஈ, திர்மிதி, இப்னு மாஜாஹ், என்பன வற்றுடன் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுடைய முஅத்தா, இமாம் அஹ்மத் அவர்களின் முஸ்னத் போன்ற ஹதீஸ் நூல்களும் இதில் அடங்கும். இந்த நூல்களில் குறிப்பாக புஹாரி, முஸ்லிம் என்பன நம்பகத் தன்மையில் மிக உயர் நிலையில் வைத்து நோக்கப்படுகின்றன. ஏனைய நூல்களைப் பொறுத்தவரையில் அவை ஸஹீஹ், ஹஸன் தரத்தில் வைத்து நோக்கப்படும் ஹதீஸ்களையும் சில நூல்கள் பலவீனமான (லஈப்) தரத்தில் வைத்து நோக்கப்படக் கூடிய ஹதீஸ்களையும் உள்ளடக்கியுள்ளன.

நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையில் இடம்பெற்ற நிகழ்வுகள், அவர் பங்கு கொண்ட யுத்தங்கள், அவர்களுடைய ஏனைய செயற்பாடுகள் என பல்வேறு பகுதிகளைக் கொண்ட அவர்களுடைய வாழ்க்கை வரலாற் றின் பெரும்பகுதியை உள்ளடக்கியுள்ள இந்த நூல்களிலிருந்து நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதை குறித்த பூரணமானதொரு விளக்கத்தை -சிந்தனையை- (சிலவேளைகளில் அது ஒழுங்குபடுத்தப்பட்டதாக இல்லா விட்டாலும்) பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நூல்களிலே இடம்பெற்றுள்ள அறிவிப்புக்கள் அனைத்தும் ஸஹா பாக்கள் வரை தொடர்ந்து செல்லக் கூடிய அறிவிப்பாளர் வரிசையினூடாக அறிவிக்கப்பட்டுள்ளமை ஸீறா குறித்த நம்பகத் தன்மையை மேலும் வலுவடையச் செய்கின்றன. ஏனெனில், அந்த ஸஹாபாக்கள்தான் நபி (ஸல்) அவர்களுடன் கூடவே இருந்து பழகினார்கள். அல்லாஹ் தன்னு டைய தீனை அவர்களைக் கொண்டு தான் வெற்றிபெறச் செய்தான். மேலும் நபி (ஸல்) அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து அவர்களைப் பயிற்றுவித்தார்கள். இதன் காரணமாகவே அவர்கள் முழு உலக வரலாற்றிலும் தோன்றிய மிகச் சிறந்த பண்பாடும் பலமான ஈமானும், உண்மைத் தன்மையும், ஆன்மீக உயர்ச்சியும் பூரண அறிவும் கொண்ட முழுமைத்துவமிக்க பரம்பரையாகத் தோன்றினார்கள். எனவே, நம்பத் தகுந்த அறிவிப்பாளர் வரிசையினூடாக றஸூல் (ஸல்) அவர்களிடமிருந்து அவர்கள் அறிவிக்கும் அனைத்து அறிவிப்புக்களையும் நாம் கட்டாயமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று உண்மைகளாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அதிலே எத்தகைய சந்தேகமும் ஏற்படக் கூடாது.

வழிகெட்ட கீழைத்தேயவாதிகளும், மேற்கத்தேய அறிஞர்களும் வகுத்த சிந்தனையால் கவரப்பட்டு மார்க்கத்தை மலிவானதாக எண்ணி, அவர்களைப் பின்பற்றுகின்ற முஸ்லிம்கள் எங்களிடமுள்ள அங்கீகாரம் பெற்ற ஹதீஸ் கிரந்தங்களின் உண்மைத் தன்மையில் சந்தேகங்களைக் கிளப்பி விடுவதற்கு எத்தனிக்கின்றனர். இதன் மூலம் ஷரீஆவை அழித்து விடுவதற்கும், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரிதையில் சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கும் அவர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால், இந்த மார்க்கத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையேற்றுக் கொண்ட அல்லாஹ், இவர்களது பிழையான வாதங்களுக்கு விடைகொடுப்பவர்களையும் அவர்களது சூழ்ச்சிகளை அழித்தொழிப்பவர்களையும் தயார்செய்து வைத்துவிட்டான்.

''ஸுன்னாவும் இஸ்லாமிய சட்டவாக்கத்தில் அதன் அந்தஸ்தும்'' எனும் எனது நூலில் ஸுன்னாவைத் தூய்மைப்படுத்துவதற்காக எமது அறிஞர்கள் மேற்கொண்ட முயற்சிகள் குறித்து எடுத்துரைத்துள்ளேன். அதில் கீழைத்தேயவாதிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் ஸுன்னா குறித்து எழுப்புகின்ற சந்தேகங்களைக் குறிப்பட்டு அவை தொடர்பாக அறிவுபூர்வமாக விவாதித்துமுள்ளேன். அல்லாஹ் அதற்காக எனக்கு கூலி வழங்கவேண்டும் என அவனிடம் வேண்டுகின்றேன். மறுமைநாளில் எனது நன்மைக்கான ஏடுகளில் இந்நற்செயலையும் சேர்த்து விடவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

### 03. நபி (ஸல்) அவர்களது கால அறபுக் கவிதை

நிராகரிப்பாளர்கள் நபி (ஸல்) அவர்களையும், அவர்களுடைய தஃவாவையும் தம்மோடு இருந்த கவிஞர்களைப் பயன்படுத்தித் தாக்கிக் கொண்டிருந்தார்கள். இது முஸ்லிம்களை தமது கவிஞர்களுக்கூடாக அவர்களுக்குப் பதிலடி கொடுக்க நிர்ப்பந்தித்தது. ஹஸ்ஸான் பின் ஸாபித், அப்துல்லாஹ் இப்னு ரவாஹா போன்ற ஸஹாபாக்கள் இப்பணிக்காகப் பயன்படுத்தப்பட்டார்கள். இவர்களால் பாடப்பட்ட பெருமளவிலான கவிதைகள் பிற்பட்ட காலங்களில் தொகுக்கப்பட்ட பல்வேறு இலக்கிய, ஸீறா நூல்களில் இடம்பெற்றுள்ளன. இவற்றின் மூலமாக நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த, இஸ்லாமிய தஃவா தளிர்விட்ட சூழல் பற்றிய பல்வேறு உண்மைகளையும் எம்மால் அறிந்துகொள்ள முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 04. ஸீறா நூல்கள்

ஸஹாபாத் தோழர்கள் நபி (ஸல்) அவர்கடைய வாழ்க்கையில் இடம் பெற்ற நிகழ்வுகளை தம்மைத் தொடர்ந்து வந்தவர்களுக்கு அறிவிப்புச் செய்யக் கூடிய வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையின் நுணுக்கங்களையும் அதன் விளக்கங்களையும் பின்தொடர்வதில் அவர்களில் சிலர் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். பிறகு தாபிஈன்கள் இந்தச் செய்திகளை நகர்த்தி தங்களிடத்திலே இருந்த ஏடுகளிலே பதிந்து வைத்துக் கொண்டார்கள். அதனைச் சரியாகவும் கவனமாகவும் மேற்கொள்வதில் அவர்களில் சிலர் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அத்தகையவர்களில் குறிப்பிடத்தக்கோராக பின் வருவோரை குறிப்பிட்டுக் காட்டலாம்.

அப்பான் இப்னு உஸ்மான் இப்னு அப்பான் (றழி) (ஹிஜ்ரி: 32-105), உர்வத் இப்னு ஸுபைர் இப்னுல் அவாம் (ஹிஜ்ரி: 23-93) சிறிய தாபிஈன்களில்: அப்துல்லாஹ் இப்னு அபூபக்ர் அல்அன்ஸாரி (மரணம்: ஹிஜ்ரி: 135) முஹம்மத் இப்னு முஸ்லிம் இப்னு ஷிஹாப் அல் ஸுஹ்ரி (ஹிஜ்ரி: 50-124) -இவர் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களுடைய காலத்திலே கலீபாவின் கட்டளையின் பேரில் ஸுன்னாவை ஒன்று சேர்ந்தவராவார். -ஆஸிம் இப்னு உமர் இப்னு கதாதா அல் அன்ஸாரி (மரணம்: ஹிஜ்ரி: 129)

இவர்களுக்குப் பின்னர் அவர்களைத் தொடர்ந்து வந்தவர்கள் ஸீறாவில் கவனம் செலுத்தினார்கள். அவர்கள் ஸீறாவை ஸுன்னாவிலிருந்து தனியாகப் பிரித்தெடுத்து நூலுருப்படுத்தினார்கள். இவ்வாறு ஸீறாவை நூலுருப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாக பின்வருவோரை அடையாளப்படுத்தலாம். முஹம்மத் இப்னு இஸ்ஹாக் இப்னு யஸார் (மரணம்: ஹிஜ்ரி: 152) இவர் நம்பத்தகுந்தவர் என்பதில் ஹதீஸ் துறை அறிஞர்களும் ஏனைய பெரும்பாலான அறிஞர்களும் உடன்பட்டுள்ளனர். எனினும் மாலிக், ஹிஷாம் இப்னு உர்வத் இப்னு ஸுபைர் ஆகியோர் இவர் தொடர்பாக மாற்றுக் கருத்துக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. இவ்விரு பேரறிஞர்களுக்கும் இப்னு இஸ்ஹாக்குக்குமிடையில் நிலவிய தனிப்பட்ட பிரச்சினைகளின் காரணமாகவே இவ்வாறு விமர்சிக்கப்பட்டதாக அதிகமான அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்னு இஸ்ஹாக் தனது 'மஆஸி' என்ற நூலை மதீனாவிலும், எகிப்திலும் தாமாகவே கேட்ட ஹதீஸ்களையும், அறிவிப்புக்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து தொகுத்தார்கள். இந்த நூல் எமக்குக் கிடைக்காமை கவலைக்குரிய தாகும். எமது இழந்துபோன தலைசிறந்த அறிவுப் பொக்கிஷங்களில் இதுவும் ஒன்றாக உள்ளது. எனினும் இந்நூலின் உள்ளடக்கம், இப்னு ஹிஷாம் தன்னுடைய ஸீறாவில் தனது ஆசிரியரும் இப்னு இஸ்ஹாக்கின் மிகப் பிரபல்யமான மாணவர்களுள் ஒருவருமான புஹாரி (ரஹ்) அவர் களிடமிருந்து அறிவித்த அறிவிப்புக்களின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

## ஸீறா இப்னு ஹிஷாம்

அபூ முஹம்மத் அப்துல் மலிக் இப்னு அய்யூப் அல் ஹுமைரி என்ற பெயருடைய இவர் பஸராவில் வாழ்ந்தார். பல்வேறு அறிவிப்புக்களின் படி ஹிஜ்ரி 213 அல்லது 218 இல் வாபாத்தானார். இப்னு ஹிஷாம் தன்னுடைய ''அஸ்ஸீறா அந்நபவிய்யா'' எனும் நூலை தனது ஆசிரியரான புஹாரி அவர்கள், இப்னு இஸ்ஹாக்கின் அறிவிப்புக்களிலிருந்தும், இப்னு இஸ்ஹாக் தன்னுடைய ஸீறாவிலே குறிப்படாத -ஆனால் அவர் தனிப் பட்ட முறையில் ஏனைய ஆசிரியர்களிடமிருந்து பெற்று வெளியிட்ட அறிவிப்புக்களிலிருந்தும் தொகுத்துள்ளார். ஆனால் தனது விமர்சனத்துக் குட்பட்ட இப்னு இஸ்ஹாக்கின் அறிவிப்புக்களை இங்கு தவிர்த்துள்ளார்.

நபி (ஸல்) அவர்களுடைய ஸீறாவுக்கான முழுமையானதும் சரியான தும் மிக நுணுக்கமானதுமான மூலாதார நூலாக இது அமைந்துள்ளது. மக்களுடைய அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. குறித்த நூலை மக்கள் அவருடைய பெயரோடு இணைத்து ''ஸீறது இப்னு ஹிஷாம்'' என அடை யாளப்படுத்துமளவு பிரபலமடைந்துள்ளது, ''அஸ் ஸுஹைலி'' (ஹிஜாரி: 508-581) அல் ஷனி (ஹிஜ்ரி: 535-604) என்ற ஸ்பெய்ன் நாட்டு இரு அறிஞர்களும் இந்நூலுக்கு விளக்கவுரை எழுதியுள்ளனர்.

## தபகாது இப்னு ஸஃத்

முஹம்மத் இப்னு ஸஃத் இப்னு மனீஃ அஸ்ஸுஹ்ரி என்ற பெயருடைய இவர் பஸராவில் ஹிஜ்ரி 168 இல் பிறந்து ஹிஜ்ரி 230 இல் பக்தாதில் வபாத்தானார். ஸீறா, போராட்டங்கள் தொடர்பான பிரபலமான வரலாற் றாசிரியராகக் கருதப்படும் முஹம்மத் இப்னு உமர் அல்வாகிதி (ஹிஜ்ரி: 130-207)யின் எழுத்தாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். இப்னு ஸஃத் தனது ''தபகாத்'' எனும் நூலில் றஸூல் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையைக் குறிப்பிட்டதன் பின்னர் ஸஹாபாக்கள், தாபிஈன்களின் பெயர்களை அவர்களது தரவரிசை, கோத்திரம், பிரதேசம் என்பவற்றுக் கேற்ப வகுத்துத் தந்துள்ளார். இந்நூல் நபி (ஸல்) அவர்களின் ஸீறா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஹாபாக்கள், தாபிஈன்களின் பெயர்கள் குறித்து எழுதப்பட்ட நம்பகத் தன்மையுடைய ஆரம்ப மூலாதார நூல்களுள் ஒன்றாக கருதப்படுகிறது.

### தாரீஹுத் தபரி:

அபூ ஜஃபர் முஹம்மத் இப்னு ஜரீர் அத்தபரி (ஹிஜ்ரி: 224-310) என்ற பெயருடைய இவர் இமாமாகவும், சட்ட வல்லுனராகவும், ஹதீஸ் துறை அறிஞராகவும் பிக்ஹுத் துறையில் -அதிகம் பரவாவிட்டாலும்- ஒரு மத்ஹபின் சொந்தக்காரராகவும் திகழ்ந்தார். வரலாற்றுத் துறையில் அவர் எழுதிய நூல் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையை மாத்திர மன்றி நபி (ஸல்) அவர்களுக்கு முன்பு வாழ்ந்த சமூகங்களது வரலாறு களையும் குறிப்பிடுகிறது. நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையை தனியானதொரு பிரிவில் அவர் விளக்கியுள்ளார். அதனைத் தொடர்ந்து தான் வபாத்தாவதற்கு சற்று முன்புள்ள காலம் வரையிலான இஸ்லாமிய நாடுகளின் வரலாற்றையும் அவர் குறித்த நூலில் எடுத்தாண்டுள்ளார்.

இமாம் தபரி, அவருடைய அறிவிப்புக்களில் மிகுந்த நம்பகத் தன்மை யுடையவராக கருதப்பட்டாலும் அதிகமான சந்தர்ப்பங்களிலே அவர் பலவீனமான, அல்லது போலியான அறிவிப்புக்களையும் குறிப்பிட்டுள் ளார். தன்னுடைய காலத்தில் அறிமுகமானவர்களாக இருந்த அறிவிப்பா ளர்களின் இஸ்னாதுடன் (அறிவிப்பாளர் வரிசை) போதுமாக்கிக் கொண்டுள்ளார். இதற்கு அபூ முஹ்னியிடமிருந்து வரும் அவரது அறிவிப் புக்களை உதாரணமாகக் குறிப்பிட முடியும். அவர் ஒரு தீவிர ஷீஆ சிந்தனைப் போக்குள்ளவராக காணப்பட்டும் இமாம் தபரி அதிகமான தகவல்களை அவரோடு தொடர்புபடுத்தி அறிவித்துள்ளார். இதன் மூலம் அறிவிப்புக்களின் சுமையை அபூ முஹ்னி மீது சுமத்தி தன்னை விடு வித்துக் கொள்ள முயற்சிப்பது போலத் தோன்றுகிறது.

### ஸீறாவை நூலுருப்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம்

பின்னர் ஸீறாவை நூலுருப்படுத்துவதிலே முன்னேற்றம் ஏற்பட்டது. ஸீறாவின் சில பகுதிகள் தனித்தனியாக நூலுருப்படுத்தப்பட்டன. அந்த வகையில் அஸ்பானியின் 'தலாஇலுன் நுபுவ்வா' திர்மிதியின் 'அஷ்ஷமாஇலுல் முஹம்மதிய்யா' இப்னுல் கையிம் அல் ஜவ்ஸியாவின் 'ஸாதுல் மஆத்' காழி இயாழின் 'அஷ்ஷிபா' அல்கஸ்தலானியின் 'அல்மவாஹிபுல் லதுன்யா' போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். 'அல்மவாஹிபுல் லதுன்யா' என்ற நூல் ஹி: 1122 இல் மரணித்த ஸர்கானி அவர்களால் விளக்கவுரை செய்யப்பட்டு எட்டுப் பாகங்களாகத் தொகுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இவ்வாறிருக்க, தொடர்ந்தும் அறிஞர்கள் அவரவர்களுடைய காலத்தவர்களின் சுவைகளுக்கேற்ப புதிய வழிமுறைகளைப் பின்பற்றி நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதை குறித்து தொடர்ந்தும் எழுதி வருகின்றனர். நவீன காலத்திலே எழுதப்பட்ட பிரபலமான நூல்களுள், அஷ்ஷெய்க் முஹம்மத் அல் ஹஸ்ரி (ரஹ்) அவர்களுடைய 'நூருல் யகீன் பீ ஸீறதி ஸையிதில் முர்ஸலீன்' என்ற நூலைக் குறிப்பட முடியும். இந்த நூல் மக்களுக்கு மத்தியில் உயர்ந்த அங்கீகாரத்தைப் பெற்றது. இஸ்லாமிய உலகின் பல்வேறு பாகங்களிலுமுள்ள இஸ்லாமிய கல்வி நிறுவனங்களில் குறித்த நூல் பாடநூலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பிரிவு

# நபித்துவத்துக்கு முந்திய வரலாறு

**வரலாற்று நிகழ்வுகள்:**

நபித்துவத்துவத்துக்கு முந்திய நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக பின்வரும் ஆதாரபூர்வமான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்ட முடியும்.

(01) நபி (ஸல்) அவர்கள் அறபு சமூகத்தில் காணப்பட்ட கண்ணியம் பொருந்தியதொரு குடும்பத்தில் பிறந்தார்கள். அறபு சமூகத்தில் உயர்நிலையில் வைத்து மதிக்கப்பட்ட குறைஷிக் கோத்திரத்தில் மிக கௌரவத்துக்குரிய பிரிவாகிய பனூ ஹாஷிம்களின் குடும்பமாக அது இருந்தது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்:

''நிச்சயமாக அல்லாஹ் படைப்பினங்களைப் படைத்தான். அவற்றில் மிகச் சிறந்தவராகவும் அவர்களிடம் காணப்பட்ட பிரிவுகளில் மிகச் சிறந்த பிரிவுக்குரியவராகவும் அமைத்தான். இருந்த இரண்டு பிரிவுகளில் மிகச் சிறந்த பிரிவுக்குரியவராக என்னை ஆக்கினான். பிறகு கோத்திரங்களை தெரிவு செய்தான். அவற்றிலே என்னை மிகச் சிறந்த கோத்திரத்தில் ஆக்கிவைத்தான். பிறகு குடும்பங்களைத் தெரிவு செய்தான். அவர்களிடம் காணப்பட்ட சிறந்த குடும்பத்தில் என்னை ஆக்கினான். எனவே நான், அவர்களில் மிகச் சிறந்தவரும் மிகச் சிறந்த குடும்பத்தைச் சேர்ந்தவரும் ஆவேன்.'' (நூல்: திர்மிதி)

நபி (ஸல்) அவர்களின் பரம்பரையான குறைஷிகளின் உயர் அந்தஸ்தின் காரணமாகவே எதிரிகள் நபி (ஸல்) அவர்களை அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தோடு தொடர்புபடுத்தி விமர்சிக்கவில்லை. குடும்பம் தவிர்ந்த இட்டுக்கட்டப்பட்ட வேறு பல விடயங்களை வைத்தே விமர்சித்தார்கள்.

(02) நபி (ஸல்) அவர்கள் அநாதையாகவே வளர்ந்தார்கள். அவர்கள் ஆமினாவின் வயிற்றில் இரண்டு மாதக் குழந்தையாக இருந்தபோதே தந்தையான அப்துல்லாஹ் மரணித்து விட்டார். ஆறு வயதாக இருந்தபோது தாயாரும் மரணித்து விட்டார். எனவே நபி (ஸல்) அவர்கள் தனது சிறு பராயத்திலேயே பெற்றோரின் அரவணைப்பையும் அன்பையும் பெற முடியாதவர்களானார்கள். அதன் பிறகு பாட்டன் அப்துல் முத்தலிப், நபி (ஸல்) அவர்களைப் பொறுப்பேற்றார். நபி (ஸல்) அவர்களுக்கு எட்டு வயதாக இருக்கும்போது அவரும் மரணித்துவிடவே சிறிய தந்தை அபூ தாலிப், நபி (ஸல்) அவர்களைப் பொறுப்பேற்றார். அவருடைய அரவணைப்பின் கீழ் மணமுடிக்கும் வரை பராமரிக்கப்பட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அநாதையாகவே வளர்ந்தார்கள் என்பதை அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது.

*(அல்லாஹ்) உங்களை அநாதையாகக் கண்டு புகலிடம் வழங்கவில்லையா? (ளுஹா: 6)*

(03) நபி (ஸல்) அவர்கள் தனது முதல் நான்கு வருடத்தையும் பனூ ஸஃத் கோத்திரத்தினருடன் பாலைவனத்திலே கழித்தார்கள். அங்கு அவர்கள் ஆரோக்கியமான, பலமான உடற் கட்டுள்ளவர்களாகவும் நாவன்மை படைத்தவர்களாகவும் துணிச்சல் மிக்கவராகவும் வளர்ந்தார்கள். அதே நேரத்தில் சிறுபராயத்திலேயே ஒழுங்காக குதிரைச் சவாரி செய்யவும் கற்றுக் கொண்டார்கள். அமைதி நிறைந்த தூய காற்று வீசுகின்ற அந்தப் பாலைவனச் சூழலிலே அவர்களுடைய திறமைகள் வெளிக்கொணரப்பட்டன.

(04) அவர்கள் சிறுபராயத்திலிருந்தே தாராளத் தன்மையோடு நடந்து கொண்டார்கள். நுண்ணறிவுடன் செயல்பட்டார்கள். இவை அவர்கள் மீது அனைவரையும் அன்பு கொள்ளச் செய்தன.

சிறுவராக இருந்த நபி (ஸல்) அவர்கள் தனது பாட்டனின் பராமரிப்பில் இருந்தபோது அவருக்குரிய விரிப்பிலேயே அமரக் கூடிய வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். அவ்வாறான வேளையில் பாட்டனின் பிள்ளைகள் எவரும் (அதாவது நபிகளாரின் சாச்சாமார்) அங்கு அமர்ந்து கொள்ள மாட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் விரிப்பில் அமரும்போது பெரிய தந்தையர் கூட குறித்த விரிப்பிலிருந்து சென்றுவிட முயற்சிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளைகளிலெல்லாம் எனது மகனை விட்டு விடுங்கள், அல்லாஹ் வின் மீது ஆணையாக நிச்சயமாக அவருக்கு நல்லதொரு எதிர்காலம் இருக்கிறது என அப்துல் முத்தலிப் அவர்களைத் தடுத்து விடுவார்.

(05) நபி (ஸல்) அவர்கள், இளமைப் பருவத்தின் ஆரம்ப கட்டங்களில் மக்காவாசிகளின் ஆடுகளைக் கூலிக்கு மேய்த்து வந்தார்கள். எல்லா நபிமார்களும் ஆடு மேய்க்கக் கூடியவர்களாக இருந்திருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டபோது ஸஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதரே நீங்களுமா? என வினவினார்கள். அதற்கு 'ஆம் நானும் அப்படியே' எனப் பதிலளித்தார்கள். இன்னொரு அறிவிப்பின் படி, அல்லாஹ்வின் தூதரவர்களே நீங்களுமா? என ஸஹாபாக்கள் வினவியபோது 'ஆம், மக்காவாசிகளின் ஆடுகளைக் கூலிக்காக மேய்த்தேன்' என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

இருபத்தைந்து வயதை அடைந்ததன் பின்னர் நபி (ஸல்) அவர்கள் கதீஜா பின்த் குவைலித் என்ற பெண்மணியின் வியாபார நடவடிக்கை களில் கூலிக்கு பின்னர் அமர்ந்தார்கள்.

(06) சமவயதை உடைய மக்கா இளைஞர்களின் கேலிக் கூத்துக்களில் நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் பங்கேற்கவில்லை. அல்லாஹ் அவற்றிலி ருந்து அவர்களைப் பாதுகாத்தான். நபி (ஸல்) அவர்கள் இளைஞராக இருந்தபோது திருமண வைபவமொன்று நிகழ்ந்தது. அங்கு பாடலொன்று இசைக்கப்படுவதை செவிமடுத்த அவர்கள், அதனைக் கேட்கவும் அவர் களைப் பார்வையிடவும் விரும்பினார்கள். அவ்வேளை, அல்லாஹ் அவர் களுக்கு தூக்கத்தை ஏற்படுத்தி விட்டான். சூரிய உதயத்தின் பின்பே அவர்களுடைய கண்கள் விழித்தன. அவர்கள் ஒருபோதும் தன்னுடைய சமூகத்தோடு சேர்ந்து சிலை வணக்கத்தில் ஈடுபடவில்லை; சிலைகளுக் காக பலியிடப்பட்ட எந்தப் பிராணியையும் சாப்பிடவில்லை. மட்டுமன்றி மது அருந்தவோ, சூது விளையாடவோ, மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தவோ இல்லை. இதனை நபி (ஸல்) அவர்கள் பற்றி எழுதப் பட்ட எல்லா வரலாற்று நூல்களும் எடுத்துக்காட்டியுள்ளன.

(07) அவர்கள் பருவ வயதை அடைந்தது முதல் அறிவுத் தீட்சண்யம் மிக்கவர்களாகவும், மிகப் பொருத்தமான தீர்ப்பை முன்வைக்கக் கூடியவர் களாகவும் இருந்தார்கள். கஃபாவில் ஹஜருல் அஸ்வத் கல்லை அதற்குரிய இடத்தில் வைத்த நிகழ்வு இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வெள்ளப்பெருக்கொன்று கஃபாவைத் தாக்கி அதன் சுவர்களை சேதப் படுத்தின. எனவே, மக்காவாசிகள் அதனை உடைத்து புனர்நிர்மாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தீர்மானித்தனர். கட்டடம் எழுப்பப்பட்டு ஹஜருல் அஸ்வத் கல்லை பதிக்கும் கட்டம் வந்தபோது, அதனை உரிய இடத்தில் வைக்கின்ற கண்ணியத்தைப் பெற்றுக் கொள்வதில் அவர்கள் கடுமையாக மோதிக் கொண்டார்கள். அந்த கௌரவம் தமக்கே கிடைக்க வேண்டும் என ஒவ்வொரு கோத்திரத்தினரும் விரும்பினர்.

முரண்பாடு கடுமையாகி போர் மூளும் நிலை தோன்றியது. இறுதியாக பனூ ஷைபா வாயிலூடாக முதலில் யார் நுழைகிறாரோ அவரே இப்பிரச்சினைக்குத் தீர்வு கூறவேண்டும் என்ற முடிவுக்கு உடன்பட்டார்கள். எதிர்பாராத வகையில் றஸூல் (ஸல்) அவர்களே அவ்வாயிலினூடாக உள்ளே நுழைந்தார்கள். நபி (ஸல்) அவர்களைக் கண்ட அவர்கள், இவர் நம்பிக்கைக்குரியவர், இவருடைய தீர்ப்பை நாம் திருப்தியோடு ஏற்றுக்கொள்கிறோம் என ஏக மனதாகக் கூறினர். இது தொடர்பாக நபி (ஸல்) அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டபோது முரண்பட்டு நின்ற அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் பிரச்சினையை அணுகினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தனது பரிவட்டத்தை விரித்து குறிப்பிட்ட கல்லை அதில் வைத்தார்கள். பின்னர் ஒவ்வொரு கோத்திரமும் பரிவட்டத்தின் ஓரத்தை பிடித்துக்கொள்ளுமாறு விண்ணப்பித்தார்கள். அவர்கள் அனைவரும் சேர்ந்து அதனை உயர்த்த குறித்த கல் வைக்கப்பட வேண்டிய இடத்தை அண்மியதும் தனது கையால் அதனை குறித்த இடத்தில் எடுத்து வைத்தார்கள். இதனை அனைவரும் திருப்தியுடன் ஏற்றுக்கொண்டார்கள். அல்லாஹ்வின் அருளினால் ஓட்டப்படவிருந்த இரத்த ஆற்றை நபி (ஸல்) அவர்கள் தனது நிரம்பிய அறிவு ஞானத்தால் தடுத்து நிறுத்தினார்கள்.

(08) நபி (ஸல்) அவர்கள் இளமை முதலே மக்களுக்கு மத்தியில் நம்பிக்கைக்குரியவர், உண்மையாளர் என்ற சிறப்புப் பெயர்களினால் அறிமுகமாகியிருந்தார்கள். அடுத்தவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல், வாக்குறுதியை நிறைவேற்றுதல் போன்ற நற்பண்புகளினால் பிரபலமாகியிருந்த அவர்கள், களங்கமற்ற தூய்மையான வாழ்க்கை வரலாற்றை கொண்டிருந்தார்கள். கதீஜா தனது முதலீட்டின் மூலம் மேற்கொண்டு வந்த வியாபாரத்தில் நபி (ஸல்) அவர்களைப் பங்குகொள்ளுமாறு அழைப்பதற்கும் இப்பண்புகளே காரணமாகின. கதீஜா வருடத்துக்கு ஒரு முறை புஸ்ராவுக்கு செல்லும் தனது வியாபாரக் கோஷ்டியில் நபி (ஸல்) அவர்களையும் இணைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதற்காக ஏனையவர்களுக்கு வழங்கப்படும் கூலியை விட இருமடங்கு கூலியை வழங்குவதாகவும் வாக்களித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரக் கோஷ்டி மக்காவுக்குத் திரும்பியதும் கதீஜாவினுடைய அடிமை மைஸரா நபி (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட தூய்மை, அமானிதம் போன்ற நற்பண்புகள் குறித்து சிலாகித்துக் கூறினார். குறித்த பயணத்தின் மூலம் அதிக இலாபம் கிட்டியிருந்ததனால் வாக்களிக்கப் பட்டதை விட அதிகமான தொகையை கதீஜா, நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வு நபி (ஸல்) அவர்களை திருமணம் முடிக்க ஆசைகொள்ளும் அளவு கதீஜாவை இட்டுச் சென்றது. எனவே, தன்னை விட பதினைந்து வயது குறைந்தவராக இருந்த நபி (ஸல்) அவர்களை மணமுடிப்பதற்கு உடன்பட்டார்கள்.

நபித்துவம் கிடைப்பதற்கு முன்னர் நபி (ஸல்) அவர்களிடம் காணப் பட்ட நற்பண்புகளை எடுத்துக் காட்டும் மற்றொரு நிகழ்வு உள்ளது. அதாவது நபி (ஸல்) அவர்களுக்கு ஹிராக் குகையில் வஹி இறங்கிய பின்னர் நடுநடுங்கிய நிலையில் அவர்கள் வீடு திரும்பினார்கள். அச்சம் கொண்டார்கள். அவ்வேளை கதீஜா (றழி) பின்வருமாறு தேற்றினார்கள்: ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக நிச்சயமாக அல்லாஹ் உங்களை இழி வடையச் செய்ய மாட்டான். ஏனெனில், நீங்கள் இனபந்துக்களை சேர்ந்து நடக்கின்றீர்கள், பலவீனர்களுக்கு உதவி செய்கின்றீர்கள், இல்லாதவர் களுக்கு கொடுக்கின்றீர்கள், விருந்தாளிகளை உபசரிக்கின்றீர்கள், உண்மை யாளர்களுக்கு உதவிசெய்கிறீர்கள்.''

*(09)* நபி (ஸல்) அவர்கள் இரண்டு முறை மக்காவுக்கு வெளியே பயணம் செய்துள்ளார்கள். முதலாவது பயணம் அவரது பன்னிரண்டு வயதில் பெரிய தந்தை அபூ தாலிபுடன் இடம்பெற்றது. இரண்டாவது பயணம் இருபத்தைந்து வயதில் கதீஜாவின் வியாபாரக் குழுவில் சென்றார்கள். குறித்த இரண்டு பயணங்களும் ஷாமிலுள்ள புஸ்ரா நகரை நோக்கியனவாகவே இருந்தன. அப்பிரயாணங்களின்போது வியாபாரம் தொடர்பான விடயங்களை கேட்டறியக் கூடியவர்களாகவும், தான் கடந்து செல்கின்ற பிரதேசங்களின் தடயங்களையும் அங்கு வசிக்கக் கூடிய மக்களின் பழக்க வழக்கங்களையும் நன்கு அவதானிக்கக் கூடியவர்களாக வும் இருந்தார்கள்.

*(10)* நபித்துவம் கிடைப்பதற்கு ஓரிரு வருடங்களுக்கு முன்னர் ஹிராக் குகைக்குச் சென்று ஒதுங்கியிருப்பதை அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு விருப்பத்துக்குரிய செயலாக ஆக்கிவைத்தான். ஹிராக் குகை மக்காவுக்கு வடமேற்கே மிக அண்மையில் அமைந்துள்ள ஒரு மலையில் காணப்படு கிறது. நபி (ஸல்) அவர்கள் ஒரு மாதமளவு அதாவது றமழான் மாதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையாக அக்குகையில் தங்கியிருந்து அல்லாஹ்வினுடைய அத்தாட்சிகள், சக்திகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி இறக்கப்படும் வரை இது தொடர்ந்தது.

## பாடங்களும் படிப்பினைகளும்

மேற்கூறிய நிகழ்வுகளின் மூலம் ஆய்வாளன் பின்வரும் பாடங்களையும், படிப்பினைகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

(01) அல்லாஹ்வின் பால் அழைப்பு விடுக்கக்கூடிய அழைப்பாளன், அல்லது சமூக சீர்திருத்தவாதி உயர் சமூக அந்தஸ்துப் பெற்றவராக இருக்கும் போது மக்கள் அவருக்கு அதிகம் செவிசாய்க்கக் கூடியவர்களாக இருப்பர். பொதுவாக அழைப்பாளர்களும், சீர்திருத்தவாதிகளும் சாதாரண சமூக சூழலிருந்து அல்லது பலவீனமான குடும்பப் பின்னணியிலிருந்து வரும் போது அவர்களை மக்கள் இழிவுபடுத்துவார்கள். அவர்கள் தாம் தஃவாவுக்கு செவிமடுக்காதிருப்பதையும், கட்டுப்படாதிருப்பதையும் இதன் மூலமே நியாயப்படுத்த முயற்சிப்பார்கள். ஆனால் அவர்கள் சிறந்த பரம்பரையையும் உயர்ந்த சமூக அந்தஸ்தையும் பெற்ற குடும்பப் பின்னணி உடையோராக இருந்தால் அவர்களுடைய தஃவாப் பணிக்கெதிராக வெறும் கட்டுக்கதைகளை மட்டுமே கூற முடியுமாக இருக்கும்.

எனவேதான், ஹிர்கல் மன்னன் தன்னையும், தன்னுடைய சமூகத்தினரையும் இஸ்லாத்தின்பால் அழைத்து நபி (ஸல்) அவர்கள் அனுப்பிய கடிதம் குறித்து அபூஸுப்யானிடம் வினவியபோது முதலாவதாக அவருடைய பரம்பரை எத்தகையது? எனக் கேட்டான். அச்சந்தர்ப்பத்தில் இணைவைப்பளாராக இருந்த அபூஸுப்யான், அவர் எங்களிலே மிக கண்ணியமான பரம்பரையை உடையவர் எனப் பதில் கூறினார். ஹிர்கல் மன்னன் கேள்விகளை எழுப்பி பதில்களை செவிமடுத்த பின்னர், நபி (ஸல்) அவர்கள் குறித்து தான் வினவிய கேள்விகளுக்கான இரகசியத்தைப் பின்வருமாறு விளக்க ஆரம்பித்தார். அவர் உங்களில் எத்தகைய பரம்பரையை உடையவர் எனக் கேட்டபோது, அவர் உங்களில் மிகச் சிறந்த பரம்பரையை உடையவர் எனப் பதிலளித்தீர். அல்லாஹ் நபிமார்களை சமூகத்தில் இருக்கக்கூடிய கண்ணியமானவர்களிலிருந்தும், நல்ல பரம்பரையிலிருந்துமே தெரிவு செய்வான் என்றான்.

உண்மையில் இஸ்லாம், செயற்பாடுகளுக்கு முன்னால் பரம்பரைக்கு எத்தகைய பெறுமானத்தையும் வழங்குவதில்லை. என்றாலும், சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரையையும் சிறந்த செயற்பாடுகளையும் ஒருங்கே பெற்ற ஒருவர் மிகுந்த கண்ணியத்துக்குரியவராகவும், உயர்நிலையுடையவராகவும், வெற்றி பெறக் கூடியவராகவும் இருக்க முடியும் என்ற உண்மையை இது மறுத்துரைக்காது. இதனையே நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். ''உங்களிலே ஜாஹிலிய்யத்தில் சிறப்புக்குரியவர்கள் -அவர்கள் தெளிவு பெறுவார்களாயின் இஸ்லாத்திலும் சிறப்புக்குரியவர் களாக இருப்பர்.''

*(02)* அழைப்பாளன் தனது சிறுபராயத்திலிருந்தே வாழ்க்கைக் கஷ்டங் களையும், அநாதையாக இருப்பதால் ஏற்படக்கூடிய துன்பங்களையும் சகித்துக் கொள்வதானது, அவர் உயர்ந்த மனிதாபிமானக் கருத்துக்களை உணர்ந்து கொள்வதற்கு ஏதுவாய் அமையும். அத்துடன் துன்பப்படுவோர், வறியவர்கள், அநாதைகள், போன்ற பல்வேறு தரப்பினர் மீதும் அதிக அன்பு காட்டுவதற்கும்; அவர்களுக்கிடையில் நீதி செலுத்துவதற்கும் அவர்களுக்காக நற்பணிகளை மேற்கொள்வதற்குமான செயற்பாடுகளை அதிகரித்துக் கொள்ளவும் பங்களிப்புச் செய்யும்.

துன்பத்துக்கு உள்ளானவர்களினதும், பலவீனர்களினதும் துயரங்களை உணர்ந்து கொள்ளக் கூடிய வகையிலான, போதியளவு மனிதாபிமானப் பண்புகளை அனைத்து அழைப்பாளர்களும் பெற்றிருப்பது அவசியமாகும். அநாதைகள், வறியவர்கள், தேவையுடையவர்கள் போன்ற பலவீனர்கள் படுகின்ற கஷ்டங்களில் சிலவற்றையேனும் அவர்கள் தமது வாழ்வில் அனுபவிப்பதனூடாக மாத்திரமே இத்தகைய உயர் பண்புகளை அவர் களால் பெற்றுக்கொள்ள முடியும்.

*(03)* பித்ரா எனப்படும் இயல்பு நிலைக்கு நெருக்கமாகவும், சிக்கல் நிறைந்த வாழ்க்கையிலிருந்து மிகத் தூரமாகவுமுள்ள சூழலில் அழைப் பாளன் வாழுகின்றபோது, அவரது உள்ளம் தூய்மை பெற்று அவரது உடல், அறிவு, ஆன்மா என்பன பலம் பெறுகின்றன. அவரது பேச்சு சிந்தனை என்பன சீரடைகின்றன.

அந்தவகையில் இஸ்லாமியத் தூதை எத்திவைப்பதற்காக அல்லாஹ் அறபு சமூகத்தை பொடுபோக்காகவோ, எழுந்தமானமாகவோ தெரிவு செய்யவில்லை. மாறாக அவர்கள் தமக்குப் பக்கத்தில் வாழ்ந்த நாகரிக மடைந்த சமூகங்களோடு ஒப்பிடுகையில் தூய உள்ளம் கொண்டவர்களாக வும், சீரான சிந்தனையுடையவர்களாகவும், நேர்த்தியான பண்புடையவர் களாகவும் காணப்பட்டனர். மாத்திரமன்றி, அல்லாஹ்வின் தூதை உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் தஃவாப் பணியின்போது எதிர்நோக்கும் (யுத்தம் போன்ற) சவால்களை எதிர்கொள்ளக்கூடிய தன்மையுடையவர்களாகவும் இருந்தனர். இதனாலேயே அல்லாஹ் குறித்த பணிக்காக அவர்களைத் தெரிவுசெய்தான்.

*(04)* தஃவாவின் அச்சாணியாக இருந்து செயற்படக்கூடிய தலைமைத்துவத்துக்கு, திறமையும் தீட்சண்யமும் உள்ளவரே தகைமை பெறுவார். மடையர்களும், சாதாரண அறிவு படைத்தவர்களும் ஆன்மீகம், சீர்திருத்தம் உள்ளடக்கிய சிந்தனை ரீதியான தலைமைத்துவத்துக்கு எவ்வகையிலும் பொருத்தமற்றவர்களாவர். வாழ்க்கை நியதிகளுக்குள்ளிருந்து பார்த்தால் கூட, மடையர்களும் சிந்தனைச் சிக்கலுக்குட்பட்டவர்களும், வித்தியாசமான கருத்துப் போக்குள்ளவர்களும் வாழ்வின் எந்தவொரு பகுதிக்கும் தலைமைத்துவம் வழங்குவதற்கு தகுதி பெற்றவர்களாகக் கணிக்கப்படமாட்டார்கள். ஏனெனில், இவர்கள் அவசர நிலைமைகளில் தடுமாற்றத்துக்குள்ளாகி தடம்புறண்டுவிடுவர். இவர்களுடைய செயல்களில் தோன்றும் மடமை, எதிர்மறை நிலை, சிந்தனைகளில் காணப்படும் குழப்பநிலை போன்றவற்றைக் கண்டு மக்கள் இவர்களிடமிருந்து விரண்டோடி விடுவர்.

*(05)* அழைப்பாளன் தன்னுடைய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு சொந்த உழைப்பில் தங்கியிருக்க வேண்டும். அல்லது அவர் பொருத்தமானதொரு வருமான வழியை ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அவர் தனது தேவைகளுக்காக பிறரிடம் இழிவடைந்து உதவி கேட்டு வாழக் கூடியவராக இருக்கக் கூடாது..

உண்மையான, கௌரவமான அழைப்பாளர்கள் மக்கள் வழங்குகின்ற நன்கொடைகளினால் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதை வெறுப்பார்கள். ஏனெனில், வெளிப்படையாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகவேனும் மக்களிடம் கேட்டு தாமாகவே இழிவடைந்ததன் பிறகு சமூகத்தில் எத்தகைய அந்தஸ்துத்தான் அவர்களுக்குக் கிட்டும். தஃவா செய்வதாகக் கூறிக்கொண்டு பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு மக்களது செல்வங்களை அதிகமாக அனுபவிப்பவரைக் கண்டால் நிச்சயமாக அவர் தன்னைத் தானே இழிவடையச் செய்து கொண்டிருக்கிறார் என்று தான் குறிப்பிட வேண்டும். அவ்வாறெனின், சமூக அங்கத்தவர்கள், பக்கத்து வீட்டார், தம்மைத் தாமே இழிவடையச் செய்து கொண்டோர் போன்றவர்களது உள்ளங்களில் அவருக்கு எத்தகைய கௌரவம் கிட்டும்? அவர் எவ்வாறு நல்ல பண்பாடுகளை நோக்கி மக்களை அழைக்க முடியும்? குழப்பக்காரர்கள், அத்துமீறியவர்களுக்கு முன்னால் நின்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு தீமைக்கும், குழப்பத்துக்கும் எதிராக போராட முடியும்? எப்படி அவரால் சமூகத்துக்கு கண்ணியத்தையும், கௌரவத்தையும், உறுதியையும் கொண்டு வரமுடியும்?

*(06)* அழைப்பாளன் தனது இளமைக் காலத்தில் சீரான வாழ்க்கைப் போக்கைப் பெற்றவராக இருப்பது அவரது தஃவாப் பணி மற்றும் பண்பாட்டு சீராக்கப் பணி, தீமைகளுக்கு எதிரான போராட்டம் என்பவற்றின் வெற்றிக்கு அதிக பங்களிப்பைச் செய்யும். ஏனெனில், குறித்த அழைப்பாளர், தான் தஃவா பணியில் ஈடுபடுவதற்கு முன்னரான தனது தனிப்பட்ட வாழ்க்கையில், மக்கள் குறை காணக்கூடிய எதையும் விட்டுவைத்திருக்க மாட்டார். சீர்திருத்தப் பணியிலும் குறிப்பாக பண்பாட்டு சீர்திருத்தத்திலும் ஈடுபட்ட பலர் மக்களால் நிராகரிக்கப்படுவதற்கான மிக முக்கிய காரணியாக அவர்களுடைய மாசுபடிந்த இறந்த காலமும், சீரற்ற பண்பாடுகளுமே இருந்திருக்கின்றன என்பதை நாம் காண்கிறோம்.

அது மாத்திரமன்றி மோசமான அந்த இறந்த காலம் அவர்களது தஃவா செயற்பாட்டின் உண்மைத் தன்மையிலும் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தி விட முடியும். அந்தவகையில் அவர்கள் மேற்கொள்ளும் தஃவா செயற்பாட்டுக்குப் பின்னால் பிரத்தியேகமான நோக்கங்களை வைத்திருப்பதாக அவர்கள் குற்றம் சாட்ட முடியும். அல்லது அவர்கள் தமது இளமைக் காலத்தை வாழ்வின் இன்பங்களில் கழித்துவிட்டு, வாழ்க்கையில் தாம் அனுபவித்த இன்பங்கள், புகழ், பிரபல்யம், செல்வம், போன்றவற்றைத் தொடர்ச்சியாக வயோதிபத்தில் பெற்றுக்கொள்ள முடியாது என தமது எதிர்பார்ப்புக்களை இழந்து விடுகின்றபோது தஃவாப் பணியில் ஈடுபடுகிறார்கள் என மக்கள் குற்றம் சாட்டி குறை கூற முடியும்.

சீரான இளமைக் கால வரலாற்றைக் கொண்ட அழைப்பாளர், தொடர்ந்தும் தலை நிமிர்ந்து வாழ முடியுமானவராக இருப்பார். அவரது கடந்த கால, அண்மைக்கால வாழ்க்கையில் குறை காண்பதற்கான எந்தவொரு வழியையும் எதிரிகள் கண்டு கொள்ள மாட்டார்கள். மாத்திரமன்றி அவரது இறந்த காலத்தை வைத்து அவரைப் பிரபல்யப்படுத்தி அவரை நிராகரிக்குமாறு மக்களை தூண்டுவதற்கான எத்தகைய சந்தர்ப்பமும் அவர்களுக்கு கிட்ட மாட்டாது.

ஆம், நிச்சயமாக அல்லாஹ் உண்மையாகவும் தூய்மையாகவும் அவன்பால் மீண்டு பாவமன்னிப்பு கோரக் கூடியவரை ஏற்றுக் கொள்வான். அவரது நிகழ்கால நற்செயல்களைக் கொண்டு கடந்த கால பாவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்து விடுவான். ஆனால், தனது அழைப்புப் பணியில் வெற்றி கிடைக்க வேண்டுமென எதிர்பார்த்து செயற்படக் கூடிய அழைப்பாளனைப் பொறுத்தவரை இது வித்தியாசமானதாகும். அதாவது அவரது கடந்த கால சீரான வாழ்க்கையே அவரது பணியின் வெற்றிக்கு வழியமைத்துக் கொடுக்கும்.

(07) பயணங்களை மேற்கொள்ளுதல், மக்களுடன் உறவாடுதல், அவர்களுடைய பழக்கவழக்கங்கள், நிலமைகள், பிரச்சினைகள் குறித்து அறிந்திருத்தல் போன்றவற்றில் அழைப்பாளன் பெற்றிருக்கும் அனுபவங்கள் அழைப்புப் பணியின் வெற்றியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

மக்களுடைய வித்தியாசமான இயல்புகளைக் கவனத்திற் கொண்டு அவர்களோடு உறவாடாது, கட்டுரைகள், புத்தகங்களினூடாக மாத்திரம் மக்களோடு கலந்து வாழும், அழைப்பாளர்கள் தமது பணியிலே நிச்சயம் தோல்வியடைவார்கள். சமூகத்தில் எவரும் அவர்களுக்கு செவிமடுக்க மாட்டார்கள். அவர்களது அழைப்புக்கு உள்ளங்கள் ஒருபோதும் விடை கொடுக்க மாட்டா. ஏனெனில், தமது பிரச்சினைகளையும், நிலமைகளையும் குறித்த அழைப்பாளர்கள் அறியாதிருக்கிறார்கள் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள்.

எனவே, மார்க்கப் பற்றுள்ளவர்களை சீர்திருத்த விரும்புபவர் அவர்களோடு பள்ளிவாயில்களிலும், அவர்களது ஒன்று கூடல்களிலும், ஒன்று கூடும் இடங்களிலும் சேர்ந்து வாழக் கூடியவராக இருக்க வேண்டும். விவசாயிகளையும், தொழிலாளர்களையும் .சீர்திருத்த எத்தனிப்பவர், அவர்களுடைய கிராமங்கள், அவர்கள் கூடுகின்ற இடங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் கலந்து வாழ்ந்து அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று உறவாடி உணவு உண்ணக் கூடியவராக இருக்க வேண்டும்.

மக்களின் நடைமுறையில் காணப்படும் நடத்தைகளை சீர்திருத்த விரும்புபவர், சந்தைகள், வியாபார ஸ்தலங்கள், தொழிற்சாலைகள், கழகங்கள் போன்ற மக்கள் ஒன்று சேரக் கூடிய அனைத்து இடங்களிலும் கலந்து வாழவேண்டும். அரசியல் நிலமைகளை சீர்திருத்த விரும்புகின்றவர், அரசியல்வாதிகளுடன் கலந்து வாழ்ந்து அவர்களுடைய ஒழுங்குகளையும் அறிந்துகொள்ள வேண்டும். அவர்களது உரைகளை செவிமடுக்க வேண்டும். அத்துடன் அவர்களது கட்சிகள், நிகழ்ச்சிகள் குறித்து அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அவர்கள் வாழுகின்ற சூழல், அவர்களது கலாசாரம், அவர்கள் செல்லும் இலக்கு போன்றவற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலமே, அவர்கள் விரண்டோடி விடாதவாறு அவர்களோடு எவ்வாறு உறவாடுவது, உள்ளம் வெறுப் படைந்து யுத்தம் புரிய முன்வராதவாறு அவர்களோடு எவ்வாறு இணைந்து வாழ்ந்து அவர்களை சீர்திருத்துவது போன்றன குறித்து அறிந்து கொள்ளமுடியும்.

இவ்வாறுதான், அழைப்பாளன் தன்னுடைய வாழ்கையில் பெற்றுக் கொள்கின்ற அனுபவங்கள், மக்கள் விவகாரங்கள் பற்றிய அறிவு போன்றன பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை அவர் தன்னுடைய வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கும்.

''உங்களுடைய இரட்சகனின் பாதையிலே அறிவு ஞானம், சிறந்த உபதேசம் என்பவற்றைக் கொண்டு அழைப்பு விடுங்கள்.'' *(அந்நஹ்ல் : 125)*

இது தொடர்பாக வந்துள்ள பின்வரும் கூற்றுக்கள் இங்கு அவதானிக் கத்தக்கதாகும்.

''மக்களின் அறிவுத்தரங்களுக்கு ஏற்ப அவர்களோடு உறவாடுங்கள். நீங்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் பொய்ப்பிக்கப்பட வேண்டு மென விரும்புகிறீர்களா?'' *(ஸஹீஹுல் புஹாரி: 1/199)*

மக்கள் அறிந்து கொள்ளக் கூடியவகையில் அவர்களோடு உறவாடுங்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் பொய்ப்பிக்கப்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா? *(அலி றழி)*

*(08)* அழைப்பாளன் இடைக்கிடை தனிமையில் இருப்பதற்கான நேரங்களை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். இதன்போது அவர் தன்னுடைய ஆன்மாவை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்திக் கொள்கிறார். தன்னுடைய உள்ளத்தை மிக மோசமான பண்புகளிலிருந்து தூய்மைப்படுத்திக் கொள்கிறார். தன்னைச் சூழவுள்ள சிக்கல்கள் நிறைந்த வாழ்க்கையிலிருந்து தன்னைச் சீர்செய்து கொள்கிறார்.

உள்ளம் நன்மை செய்வதில் குறைவிட்டிருக்கிறதா? அல்லது இலக்கில் வழுக்கியிருக்கிறதா? அறிவு ஞானத்திலிருந்து தூரமாகி இருக்கிறதா? பாதையில், வழிமுறையில் அது தவறு விட்டிருக்கிறதா? சுவனம், நரகம், மரணம் அதனது கஷ்டங்கள் போன்றனவற்றை மறந்திருக்கிறதா? அல்லாஹ்வை நினைப்பதையும் அவனை நெருங்குவதையும், மறுமையை ஞாபகப்படுத்துவதையும் மறக்கச் செய்யுமளவுக்கு மக்களுடன் அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதப்பிரதிவாதங்களில் மூழ்கிப் போய் இருந்திருக்கிறதா என்பன போன்ற கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டு விடை கண்டுகொள்ள இத்தகைய தனிமைகள் அழைப்பாளனுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கும். எனவே தான் தஹஜ்ஜுத், கியாமுல் லைல் தொழுகைகள் நபி (ஸல்) அவர்களுக்கு (பர்ளு) கடமையானவையாகவும் பொது மக்களுக்கு விருப்பத்துக்குரியன வாகவும் (முஸ்தஹப்) அமைந்து காணப்பட்டன. இந்த ஸுன்னத்தான அமலைச் செய்வதில் அழைப்பாளர்கள் அதிக வேட்கை கொள்ளக் கூடியவர்களாக இருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

தனிமையில் இருப்பதிலும், பின் இரவு வேளைகளில் தஹஜ்ஜுத், கியாமுல் லைல் வணக்கங்களில் ஈடுபடுவதிலும் உள்ள இன்பங்களை அல்லாஹ் கண்ணியப்படுத்தியவர்களால் மாத்திரமே சுவைத்துப் பார்க்க முடியும். இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்கள் தஹஜ்ஜுத் மற்றும் ஏனைய வணக்கங்களுக்குப் பின்னால் பின்வருமாறு கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். ''நாங்கள் ஒரு இன்பத்திலே இருக்கிறோம் இதனை அரசர்கள் அறிந்து கொண்டால் நிச்சயமாக அதற்காக அவர்கள் எம்முடன் போராடுவார்கள்.''

றஸூல் (ஸல்) அவர்களை விழித்துப்பேசிய பின்வரும் அல்குர்ஆன் வசனமொன்றே நாம் மேற் சொன்ன கருத்துக்குப் போதுமானதாகும்.

> ''போர்வை போர்த்திக் கொண்டிருப்பவரே! இரவில் -சிறிது நேரம் தவிர்த்து (தொழுகைக்காக எழுந்து) நிற்பீராக, அதில் பாதி (நேரம்) அல்லது அதில் சிறிது குறைத்துக் கொள்வீராக! அல்லது அதைவிடச் சற்று அதிகப்படுத்திக் கொள்வீராக, மேலும் குர்ஆனைத் தெளிவாகவும், நிறுத்தி, நிறுத்தியும் ஓதுவீராக. நிச்சயமாக, நாம் விரைவில் கனமான உறுதியான- ஒரு வாக்கை உம்மீது இறக்கி வைப்போம். நிச்சயமாக, இரவில் எழு(ந்திருந்து வணங்கு)வது (அகத்தையும் புறத்தையும்) ஒருங்கிணைக்க வல்லது. மேலும் வாக்கையும் செவ்வைப்படுத்தவல்லது. *(முஸ்ஸம்மில் 1-6)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பிரிவு

# நபித்துவம் கிடைத்ததிலிருந்து ஹபஷா ஹிஜ்ரத் வரை

***வரலாற்று நிகழ்வுகள்:***

*இக்காலப்பிரிவிலே பின்வரும் வரலாற்று நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

***(01) றஸூல் (ஸல்) அவர்களுக்கு வஹி இறங்கியமை:***

*நபி (ஸல்) அவர்கள் நாற்பது வயதைப் பூர்த்தி செய்த வேளை றமழான் பிறை 17 திங்கட் கிழமையன்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் வஹியை கொண்டு வந்தார்கள். வஹி இறங்கியமை தொடர்பாக முஃமின்களின் தாயான ஆயிஷா (றழி) அவர்களின் அறிவிப்பை இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் தனது கிரந்தத்தில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள்:-*

*முதலில் றஸூல் (ஸல்) அவர்கள் தூக்கத்தில் புனிதமான கனவுகளைக் கண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் காண்கின்ற கனவுகளெல்லாம் காலையின் உதயம் போல யதார்த்தமாகி விடக் கூடியனவாக இருந்தன. பின்னர் அவர்களுக்கு தனிமையில் இருக்க வேண்டும் என்ற விருப்பம் அதிகரித்தது. தனக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு அவர்கள் ஹிராக் குகைக்குச் சென்றார்கள். சில நாட்கள் அங்கு வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். தனக்குத் தேவையான பொருட்களை கதீஜாவிடமிருந்து எடுத்துக் கொண்டுபோய் தொடர்ச்சியாக குகையில் தங்கினார்கள்.*

*ஹிராக் குகையில் இருக்கும்போது மலக்குகளில் ஒருவர் அவர்களிடம் வந்து வாசிப்பீராக! எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் எனக்கு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கத் தெரியாது என்றார்கள். நபி (ஸல்) அவர்கள் இதுதொடர்பாக பின்வருமாறு கூறினார்கள்: அம்மலக்கு என்னை இறுகப்பற்றி அணைத்தார். நான் அதிகம் களைப்புற்றேன். பின்னர் பிடியைத் தளர்த்தி 'வாசிப்பீராக' எனக் கூறினார். 'எனக்கு வாசிக்கத் தெரியாது' என நான் பதிலளித்தேன். தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் கடுமையாகக் களைப்படையும் வரை என்னை இறுகக் கட்டியணைத்துக் கொண்டார். பின்னர் பிடியைத் தளர்த்தி 'வாசிப்பீராக' எனக் கூறினார். அப்போது 'எனக்கு வாசிக்கத் தெரியாது' என்றே குறிப்பிட்டேன். மூன்றாவது தடவையாகவும் அவர் என்னை இறுகக் கட்டியணைத்தார். பின்னர் தளர்த்திவிட்டு பின்வருமாறு கூறினார்:

> ''(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக. அவன் அலக் என்ற நிலையிலிருந்து மனிதனைப் படைத்தான். ஓதுவீராக, உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்.'' (அலக் 1-5)

இதற்குப் பின்னர் நபி (ஸல்) அவர்கள் கதீஜா பின்த் குவைலித் (றழி) அவர்களிடம் வந்து என்னைப் போர்த்தி விடுங்கள்! என்னைப் போர்த்தி விடுங்கள்! என நடுநடுங்கியவர்களாகக் கூறினார்கள். எனவே, அவர்கள் நபி (ஸல்) அவர்களுடைய நடுக்கம் நீங்கும் வரை போர்த்தி விட்டார்கள். பிறகு கதீஜாவிடம் நடந்தவற்றை எடுத்துரைத்து, எனது உயிருக்கு ஆபத்து நேர்ந்துவிடுமோ எனப் பயந்தேன் என்றார்கள். அதற்கு கதீஜா ''ஒருபோது மில்லை, நிச்சயமாக அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவுபடுத்த மாட்டான். ஏனெனில், நீங்கள் இனபந்துக்களை சேர்ந்து நடக்கிறீர்கள். கஷ்டப்படுவோரை சுமந்து கொள்கிறீர்கள். இல்லாதவர்களுக்கு வழங்கு கிறீர்கள். விருந்தாளிகளை உபசரிக்கிறீர்கள். சத்தியத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்கிறீர்கள்'' எனக் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களை அழைத்துக் கொண்டு வரகத் இப்னு நவ்பல் இப்னு அஸத் இப்னு அப்துல் உஸ்ஸாவிடம் கதீஜா சென்றார். கதீஜாவின் சாச்சாவின் மகனான வரகத் ஜாஹிலிய்யாக் காலத்தில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியிருந்தார். அபரானி மொழியை எழுதக் கூடியவராக இருந்த அவர் அல்லாஹ்வின் நாட்டப்படி இன்ஜீல் வேதத்தில் குறிப்பிடத்தக்க அளவு பகுதியை எழுதி வைத்திருந்தார். குருடராக இருந்த அவர் ஒரு பெரிய மார்க்க அறிஞராகவும் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதீஜா அவரிடம் ''எனது சிறிய தந்தையின் மகனே, உங்களது சகோதரரின் மகன் சொல்வதைக் கேளுங்கள்'' எனக் கூறினார். அதற்கு வரகத் ''சகோதரனின் மகனே என்ன நடந்தது?'' என வினவினார். பிறகு நபி (ஸல்) அவர்கள், தனக்கு நிகழ்ந்ததைக் குறிப்பிட்டார்கள். இதனைக் கேட்ட வரகா, அவர் மூஸாவுக்கு வஹி கொண்டு வந்த ஜிப்ரீலாகவே இருக்க வேண்டும். உங்களை உங்களுடைய சமூகம் வெளியேற்றுகின்றபோது நான் உயிரோடு இருக்கக் கூடாதா? அவ்வேளை பலம் வாய்ந்த இளைஞனாக இருக்கக் கூடாதா? எனக் கதறினார்.

இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் என்னுடைய சமூகம் என்னை வெளியேற்றுமா? என வினவினார்கள். அதற்கு வரகா, ஆம், நீங்கள் சுமந்து வந்திருக்கின்ற விடயத்தை யாரெல்லாம் சுமந்து வந்தார்களோ அவர்கள் அனைவருமே வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த நாட்களில் நான் உயிருடன் இருந்தால் நிச்சயமாக உங்களுக்கு முழுமையாக உதவி செய்வேன் என்றார். எனினும் வஹி தடைப்பட்டிருந்த இடைக்காலத்தில் வரகா மரணித்துவிட்டார்.

இப்னு இஸ்ஹாக் வாயிலாக இப்னு ஹிஷாம் பின்வருமாறு அறிவிக்கிறார்: நபி (ஸல்) அவர்கள் ஹிராக் குகையில் தூங்கிக் கொண்டிருந்த வேளையில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் பட்டினாலான பாத்திரத்தில் ஒரு நூலைச் சுமந்தவர்களாக வந்து வாசிப்பீராக! எனக் கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் வாசித்தேன். வாசித்து முடித்ததும் அவர் என்னை விட்டு நீங்கிச் சென்றார். தூக்கத்திலிருந்து எழுந்தபோது எனது உள்ளத்திலே ஒரு நூல் எழுதப்பட்டிருப்பது போன்று இருந்தது.

மேலும் நான் குகையிலிருந்து வெளியேறி மலையின் மத்திய பகுதிக்கு வந்தேன். அங்கு, ஓ முஹம்மதே! நீங்கள் அல்லாஹ்வின் தூதர், நான்தான் ஜிப்ரீல் என்று வானத்திலிருந்து ஒலித்த சத்தத்தைக் கேட்டேன். எனது தலையை வானத்தின்பால் உயர்த்திப் பார்த்தேன். அங்கு ஜிப்ரீல் மனிதரின் உருவத்தில் தனது இரு பாதங்களையும் நேர்த்தியாக வைத்து அடிவானத்தில் இருப்பதைக் கண்டேன். அவர், ஓ! முஹம்மதே நீங்கள் அல்லாஹ்வின் தூதர். நான் ஜிப்ரீல் எனக் கூறினார். நான் அவரைப் பார்த்தவாறு முன்னாகவோ பின்னாகவோ செல்லாது அப்படியே நின்றேன். வானத்தின் கோடியில் அங்குமிங்குமாக எனது முகத்தைத் திருப்பினேன். எல்லாத் திசைகளிலும் அவரையே கண்டேன். கதீஜா என்னைத் தேடி தூதர்களை அனுப்பும் வரை முன், பின் செல்லாது தொடர்ந்து குறித்த இடத்திலேயே இருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(02) நபி (ஸல்) அவர்களை அவருடைய மனைவி கதீஜா (றழி) அவர்களே முதலில் ஏற்று இஸ்லாத்தை தழுவிக் கொண்டார்கள். தொடர்ந்து அவர்களுடைய சிறிய தந்தையின் மகன் அலி (றழி) இஸ் லாத்தை ஏற்றுக் கொண்டார். அப்போது அவருக்கு 10 வயதாக இருந்தது. அவரைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களின் வளர்ப்பு மகனாக இருந்த ஸைத் பின் ஹாரிஸா அவர்களும், பின்னர் அபூபக்ர் சித்தீக் (றழி) அவர் களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அடிமைகளில் முதன் முதலாக ஹபஷாவைச் சேர்ந்த பிலால் இப்னு றபாஹ் (றழி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பொதுவாக நோக்குமிடத்து, கதீஜா (றழி) அவர்களே முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவராகக் கருதப்படுகிறார்கள். நபி (ஸல்) அவர்கள், கதீஜாவோடு (திங்கட்கிழமை) முதன் முதலாக தொழுகையில் ஈடுபட்டார்கள். குறித்த தொழுகை பகலில் இரண்டு ரக்அத்துகளும் இரவில் இரண்டு ரக்அத்துகளுமாக இருந்தது.

(03) இதற்குப் பின்னர் குறிப்பிட்டதொரு காலம் வஹி இறங்காம லிருந்தது. இந்தக் கால அளவை வரையறுப்பதில் வேறுபட்ட அறிவிப்புக் கள் கிடைத்துள்ளன. இதன்படி வஹி இறங்காதிருந்த ஆகக் கூடிய கால அளவு மூன்று வருடங்கள் எனவும் குறைந்த கால அளவு ஆறு மாதங்கள் எனவும் கொள்ள முடியும். நம்பத் தகுந்த அறிவிப்புக்களின் படி ஆறு மாதங்கள் என்பதே ஏற்புடையதாகும்.

வஹி துண்டிக்கப்பட்டமை நபி (ஸல்) அவர்களுக்கு அதிக கஷ்டத்தை யும் கவலையையும் கொடுத்தது. இது மலைகளில் ஏறி அவற்றின் உச்சியில் இருந்து கீழே பாய்வதற்கு முயற்சிக்குமளவு அவர்களை இட்டுச் சென்றது. அல்லாஹ் தனது றிஸாலத்தை (தூது) வழங்கி கௌரவிப்பதற்குத் தெரிவு செய்ததன் பின்னர் தன்னை கைவிட்டு விட்டானோ என்று அஞ்சியே அவர்கள் இவ்வாறு நடக்க முயற்சித்தார்கள். சில காலத்தில் வஹி இறங்கியது.

இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் தனது கிரந்தத்திலே ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அல் அன்ஸாரி அவர்கள் அறிவித்த பின்வரும் ஹதீஸை பதிவு செய்துள்ளார்கள். "நான் நடந்து சென்று கொண்டிருந்த வேளையில் வானத்திலிருந்து ஒரு சத்தத்தைக் கேட்டேன். உடன், எனது பார்வையை உயர்த்திப் பார்த்தேன். அங்கு நான் ஹிராக் குகையில் இருக்கும்போது என்னிடம் வந்த மலக்கு வானத்துக்கும் பூமிக்கும் இடையே ஒரு கதிரையில் அமர்ந்தவாறு இருப்பதைக் கண்டேன். அவரைக் கண்டு அச்சமடைந்தேன். உடனே திரும்பி வந்து என்னைப் போர்த்திவிடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறினேன். இதனைத் தொடர்ந்து அல்லாஹ் பின்வரும் வசனங்களை இறக்கி வைத்தான்.''

''(போர்வை) போர்த்திக் கொண்டிருப்பவரே, நீர் எழுந்து மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக. மேலும், உம் இறைவனைப் பெருமைப்படுத்துவீராக. உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக. அன்றியும் அசுத்தத்தை வெறுத்து ஒதுக்கி விடுவீராக.'' *(ஸூறதுல் முத்தஸிர்: 1-5)*

இதன் பின்னர் வஹி தொடர்ச்சியாக இறங்க ஆரம்பித்தது.

*(04)* நபி (ஸல்) அவர்கள் தனது நம்பிக்கைக்குரியவர்களை இஸ்லாத்தின்பால் அழைக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் இப்பணியை தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் மேற்கொண்டார்கள். அதன் விளைவாக, தெளிவான உள்ளமும், சிறந்த கருத்துப் போக்கும் உள்ளவர்களென அறிமுகமாகியிருந்த குறிப்படத்தக்க அளவினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இவர்களில் ஆண்களும், பெண்களும் அடங்கினர்.

*(05)* இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் தொகை முப்பதை அண்மியபோது தஃவாவை வெளிப்படையாக முன்வைக்குமாறு அல்லாஹ் தனது தூதருக்குப் பணித்தான். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்படுகின்றது.

''ஆதலால் உமக்குக் கட்டளையிடப்பட்டிருப்பதை அவர்களுக்கு வெளிப்படையாக அறிவிப்பீராக, இணைவைத்து வணங்குபவர்களை புறக்கணித்துவிடுவீராக!'' *(அல்ஹிஜ்ர்: 94)*

*(06)* இதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களுக்கும், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முஃமின்களுக்கும் வேதனை நிறைந்த கட்டம் ஆரம்பிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட தஃவா இணைவைப்பாளர்களை கிளர்ந்தெழச் செய்தது.

அல்லாஹ்வின் தூதர் இப்பணியினூடாக தங்களுடைய கடவுளர்களின் குறைகளை வெளிப்படுத்தி, தமது கனவுகளை சிதறடித்து விடுவார். இதன் விளைவாக எந்தப் பார்வைக்கும் எட்டாத ஆனால், அனைத்தையும் பார்க்கின்ற ஒரே இலாஹின் பக்கம் அழைப்பு விடுக்கின்ற புதியதொரு மார்க்கத்தைக் கொண்டு வந்து விடுவார் என அவர்கள் அஞ்சினர்.

*(07)* இக்காலப்பிரிவில் நபி (ஸல்) அவர்கள், ஏலவே இஸ்லாத்தை ஏற்றிருந்த அர்கம் இப்னு அபில் அர்கம் (றழி) அவர்களுடைய வீட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஃமின்களை இரகசியமாக ஒன்று சேர்த்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தனக்கு இறங்குகின்ற அல்குர்ஆன் வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பித்தும் அடிக்கடி அருளப்படுகின்ற மார்க்க சட்டங்களையும் விதிமுறைகளையும் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தும் வந்தார்கள்.

*(08)* நபி (ஸல்) அவர்களை தனது நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்யுமாறு கட்டளையிட்டான். எனவே, ஸபா மலையில் ஏறி நின்று குறைஷியரின் ஒவ்வொரு பிரிவினரையும் பெயர் கூறி அழைத்து, இஸ்லாத்தில் இணைந்துகொள்ளுமாறும் சிலை வணக்கத்தை விட்டு விடுமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். மேலும், அவர்களுக்கு சுவர்க்கத்தை பற்றி ஆசையூட்டி நரகத்தைப் பற்றி எச்சரிக்கை செய்தார்கள். இதனைக் கேட்ட அபூ லஹப், உமக்கு நாசம் உண்டாகட்டும். இதற்காகவா எங்களை ஒன்று சேர்த்தாய்? எனக் கேட்டான்.

*(09)* குறைஷியர், நபி (ஸல்) அவர்களைத் தண்டிக்க வேண்டும் என எழுந்தனர். சிறிய தந்தை அபூதாலிபை தூண்டிய போதிலும் அவர் நபி (ஸல்) அவர்களை, அவர்களிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டார். அவர்கள் திரும்பிச் சென்றதும் அழைப்புப் பணியை சிறிது தளர்த்துமாறு வேண்டிக் கொண்டார். சிறிய தந்தை தன்னை திசை திருப்புகிறார் எனக் கருதிய நபி (ஸல்) அவர்கள், பிரபல்யமான பின்வரும் கூற்றை முன்வைத்தார்கள். ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்கள் என்னுடைய வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் வைத்து இப்பணியை விட்டுவிடுமாறு கோரினாலும், அதனை ஒருபோதும் கைவிடமாட்டேன். அல்லாஹ் இப்பணிக்கு வெற்றியைத் தரும்வரை அல்லது அதற்காக மரணிக்கும் வரை தொடர்ந்து ஈடுபடுவேன்.''

*(10)* இதனைத் தொடர்ந்து முஷ்ரிக்குகள் நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய ஸஹாபாக்களுக்கும் மிகக் கடுமையாக வேதனைகளைக் கொடுத்தனர். இதன் காரணமாக சிலர் இறந்தார்கள். சிலர் குருடர்களாக மாறினார்கள்.

*(11)* முஃமின்கள் தங்களுடைய கொள்கையில் மிக உறுதியாக இருப்பதைக் கண்ட குறைஷியர், நபி (ஸல்) அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் குறித்த பணியை விட்டு விட்டால் அவர்கள் விரும்பியளவு பணம் தருவதாகவும், ஆட்சியதிகாரம் வழங்குவதாகவும் நிராகரிப்பாளர்கள் பேரம் பேசினர். இவையனைத்தையும் நபி (ஸல்) அவர்கள் நிராகரித்துவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(12)* குறைஷியரின் கடும்போக்கையும் அவர்கள் ஸஹாபாக்களை தொடர்ச்சியாக துன்பப்படுத்துவதையும் அவதானித்த நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களிடம் பின்வருமாறு கூறினார்கள்:

''நீங்கள் இருக்கும் நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு வழியை அல்லாஹ் ஏற்படுத்தித் தரும்வரை ஹபஷாவுக்கு (எதியோப்பியா) வுக்கு செல்வது சிறந்ததல்லவா. ஏனெனில், அங்கு ஒரு ஆட்சியாளர் இருக்கிறார். அவருடைய ஆட்சியில் எவருக்கும் அநியாயம் இழைக்கப்படு வதில்லை.

எனவே, ஆண்கள் பன்னிரண்டு பேரும் பெண்கள் நால்வருமாக மொத்தம் 16 ஸஹாபாக்கள் ஹிஜ்ரத் மேற்கொண்டார்கள். பின்னர், உமர் (றழி) இஸ்லாத்தை ஏற்றமையையும் இஸ்லாம் வெளிப்படையாக நடை முறைக்கு வந்துள்ளமையையும் கேள்வியுற்று மக்காவுக்குத் திரும்பினார் கள். எனினும், உடனடியாகவே இன்னும் சில முஃமின்களோடு மீண்டும் ஹபஷாவை நோக்கிப் புறப்பட்டார்கள். இரண்டாவது முறை ஹிஜ்ரத் மேற்கொண்டபோது அவர்களுடைய தொகை 94 ஆக இருந்தது. இவர் களில் 83 ஆண்களும் 11 பெண்களும் இருந்தனர்.

*(13)* முஷ்ரிக்குகள், நபி (ஸல்) அவர்களையும் பனூ ஹாஷிம், பனூ முத்தலிப் பிரிவினரையும் சமூக பகிஷ்கரிப்புக்கு உள்ளாக்கினார்கள். இதன்படி அவர்களோடு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், திருமண உறவு வைத்துக் கொள்வதும், அவர்களோடு கலந்து வாழ்வதும் தடுக்கப்பட்டது. மேலும் அவர்களோடு எப்பொழுதுமே சமாதானம் செய்து கொள்வதில்லை எனவும் பிரகடனப்படுத்தினார்கள். இத்தடை இரண்டு அல்லது மூன்று வருடங்கள் தொடர்ந்தன. இதன்போது நபி (ஸல்) அவர்களும் அவர்களோடு இருந்தவர்களும் பெரும் கஷ்டங்களுக்குள்ளா னார்கள். பின்னர் அறிவும் அனுதாபமும் கொண்ட குறைஷியர் சிலரின் முயற்சியால் பகிஷ்கரிப்பு நீக்கப்பட்டது.

## படிப்பினைகள்

*(01)* அல்லாஹ் தனது அடியானை இஸ்லாமியப் பணியில் ஈடுபடுத்த நாடினால், சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகளையும் வழிகேடுகளையும் வெறுக்கின்ற பண்பை அவருடைய உள்ளத்திலே விதைத்து விடுகிறான்.

*(02)* நபி (ஸல்) அவர்கள் நபித்துவத்தை எதிர்பார்த்திருக்கவில்லை. அதற்காக அவர்கள் கனவு காணவுமில்லை. தூதைச் சுமப்பதற்கான உளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையையும், ஆன்மீக பக்குவத்தையும் அடைந்து கொள்வதற்காகவே அல்லாஹ் தனிமையில் இபாதத் செய்வதற்கான உணர்வை அவரில் ஏற்படுத்தினான். நபி (ஸல்) அவர்கள் நபித்துவத்தை எதிர்பார்த்திருந்தால், நிச்சயமாக வஹி இறங்கியபோது அவர்கள் அதிர்ச்சியடைந்திருக்க மாட்டார்கள். தான் ஹிராக் குகையிலே கண்ட தோற்றத்தின் இரகசியம் குறித்து கதீஜாவிடம் வினவியிருக்க மாட்டார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஓ! முஹம்மதே நீங்கள் அல்லாஹ்வின் தூதர். நான் ஜிப்ரீல் எனக் கூறிய பின்னரும், மூஸாவிடம் இறங்கிய ஜிப்ரீல் (அலை) அவர்களே ஹிராக் குகைக்கு வந்து வஹி இறக்கியிருக்கிறார்கள் என வரகத் இப்னு நவ்பல் நபியவர்களுக்கும் கதீஜாவுக்கும் உறுதியாகக் கூறிய பின்னருமே தான் ஒரு தூதர் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

*(03)* ஒரு சீர்திருத்தவாதியின் சீர்திருத்தப்பணி அவன் வாழ்கின்ற சமூகத்தின் நம்பிக்கைகளுக்கும், அறிவு நிலைக்கும் முரண்பட்டதாக இருக்க முடியும். அச்சந்தர்ப்பத்தில் அவர், குறித்த பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி எத்தகைய தியாகத்தையும் செய்யக்கூடிய ஒரு குழு தன்னுடன் இணைந்து கொள்ளும்வரை அதனை இரகசியமாக மேற்கொள்வதே பொருத்தமானதும் அவசியமானதுமாகும். ஏனெனில் தலைவருக்கு உயிராபத்துக்கள் ஏதும் ஏற்பட்டுவிட்டாலும் அவரைச் சார்ந்தவர்கள் அப்பணியைத் தொடர அது வழிவகுக்கும். இதன் மூலம் குறித்த பணி தொடராக இடம்பெறுவது உத்தரவாதப்படுத்தப்படும்.

*(04)* நபி (ஸல்) அவர்கள் திடீரென அறேபியருக்கு பரீட்சயமில்லாத கருத்துக்களைக் கூறினார்கள். இதனால், அறபிகள் தஃவாவை முழுமை யாக நிராகரித்தார்கள். அவர்களது முழு முயற்சியும் நபி (ஸல்) அவர்களை யும் ஸஹாபாக்களையும் அழித்துவிடுவதற்காகவே இருந்தது.

இது, முஹம்மத் (ஸல்) அவர்கள் அறேபியரின் எதிர்பார்ப்புக்களையும், ஆசைகளையுமே தனது பிரசாரத்தில் பிரதிபலிக்கச் செய்தார்கள் எனும் சில வெறியர்களின் போலி வாதத்துக்கு பதிலடியாக அமைகிறது. மட்டுமன்றி இதுபோன்ற இன்னும் பல உறுதியான வரலாற்று நிகழ்வுகள் இவ்வாதத் தினைப் பொய்ப்பிக்கின்றன. இஸ்லாத்தையும் நபி (ஸல்) அவர்களது தூதையும் வேறுப்படுத்தற்கே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

*(05)* வழிகேடர்களது மிகக் கடுமையான துன்புறுத்தல்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் மத்தியில் முஃமின்கள் தமது அகீதாவிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதும் விலகிச் செல்லவில்லை. இது அவர்களது தூய்மையையும், ஈமானியப் பலத்தையும், ஆன்மீக உயர்வையும் புடம்போட்டுக் காட்டு கிறது. மன அமைதியையும், மகிழ்வையும் அவர்கள் இஸ்லாத்தில் கண்டு கொண்டார்கள். உடலியல் வேதனைகளும், துன்பங்களும் அல்லாஹ்வின் திருப்திக்கு முன்னால் பெறுமானமற்றுப் போயின.

உடல் தேவைகளைவிட ஆன்மீகத் தேவையே உண்மை விசுவாசிகளை யும், தூய அழைப்பாளர்களையும் ஆட்கொண்டிருக்கும். அவர்கள் உடலியல் இன்பங்களை விட ஆன்மீகத் தேவைகளை நிவர்த்தித்துக் கொள்வதிலேயே அதிக கவனம் செலுத்துவர். இத்தகைய உயர் பண்பின் மூலமே இஸ்லாமிய அழைப்புப் பணி வெற்றி பெற்றது. அநீதியிலிருந் தும், மடமைகளிலிருந்தும் சமூகங்கள் மீட்சி பெற்றன.

*(06)* நபி (ஸல்) அவர்கள், தனது சிறிய தந்தை அபூதாலிபிடம் கூறிய வார்த்தைகள், குறைஷிகள் ஆட்சி, அதிகாரம், செல்வம் முதலான மாயை களைக் காட்டி ஏமாற்ற முயற்சித்த பொழுது நபி (ஸல்) அவர்கள் அவற்றை நிராகரித்தமை என்பன பின்வரும் பாடத்தை எமக்குச் சொல்லித் தருகின்றது. நபி (ஸல்) அவர்களின் அழைப்புப் பணி உண்மையானது. மக்கள் நேர்வழி பெறவேண்டும் என்பதில் அவர்கள் வேட்கை கொண்டி ருந்தார்கள். மேலும் உண்மையான அழைப்பாளன் பட்டம் பதவிகளை அடிப்படையாக வைத்து நிராகரிப்பாளர்கள் கூறும் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி, மிரட்டல்களுக்கு பயந்து நிலை குலைந்திடாது தனது பணியைத் தொடரக் கடமைப்பட்டுள்ளான். ஏனெனில், சத்தியப் பாதையில் சந்திக் கின்ற கஷ்டங்கள் முஃமினின் உள்ளத்துக்கு கிடைக்கும் அமைதியாகும். உலகில் கிடைக்கும் புகழ், பட்டம், பதவிகளை விட அல்லாஹ்வின் திருப்தியும், சுவனமும் அவனுக்கு மிகவும் பெறுமதி மிக்கவை.

*(07)* அழைப்பாளன் தனது தோழர்களுடன் அடிக்கடி கலந்துரையாடு வது அவசியமாகும். இது தஃவாவில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக் கையை வளர்ப்பதற்கும், அதன் ஒழுங்குகளையும், வழிமுறைகளையும் கற்றுக் கொடுப்பதற்கும் வழியமைத்துக் கொடுக்கும். வெளிப்படையாக ஒன்று கூடுவது தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என கருதினால், அதனை அவசியம் இரகசியமாக அமைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் எதிரிகள் ஒன்றிணைந்து அவர்கள் அனைவரையும் தீர்த்துக் கட்டி விடாது அல்லது இழைக்கின்ற துன்பங் களை அதிகரித்து விடாது தவிர்த்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(08)* அழைப்பாளன் தனது உறவினர், குடும்பத்தினரில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தனது தஃவா சீர்திருத்தப் பணியை அவர்களிடம் முன்வைப்பது அவனது பொறுப்பிலேயே உள்ளது. அவர்கள் மறுத்தால் அவர்களது பிழையான செயற்பாடுகளிலிருந்து மறுமையில் அல்லாஹ் விடம் அவர் தப்பித்துக் கொள்ள முடியும்.

*(09)* அழைப்பாளன் தன்னைச் சார்ந்தவர்களுக்கு அல்லது அவர் களுடைய நம்பிக்கைகளுக்கு ஏதும் அபாயம் நேர்ந்துவிடும் என அஞ்சி னால் அவர்களுக்கென பாதுகாப்பானதொரு இடத்தை ஒழுங்கு செய்து கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார். இது அவர்களுக்கு இருக்க வேண்டிய அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் முரண்பட மாட்டாது. ஏனெனில், அவர்கள் சிறு தொகையினராக இருக்கின்றபோது அவர்களை நிராகரிப்பாளர்கள் முழுமையாக அழித்து, அவர்களது தஃவாப் பணிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட முடியும். மட்டுமன்றி அழைப்பாளர்களுக்கென பாதுகாப்பான தொரு இடம் காணப்படுவது அப்பணி தொடர்ச்சியாக இடம்பெறுவதை உத்தரவாதப்படுத்துவதாய் அமையும்.

*(10)* நபி (ஸல்) அவர்கள் இரண்டு முறை ஸஹாபாக்களை ஹபஷா வுக்கு ஹிஜ்ரத் செல்லுமாறு பணித்தமை மதத்தில் வேறுபடினும் மதவாதிகளுடன் இஸ்லாத்துக்கு இருக்கின்ற உறவை எடுத்துக் காட்டு கிறது. இவ்வுறவு சிலை வணங்கிகள், நாத்திகர்களுடனான உறவைவிட இறுக்கமானது. எனவே இறை வேதங்கள் அனைத்தும் அவற்றின் சரியான மூலம், அடிப்படைகள், பொதுவான சமூகவியல் இலக்குகள் போன்ற வற்றில் ஒன்றுபடுகின்றன. அல்லாஹ், ரஸூல்மார், மறுமை பற்றிய நம்பிக் கைகளில் அவை உடன்படுகின்றன. அதேநேரம், இவை அவற்றுக் கிடையே மிக நெருக்கமான உறவைக் கட்டியெழுப்புகின்றன.

*(11)* அசத்தியவாதிகள் சத்தியத்தின் முன்னால் இலகுவில் பணிந்துவிட மாட்டார்கள். சத்தியத்தை நசுக்கிவிடுவதற்கு கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் பயன்படுத்துவார்கள். இதற்காக தாம் கைக் கொள்கின்ற வழிமுறைகள் தோல்வியடைகின்ற போதெல்லாம் இன்னும் பல புதிய வழிகளை அவர்கள் உருவாக்கிக் கொள்வார்கள். எது எவ்வாறா யினும் இறுதியில் சத்தியம் வெற்றிபெற்று அசத்தியம் அழிந்தே தீரும். இதுவே சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் இடையிலான போராட்டத்தின் இறுதி முடிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பிரிவு

# ஹபஷா ஹிஜ்ரத் முதல் மதீனா ஹிஜ்ரத் வரை

## வரலாற்று நிகழ்வுகள்:

*(01)* நுபுவ்வத் *10*ஆம் வருடம் நபி *(ஸல்)* அவர்களின் சிறிய தந்தை அபூதாலிப் மரணித்து விடுகிறார். அவர் வாழும் காலத்தில் நபி (ஸல்) அவர்களை குறைஷிகளின் தீங்கிலிருந்து மிகக் கவனமாகப் பாதுகாத்து வந்தார். அபூதாலிபுக்கு சமூகத்தில் இருந்த கௌரவம் மற்றும் அங்கீகாரத்தின் காராணமாக இக்காலப்பரிவில் நபி (ஸல்) அவர்களின் உயிருக்கு எத்தகைய தீங்கையும் அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை.

அபூதாலிபின் மரணத்தை தொடர்ந்து குறைஷியர், நபி (ஸல்) அவர்களுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினார்கள். இதனால் அவரது மறைவு நபி (ஸல்) அவர்களுக்கு அதிக கவலையைக் கொடுத்தது. மரணப்படுக்கையிலிருந்தபோது அவர் இஸ்லாத்தை ஏற்க வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்ட போதிலும் சமூகம் தன்னைக் குறைகூறும் என்ற பயத்தினால் கலிமாக் கூற மறுத்தார்.

*(02)* குறித்த அதே வருடம் கதீஜா *(றழி)* அவர்களும் மரணித்து விடுகிறார்கள். அவர்கள், குறைஷியர் துன்பம் விளைவிக்கின்ற போதெல்லாம் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். இதனால் கதீஜா (றழி) அவர்களின் மரணத்தையிட்டு நபி (ஸல்) அவர்கள் அதிக கவலையடைந்தார்கள். இவ்விரு சோக நிகழ்வுகளும் இடம்பெற்றதன் காரணமாக குறித்த வருடம் ''துக்க ஆண்டு'' என அழைக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(03)* பெரிய தந்தை மற்றும் மனைவியின் வபாத்தைத் தொடர்ந்து குறைஷிகளின் எதிர்நடவடிக்கைகள் அதிகரித்தன. எனவே, ஷகீப் கோத் திரத்தினர் தனது தஃவாவுக்கு செவிசாய்ப்பார்கள் என்ற நம்பிக்கையில் நபி (ஸல்) அவர்கள் தாயிப் நோக்கிச் சென்றார்கள். எனினும், அவர்கள் கொடுத்த பதில் எதிர் மாறாகவே இருந்தது. பிரதேச சிறுவர்களைத் தூண்டி விட்டு அவர்கள் றஸூலுல்லாஹ்வை கல்லெறிந்து விரட்டியடித்தார்கள். அவர்களது தூய்மையான இரு பாதங்களிலிருந்தும் இரத்தம் வழிந் தோடியது.

களைப்படைந்த அவர்கள் அப்பிரதேச தோட்டமொன்றில் ஒதுங்கி அல்லாஹ்விடம் பணிவோடு இறைஞ்சினார்கள். அருளாளர்களுக் கெல்லாம் மிகப் பெரிய அருளாளனான அல்லாஹ்வே! உன்னிடமே எனது பலவீனத்தையும், இயலாமையையும் மக்களிடத்தில் என்னுடைய இழிவையும் முறையிடுகிறேன். நீதான் பலவீனர்களின் இரட்சகன். நீதான் என்னுடைய இரட்சகன். என்னை யாரிடம் நீ ஒப்படைக்கப் போகிறாய்? என்னை வெறுப்போடு பார்க்கின்ற, உன்னைவிட்டும் தூரமான ஒருவனிடமா? அல்லது எனது விவகாரங்களைப் பொறுப்புச் சாட்டிய ஒரு எதிரியிடமா? உனக்கு என் மீது கோபம் இல்லாவிட்டால் நான் எதையுமே பொருட்படுத்தவில்லை. உனது பாவமன்னிப்பே எனக்கு விசாலமானது. உலக, மறுமை விவகாரங்கள் சீரடைகின்ற, இருள் நீங்குகின்ற உனது ஒளிமயமான முகத்தைக் கொண்டு, உனது கோபம் எனக்கு இறங்குவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். நீ என்மீது திருப்தியுறும் வரை உன்னிடமே மீளுகிறேன். எல்லா சக்திகளும் பலங்களும் உன்னிடமி ருந்து மாத்திரமே கிடைக்கின்றன.

*(04)* ஷகீப் கோத்திரத்தின் புறக்கணிப்பை அடுத்து நபி (ஸல்) அவர்கள் தாயிபிலிருந்து திரும்பினார்கள். இப்பயணத்தில் ரபீஆவின் புதல்வர்களான உத்பாவினதும் ஷைபாவினதும் அடிமையாக இருந்த 'அத்தாஸ்' என்ற கிறிஸ்தவச் சிறுவன் மாத்திரமே நபி (ஸல்) அவர்களின் அழைப்பை ஏற்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். ஷகீப் கோத்திரத்தின் தாக்குதல்களால் களைப்புற்று தோட்டத்தில் ஒதுங்கியிருந்த நபி (ஸல்) அவர்களைக் கண்ணுற்று எஜமானர்கள் இருவரும் அத்தாஸிடம் திராட்சைப் பழக் குலையொன்றைக் கொடுத்து அனுப்பினார்கள். அத்தாஸ் கொடுத்த பழங்களை நபி (ஸல்) அவர்கள் ''பிஸ்மில்லாஹ்'' அல்லாஹ்வின் பெயரால் என்ற வார்த்தையைக் கூறி சாப்பிட ஆரம்பத்தார்கள். இது அத்தாஸின் கவனத்தை ஈர்த்தது. ஏனெனில் சமூகத்தில் எவரும் இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதை அவர் கேட்டதில்லை. இருவருக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலைத் தொடர்ந்து அத்தாஸ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

*(05)* இஸ்ரா மிஃராஜ் எனப்படும் அற்புத நிகழ்வும் இக்காலப்பிரிவில் தான் இடம்பெற்றது. இது எப்போது நிகழ்ந்தது என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஹிஜ்ரத்துக்கு முன் நுபுவ்வத்தின் 10ம் வருடம் அல்லது அதற்குப் பிறகு இது இடம்பெற்றிருக்க முடியும் என்பதே வலுவான கருத்தாகும். இவ்விரு நிகழ்வுகளும் ஒரே இரவில் விழிப்புடன் உடலாலும், உயிராலும் (ரூஹ்) இடம்பெற்றது என்பதே அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதுல் ஹரமிலிருந்து (கஃபா) மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு (இஸ்ரா) அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து வானங்களுக்கு (மிஃராஜ்) அழைத்துச் செல்லப்பட்டார்கள். பின்னர் குறித்த அதே இரவு தனது வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். தனது அற்புதப் பயணம் குறித்து மக்காவிலுள்ள குறைஷியரிடம் கூறியபோது அவர்கள் நபி (ஸல்) அவர்களை ஏளனம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால், அபூபக்ர் (றழி) உள்ளிட்ட பலமான ஈமானுள்ளவர்கள் இதனை உண்மைப்படுத்தினார்கள்.

*(06)* இந்த இரவிலேயே புத்தியுள்ள பருவ வயதை அடைந்த ஆண், பெண் மீது தொழுகை கடமையாக்கப்பட்டது.

*(07)* வழமை போல் நபி (ஸல்) அவர்கள் ஹஜ் காலங்களில் அறபுக் கோத்திரங்களை இஸ்லாத்தின்பால் அழைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அகபா (கல்லெறியப்படும் இடம்) என்னுமிடத்தில் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரங்களைச் சேர்ந்த ஒரு குழுவைச் சந்தித்து இஸ்லாத் தின்பால் அவர்களை அழைத்தார்கள். ஏழு பேர் அடங்கிய அக்குழுவினர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு மதீனாவுக்குத் திரும்பினார்கள். நபி (ஸல்) அவர்களை சந்தித்து, தாம் இஸ்லாத்தைத் தழுவிய செய்தியை அவர்கள் தமது சமூகத்தினரிடம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

*(08)* அடுத்த வருடம் அதாவது நுபுவத்தின் 12வது வருடம் அன்ஸாரி களில் 12 பேர் ஹஜ்ஜுக்கு வந்து நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். அல்குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காக முஸ்அப் இப்னு உமைர் (றழி) அவர்களை அவர்களோடு மதீனாவுக்கு அனுப்பி வைத்தார் கள். இதனால், மதீனாவில் பாரிய அளவில் இஸ்லாம் பரவ ஆரம்பித்தது.

*(09)* அடுத்த வருடமும் ஹஜ் காலத்தில் அன்ஸாரிகளில் ஒரு பிரிவினர் நபி (ஸல்) அவர்களை இரகசியமாக சந்திக்க வந்தனர். அவர்களில் 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள், 2 பெண்கள் அடங்கியிருந்தனர். அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு உதவி செய்வதாகவும், தமது மனைவி மக்களைப் பாதுகாப்பது போன்று நபி (ஸல்) அவர்களையும் பாதுகாப்பதாகவும் வாக்களித்து பைஅத் செய்தார்கள். 12 பொறுப்பாளர்களை (நகீப்) நியமித்துக் கொண்டு அவர்கள் மதீனாவுக்குத் திரும்பினர்.

### பாடங்களும் படிப்பினைகளும்

*(01)* ஒரு அழைப்பாளனை அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஆனால், தஃவாப் பணியை ஏற்காத ஒருவர் பாதுகாக்க முடியும். இது அப்பணி பலவீனமுற்றிருக்கும்போது பயன்மிக்கதாக இருக்க முடியும். தீய சக்திகள் அவர்மீது அத்துமீறி கொலை செய்வதை அல்லது துன்பங்கள் கொடுப்பதை அது தடுத்து நிறுத்த முடியும். எனவே குடும்ப, கோத்திர பின்னணியைப் பயன்படுத்தி அழைப்பாளன் - அவர்களுடைய பிழையான விடயங்களில் ஒத்துச் செல்லாது - தன்னையும் தனது பணியையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

*(02)* அழைப்பாளன் தஃவா களத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு கஷ்டங்கள் தடைகள் போன்றவற்றை நீக்குவதிலும், குறைப்பதிலும் அப்பணியில் ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்ட அவரது மனைவி பாரிய பங்காற்றுகிறாள். அப்பணியில் அவர் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதற்கு அவள் துணை நிற்கிறாள். எனவே இஸ்லாமிய அழைப்புப் பணியின் வெற்றியில் அவளுக்கு பாரிய பங்களிப்பு இருக்கிறது எனலாம்.

ஒரு அழைப்பாளன் தனது அழைப்புப் பணியில் வெற்றி பெறுவதிலும் அவர் அதில் உறுதியாக நிலைத்திருந்து செயற்படுவதிலும் மனைவி பாரிய பங்காற்ற முடியும் என்பதை எடுத்துக் காட்டுகின்ற முன்னுதாரணமாக கதீஜா (றழி), நபி (ஸல்) அவர்களின் பணியில் காட்டிய ஈடுபாடு காணப் படுகிறது. எனவே சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது இத்தகையதொரு மனைவியை இழப்பதானது அவ்வழைப்பாள னுக்கு ஈடுசெய்ய முடியாத பாரிய இழப்பாகும். இதற்காக அவர் கவலைப் படுவதைத் தவிர வேறு வழியில்லை.

*(03)* அழைப்புப் பணியை பாதுகாத்த ஆனால் முஃமினல்லாத ஒரு நெருங்கிய உறவினரின் இழப்பு குறித்தும், ஸாலிஹான மனைவியின் மறைவு குறித்தும் கவலை கொள்வது தூய அழைப்புப் பணி வேண்டி நிற்பதாகும். மட்டுமன்றி அது மனைவியின் அர்ப்பணம் உதவி போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றுக்கான நன்றிக் கடனுமாகும். எனவேதான், அபூதாலிபின் மரணத்தைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

''அல்லாஹ் உங்களுக்கு அருள்பாலிக்கட்டும். உங்களது பாவங்களை அவன் மன்னிக்கட்டும். அல்லாஹ் என்னை மரணிக்கச் செய்யும் வரை உங்களுக்காக அல்லாஹ்விடம் நான் பாவமன்னிப்புக் கோரிக் கொண்டே இருப்பேன்.'' இதைக் கண்ட முஸ்லிம்கள் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி முஷ்ரிக்கான தமது முன்னோர்களுக்கும் பாவமன்னிப்புக் கோரலானார்கள். பின்னர் அல்லாஹ் பின்வரும் வசனங்களை இறக்கி குறித்த செயலை தடுத்த பின் நபி (ஸல்) அவர்களும் ஏனைய முஸ்லிம்களும் இதனைத் தவிர்ந்து கொண்டார்கள்.

> ''முஷ்ரிக்குகள் (இணைவைப்பவர்கள்) தம் நெருங்கிய உறவினர்களாக இருப்பனும், நிச்சயமாக அவர்கள் நரகவாதிகள் என்று தெளிவாக்கப்பட்ட பின் அவர்களுக்காக மன்னிப்புக் கோருவது நபிக்கும், ஈமான் கொண்டவர்களுக்கும் தகுதியானதல்ல.''
> *(அத்-தௌபா: 113)*

மேலும் நபியவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் கதீஜாவின் சிறப்பு குறித்து அடிக்கடி ஞாபகப்படுத்தி மிகுந்த நன்றியுணர்வோடு நடந்து கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். மட்டுமன்றி, அவருடைய தோழிகளை அழைத்து விருந்து கொடுக்கக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

கதீஜா (றழி) மரணித்திருந்தும் கூட அவர் மீது ஆயிஷா (றழி) பொறாமைப்படும் அளவுக்கு நபி (ஸல்) அவர்களின் செயற்பாடு காணப்பட்டது. ஸஹீஹுல் புஹாரியில் வந்துள்ள அறிவிப்பொன்றில் ஆயிஷா (றழி) பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்:

நபி (ஸல்) அவர்களின் மனைவியரில் கதீஜா (றழி) மீது பொறாமை கொண்டதுபோல் வேறு எவர் மீதும் நான் பொறாமை கொண்டதில்லை. நான் அவரைக் கண்டதில்லை. ஆனால் நபி (ஸல்) அவர்கள் அவர்களை அதிகமாக ஞாபகப்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். சிலவேளைகளில் ஆட்டை அறுத்து அதனை துண்டுகளாக வெட்டி கதீஜாவின் தோழிகளுக்கு அனுப்பி வைப்பார்கள். ''கதீஜாவைத் தவிர உலகில் வேறு ஒரு பெண்ணும் இருக்கவில்லை போலும்'' என நான் சில சந்தர்ப்பங்களில் கூறுவேன். அதற்கு அவர்கள்: ''இப்படி, இப்படியெல்லாம் அவர் இருந்தார். அவர் மூலம் எனக்கு ஒரு ஆண் குழந்தை இருந்தது'' எனக் கூறுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(04) மக்காவாசிகளின் நிராகரிப்பை தொடர்ந்து தாயிபை நோக்கிச் சென்றமை, நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய தஃவாவில் நிலைத்திருக்க வேண்டும் என்ற உறுதியுடனும் மக்களின் ஆதரவின்மையை கண்டு நம்பிக்கை இழக்காதவராகவும் இருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. எனவேதான் மக்கா களத்தில் தஃவாவுக்குத் தடைகள் ஏற்பட்டபோது அதற்குரிய வேறு ஒரு களத்தைத் தேடி அவர்கள் (தாயிப்) சென்றார்கள்.

ஷகீப் கோத்திரத்தினர் நபி (ஸல்) அவர்களை விரட்டியடிக்க தமது சிறுவர்களையும், மடையர்களையும் ஊக்குவித்தமை தீமை எங்கிருந்தாலும் அதன் இயல்பு ஒன்றென்பதை எடுத்துக் காட்டுகிறது. அதாவது நன்மையின் பக்கம் அழைப்பவர்களுக்கு துன்பம் கொடுக்க, மக்கள் மடையர்களின் பக்கம் நாடிச் செல்வார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

நபி (ஸல்) அவர்களின் பாதங்களிலிருந்து இரத்தம் வழிந்தோடியமை, (அவர்கள் அல்லாஹ்வின் தூதராக இருந்தும் கூட) ஒரு அழைப்பாளன் தனது பணியில் எவ்வளவு துன்பங்களை, கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்பதற்கு சிறந்ததொரு உதாரணமாகும்.

நபி (ஸல்) அவர்கள் தோட்டத்தில் புரிந்த பிரார்த்தனையானது, வரலாற்றிலே நிலைத்து நிற்கும். நபி (ஸல்) அவர்கள் உண்மையாகவே அழைப்புப்பணியில் ஈடுபட்டார்கள் என்பதையும், எத்தகைய துன்பங்கள் நேர்ந்த போதிலும் அப்பணியில் தொடர்ச்சியாக ஈடுபடும் உறுதியைக் கொண்டிருந்தார்கள் என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

அல்லாஹ்வினுடைய திருப்தியை அடைவதே நபி (ஸல்) அவர்களுடைய இலட்சியமாக இருந்தது. தலைவர்களினதோ பெரியவர்களினதோ பொதுமக்களினதோ அல்லது மடையர்களினதோ திருப்தியை அடைந்து கொள்வது அவர்களுடைய நோக்கமாக இருக்கவில்லை. எனவேதான், ''என்மீது உனக்குக் கோபம் இல்லாவிட்டால் நான் எதற்கும் கவலை கொள்ளவில்லை'' எனத் தனது பிரார்த்தனையில் குறிப்பிட்டார்கள்.

மேலும், குறித்த பிரார்த்தனையானது, அழைப்பாளனுக்கு துன்பங்கள் அதிகரிக்கின்றபோது அல்லாஹ்விடம் மீண்டு அவனிடம் உதவி கோர வேண்டும் என்பதையும், அவனுடைய கோபத்தையிட்டு மாத்திரமே அவன் அச்சம் கொள்ள வேண்டும் என்பதையும் வேறு எந்தவொரு சக்தியினதும் கோபத்தையிட்டு அச்சம் கொள்ளத் தேவையில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(05)* இஸ்ரா, மிஃராஜ் நிகழ்வில் அதிகமான படிப்பினைகள் காணப்படு கின்றன. அவற்றில் மூன்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

1. மஸ்ஜிதுல் அக்ஸா உள்ளிட்ட பலஸ்தீனப் பிரச்சினை முஸ்லிம் உலகின் பிரச்சினையாக எடுத்துக் காட்டப்படுகிறது. நபி (ஸல்) அவர் களின் தூதைத் தொடர்ந்து, மக்கா இஸ்லாமிய உலகம் ஒன்று சேரும் மையமாகவும், அதன் இலக்குகளை ஒருமுகப்படுத்தும் நிலையமாகவும் மாறியது. அதுபோலவே, பலஸ்தீனைப் பாதுகாப்பதற்காகப் போராடு வதும் இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடுவதாகவே கருதப் பட்டது. எனவே, இப்பணியை உலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் மேற்கொள்ள வேண்டும். அதனை விடுவிப்பதிலும் பாதுகாப்பதிலும் முஃமின்கள் விடுகின்ற குறைபாடானது இஸ்லாத்தின் ஒரு பகுதியில் அவர்கள் விடுகின்ற குறைபாடாகவே கொள்ளப்படும். இது அல்லாஹ் வினுடைய தண்டனைக்கு உட்படுத்தப்பட முடியுமானதொரு குற்றமு மாகும்.

2. இந்த அற்புத நிகழ்வு முஸ்லிமின் உயர்ந்த பெறுமானத்தைக் காட்டும் அடையாளமாகக் காணப்படுகின்றது. அவன் உலக ஆசைகள், இச்சைகளி லிருந்து தூரமாகி இருக்க வேண்டும், அவன் மிக உயர்ந்த அந்தஸ்தையும் இலக்கையும் உடையவன் என்பதால் ஏனைய மனிதர்களிலிருந்து தனித்து வம் பெற்றவனாக இருக்க வேண்டும், அவன் எங்கும் எப்போதும் ஒரு சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதன் அவசியத்தை குறித்த நிகழ்வு வலியுறுத்திக் காட்டுவதாய் உள்ளது.

3. புவியீர்ப்பு வட்டத்திலிருந்து விலகிச் சென்று விண்வெளிப் பயணம் மேற்கொள்ள முடியும் என்பதற்கான ஒரு ஆதாரமும் இந்நிகழ்வில் காணப் படுகிறது. இஸ்ரா மிஃராஜ் நிகழ்வின் மூலம் எங்களுடைய தூதர் றஸூல் (ஸல்) அவர்கள் உலக வரலாற்றில் முதன் முதல் விண்வெளிப் பயணம் மேற்கொண்ட முன்னோடியாகக் கருதப்படுகின்றார்கள். மேலும் விண் வெளிக்குச் சென்று பின்பு பூமிக்கு பாதுகாப்பாகத் திரும்புவதென்பது அல்லாஹ்வின் தூதருக்கு அவருடைய காலத்திலே அற்புதத்தின் மூலம் சாத்தியமானதெனில், மனிதன் தனது அறிவு, சிந்தனையைப் பயன்படுத்தி இப்பயணத்தை மேற்கொண்டு திரும்புவதும் சாத்தியமானதே என்பதையும் இந்நிகழ்வு எமக்குச் சுட்டிக்காட்டுவதாய் உள்ளது.

*(06)* இஸ்ரா மிஃராஜ் இரவில் தொழுகை கடமையாக்கப்பட்டமை யானது அது எதற்காக கடமையாக்கப்பட்டது என்பதை சுட்டிக்காட்டுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் உள்ளது. இதன் மூலம் அல்லாஹ் தனது அடியார்களுக்கு பின்வரு மாறு கூறுவதுபோல இருக்கிறது.

உங்களுடைய றஸூல் தனது உடம்பு உயிருடன் வானத்தை நோக்கி மேற்கொண்ட மிஃறாஜ் பயணம் ஓர் அற்புத நிகழ்வாக இருக்கும் எனின், ஒவ்வொரு நாளும் ஐந்து தடவைகள் தொழுகையில் ஈடுபடுவதானது நீங்கள் உங்களுடைய உள்ளங்கள் ஆன்மாக்களுடன் என்னை நோக்கி மிஃறாஜ் வருவதாக இருக்கட்டும். அது உங்களுக்கோர் ஆன்மீகப் பயண மாக இருக்கட்டும். இதன் மூலம் நீங்கள் உங்களது மனோஇச்சைகள், ஆசைகளிலிருந்து தூரமாகி எனது உயர்வு, சக்தி, ஏகத்துவம் என்பவற்றைக் கண்டுகொள்கிறீர்கள். மேலும் இந்தப் பூமிக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கான உந்து சக்திகளாக, ஆக்கிரமிப்பு அடக்கு முறை அல்லாத தொழுகை, தூய்மை போன்றன அமைந்து விடட்டும்.

(07) றஸூல் (ஸல்) அவர்கள் ஹஜ் காலங்களில் ஏனைய கோத்திரங் களுக்கு இஸ்லாமிய தஃவாவை முன்வைத்தமை பன்வரும் உண்மைகளை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

அழைப்பாளன் தனது நிழலிலுள்ள, பிரதேசத்திலுள்ளவர்களை மாத்திரம் நன்மையின் பக்கம் அழைப்பதுடன் சுருங்கிக் கொள்ளக் கூடாது. மாறாக மக்கள் ஒன்றுசேர்கின்ற அல்லது ஒன்றுசேரக்கூடிய எல்லா இடங் களுக்கும் அவர் செல்ல வேண்டும். அவர்கள் ஓரிரு தடவை மறுத்தார்கள் என்பதற்காக அவர் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது. ஏனெனில் நிச்சய மாக அல்லாஹ், அவர் நினைக்காத வழியில் அவருடைய அழைப்புக்கு பதில் கூறக் கூடிய உதவியாளர்களை அவருக்கு தயார் செய்து கொடுத்து விட முடியும். அவர் மூலமாக நேர்வழி பெறுகின்ற இந்த சிறிய தொகை யினர் இஸ்லாமிய தஃவாவின் பரவலுக்கும், தீமைக்கு எதிரான போராட்டத்தின் இறுதி வெற்றிக்கும் பாரிய பங்களிப்புச் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள்.

நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து அவர்களுடனான முதல் சந்திப்பி லேயே இஸ்லாத்தை ஏற்ற ஏழு அன்ஸாரித் தோழர்களினதும் ஈமானியப் பலமே மதீனாவில் இஸ்லாம் வேரூண்றுவதற்கு ஏதுவாய் அமைந்தது. இது அங்கு இஸ்லாத்தின் பரவலுக்கும், செல்வாக்குக்கும் பாரிய பங்களிப்புச் செய்தது.

மேலும், குறித்த நிகழ்வின் மூலம் மக்காவில் நிர்க்கதிக்கு உள்ளாகி யிருந்த முஃமின்கள் ஹிஜ்ரத் சென்று மதீனாவில் நிலைகொள்வதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்கள் பாதுகாப்பான புகழிடம் பெற்று, இஸ்லாமிய அரசை நிறுவிக் கொள்வதற்கும் வழியேற்பட்டது. அங்கிருந்துதான் நபிகளார் தனது அழைப்புப் பணியை முடுக்கிவிட்டார்கள். வெற்றி வாகை சூடிய யுத்தங்களுக்கு ஸாபாக்கள் அங்கிருந்துதான் புறப்பட்டுச் சென்றார்கள்.

எனவே, அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரங்களைச் சேர்ந்த அன்ஸாரிகளை அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும். அவர்கள் இஸ்லாத்துக்கும் முஸ்லிம் களுக்கும் உலகுக்கும் எவ்வளவோ நிலையான நற்பணிகளை மேற் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு முன் ஈமான் கொண்ட அவர்களது சகோதரர்களான முஹா ஜிர்களையும் அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும். அவர்கள் தங்களது பெறுமதிமிக்க செல்வங்களையும், பிறந்த மண்ணையும் தியாகம் செய்தார்கள்.

மேலும் அல்லாஹ் எங்களையும் அவர்களோடு சுவனத்தில் சேர்த்து வைக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் பிரிவு

# ஹிஜ்ரத் முதல் மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் நிலைகொள்ளும் வரை

## (அ) வரலாற்று நிகழ்வுகள்:-

*(01)* மதீனா (யத்ரிப்) வாசிகளில் ஒரு பிரிவினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமையை அறிந்த குறைஷியர், மக்கத்து முஃமின்களை மிகக் கடுமையாக வேதனை செய்ய ஆரம்பித்தார்கள். எனவே, நபி (ஸல்) அவர்கள், அவர்களை மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு பணிக்கவே உமர் (றழி) அவர்களைத் தவிர ஏனைய முஸ்லிம்கள் அனைவரும் இரகசியமாக ஹிஜ்ரத் செய்தனர். உமர் (றழி) அவர்களோ ''யார் தனதுயிரை மாய்த்துக் கொள்ள விரும்புகின்றாரோ, அவர் நாளை இந்தப் பள்ளத்தாக்கில் என்னைச் சந்திக்கட்டும்'' என தான் ஹிஜ்ரத் செல்வதை குறைஷிக் காபிர்களுக்கு வெளிப்படையாகக் கூறிவிட்டுச் சென்றார்கள். ஆனால் எவருமே அவரை எதிர்க்க முன்வரவில்லை.

*(02)* முஸ்லிம்கள் மதீனாவில் பாதுகாப்பாகவும், கௌரவத்துடனும் வாழ்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட குறைஷியர் நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்காக கலந்தாலோசிப்பதற்கு தாருன் நத்வாவில் ஒரு மாநாட்டை நடாத்தினர். அதில் ஒவ்வொரு கோத்திரத்திலு மிருந்து திடகாத்திரமான ஒவ்வோர் இளைஞனைத் தேர்ந்தெடுத்து அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரே வீச்சில் நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்வதென அவர்கள் தீர்மானித்தனர். இதன் மூலம் கொலைக் குற்றம் அனைத்துக் கோத்திரங்களின் மீதும் செல்வதால் பனூ மனாப் பிரிவினர் அவர்கள் அனைவருடனும் போராடுவதற்கு பலமின்மையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டப் பணத்தைப் பெற்றுக் கொள்ள இசைவர் எனக் கருதினர். இந்தத் தீர்மானத்தின் படி றஸூலுல்லாஹ்வை கொலை செய்யவென நியமிக்கப் பட்ட இளைஞர்கள் நபி (ஸல்) அவர்களத்து வருகையை எதிர்பார்த்து அவர்களது வீட்டின் வாயிலருகே காத்திருந்தார் கள். குறித்த நிகழ்வு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த இரவு இடம் பெற்றது.

(03) றஸூல் (ஸல்) அவர்கள் அன்றிரவு தனது படுக்கையில் உறங்காமல், அலி (றழி) அவர்களை அதில் உறங்குமாறு கூறினார்கள். குறைஷிக் காபிர்கள் தன்னிடம் பாதுகாப்புக்காக வைத்திருந்த அமானிதப் பொருட் களை உரியோரிடம் மறுநாள் காலை ஒப்படைத்து விடுமாறும் அவர் களைப் பணித்தார்கள். கொலை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தவர் களின் கண்களுக்கு எட்டாது நபி (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து வெளி யேறி அபூபக்ர் (றழி) அவர்களின் வீட்டை அடைந்தார்கள்.

அபூபக்ர் (றழி) அவர்கள் தனக்கும் றஸூலுல்லாஹ்வுக்கும் பயணிக்க வென இரு ஒட்டகைகளை ஏலவே தயார்செய்து வைத்திருந்தார்கள். இருவரும் ஹிஜ்ரத் செல்வதெனத் தீர்மானித்தார்கள். அபூபக்ர் (றழி) அவர்கள் அப்துல்லாஹ் இப்னு உரைகத் அத்தியலி என்ற முஷ்ரிகை வழிகாட்டவென கூலிக்க மர்த்திக் கொண்டார்கள். மதீனா செல்வதற்கான வழமையான பாதையைத் தவிர்த்து, மற்றொரு பாதையினூடாக செல்வதன் மூலம் குறைஷிக் காபிர்களிடம் சிக்காமல் தம்மைக் காத்துக்கொள்ள முடியுமெனக் கருதியே அவர்கள் இவ்வாறு முடிவுசெய்தார்கள்.

(04) றஸூல் (ஸல்) அவர்களும், தோழர் அபூபக்ர் (றழி) அவர்களும் றபீஉல் அவ்வல் முதலாம் நாள் வியாழக்கிழமை மதீனாவை நோக்கி நகர்ந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்களுக்கு 53 வயதாக இருந்தது. நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் பற்றி அலி (றழி) அவர்களும் அபூபக்ர் (றழி) அவர்களின் குடும்பத்தினரும் மாத்திரமே அறிந்து வைத்திருந்தார் கள். அபூபக்ர் (றழி) அவர்களின் புதல்விகளான ஆயிஷா (றழி) அவர்களும் அஸ்மா (றழி) அவர்களும் இருவருக்கும் தேவையான பயணப் பொதியை தயார்செய்து கொடுத்தார்கள்.

அஸ்மா (றழி) அவர்கள் தனது முந்தானையின் -வயிற்றுப் பகுதியை கட்டப் பயன்படுத்தப்படும் துணி- ஒரு பகுதியைக் கிழித்து உணவுப் பொதியின் வாயைக் கட்டினார்கள். இதனால்தான் அவர் ''தாதுன் நிதாகைன்'' இரண்டு முந்தானைகளை உடையவர் என அழைக்கப் படுகிறார்கள். தமது வழிகாட்டியுடன் யெமன் வழியாக ''தவ்ர்'' குகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்த அவர்கள் இருவரும், மூன்று இரவுகள் அங்கு தங்கியிருந்தார்கள். அவர்களோடு அபூபக்ரின் புதல்வர் அப்துல்லாஹ்வும் தங்கினார். புத்தி கூர்மை, அவசரமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல் போன்ற பண்புகளைக் கொண்டிருந்த அவர், அதிகாலை (ஸஹர்) வேளையில் குகையிலிருந்து வெளியே வந்து காலையில் மக்கா குறைஷிகளுடன் -மக்காவில் தான் அன்றைய இரவைக் கழித்தது போல் நடந்து கொண்டார். குறைஷிகள், இருவருக்குமெதிராக மேற்கொள்ள இருக்கும் அனைத்து விடயங்களையும் உள்வாங்கி மாலையில் அவர்களுக்கு அறிவித்தார்.

*(05)* தமது சூழ்ச்சியிலிருந்து றஸூல் (ஸல்) அவர்கள் தப்பிச் சென்றமையால் ஆத்திரமடைந்த குறைஷியர், வழமையாகப் பயன்படுத்தப்படும் மக்கா-மதீனாப் பாதையில் இருவரையும் தேட ஆரம்பித்தார்கள். அவ் வழியே கண்டுகொள்ள முடியாமற் போனபோது யமன் பாதை வழியாகத் தேடினார்கள். 'தவ்ர் குகையின் நுழைவாயில் அருகே நின்ற அவர்களில் சிலர் முஹம்மதும் அவருடைய தோழரும் இந்தக் குகைக்குள்தான் இருக்க வேண்டும் எனக் கூறினார்கள். இதற்குப் பதிலளித்த வேறு சிலர்: குகையின் நுழைவாயிலைப் பாருங்கள். அதிலே சிலந்தி வலை கட்டியுள்ளதே, பறவைகள் கூடு கட்டியுள்ளனவே நீண்ட காலமாக இக்குகையினுள் யாருமே நுழையவில்லை என்பதைத்தானே இவை எடுத்துக் காட்டுகின்றன எனக் குறிப்பிட்டனர்.

ஆனால், அபூபக்ர் (றழி) அவர்களோ குகையின் வாயிலருகே நின்று கொண்டிருந்த அவர்களின் பாதங்களைக் கண்டு நபி (ஸல்) அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ எனப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள். ''அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ்வின் தூதரவர்களே அவர்களில் எவரும் தனது பாதத்தைப் பார்த்தால் நிச்சயம் எங்களைக் கண்டு கொள்வார்' என அபூபக்ர் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கூற ''அபூபக்ரே! மூன்றாமவனாக அல்லாஹ் இருக்கும்போது இருவர்தான் இருக்கிறோம் என எண்ண முடியுமா?'' எனக் கூறி அபூபக்ர் (றழி)யை அமைதிப்படுத்தினார்கள்.

*(06)* றஸூல் (ஸல்) அவர்களையும் அவரது தோழரையும் கண்டு பிடிக்கும், அல்லது கொலைசெய்யும், அல்லது சிறைப்பிடிக்கும் நபருக்கு பெரும் தொகைப் பணம் பரிசாக வழங்கப்படுமென குறைஷியர் செய்தியறிவித்து கோத்திரங்களைத் தூண்டினார்கள். இதற்கமைய சுராகா இப்னு ஜுஃஷும் இப்பணியை ஏற்றுக் கொண்டான். தான் மாத்திரம் பரிசை அடைந்துகொள்ளும் நோக்கில் தேடல் வேட்டையை ஆரம்பித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07) நபி (ஸல்) அவர்களையும் அவரது தோழரையும் தேடும் குறைஷியரின் பணி ஓய்வடைந்ததும் இருவரும் வழிகாட்டியின் துணையுடன் குகையைவிட்டு வெளியே சென்றார்கள். செங்கடல் கரையோரமாக நீண்ட தூரம் பயணித்த அவர்களை சுராகா தூரத்தில் கண்டுகொண்டான். அவர்களிருவரையும் அவன் நெருங்கியபோது அவனது குதிரையின் கால்கள் மணல் தரையுள் புதையுண்டு நடக்க இயலாது போயிற்று. அதனை நபி (ஸல்) அவர்களை நோக்கி நடக்க வைக்க மூன்று தடவைகள் முயற்சித்த போதும் குதிரை மறுத்துவிட்டது.

அவ்வேளைதான் கண்ணியம் பொருந்திய ஒரு தூதரின் முன்னால் தான் இருக்கிறேன் என்பதை சுராகா உறுதிப்படுத்திக் கொண்டான். அவன் றஸூல் (ஸல்) அவர்களிடம் தனக்கு ஏதேனுமொன்றை வாக்களிக்குமாறும் அவ்வாறு செய்யுமிடத்து அவன் நபி (ஸல்) அவர்களுக்கு உதவி செய்வதாகவும் குறிப்பிட்டான். கிஸ்ராவின் இரு காப்புகளை அவனுக்கு அணிவிப்பதாக நபி (ஸல்) அவர்கள் வாக்களித்தார்கள். மக்காவுக்குத் திரும்பிய சுராகா இருவரையும் கண்டு கொள்ளாதது போல அமைதியாக இருந்து விட்டான்.

(08) றஸூல் (ஸல்) அவர்களும் அவர்களது தோழரும் றபீஉல் அவ்வல் பன்னிரெண்டாம் நாள் மதீனாவை வந்தடைந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் வருகையை நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த தோழர்கள் ஒவ்வொரு நாள் காலை வேளையிலும் மதீனாவின் எல்லைகளுக்குச் சென்று காத்திருந்துவிட்டு நண்பகல் வேளையில் ஏக்கத்துடன் திரும்பி வரக்கூடியவர்களாக இருந்தார்கள். இவ்வேளை நபி (ஸல்) அவர்களின் வருகையைக் கண்ணுற்ற அவர்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்தார்கள். சிறுவர்கள் மேளங்களைத் தட்டி பின்வரும் கருத்துப்பட பாட ஆரம்பித்தார்கள்.

ஸனிய்யாதுல் வதா எனுமிடத்திலிருந்து
ஒரு சந்திரன் எமக்கு உதித்துவிட்டது.
அல்லாஹ்வின் பால் அழைக்கின்ற அவருக்கு
நன்றி சொல்வது எம்மீது கடமையாகும்.
எங்களிலிருந்து அனுப்பப்பட்ட (அல்லாஹ்வின்) தூதரே,
நீங்கள் கட்டுப்படக்கூடிய ஒரு விடயத்தை
(தீனை)யே எடுத்து வந்திருக்கிறீர்கள்.

(09) மதீனாவுக்கு வரும் வழியில் ''குபா'' என்ற இடத்தை அடைந்த நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் நிர்மாணிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது மஸ்ஜிதை அங்கு நிறுவினார்கள் (அது மதீனாவின் தெற்கே இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு கிராமமாகும்). அங்கு நான்கு நாட்கள் தங்கிவிட்டு ஜும்ஆ தினம் காலை மதீனாவை நோக்கிச் சென்றார்கள். ஜும்ஆவுடைய நேரத்தில் பனூ ஸாலிம் இப்னு அவ்ப் என்ற இடத்தை வந்தடைந்த அவர்கள், அங்கும் ஒரு மஸ்ஜிதை நிறுவி இஸ்லாத்தின் முதலாவது ஜும்ஆவுக்கான குத்பாவையும், தொழுகையை யும் நிறைவேற்றினார்கள்.

பின்னர் மதீனாவை நோக்கி நகர்ந்தார்கள். அங்கு வந்தடைந்ததும் நபிக (ஸல்) அவர்கள் முதலில் தனது ஒட்டகம் அமர்ந்து கொண்ட இடத்தை தனக்குரிய பள்ளிவாயிலை நிறுவுவதற்கான இடமாகத் தெரிவுசெய்து கொண்டார்கள். அந்த இடம் அன்ஸாரிகளில் இரு அநாதைச் சிறுவர்களுக்குச் சொந்தமானதாக இருந்தது. றஸூல் (ஸல்) அவர்கள் குறித்த சிறுவர்களுடன் அதற்கு விலைபேசியபோது அவர்கள் அதனை நபி (ஸல்) அவர்களுக்கு நன்கொடையாக வழங்குவதெனக் குறிப்பிட்டனர்.

எனினும், நிதியை வழங்கியே அதனைக் கொள்வனவு செய்ய வேண்டுமென விரும்பிய நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர் (றழி) அவர்களிடமிருந்து பத்து தீனார்களைப் பெற்று நிலத்தை வாங்கினார்கள். பள்ளி வாயில் கட்டும் பணியில் பங்குகொள்ளுமாறு முஸ்லிம்களை அழைத்த உடனே அனைவரும் அதற்காக விரைந்து வந்து செயற்பட்டார்கள். அவர்களோடு சேர்ந்து றஸூல் (ஸல்) அவர்களும் மஸ்ஜித் கட்டும் பணி நிறைவடையும் வரை கற்களை சுமந்து வேலை செய்தார்கள். அதன் சுவர்கள் கற்களினாலும் அதன் கூரை ஈத்த மரத் தண்டுகளாலும் ஓலைகளாலும் வேயப்பட்டது.

(10) பின்னர் முஹாஜிர்கள் அன்ஸாரிகளுக்கிடையில் சகோதரத்துவ பிணைப்பை ஏற்படுத்தும் வகையில் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு அன்ஸாரிக்கும் ஒரு முஹாஜிரை சகோதரனாக இணைத்து வைத்தார்கள். இதன் பின்னர் ஒவ்வொரு அன்ஸாரியும் தனது முஹாஜிர் சகோதரனை வீட்டுக்கு அழைத்துச் சென்று வீட்டிலுள்ள அனைத்திலும் பங்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

(11) இதன் பிறகு றஸூல் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களையும் அன்ஸாரிகளையும் இணைத்து ஒரு சாசனத்தை எழுதினார்கள். அதில் அவர்கள் யூத சமூகத்தவருடன் சமாதானமாக வாழ்வதெனவும், அவர்களது மார்க்கம், செல்வங்கள் அனைத்தையும் அங்கீகரிப்பதெனவும் ஏற்றுக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்னு ஹிஷாம் தனது ஸீறாவில் இதனை முழுமையாகக் குறிப்பிட்டுள் ளார். இஸ்லாமிய வரலாற்றில் முதலாவது தோன்றிய இஸ்லாமிய அரசுக் கான அடிப்படைகளை அது உள்ளடக்கி யிருந்தது. அதில் மானிடத்துவம், சமூக நீதி, மத சகிப்புத் தன்மை, சமூக நலனுக்கான பரஸ்பர ஒத்துழைப்பு போன்ற விடயங்கள் விளக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு மாணவனும் இதனை ஆழமாக விளங்கி முழுமையாக உள்வாங்கிக் கொள்வது பொருத்தமானதாகும்.

இந்த நிலையான வரலாற்று ஆவணம் உள்ளடக்கியிருந்த பொதுவான அடிப்படைகளை இங்கு குறிப்பிடுகிறோம்:-

1. பிளவுகளற்ற முஸ்லிம் சமூக ஐக்கியம்.
2. உரிமைகளிலும், கௌரவத்திலும் சமூக அங்கத்தினர் அனைவரும் சமமானவர்கள்.
3. அநியாயம், பாவம், அத்துமீறல் போன்றவற்றுக்கெதிரான சமூகத் தின் பரஸ்பர ஒத்துழைப்பு.
4. எதிரிகளுடனான உறவுகளைத் தீர்மானிப்பதில் சமூகப் பங்கேற்பு, ஒரு முஃமின் இன்னொரு முஃமினுடனன்றி சமாதானம் செய்து கொள்ள முடியாது.
5. சிறந்ததும், நேர்த்தியானதும், நிலையானதுமான ஒழுங்குகளின் அடிப்படையில் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.
6. அரசுக்கும் அதன் பொது ஒழுங்குகளுக்கும் எதிராக செயற்படுபவர்க ளுடன் போராடுவதும், அவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்த்துக் கொள்வதன் அவசியமும்.
7. முஸ்லிம்களுடன் சமாதானமாகவும், ஒத்துழைப்போடும் வாழ விரும்புவோரைப் பாதுகாத்தலும் அவர்கள் மீது அத்துமீறுதல், அநி யாயம் இழைத்தல் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுதலும்.
8. முஸ்லிமல்லாதோர் அவர்களது மார்க்கத்தையும், செல்வங்களையும் பாதுகாத்துக் கொள்ள உரிமையுடையவர்கள். அவர்கள் முஸ்லிம் களது மார்க்கத்தை பின்பற்ற வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள். அத்துடன் அவர்களது செல்வங்கள் சூறையாடப் படவும் மாட்டா.
9. முஸ்லிம்களைப் போலவே முஸ்லிமல்லாதவர்களும் நாட்டின் செலவினங்களில் பங்குகொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. எதிரிகள் மேற்கொள்ளும் அத்துமீறல்களினால் ஏற்படும் அபாயங்க ளிலிருந்து நாட்டைப் பாதுகாக்க முஸ்லிம்களுடன் முஸ்லிமல்லா தோரும் ஒத்துழைக்க வேண்டும்.

11. நாடு யுத்த சூழலில் இருக்கும்போது முஸ்லிமல்லாதோரும் யுத்த செலவினங்களில் பங்கெடுக்க வேண்டும்.

12. அநியாயம் இழைக்கப்படுபவர்களுக்கு அரசு உதவிசெய்ய வேண்டும். மேலும் அத்துமீறலுக்கு உட்படுகின்ற ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அது உதவ வேண்டும்.

13. முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதோரும் நாட்டின் எதிரிகளுக்கும், அவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கு வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

14. சமூக நலன் சமாதானத்தில் தங்கியிருக்கும் எனின், முஸ்லிமான, முஸ்லிமல்லாத, நாட்டினுடைய அனைத்துப் பிரஜைகளும் அதனை ஏற்க வேண்டும்.

15. ஒருவர் செய்த குற்றத்துக்காக இன்னொருவர் தண்டிக்கப்பட மாட்டார். குற்றமிழைப்பவர் தனக்கும் தனது குடும்பத்துக்கும் எதிராகவே அதனைச் செய்கிறார்.

16. நாட்டுக்கு உள்ளும் வெளியேயும் நடமாடுவதற்கான சுதந்திரம் நாட்டின் பாதுகாப்புக்கேற்ப உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

17. பாவம், அநியாயம் இழைப்பவனுக்கு பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது.

18. இறையச்சம், நன்மை, பரஸ்பர புரிந்துணர்வு போன்றவற்றின் அடிப்படையிலேயே சமூகம் கட்டியெழுப்பப்படும். அது பாவம், அத்துமீறலின் அடிப்படையில் அமைந்திருக்க மாட்டாது.

இந்த அடிப்படைகளை இருவகைச் சக்திகள் பாதுகாக்குகின்றன.

- **கருத்தியல் பலம்:** அல்லாஹ் பற்றியும் அவனது அவதானத்தின் மீதும், நன்மை செய்து விசுவாசமாக நடக்கக் கூடியவர்களை அவன் கண்காணிக் கின்றான் என்பதன் மீதும் மக்கள் கொள்கின்ற நம்பிக்கை (ஈமான்).
- **பௌதீகப் பலம்:** அதாவது றஸூல் (ஸல்) அவர்கள் பிரதிநிதித்து வப் படுத்துகின்ற அரசின் தலைமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) பாடங்களும் படிப்பினைகளும்

(01) தனது பலத்தில் உறுதியான நம்பிக்கையுள்ள முஃமின் தன் செயற்பாடுகளை வெளிப்படையாகவே மேற்கொள்வான். தஃவாவின் எதிரிகளை தன்னால் மிகைத்து விட முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்ற போது அவர்களைப் பற்றி அவன் கவலை கொள்ள மாட்டான். உமர் (றழி) அவர்கள் ஹிஜ்ரத் சென்றபோது இவ்வாறு தான் நடந்து கொண்டார்கள்.

மேலும், முஃமினின் உறுதியான நிலைப்பாடு அல்லாஹ்வின் எதிரிகளை பீதி கொள்ளச் செய்யும், அவர்களது உள்ளங்களில் திடுக்கத்தை ஏற்படுத்திவிடும் என்பதற்கும் குறித்த நிகழ்வு ஆதாரமாய் உள்ளது. உண்மையில் அவர்கள் உமரைக் கொலை செய்யவென ஒன்றுசேர நாடியிருப்பின் நிச்சயம் அதனை அவர்கள் சாதித்திருக்க முடியும். எனினும், துணிச்சல்மிக்க உமரின் நிலைப்பாடு அவர்கள் ஒவ்வொருவரினது உள்ளத்திலும் பீதியை ஏற்படுத்தி விட்டது. எனவே, அவரை எதிர்கொண்டால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என அவர்கள் ஒவ்வொருவரும் அஞ்சினர். ஏனெனில், நிராகரிப்பாளர்கள் உயிர்வாழ வேண்டுமென்பதில் அதிக வேட்கை கொண்டவர்கள்.

(02) நிராகரிப்பாளர்கள் சீர்திருத்தப் பணியை நிறுத்திவிடுகின்ற தமது முயற்சியில் நம்பிக்கை இழந்து விடுகின்றபோது, தமது அத்துமீறல்களிலிருந்து முஃமின்கள் தப்பி பாதுகாப்புப் பெறுகின்றபோது, இறுதியாக அவர்கள், குறித்த சீர்திருத்தப் பணியை வழி நடாத்திச் செல்பவரைக் கொலை செய்துவிடுவதற்குத் தீர்மானிப்பர்கள். அவரைக் கொலை செய்து விட்டால் அழைப்புப் பணி முற்றாக ஓய்ந்து விடும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இத்தகையதொரு முடிவுக்கு அவர்கள் வருகிறார்கள். சீர்திருத்தப் பணியை எதிர்ப்பவர்கள் பொதுவாக எல்லாக் காலங்களிலும் இவ்வாறுதான் சிந்திப்பார்கள். இதனையே எமது வாழ்நாட்களிலும் நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

(03) சீர்திருத்தப் பணிக்கு விசுவாசமாக செயற்படுகின்ற தூய்மையான படைவீரரைப் பொறுத்தவரை அவர் தனதுயிரை அர்ப்பணம் செய்து தனது தலைவரைக் காப்பாற்றக் கூடியவராக இருப்பார். ஏனெனில், தலைவரின் பாதுகாப்பிலேயே தஃவாவினது பாதுகாப்பும் தங்கியுள்ளது. அவரின் அழிவினால் தஃவாவும் பலவீனமுற்று தோல்வியடைந்து விடும். இதன் காரணமாகவே றஸூல் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற இரவில் அலி (றழி) அவர்கள் தன்னுயிரைப் பணயம் வைத்து நபி (ஸல்) அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைப் பாதுகாக்கும் நோக்கில் அவர்களின் படுக்கையில் உறங்கினார்கள். உண்மையில் நபி (ஸல்) அவர்கள் தப்பிச் செல்ல உடந்தையாக இருந்தார் என்ற காரணத்தைக் கூறி குறைஷிக் கோத்திர இளைஞர்கள் பழிதீர்க்கும் வகையில் அலி (றழி) அவர்களைக் கொலை செய்துவிடும் சாத்தியம் இருந்தது. எனினும் அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. மாறாக சமூகத்தின் நபியும் தஃவாப் பணியின் தலைவருமான றஸூல் (ஸல்) அவர்கள் பாதுகாப்பாக இருப்பதே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது.

(04) நிராகரிப்பாளர்கள் றஸூல் (ஸல்) அவர்களோடு போரிடக் கூடியவர்களாகவும், அவர்களைக் கொலை செய்யத் துணிந்தோராகவும் இருந்த போதிலும் கூட, அவர்கள் தமது பொருட்களை நபி (ஸல்) அவர்களிடமே அமானிதமாக ஒப்படைத்து வைத்திருந்தார்கள். இது எமக்கு பல உண்மையை எடுத்துச் சொல்கிறது. அதாவது நிராகரிப்பாளர்கள் அழைப்பாளர் அடிப்படையில் தூய்மை, வாய்மை, வழிபிறழாத் தன்மை மிக்கவர் என்பதையும், அவர் தங்களை விட நன்னடத்தையும், தூய உள்ளமும் கொண்டவர் என்பதையும் தமது ஆழ்மனதில் உறுதியாக நம்பிக்கை கொண்டிருப்பார்கள். எனினும், அவர்களிடம் காணப்படுகின்ற குருட்டுத் தனமான பின்பற்றுதலும், வழிகெட்ட நம்பிக்கைகளும், சம்பிரதாயங்களுமே அவர்களை அழைப்பாளருடன் போரிடவும் சந்தர்ப்பம் வாய்க்கும் போது அவரைக் கொலை செய்வதற்கான சூழ்ச்சிகளில் ஈடுபடவும் தூண்டி விடுகின்றன.

(05) தஃவாவின், அல்லது ஒரு நாட்டின் அல்லது ஒரு சீர்திருத்த இயக்கத்தின் தலைவர், எதிரிகளின் சூழ்ச்சிகளிலிருந்து தப்புவதற்காக சிந்திக்க முடியும். அவர் தனது இயக்கத்தின் செயற்பாட்டை புதியதொரு களத்தில் உத்வேகத்துடன் மீள ஆரம்பிக்கும் வகையில் திட்டமிட்டு செயலாற்ற முடியும். இதனை மரணத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவென அல்லது அர்ப்பணிப்புகள் செய்யாதிருக்கவென மேற்கொள்ளப்படுகின்ற ஒரு கோழைத்தனமான செயலாக ஒருபோதும் கருத முடியாது.

(06) அழைப்புப் பணியின் வெற்றியில் இளைஞர்கள் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்த முடியும் என்பதை அப்துல்லாஹ் இப்னு அபூபக்ர் (றழி) அவர்கள் எடுத்த நிலைப்பாடு உணர்த்திக் காட்டுகிறது. உண்மையில் அனைத்து சீர்திருத்தப் பணிகளினதும் தூண்களாக இளைஞர்களே காணப்படுகின்றனர். அவர்களிடம் காணப்படும் அர்ப்பணிப்பு, தியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வின் காரணமாகவே தஃவா அமைப்புகள் வெற்றிப் பாதையை நோக்கி விரைவாக முன்னேறிச் செல்கின்றன. எனவேதான் ஆரம்பத்தில் இஸ்லாத்தில் இணைந்து கொண்ட முஃமின்கள் அனைவருமே இளைஞர் களாக இருந்ததைக் காண்கிறோம்.

றஸூல் (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத் கிடைக்கும்போது அவர்களது வயது நாற்பதாக இருந்தது. அபூபக்ர் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களை விட மூன்று வயது குறைந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் இருவரை யும் விட உமர் (றழி) அவர்கள் வயதில் குறைந்தவர்களாக இருந்தார்கள். அலி (றழி) அவர்கள் குறித்த அனைவரை யும் விட மிகவும் வயது குறைந்த வர்களாகக் காணப்பட்டார்கள். உஸ்மான் (றழி) அவர்களும் நபி (ஸல்) அவர்களை விட வயதில் குறைந்தவர்களாக இருந்தார்கள்.

இவ்வாறு தான் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப், அர்கம் இப்னு அபில் அர்கம், ஸஈத் இப்னு ஸைத், பிலால் இப்னு ரபாஹ், அம்மார் இப்னு யாஸிர் (றழி) போன்ற அனைத்து ஸஹாபாக்களும் இளைஞர்களாகவே காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் தஃவாவின் பொறுப்புக்களைத் தமது புயங்களிலே சுமந்து அதன் பாதையில் பல்வேறு தியாகங்களைச் செய்தார்கள். அதற்காக அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள்; கொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் மூலமாக இஸ்லாம் வெற்றி கண்டது. அவர்களதும் அவர்களது சகோதர முஃமின்களதும் முயற்சிகளின் விளைவாகவே குலபாஉர் ராஷிதீன்களின் இஸ்லாமிய ஆட்சி தோற்றம் பெற்றதுடன் மிகச் சிறந்த யுத்த வெற்றிகளும் ஈட்டப்பட்டன. அல்லாஹ் எம்மை மடமை, வழிகேடு, குப்ர், சிலைவணக்கம் போன்றவற்றிலிருந்து பாதுகாத்து எமக்கு அருளிய இஸ்லாம், சிறப்புக்குரிய அவர்களினூடாகவே எங்களுக்குக் கிடைத்தது.

(07) நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற வேளை ஆயிஷா (றழி), அஸ்மா (றழி) ஆகியோர் நடந்துகொண்ட முறை சீர்திருத்தப் பணியில் பெண்களின் பங்களிப்புத் தேவையை வலியுறுத்திக் காட்டுவதாய் அமைந் துள்ளது. ஏனெனில், அவர்கள் மிகவும் மென்மையான சுபாவம் கொண்ட வர்கள். அதிக உணர்வுமிக்கவர்கள். விரிந்த தெளிந்த உள்ளம் கொண்ட வர்கள். பெண் ஒரு விடயத்தில் நம்பிக்கை (ஈமான்) கொண்டு விட்டால் அதனைப் பரப்புவதிலும், அதன்பால் அழைப்பதிலும் ஏற்படக் கூடிய எத்த கைய கஷ்டத்தையும் பொருட்படுத்த மாட்டாள். தான் ஏற்றுக் கொண்ட அக்கருத்தை தன் கணவன், சகோதரர்கள், பிள்ளைகள் போன்ற அனைவரை யும் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக உழைக்கக் கூடியவளாக இருப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றஸூல் (ஸல்) அவர்களது காலத்துப் பெண்கள் இஸ்லாமியப் போராட்டத்தில் ஆற்றிய பங்கு குறித்து இஸ்லாமிய வரலாற்றுப் பக்கங்களில் சிலாகித்துக் கூறப்பட்டுள்ளது. அவை எமக்குப் பின்வரும் உண்மையை உணர்த்திக் காட்டுகின்றன.

அதாவது எந்தவொரு இஸ்லாமிய சீர்திருத்த இயக்கத்தில் பெண்களின் பங்களிப்புக் காணப்படவில்லையோ அவ்வியக்கம் சமூகத்தில் அதிக தாக்கம் செலுத்தக் கூடியதாகவோ, விரைவான முன்னேற்றத்தை அடையக் கூடியதாகவோ ஒருபோதும் இருக்க மாட்டாது. அவர்கள் இப்பணியில் இணைகின்ற போதே ஈமானிய உறுதியும், தூய்மையும் சிறந்த ஒழுக்கப் பண்பாடுகளும் கொண்ட பெண்கள் பரம்பரையொன்றை தோற்றுவிக்க முடியும். இவர்களே இன்றைய சமூகத் தேவையாக உள்ள மேற்சொன்ன பெறுமானங்களை பெண்களுக்கு மத்தியில் கொண்டு செல்வதற்கு ஆண்களை விட தகுதி பெற்றவர்களாவர்.

மட்டுமன்றி, இவர்களே மனைவிமார்களாகவும், தாய்மார்களாகவும் செயற்படப் போகிறார்கள். சிறிய ஸஹாபாக்களையும் அவர்களைத் தொடர்ந்து வந்த தாபிஈன்களையும் இஸ்லாத்தின் அடிப்படை யில் பயிற்றுவித்து (தர்பிய்யத்) வளர்த்தெடுத்த பெருமை அக்காலத்து இஸ்லாமியப் பெண்களையே சாரும். அவர்களே இப்பரம்பரையினரை இஸ்லாமிய ஒழுக்கப் பண்பாடுகளின் அடிப்படையில் வளர்த்தெடுத்தார் கள். அவர் களது உள்ளங்களில் இஸ்லாத்தின் மீதும், றஸூல் (ஸல்) அவர்கள் மீதும் அன்பை ஊட்டி விட்டார்கள். எனவேதான் அவர்கள் உலக வரலாற்றில் தோன்றிய மிகச் சிறந்த வரலாறு கொண்ட பரம்பரையினராக நோக்கப்படு கின்றார்கள்.

இந்த உண்மையை நாம் சரிவர புரிந்து கொண்டு, எமது யுவதிகளும் மனைவிமாரும் இஸ்லாமிய சீர்திருத்தப் பணியை பெண்கள் மத்தியில் கொண்டு செல்லும் பொறுப்பை சுமந்து கொள்ளும் வகையில் செயலாற்று வது எமது கடமையாகும். ஏனெனில், சமூகத்தில் பாதிக்கு மேற்பட்டோர் பெண்களாவர். ஆதலால், எமது சகோதரிகளையும், பெண் பிள்ளைகளை யும் நம்பிக்கைக்குரிய கல்வி நிறுவனங்களில் ஷரீஆவைக் கற்பதற்குத் தூண்ட வேண்டும்.

இஸ்லாமிய ஷரீஆ, வரலாறு போன்ற பல்வேறு துறைகளிலும் ஆழமாகக் கற்ற, றஸூல் (ஸல்) அவர்களை நேசிக்கின்ற, முஃமின்களின் தாய்மார் எனப்படும் நபி (ஸல்) அவர்களுடைய மனைவிமார் கற்றுத் தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடுகளை அணிகலன்களாகக் கொண்ட பெண்கள் அதிகரிக்கின்ற போது தான் இஸ்லாமிய சீர்திருத்தப் பணியை எம்மால் தைரியமாக முன்னெடுத்துச் செல்ல முடியும். அது மாத்திரமன்றி, இஸ்லாமிய சமூகம் இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களை ஏற்றுப் பின்பற்றுகின்ற நாளை அண்மிக்கச் செய்ய முடியும். அல்லாஹ்வின் நாட்டப்படி (இன்ஷா அல்லாஹ்) நிச்சயம் இது நடந்தே தீரும்.

*(08)* 'ஸவ்ர்' குகையிலிருந்த றஸூல் *(ஸல்)* அவர்களையும் அவர்களது தோழரையும் அங்கு வந்த இணை வைப்பாளார்களால் கண்டுகொள்ள முடியவில்லை. அறிவிப்புகளில் குறிப்பிடப்படுவதுபோல, குகையின் வாயிலில் சிலந்தி கூடுகட்டி, பறவைகள் குஞ்சு பொரித்திருந்தன. அல்லாஹ் அவனது தூதர்கள், அன்புக்குரியவர்கள், அழைப்பாளர்கள் போன்றவர்களை எப்போதும் தன் பராமரிப்பின் கீழ் வைத்திருக்கிறான் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

அல்லாஹ் அடியார்கள் மீது வைத்திருக்கின்ற அன்பின் காரணமாக, அவன் நபி (ஸல்) அவர்கள் இணைவைப்பாளர்களின் கைகளில் சிக்கிக் கொலை செய்யப்படுவதையும் அதன் மூலம் இஸ்லாமிய அழைப்புப் பணி தடைப்படுவதையும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டான். ஏனெனில், அவனே தனது தூதர் (ஸல்) அவர்களை உலகத்தவர்களுக்கு அருட்கொடையாக அனுப்பி வைத்தான்.

இவ்வாறுதான் அல்லாஹ் தனது அடியார்களில் உள்ள தூய்மையான அழைப்பாளர்களுக்கு கஷ்டமான சந்தர்ப்பங்களில் இரக்கம் காட்டுகிறான். துன்பம் தரும் நிகழ்வுகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கின்றான். பல்வேறு வகைகளில் அவர்களுக்கெதிராக தீங்கோ, சதியோ செய்யக் காத்திருப்பவர்களின் கண்களைக் கட்டி விடுகின்றான். 'ஸவ்ர்' குகையிலிருந்த றஸூல் (ஸல்) அவர்களையும் அவர்களது தோழரை யும் முஷ்ரிக்குகள் சூழ்ந்து கொண்ட பின்னர் அவர்கள் தப்பித்துக் கொண்டமையானது அல்லாஹ்வின் பின்வரும் கூற்றை உண்மைப்படுத்திக் காட்டுகிறது.

> ''நிச்சயமாக நாம் எமது தூதர்களுக்கும் ஈமான் கொண்ட விசுவாசிகளுக்கும் உலக வாழ்விலும் படைப்பினங்கள் எழுப்பப் படும் மறுமை நாளிலும் உதவி செய்வோம்.'' *(ஆஃபிர்: 51)*

> ''நிச்சயமாக அல்லாஹ் ஈமான் கொண்டவர்களைப் பாதுகாக்கின் றான்.'' *(ஸூறதுல் ஹஜ்:38)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(09) குகைக்குள் இருந்த அபூபக்ர் (றழி) அவர்கள் தங்கள் இருவரையும் முஷ்ரிக்குகள் கண்டுகொள்வார்களோ என அஞ்சினார்கள். இது பின்வரும் உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அதாவது, இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுகின்ற உண்மையான படைவீரன் தன்னுடன் இருக்கும் நம்பிக்கைக்குரிய தலைவருக்கு ஏதும் அபாயம் சூழ்ந்து கொள்ளும் போது அவரது உயிருக்கு ஏதும் ஆபத்து நடந்து விடுமோ என்ற அச்ச உணர்வு கொண்டவராக இருக்க வேண்டும்.

உண்மையில் அபூபக்ர் (றழி) அவர்கள் குறித்த அச்சந்தர்ப்பத்தில் தனது உயிருக்காக கவலை கொள்ளவில்லை. அவ்வாறிருந்திருப்பின், இவ்வபாய கரமான ஹிஜ்ரத்தில் அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒருபோதும் சென்றிருக்க மாட்டார்கள். ஏனெனில், நபி (ஸல்) அவர்களோடு செல்லும் போது முஷ்ரிக்குகள் தன்னைக் கைதுசெய்து விட்டால் கிடைக்கின்ற குறைந்தபட்சத் தண்டனை கொலை என்பதை அவர்கள் நன்கறிந்து வைத்திருந்தார்கள். மாறாக நபி (ஸல்) அவர்களது கண்ணியம் பொருந்திய உயிருக்காகவும் அவர்கள் முஷ்ரிகீன் களின் கைகளில் சிக்கிவிட்டால் இஸ்லாத்தின் எதிர்காலம் என்னவாகும் என்பதற்காகவுமே அவர்கள் அச்சம் கொண்டார்கள்.

(10) ''அபூபக்ரே! அல்லாஹ் மூன்றாமவனாக (எம்முடன்) இருக்கும் போது, நாம் இருவர்தான் இருக்கிறோம் என எண்ண முடியுமா'' என றஸூல் (ஸல்) அவர்கள் அபூபக்ர் (றழி) அவர்களது கலக்கத்துக்குப் பதில் கூறி ஆறுதல் படுத்தினார்கள். இது அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை வைத்திருப்பது, அவனது உதவியில் அமைதியடைவது, கஷ்டங் கள் துன்பங்களின்போது அவன் மீது தவக்குல் வைப்பது போன்றவற்றின் உண்மைத் தன்மையை எடுத்துச் சொல்வதற்கான சிறந்ததொரு உதாரண மாக விளங்குகிறது. மட்டுமன்றி, நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்தும் தெளிவான ஆதாரமாகவும் இது அமைந்துள்ளது. எனவேதான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும் அருளாகவும் அனுப்பி வைத்த அல்லாஹ் தன்னை எத்தகைய கஷ்டமான நிலைமையிலும் கைவிடமாட்டான் என்ற உறுதியான நம்பிக்கையின் அடையாளங்கள் குறித்த நிகழ்வின்போது நபி (ஸல்) அவர்களிடம் தென்பட்டன.

போலியாக தன்னை ஒரு நபி அல்லது றஸூல் என வாதிடும் ஒருவரிடம் இத்தகையதொரு அமைதிப் போக்கைக் காணமுடியுமா? இத்தகைய சந்தர்ப்பங்களிலேயே உண்மையான சீர்திருத்தவாதிகளுக்கும், சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவதாக போலியாக வாதிடுவோருக்குமிடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடு தெளிவாகத் தோன்றும். உண்மையாளர்களின் உள்ளங்கள் எப்போதும் அல்லாஹ்வில் திருப்தி கொண்டனவாகவும், அவனது உதவியில் உறுதியான நம்பிக்கை கொண்டனவாகவும் இருக்கும். ஆனால் போலிகளைப் பொறுத்தவரை அவர்கள் பயங்கர நிகழ்வுகள், கஷ்டங்கள் இடம்பெறும்போது நிலை தடுமாறி விடுவர். அதேவேளை அல்லாஹ் அவர்களுக்கு உதவியாளனாகவும் இருக்க மாட்டான்.

*(11)* றஸூல் (ஸல்) அவர்களைக் கண்டு கொண்ட சுராகா தன்னால் நபி (ஸல்) அவர்களை நெருங்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பின்னர் எடுத்துக் கொண்ட நிலைப்பாடானது, நபி (ஸல்) அவர்களின் நுபுவத்தை உறுதிப்படுத்துகின்ற மற்றுமொரு ஆதாரமாகக் காணப்படுகிறது. நபி (ஸல்) அவர்களை நோக்கி நகர முற்பட்ட அவனது குதிரையின் கால்கள் மணற் தரையில் புதைந்து கொண்டன. குறித்த முயற்சியைக் கைவிட்டு விட்டு குதிரையை மக்காவை நோக்கி நகர்த்தியபோது அது சாதாரணமாக நடந்து சென்றது.

மீண்டுமொரு முறை அதனை நபி (ஸல்) அவர்களை நோக்கி நகர்த்த முற்பட்டபோது முன்னைய பலவீன நிலையையே அது அடைந்தது. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட, அவனது உதவியும் வெற்றியும் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரு நபிக்கு அன்றி வேறொருவருக்கு இத்தகைய உதவிகள் கிட்டும் என நினைத்துக் கூடப் பார்க்க முடியுமா? நிச்சயமாக முடியாது. இதனையே சுராகாவும் உணர்ந்து கொண்டான். மனித சக்திகளால் வென்றிட முடியாத அல்லாஹ் வின் கண்காணிப்பு றஸூல் (ஸல்) அவர்களுக்கு என்றுமிருக்கிறது என்பதை அவ்ன் உணர்ந்து நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பாக வழியனுப்பினான். குறைஷியரின் பரிசைத் துறந்து நபி (ஸல்) அவர்களின் வாக்குறுதியை திருப்தியுடன் ஏற்றுக் கொண்டான்.

*(12)* கிஸ்ரா மன்னனின் இரண்டு காப்புகளும் சுராகாவுக்குக் கிட்டும் என நபி (ஸல்) அவர்கள் வாக்களித்தார்கள். இது இன்னுமோர் அற்புதமாகும். ஏனெனில் சமூகத்திலிருந்து தப்பியோடுகின்ற ஒரு மனிதர், அவர் ஒரு நபியாக இருந்தாலன்றி, பாரசீகத்தை வெற்றி கொண்டு கிஸ்ராவின் பொக்கிஷங்களை அடைந்து கொள்வார் என எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் அளித்த வாக்குறுதி பிறகு உண்மைப் படுத்தப்பட்டது. பாரசீகம் வெற்றி கொள்ளப்பட்டு, கனீமத் பொருட்களில் கிஸ்ராவின் இரு காப்புக்களும் இருப்பதைக் கண்ட சுராகா உமர் (றழி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு வேண்டிக் கொண்டான். இதற்கிணங்க உமர் (றழி) அவர்கள் அவ்விரு காப்புகளையும் ஸஹாபாக்கள் குழுமியிருக்க சுராகாவுக்கு அணிவித்து விட்டு "கிஸ்ராவின் இரு காப்புகளையும் பறித்தெடுத்து சுராகா இப்னு ஜுஃஷும் என்ற நாட்டுப் புற அறபிக்கு அணிவித்த அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்" எனக் குறிப்பிட்டார்கள்.

இவ்வாறுதான் ஹிஜ்ரத் நிகழ்வின்போது பல்வேறு அற்புதங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. முஃமின்கள் தங்களுடைய ஈமானை அதிகரித்துக் கொள்ளவும், வேதம் வழங்கப்பட்டோரில் தடுமாற்றத்துடன் வாழ்வோரும், அல்லாஹ்வை நிராகரித்து வாழ்வோரும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என்பதை உறுதிப்பட நம்பும் வகையிலேயே அவை அமைந்திருந்தன.

*(13)* நபி (ஸல்) அவர்கள் பாதுகாப்பாக (யத்ரிப்) மதீனாவை வந்தடைவதைக் கண்டு அன்ஸாரிகளும் முஹாஜிர்களும் அளவிலா மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த மகிழ்ச்சிப் பெருக்கு பெண்களை தம் பிள்ளைகளோடு வீட்டிலிருந்து வெளியே வர வைத்தது. ஆண்களை தமது வேலைகளை விட்டு விடச் செய்தது. மதீனத்து யூதர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் வெளிப்படையாக பிரதேசத்தவர்கள் கொண்ட மகிழ்ச்சி யில் பங்கெடுப்பவர்களாக இருந்தபோதிலும், தமது தலைமைத்துவத்துக்கு எதிராக புதிதாகத் தோன்றியிருக்கும் சவால் குறித்து உள்ளத்தால் நொந்து கொண்டவர்களாய் இருந்தனர்.

அல்லாஹ்வின் தூதரைக் கண்டதால் முஃமின்கள் அடைந்த மகிழ்ச்சியை பொறுத்தமட்டில் அது ஆச்சரியப்படத்தக்கதன்று. ஏனெனில் அவர்கள் தான் அல்லாஹ்வின் உதவி கொண்டு அவர்களை இருளிலிருந்து காப்பாற்றி ஒளியின்பால் அழைத்து வந்து நேரான பாதைக்கு இட்டுச் சென்றார்கள். யூதர்கள் எடுத்துக் கொண்ட நிலைப்பாட்டைப் பொறுத்த வரையிலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் அவர்கள், தாம் ஆதிக்கம் செலுத்தி வந்த அச்சமூகத்தின் மீது நயவஞ்சகமும் குரோதமும் கொண்டவர்களாக இருந்தார்கள். சமூகத்தின் தலைமைத்து வத்தை தம்மிடமிருந்து பறிக்கின்ற, கடன் என்ற பெயரில் மக்களது செல்வங்களைச் சூறையாடுகின்ற, ஆலோசனை, உபதேசம் என்ற பெயரில் மக்களது இரத்தத்தை ஓட்டுகின்ற தமது செயற்பாடுகளுக்கு தடையாக அமையும் முஃமின்கள் மீது கோபமும், பொறாமையும் கொண்டவர்களாக இருந்தார்கள்.

பொதுவாக சமூகத்தை, தமது ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க முயற்சிக்கின்ற ஒவ்வொருவர் மீதும் யூதர்கள் பொறாமை கொண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கெதிராக சூழ்ச்சிகள் செய்து, முடிந்தால் அவர்களை கொலை செய்து விட முயற்சிக்கின்றவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர். இதுவே அவர்களது பொதுவான வழிமுறையாக இருந்து வருகிறது.

எனவே தான் றஸூல் (ஸல்) அவர்கள் மதீனாவில் நிலைகொண்ட பின்னர் முஸ்லிம்களுடன் யூதர்கள் பரஸ்பர ஒத்துழைப்புக்கும் சமாதானத்துக்குமான உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்ட போதிலும் மேற்கூறிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள்.

பொதுவாக யூதர்கள் எப்போதும் யுத்தத்தை தூண்டுகின்றவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள்.

"அவர்கள் யுத்தத்துக்கான தீயை மூட்டி விடுகின்ற போதெல்லாம் அல்லாஹ் அதனை அணைத்து விடுகிறான்." *(அல்-மாஇதா: 64)*

*(14)* ஹிஜ்ரத் நிகழ்வுகள் சுட்டிக்காட்டும் இன்னொரு விடயம் நபி (ஸல்) அவர்கள் எந்த இடத்தில் தங்கினாலும் அங்கு முஃமின்கள் ஒன்று கூடக்கூடிய ஒரு பள்ளிவாயிலை முதலில் கட்டி விடுவர்கள் நான்கு நாட்கள் குபாவில் தங்கிய அவர்கள் மஸ்ஜிதுல் குபாவை அங்கு நிறுவினார்கள். மதீனாவுக்கும் குபாவுக்கும் இடையே இருக்கக் கூடிய பனூ ஸாலிம் பின் அவ்ப் கோத்திரத்தினர் வாழும் 'ரான்வனா' பள்ளத்தாக்கை அவர்கள் அடைந்தபோது ஜும்ஆவுடைய நேரமாகியது. எனவே, அங்கும் ஒரு பள்ளியைக் கட்டினார்கள். மதீனாவை வந்தடைந்த போது நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட முதற்பணி ஒரு பள்ளிவாயிலைக் கட்டியதாகும்.

இஸ்லாத்தில் பள்ளிவாயிலுக்கு வழங்கப்படக் கூடிய முக்கியத்துவத்தை இவை எடுத்துக் காட்டுகின்றன. இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகள் அனைத்தும் ஆன்மாவை சுத்தப்படுத்துபவை. பண்பாடுகளைச் சீர்மைப் படுத்துபவை. பரஸ்பர ஒத்துழைப்புக்கான அடிப்படைகளைப் பலப்படுத்துபவை. ஐவேளை ஜமாஅத் தொழுகைகள், ஜும்ஆத் தொழுகை, இரண்டு பெருநாள் தொழுகைகள் போன்ற அனைத்து அமல்களும் முஸ்லிம்களின் ஒற்றுமை, ஐக்கியம், ஒருமித்த இலக்குகள், நன்மையிலும் தக்வாவிலும் அவர்களிடையே காணப்படும் பரஸ்பர ஒத்துழைப்பு போன்றவற்றை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன.

இவ்வகையில் முஸ்லிம் களின் வாழ்வில் மஸ்ஜித் (பள்ளிவா யில்) மிகப் பெரும் ஆன்மீக, சமூகப் பணிகளை ஆற்றியிருக்கின்றது எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுவதில் தவறிருக்காது. ஏனெனில், அதுவே முஸ்லிம்களை ஐக்கியப் படுத்துகின்ற, ஆன்மாக்களை நெறிப்படுத்துகின்ற தளமாக விளங்குகிறது. உள்ளங்களையும் அறிவையும் எழுச்சி பெறச் செய்கிறது. பிரச்சினை களைத் தீர்த்து வைக்கின்ற தளமாக விளங்குகிறது. அங்குதான் முஸ்லிம் களின் பலமும் ஒற்றுமையும் புடம் போட்டுக் காட்டப்படுகின்றது.

அல்லாஹ்வின் வழிகாட்டலை பூமியில் பரப்பவெனச் சென்ற இஸ்லா மியப் படைகள் பள்ளிவாயில்களில் இருந்து தான் புறப்பட்டுச் சென்றன. முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்குமான நேர்வழி யின் ஒளிக்கீற்றுகள் அங்கிருந்துதான் பிரகாசித்தன. மேலும், அங்கிருந்து தான் இஸ்லாமிய நாகரீகத்தின் வித்துக்கள் முளைத்து வளர்ச்சியடைந்தன. ஏன்? அபூபக்ர் (றழி), உமர்(றழி), உஸ்மான் (றழி), அலி (றழி), காலித் (றழி), ஸஃத் (றழி), அபூ உபைதா (றழி) போன்ற இஸ்லாமிய வரலாற்றில் தோன் றிய உன்னத மனிதர்கள் மஸ்ஜிதுன் நபவி உருவாக்கித் தந்த பாடசாலை யின் மாணவர்களே. இந்த உண்மைகளை இஸ்லாத்தில் மஸ்ஜிதின் வரலாறு என்றும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

மஸ்ஜிதுக்கு இன்னுமொரு சிறப்பிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு வாரமும் அங்கிருந்துதான் சத்திய மார்க்கம் பற்றி கதீபினால் போதனை வழங்கப்படுகின்றது. இதன்போது நன்மை ஏவப்பட்டு தீமை தடுக்கப்படு கிறது. அல்லது நன்மையின்பால் அழைப்பு விடுக்கப்படுகிறது. குருட்டுத் தனத்திலிருந்து மக்களை விழித்தெழச் செய்வதற்கான வழிகாட்டல் கொடுக்கப்படுகிறது. ஐக்கியத்தின் பால் அழைப்பு விடுக்கப்படுகிறது. அநியாயக்காரனுக்கு எதிராக குரல் எழுப்பப்படுகிறது. அத்துமீறிச் செல்ப வனுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

பிரான்ஸிய காலனித்துவ வாதிகளுக்கு எதிரான தேசிய இயக்கங்களின் செயற்பாட்டு மையங்களாக பள்ளிவாயில்கள் எவ்வாறு செயற்பட்டன என்பதை எமது சிறு பிராயத்திலே கண்டிருக்கிறோம். சியோனிஸத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராளித் தலைவர்கள் அங்கு தான் ஒன்று கூடினார்கள்.

ஆனால் வயிற்றுப் பசிக்காக வேலை பார்க்கும் அல்லது அறிவற்ற பொடுபோக்கான சில கதீப் (உபதேசகர்)களின் பாவச் செயலின் காரணமாக இன்று மஸ்ஜித் அதன் உரிய பணியை நிறைவேற்றத் தவறி வருவதை காண்கின்றோம். சத்தியத்தில் உறுதியாக இருக்கும், இஸ்லாமிய ஷரீஆவைக் கற்றறிந்த, அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையுடன் செயற்படக்கூடிய, முஸ்லிம்களுக்கும் அவர்களின் தலைவர் களுக்கும் உபதேசிக்கக் கூடிய அறிஞர்கள் மிம்பர் மேடைகளில் ஏறுகின்ற நாளில் தான் எங்களுடைய சமூக நிறுவனங்களின் முதல் அந்தஸ்தை மஸ்ஜித் மீட்டெடுத்துக் கொள்ளும். மேலும் மனிதர்களை பயிற்றுவிக் கின்ற, தலைவர்களை உருவாக்குகின்ற, குழப்பங்களை சீர்செய்கின்ற, தீமைக்கு எதிராகப் போராடுகின்ற, தக்வா, அல்லாஹ்வின் திருப்தியின் அடிப்படையில் சமூகத்தைக் கட்டியெழுப்புகின்ற அதன் பணிகளை அது மீண்டும் ஆரம்பித்து வைக்கும்.

மார்க்கத்தை நன்கு விளங்கிய இறைதூதரின் பண்பாடுகளை அணிகலன் களாகக் கொண்ட எமது முஃமினான இளைஞர்கள் பிரசங்க மேடைகளை யும் அவற்றின் சுற்றுச் சூழல்களையும் ஆக்கிரமித்துக் கொள்ளும்போது மேற்கூறிய நிலையை நாம் எதிர்பார்க்க முடியும்.

(15) றஸூல் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள், அன்ஸாரிகளுக்கிடையில் சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தி விட்டமையானது இஸ்லாத்தின் உயர் மனிதாபிமான பண்பாட்டியல் நீதியை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

முஹாஜிர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தமது சொத்து செல்வங் களையெல்லாம் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்துவிட்டு உலக செல்வங்கள் எதுவுமற்றவர்களாக மதீனாவுக்கு வந்தடைந்தவர்கள். அன்ஸாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் தம்மிடமுள்ள விவசாயம், கைத்தொழில், ஏனைய வளங்களின் காரணமாக செல்வந்தர்களாகக் காணப்பட்டவர்கள். எனவே, அவர்களில் ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனைப் பொறுப்பேற்றுக் கொள்ளட்டும், வாழ்வின் இன்ப துன்பங்களை அவரோடு பங்குபோட்டுக் கொள்ளட்டும், இருவரும் தங்கு வதற்குப் போதுமான இடம் இருப்பின் அவரைத் தன்னுடனே தங்கவைத் துக் கொள்ளட்டும், செல்வந்தராக இருந்தால் தனது செல்வத்தில் அரைப் பகுதியைத் தனது சகோதரனுக்கு வழங்கிவிடட்டும், என நபி (ஸல்) அவர்களால் அன்ஸாரிகள் கேட்கப்பட்டனர். இந்த சகோதரப் பிணைப்பு ஏற்படுத்திவிட்ட சமூக நீதியை விட உயர்ந்த ஒரு நீதியை உலகில் எங்கேனும் காண முடியுமா?

இஸ்லாத்தில் சமூக நீதி கிடையாது என வாதிடுபவர்களைப் பொறுத்த வரையில் உண்மையில் அவர்கள், இஸ்லாம் மனிதர்களின் கண்களைத் திறந்து அவர்களது உள்ளங்களை ஆகர்ஷித்துக் கொள்வதை விரும்பாதவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். அல்லது அவர்கள் இஸ்லாத்தில் ஆதாரமுள்ள ஒவ்வொரு புதிய சொல்லையும் -அதனை மக்கள் விரும்பிய போதிலும்- வெறுக்கின்ற கல் நெஞ்சம் கொண்டவர்கள். அவ்வாறு இல்லாவிட்டால் வரலாற்றில் மிக அரிதாகவே நிகழக் கூடிய சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தும் இந்த நிகழ்வு இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்றிருக்கும்போது அவர்கள் எவ்வாறு இஸ்லாத்தில் சமூக நீதி கிடையாது என வாதிட முடியும். இந்த மார்க்கத்தின் சொந்தக்காரர் நபி (ஸல்) அவர்களே முன்னின்று நடாத்தி தனது கண்கானிப்பின் கீழ் நடைமுறைப்படுத்திய இந்தப் பிணைப்பின் அடியாகவே ஆரம்ப இஸ்லாமிய சமூகமும் முதல் முஸ்லிம் தேசமும் கட்டி யெழுப்பப்பட்டது. எனவே, மேற்குறித்த குற்றச்சாட்டு போலியானதும் இட்டுக்கட்டப்பட்டதுமாகும். அல்லாஹ் தூய்மையானவன்.

*(16)* றஸூல் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களுக்கும் அன்ஸாரிகளுக்கு மிடையே சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தவும், முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்குமிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை ஏற்படுத்த வும் எழுதிய சாசனம் பல்வேறு விடயங்களுக்கு ஆதாரமாய் உள்ளது. அதாவது, இஸ்லாமிய அரசாங்கம் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கும். முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதோருக் கும் இடையிலான உறவுகள், அவர்கள் சமாதான வழியில் இருக்கும் வரை சமாதானமாகவே இருக்கும். சத்தியம், நீதி, நன்மை தக்வாவில் பரஸ்பர ஒத்துழைப்பு, மக்களின் நலனுக்காக செயற்படுதல், சமூகத்துக்குத் தீங்கு தரும் விடயங்களைத் தடுத்தல் போன்றன அனைத்துமே இஸ்லாமிய அரசின் பிரதான கோஷங்களாகும்.

இஸ்லாமிய அரசு எங்கு, எக்காலத்தில் நிறுவப்பட்டாலும் இவ்வுயர் அடிப்படைகளின் அடி நின்றே அமைந்திருக்கும். எமது முஸ்லிம் சமூகத்தில் இஸ்லாமிய அடிப்படைகளில் அமைந்த நாடுகளை உருவாக்க மேற்கொள்ளப்படும் செயற்பாடானது அரசாங்கம் குறித்த மனித சிந்தனையின் வளர்ச்சியோடு பொருந்திச் செல்லும் ஒன்றாகவே காணப்படு கிறது. அதற்கும் மேலாக குறித்த செயற்பாடானது ஏனைய சமூகங்களை விட மிகவும் பலம் வாய்ந்த, பூரணத்துவமிக்க, சுபீட்சமான, உயர்ந்ததொரு சமூகத்தை முஸ்லிம்கள் கட்டியெழுப்பிக் கொள்வதற்கும் வழியமைத்துக் கொடுக்கிறது.

எது எவ்வாறாயினும், இஸ்லாமிய அடிப்படையிலமைந்த நாடுகள் கட்டியெழுப்பப்படுவது எமது நலனுக்கேயாகும். இப்பணியை விட்டு விடுவது எமது அழிவுக்கே காரணமாகும். முஸ்லிம் தேசத்தில் முஸ்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாதோருக்கு ஒருபோதும் தீங்கிழைக்கப்பட மாட்டாது. அவர்களது நம்பிக்கைகளுக்கு பங்கம் விளைவிக்கப்படவும் மாட்டாது. அவர்களது உரிமைகளில் எவ்விதக் குறையும் விடப்பட மாட்டாது. அவ்வாறெனின், ஏன் இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமிய ஷரீஆவையும் அதன் சட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதை கட்டாயப்படுத்துவற்குப் பயப்பட வேண்டும். இஸ்லாமிய ஷரீஆ முழுமையாகவே நீதி, சத்தியம், பலம், சகோதரத்துவம், சமூகப் பொறுப்புணர்வு போன்ற அடிப்படைகளில் தான் உருவாக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின்பால் மீள்வதனூடாக மாத்திரமே நாம் காலனித்துவத்திலிருந்து விடுதலையடைய முடியும். எனவே, இந்தப் பாதையில் விரும்பியவர்கள் செயற்படட்டும்.

''நிச்சயமாக அவ்வூர்வாசிகள் ஈமான் கொண்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருந்தால், நாம் அவர்களுக்கு வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் -பரகத்துகளை- பாக்கியங்களைத் திறந்து விட்டிருப்போம்.'' *(அல் அஃராப்: 96)*

''நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும். ஆகவே இதனையே பின்பற்றுங்கள் -இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம்- அவை உங்களை அவனுடைய வழியைவிட்டுப் பிரித்துவிடும். *(அல் அன்ஆம்:153)*

தவிர, எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கின்றாரோ, அவருக்கு அவன் (தக்கதொரு) வழியை உண்டாக்குவான். அ(த்தகைய) வருக்கு, அவர் எண்ணியிராத புறத்திலிருந்து, அவன் உணவு (வசதி)களை அளிக்கிறான். மேலும், எவர், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு அவனை முற்றிலும் சார்ந்திருக்கிறாரோ, அவருக்கு அவன் போதுமானவன், நிச்சயமாக அல்லாஹ் தன் காரியத்தை நிறைவாக்கு பவன் -திண்ணமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் அளவை உண்டாக்கி வைத்திருக்கின்றான். மேலும், எவர் அல்லாஹ் வுக்கு அஞ்சி நடக்கிறாரோ அவருடைய காரியத்தை அவன் எளிதாக்குகிறான். எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்கி றாரோ, அவரை அவருடைய பாவங்களை விட்டும் நீக்கி, அவருக்கு (நற்)கூலியையும் மகத்தானதாக்குகின்றான். *(தலாக்: 2-5)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் பிரிவு

# நபி (ஸல்) அவர்கள் கலந்துகொண்ட யுத்தங்கள்

## வரலாற்று நிகழ்வுகள்

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் நிலைகொண்டதும் குறைஷியரும், அவர்களைச் சார்ந்த ஏனைய அறபுக் கோத்திரங்களும் முஸ்லிம்களுடன் ஆயுதப் போராட்டத்துக்குத் தயாராகினர். முஸ்லிம்களுக்கும் நிராகரிப் பாளர்களுக்குமிடையில் இடம்பெற்ற யுத்தங்களில் நபியவர்கள் பங்கு கொண்ட யுத்தங்களை 'கஸ்வா' எனவும் பங்கு கொள்ளாவற்றை 'ஸரிய்யா' எனவும் (இஸ்லாமிய) வரலாற்றாசிரியர்கள் வகுத்து நோக்குகின்றனர். அந்தவகையில் றஸூல் (ஸல்) அவர்கள் பங்கு கொண்ட யுத்தங்கள் 26 எனவும், அவர்கள் பங்கு கொள்ளாத யுத்தங்கள் 38 எனவும் அவர்கள் குறித்துக் காட்டுகின்றனர். அவற்றுள் நபி (ஸல்) அவர்கள் பங்குகொண்ட முக்கியமான யுத்தங்கள் பதினொன்றை மாத்திரம் இங்கு நோக்குவோம்.

### 1. புனித பத்ர் யுத்தம்

புனித பத்ர் யுத்தம் ஹிஜ்ரி: 2 ரமழான் மாதம் 17 ஆம் நாள் நிகழ்ந்தது. இதற்கான பின்னணி யாதெனில், ஷாம் தேசத்திலிருந்து மக்காவை நோக்கிச் சென்று கொண்டிருந்த குறைஷியரின் வியாபாரக் கோஷ்டியை வழிமறிக்குமாறு றஸூல் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களைப் பணித்தார் கள். குறைஷியரைப் பயமுறுத்தவேயன்றி அவர்களோடு யுத்தம் புரிய வேண்டும் என்ற எண்ணத்துடன் நபி (ஸல்) அவர்கள் இதனைச் செய்ய வில்லை. எவ்வாறாயினும் வியாபாரக் கோஷ்டி ஸஹாபாக்களிடமிருந்து தப்பிச் சென்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் சென்ற அபூஸுஃப்யான் பாதுகாப்பு உதவிகோரி ஏலவே குறைஷியரிடம் தூது அனுப்பியிருந்தமையால் சுமார் ஆயிரம் போராளிகளுடன் குறைஷியர் மக்காவிலிருந்து மதீனாவை நோக்கி வந்தனர். அவர்களில் 600 பேர் போர்க் கவசம் அணிந்திருந்தனர். மேலும் கவசமிடப்பட்ட 100 குதிரைகளுட்பட 700 கோவேறு கழுதைகளும் அவர்களிடம் காணப்பட்டன. அது மாத்திரமன்றி முஸ்லிம்களுக்கெதிராக மேளம் கொட்டி வசை பாடவென பெண்களும் அழைத்துவரப்பட்டிருந்தனர்.

முஸ்லிம்களில் 313 அல்லது 314 பேர் இருந்தனர். அவர்களில் பெரும் பாலானவர்கள் அன்ஸாரிகள் (மதீனத்து ஸஹாபாக்கள்) ஆவர். அவர்களிடம் 70 ஒட்டகைகளும் இரண்டு அல்லது மூன்று குதிரைகளுமே காணப்பட்டன. இதனால் ஸஹாபாக்கள் ஒட்டகைகளில் மாறி மாறி அமர்ந்து யுத்த களத்தை நோக்கிப் பயணித்தனர்.

களத்தில் இறங்குவதற்கு முன்னர் அது தொடர்பாக ஸஹாபாக்களின் -குறிப்பாக அன்ஸாரிகளின் ஆலோசனையைப் பெறுவதற்கு நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். மக்கத்து ஸஹாபாக்களான முஹாஜிர்கள் யுத்தத்தில் ஈடுபடுவதே சிறந்ததெனக் குறிப்பிட்டபோது நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளின் கருத்தை எதிர்பார்த்தார்கள். இதை உணர்ந்த அன்ஸாரிகளின் தலைவர் ஸஃத் இப்னு முஆத் (றழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:-

"அல்லாஹ்வின் தூதரவர்களே, நாம் உங்கள் மீது (ஈமான்) நம்பிக்கை கொண்டு உங்களை உண்மைப்படுத்தினோம். நீங்கள் கொண்டு வந்த தூது சத்தியமானது என சாட்சி பகர்ந்தோம். இதனடிப்படையில் உங்களுக்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு நடப்பதாக நாம் வாக்குறுதியளித்தோம். எனவே அல்லாஹ்வின் தூதரவர்களே நீங்கள் நாடியதைச் செய்யுங்கள். நாங்கள் உங்களோடு இருக்கிறோம். சத்தியத்தை தந்து உங்களைத் தூதராக அனுப்பிய அல்லாஹ்வின் மீது சத்தியமாக இந்தக் கடலைக் காட்டி எம்மை மூழ்கி விடச் சொன்னாலும் உங்களோடு சேர்ந்து நாமும் மூழ்கி விடுவோம். எங்களில் எவருமே பின்வாங்கி ஓட மாட்டார்கள். நாளை எதிரி எம்மைச் சந்திப்பதை நாம் வெறுக்கவில்லை. யுத்தத்தின்போது பொறுமையுடன் இருந்து போராடுவோம். யுத்த முனையில் வாய்மையுடன் நடந்து கொள்வோம். நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய கண்கள் குளிர்ச்சியடையக் கூடிய செயல்களை எம்மிலிருந்து வெளிக்காட்டுவான். எம்மை அல்லாஹ்வின் (பரகத்) அருளை நோக்கி எம்மை அழைத்துச் செல்லுங்கள்." இதேபோன்று ஏனையவர்களும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் மிக மகிழ்ச்சியடைந்தவர்களாக பின்வருமாறு கூறினார்கள்:-

''அல்லாஹ்வின் அருளை நோக்கி நகருங்கள். நன்மாராயம் கூறிக் கொள்ளுங்கள். அல்லாஹ் வியாபாரக் கூட்டத்தை அல்லது ஜிஹாதை எனக்கு வாக்களித்திருக்கிறான்.''

பின்னர் றஸூல் (ஸல்) அவர்கள் பத்ருப் பிரதேசத்தின் தாழ்ந்த பகுதி வரை அவர்களை நடத்திச் சென்று முகாமிட்டார்கள். இதனைக் கண்ட ஹப்பாப் இப்னுல் முன்திர் (றழி) அவர்கள், ''அல்லாஹ்வின் தூதரவர்களே! நீங்கள் முகாமிட்டிருப்பது அல்லாஹ் பணித்த இடமா? அவ்வாறெனில் இந்த இடத்திலிருந்து முன் செல்லவோ பின் செல்லவோ வேண்டாம். அன்றேல் இது உங்களுடைய தனிப்பட்ட கருத்தும் யுத்த தந்திரமுமா?'' என நபி (ஸல்) அவர்களிடம் வினவினார். அதற்கு இது தனது தனிப்பட்ட கருத்தும் யுத்த தந்திரமுமே என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

பின்னர், ஹப்பாப் (றழி) அவர்கள் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி அவ்விடத்துக்கு நகருவதே சிறந்தது எனவும், அதுவே முஷ்ரிக்குகள் பத்ருப் பள்ளத்தாக்கிலிருந்து நீர் எடுப்பதைத் தடுப்பதற்கு மிகவும் பொருத்தமான இடம் எனவும் ஆலோசனை வழங்கினார்கள். இதன்படி நபி (ஸல்) அவர்கள், ஹப்பாப் (றழி) அவர்கள் குறித்துக் காட்டிய இடத்துக்குச் சென்று ஸஹாபாக்களோடு முகாமிட்டார்கள்.

பின்னர் ஸஃத் பின் முஆத் (றழி) அவர்கள் முஸ்லிம் போராளிகளின் பின்வரிசையில் றஸூல் (ஸல்) அவர்களுக்கென ஒரு பல்லாக்கு (Arbour) அமைக்கப்பட வேண்டுமெனவும், அல்லாஹ் வெற்றியைத் தந்தால் நபியவர்கள் தான் விரும்பியவாறு நடந்து கொள்ளட்டும். அவ்வாறில்லாத போது குறித்த வாகனத்தில் மதீனாவுக்குச் சென்று அங்கு தங்கி இருப்பவர் களோடு சேர்ந்து கொள்ளட்டும் எனவும் சகாக்களுக்கு ஆலோசனை கூறிவிட்டு நபி (ஸல்) அவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறினார்கள்:

''அல்லாஹ்வின் தூதரவர்களே, எங்களை விட உங்களை அதிகமாக நேசிக்கக் கூடிய சிலர் மதீனாவில் இருக்கிறார்கள். நீங்கள் யுத்தம் ஒன்றை சந்திக்கவே செல்கிறீர்கள் என்பதை அறிந்திருந்தால் அவர்கள் ஒருபோதும் பின்வாங்கியிருக்க மாட்டார்கள்.''

இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், ஸஃதுக்காக அல்லாஹ்விடம் துஆச் செய்துவிட்டு தனக்கு ஒரு பல்லாக்கு அமைக்குமாறு ஸஹாபாக் களைக் கேட்டுக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றஸூல் (ஸல்) அவர்கள் முஸ்லிம் படையின் அணிகளை ஒழுங்கு படுத்தி, போராட்டத்தில் ஈடுபடுமாறு அவர்களைத் தூண்டினார்கள். மேலும், அல்லாஹ்வின் பாதையில் வீரமரணம் -ஷஹாதத்- அடைவதற்கு ஆர்வமூட்டினார்கள்.

"யார் கைவசம் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக இன்று யார் காபிர்களுடன் பொறுமையோடும் அல்லாஹ்வின் கூலியை எதிர்பார்த்தும் புறமுதுகு காட்டி ஓடாதும் வீரத்துடன் போராடி கொலை செய்யப்படுகிறாரோ அவரை அல்லாஹ் நிச்சயம் சுவர்க்கத்தில் நுழைவிப்பான்" என நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டு, அபூபக்ர் (றழி) அவர்களோடு பல்லாக்கினுள் சென்றார்கள். ஸஃத் பின் முஆத் (றழி) உருவிய வாளுடன் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள். பல்லாக்கினுள் நுழைந்த நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

"யா அல்லாஹ்! உன்னுடைய வாக்குறுதியை உன்னிடத்தில் இறைஞ்சுகிறேன். (உன்பாதையில் போராடிக் கொண்டிருக்கும் முஃமின்களின்) இக்கூட்டம் அழிக்கப்படுமாயின் பூமியில் உன்னை வணங்குவதற்கு யாரும் இருக்க மாட்டார்கள்".

நீண்ட நேரம் ஸுஜூதிலேயே இருந்த நபி (ஸல்) அவர்களைப் பார்த்து அபூபக்ர் (றழி) அவர்கள் "போதும் அல்லாஹ் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவான்" என ஆறுதல் கூறினார்கள்.

யுத்தம் சூடுபிடித்தது. நிராகரிப்பாளர்களில் சுமார் 70 பேர் கொலை செய்யப்பட்டார்கள். அவர்களில் இஸ்லாத்தின் மிகப் பெரிய விரோதி அபூஜஹ்ல் உட்பட காபிர்களில் முக்கிய தலைவர்களில் சிலரும் அடங்கி இருந்தனர். மேலும் சுமார் 70 பேர் சிறை பிடிக்கப்பட்டனர். முஸ்லிம்களின் வெற்றியோடு அது நிறைவு பெற்றது.

நபி (ஸல்) அவர்கள், கொலையுண்ட அனைவரையும் அடக்கம் செய்யுமாறு பணித்தார்கள். பின்னர் மதீனாவுக்குத் திரும்பினார்கள். அங்கு கைதிகள் விடயமாக ஸஹாபாக்களுடன் கலந்தாலோசித்தார்கள். அவர்களைக் கொலை செய்யுமாறு உமர் (றழி) அவர்கள் கூற, தண்டப் பணம் பெற்று அவர்களை விடுதலை செய்யுமாறு அபூபக்ர் (றழி) அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அபூபக்ரின் ஆலோசனையை ஏற்ற நபி (ஸல்) அவர்கள், தண்டப் பணம் பெற்றுக்கொண்டு கைதிகளை விடுதலை செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனில் பத்ர் யுத்தம் தொடர்பாக பல வசனங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பின்வரும் வசனங்களைக் குறிப்பிட முடியும்:-

'பத்ர்' போரில் நீங்கள் மிகவும் பலம் குன்றியவர்களாக இருந்த போது, அல்லாஹ் உங்களுக்கு உதவி புரிந்தான். ஆகவே நீங்கள் நன்றி செலுத்துவதற்காக அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். (நபியே!) ''உங்கள் றப்பு (வானிலிருந்து) இறக்கப்பட்ட மூவாயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு உதவி செய்தது உங்களுக்குப் போதாதா?'' என்று முஃமின்களிடம் நீர் கூறினீர். ஆம்! நீங்கள் அல்லாஹ் வுக்குப் பயந்து பொறுமையுடனிருந்தால், பகைவர்கள் உங்கள் மேல் வேகமாக வந்து பாய்ந்த போதிலும், உங்கள் இறைவன் போர்க் கலை அறிந்த ஐயாயிரம் வானவர்களைக் கொண்டும் உங்களுக்கு உதவி புரிவான். உங்கள் இருதயங்கள் (அவ்வுதவியின் மூலம்) நிம்மதியடையவும், ஒரு நல்ல செய்தியாகவுமே தவிர (வேறெதற்குமாக) அல்லாஹ் அதைச் செய்யவில்லை. அல்லாஹ்விடத்திலல்லாமல் வேறு உதவியில்லை. அவன் மிக்க வல்லமையுடையவன், மிகுந்த ஞானமுடையவன். (அல்லாஹ் வுடைய உதவியின் நோக்கம்) நிராகரிப்போரில் ஒரு பகுதியி னரை அழிப்பதற்கு, அல்லது அவர்கள் சிறுமைப்பட்டுத் தோல்வியடைந் தோராய்த் திரும்பிச் செல்வதற்காகவுமேயாகும்.''
(ஸூறா ஆல இம்ரான்:123-127).

தண்டப் பணம் பெற்று கைதிகளை விடுவித்த நபி (ஸல்) அவர்களைக் கண்டித்து:-

''(விஷமங்கள் அடங்க) பூமியில் இரத்தத்தை ஓட்டாத வரையில் (விரோதிகளை உயிருடன்) சிறைப்பிடிப்பது எந்த நபிக்கும் தகுதியில்லை. நீங்கள் இவ்வுலகத்தின் (நிலையில்லா) பொருள் களை விரும்புகிறீர்கள். அல்லாஹ்வோ மறுமையில் (உங்கள் நலத்தை) நாடுகிறான். அல்லாஹ் (ஆற்றலில்) மிகைத்தோனும், ஞானமுடையோனாகவும் இருக்கின்றான். அல்லாஹ்விடம் (உங்களுடைய மன்னிப்பு) ஏற்கனவே எழுதப்படாம லிருந்தால் நீங்கள் (போர்க் கைதிகளிடம் பத்ரில் ஈட்டுப் பணத்தை) எடுத்துக் கொண்டதன் காரணமாக உங்களை ஒரு பெரிய வேதனை பிடித்திருக்கும். (ஸூறா அல் அன்பால்: 67-68).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உஹத் யுத்தம்

உஹத் யுத்தம் ஹிஜ்ரி: 3 ஷவ்வால் மாதம் 15ம் நாள் சனிக்கிழமை இடம் பெற்றது. பத்ரில் ஏற்பட்ட தோல்விக்குப் பழி தீர்க்கும் பொருட்டு குறைஷியர் மதீனா சென்று நபி (ஸல்) அவர்களோடு யுத்தம் செய்யத் தயாராகினர். குறைஷியர் தம்முடன் நேசம் கொண்டிருந்த (அஹாபீஷ் கோத்திரத்தினரைத் தவிர) கோத்திரங்களைச் சேர்ந்த 3000 பேரைத் திரட்டிக் கொண்டு மதீனாவை நோக்கிப் புறப்பட்டனர். அவர்களில் 700 கவச மணிந்த படைவீரர்கள், 200 குதிரை வீரர்கள் உட்பட 17 பெண்களும் அடங்கி இருந்தனர். பெண்கள் குழுவில் அபூஸுப்யானின் மனைவி ஹின்த் பின்த் உத்பாவும் அடங்கியிருந்தார். ஏற்கனவே அவரது தந்தை பத்ரில் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். குறைஷிப் படை மதீனாவுக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள உஹது மலைக்கு முன்னாலுள்ள பள்ளத்தாக்கை வந்தடைந்தது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை நபி (ஸல்) அவர்களும், சில ஸஹாபாக்களும் முஷ்ரிக்குகள் தாக்குதல் நடாத்தினால் அதனை மதீனாவிலிருந்தே எதிர்த்துத் தாக்குவது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். எனினும் சில இளைஞர்களும் முஹாஜிர்கள், அன்ஸாரிகள் சிலரும் -குறிப்பாக பத்ரில் கலந்துகொண்டு அதன் சிறப்பை அடைந்து கொள்ளும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்கள்- எதிரிகளை அவர்களது இடத்துக்குச் சென்று எதிர்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக நின்றனர். அவர்களது கருத்துக்காக தனது கருத்தை விட்டுக் கொடுத்த நபி (ஸல்) அவர்கள் தனது வீட்டிலே நுழைந்து கவசமணிந்து முதுகில் வில்லை செருகி, அம்பைக் கையிலெடுத்து, வாளை ஏந்தியவர்களாக முஸ்லிம்களை நோக்கி வெளியே வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தனது கருத்துக்கேற்ப செயற்படுவதற்குத் தாம் தடையாக இருந்து விட்டோமோ என யுத்தத்துக்கு வெளியே செல்வதென ஆலோசனை கூறியவர்கள் கவலைப்பட்டுக் கொண்டனர். அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் சென்று ''நாம் உங்களது கருத்துக்கு மாற்றமாக நடக்க விரும்பவில்லை. நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள். விரும்பினால் இங்கேயே தங்கிவிடுங்கள்'' எனக் கூறினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ''எந்தவொரு நபியும் யுத்தத்துக்காக கவசம் அணிந்து விட்டால், அல்லாஹ் தனக்கும் எதிரிக்குமிடையில் ஒரு தீர்ப்பை வழங்கும் வரை அதனை கீழே வைக்கக் கூடாது'' எனப் பதிலளித்தார்கள். பின்னர் 1000 போர் வீரர்களோடு வெளியேறிச் சென்றார்கள். அவர்களிடம் 100 கவசங்களும் இரண்டு குதிரைகளும் மாத்திரமே காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனாபிக்குகளின் தலைவனான அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூலின் தலைமையில் யூதர்களில் ஒரு பிரிவினர் முஸ்லிம்களோடு இணைந்து யுத்தத்துக்கு செல்ல விரும்பினர். அதை அறிந்து கொண்ட நபியவர்கள் ''அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டனரா?'' எனக் கேட்க அதற்கு ஸஹாபாக்கள் இல்லை எனப் பதிலளித்தனர். அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு பணித்த நபி (ஸல்) அவர்கள் ''நாம் இணைவைப் பாளர்களை எதிர்கொள்வதற்கு இணைவைப்பாளர்களையே துணையாக எடுத்துக் கொள்வதில்லை'' எனக் கூறினார்கள். இடைநடுவே அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் 300 முனாபிக்குகளுடன் முஸ்லிம்களிடமி ருந்து பிரிந்து சென்றான். இதன்படி முஸ்லிம்களின் தொகை 700 ஆகக் குறைந்தது.

றஸூல் (ஸல்) அவர்கள் தனது படையோடு உஹத் மலைப் பிரதேசத்தை வந்தடைந்தார்கள். தனது முதுகுப் பக்கத்தை மலைக்கும் முகத்தை முஷ்ரிக்குகளை எதிர்நோக்கியும் வைத்து படையை ஒழுங்கு படுத்தினார் கள். ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒரு தலைவரை நியமித்தார் கள். அம்பெய்யக் கூடிய 50 பேரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் அல் அன்ஸாரி (றழி) அவர்களைத் தலைவராக நியமித்தார் கள். முஷ்ரிக்குகள் முஸ்லிம்களின் பின்புறமாக வந்து சுற்றி வளைத்து தாக்கிவிடாது பாதுகாப்பதே இவர்களின் பணியாக இருந்தது.

''எதிரிகள் எமது பின்புறமாக வந்து எம்மைத் தாக்கிவிடாது நீங்கள் பாதுகாக்க வேண்டும். அவர்களை நோக்கி குறிபார்த்து அம்புகளை வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், குதிரைகள் அம்புகளுக்கு எதிர்த் திசையில் வருவதற்குத் தயக்கம் காட்டும். நீங்கள் உங்களுடைய இடங்களிலேயே நிலையாக இருக்கும்வரை நாம் அவர்களை மிகைத்திருப் போம். யா அல்லாஹ் அவர்கள் மீது உன்னையே சாட்சியாக வைக்கிறேன்'' என நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

பிறிதொரு அறிவிப்பின்படி நபி (ஸல்) அவர்கள்: ''பறவைகள் எம்மைத் தூக்கிச் செல்வதைக் கண்டாலும் கூட நான் உங்களுக்குத் தூது அனுப்பும் வரை நீங்கள் உங்களுடைய இடத்திலேயே நகராது இருந்து கொள்ளுங்கள். எதிரிகளைக் கொன்று அவர்களை மிகைத்திருப்பதை அல்லது அவர்களை வெற்றி கொண்டிருப்பதை நீங்கள் கண்டாலும் கூட நான் உங்களுக்கு செய்தி அனுப்பும் வரை தொடர்ந்தும் உங்களுடைய இடங்களிலேயே இருந்து கொள்ளுங்கள்'' எனக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் ஆரம்பமானது. அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியைக் கொடுத்தான். அவர்கள் எதிரிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினரைக் கொன்று குவித்திருந்தனர். காபிர்கள் புறமுதுகு காட்டி ஓட ஆரம்பித்தனர். எனவே முஷ்ரிக்குகளின் முகாமில் காணப்பட்ட கனீமத் பொருட்களைத் திரட்டுவதில் முஸ்லிம்கள் கவனம் செலுத்தினர்.

இதனை பின்னால் நிறுத்தப்பட்டிருந்த அம்பு வீரர்கள் அவதானித்தனர். அல்லாஹ் தனது தூதருக்கு வெற்றியை வழங்கி விட்டான். இனி நமக்கென்ன வேலை என நினைத்து, அவர்கள் தமது இடங்களை விட்டகன்று கனீமத் பொருட்களைத் திரட்ட முடிவெடுத்தார்கள். தலைவர் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் உபதேசத்தை ஞாபகப்படுத்தியபோது, போர் முடிந்துவிட்டது. குறித்த இடத்தில் இருப்ப தற்கான எத்தகைய தேவையுமில்லை என அவர்கள் அவருக்குப் பதில் கூறினர். எனினும் அப்துல்லாஹ்வும் மேலும் 10 பேரும் குறித்த இடத்திலி ருந்து நகராது இருந்தார்கள். ஏனையோர் நகர்வதைக் கண்ட முஷ்ரிக்கு களின் படைத் தலைவர் காலித் பின் வலீத் முஸ்லிம் படையின் பின்பக்க மாக வந்து கடுமையாகத் தாக்கினார்.

முஸ்லிம்கள் இதனை உணர்ந்துகொள்ள முன்னரே வாள்கள் பரிமாறப் பட்டன. படையணி குழம்பியது. நபி (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக வதந்தி பரவியது. சிலர் மதீனாவுக்குத் தப்பி ஓடினர். காபிர்களோ நபி (ஸல்) அவர்களை நெருங்கி வந்தனர். அவர்கள் எறிந்த கற்களினால் தாக்கப்பட்ட நபி (ஸல்) அவர்கள் மயக்கமுற்று முகங்குப்புற விழுந்தார் கள். அவர்களது இரு முழங்கால்களும் கீழ்ே பதிந்தன. கீழ் உதடு காயப் பட்டது. தலைக் கவசம் (Helmet) உடைந்தது. வளையங்களான கவசத்தின் (Chain-Mail) இரு வளையங்கள் நபி (ஸல்) அவர்களின் கன்னத்தில் பதிந்தன. சிலர் செய்வதறியாது கலங்கி நின்றனர்.

நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் நோக்கில் அதிகமான முஷ்ரிக்குகள் சூழ்ந்து கொண்டார்கள். ஆனால், நபியவர்களோ உறுதி யுடன் போராடினார்கள். அவர்களோடு இன்னும் சில முஃமின்களும் இணைந்து கொண்டார்கள். அபூ துஜானா (றழி) அவர்கள் முஷ்ரிக்குகளின் அம்புகள் நபி (ஸல்) அவர்களைத் தாக்காது பாதுகாப்புக் கவசமாக நின்று கொண்டார்கள். இதன் காரணமாக நிராகரிப்பாளர்களின் அம்புகள் அவர்களது முதுகைத் தாக்கின. அந்த நாளில் ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (றழி) அவர்கள், சுமார் 1000 அம்புகள் எறிந்தார்கள். நஸீபா உம்மு அம்மாரா (றழி) என்ற அன்ஸாரி ஸஹாபிப் பெண்மணி நபி (ஸல்) அவர்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பதற்காக காயப்பட்டவர் களுக்கு நீர் புகட்டும் பணியை விட்டு விட்டு, வாளேந்திப் போராடவும் அம்பெய்யவும் ஆரம்பித்தார்கள்.

இறுதியில் கழுத்தில் கடுமையாகக் காயப்பட்டார்கள். அவருடன் அவர் கணவரும் இரண்டு புதல்வர்களும் களத்தில் இருந்தனர். அவர்களைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் ''அஹ்லுல் பைத்தினரே, உங்களுக்கு அல்லாஹ் அருள்பாலிக்கட்டும்'' என்றார்கள். இதைக் கேட்ட நஸீபா, நபி (ஸல்) அவர்களிடம் ''சுவனத்தில் உங்களோடு இருப்பதற்கு அல்லாஹ் விடத்தில் பிரார்த்தனை புரியுங்கள்'' என்றார்கள். எனவே, நபிகளாரும் ''யாஅல்லாஹ் சுவனத்திலே என்னுடன் இருக்கக் கூடிய தோழர்களாக இவர்களை ஆக்கியருள்வாயாக'' என நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார் கள். இதைக் கேட்ட அந்த ஸஹாபிப் பெண்மணி ''உலகில் ஏற்படுகின்ற எத்தகைய துன்பத்தையும் நான் பொருட்படுத்த வில்லை'' எனக் குறிப்பிட்டார்.

குறித்த பெண்மணி தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் ''உஹத் யுத்தம் இடம்பெற்ற தினத்தில் நான் வலப்புறமாக திரும்புகின்றபோதும் இடப் புறமாகத் திரும்புகின்ற போதும் என்னைப் பாதுகாப்பதற்காக அந்தப் பெண்மணி போராடிக் கொண்டிருப்பதையே நான் கண்டேன்'' எனக் குறிப்பிட்டார்கள். அந்நாளில் அம்பு குத்தியும் வாள் வெட்டியும் 12 காயங்கள் ஏற்பட்டிருந்தன.

கஷ்டமான அச்சந்தர்ப்பத்தில் உபை இப்னு கலப் நபி (ஸல்) அவர் களைக் கொலை செய்யும் நோக்கில் நெருங்க முயற்சித்தான். இம்முயற்சி யிலிருந்து தான் பின்வாங்கப் போவதில்லையென சத்தியமும் செய்தான். நபி (ஸல்) அவர்கள் தன்னுடனிருந்த ஒருவரிடமிருந்து அம்பொன்றைப் பெற்று அவனுடைய குரல்வளையைக் குறிபார்த்துத் தாக்கினார்கள். இதன் காரணமாக அவன் கொலை செய்யப்பட்டான். நபி (ஸல்) அவர்கள் அனைத்து யுத்தங்களிலும் கொலை செய்த ஒரேயொரு முஷ்ரிக் இவன் தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பின்னர் தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் (றழி) அவர்களின் புயங்களில் நபியவர்கள் எழுந்து நின்றார்கள். முஷ்ரிக்குகளை அவதானித்த நபி (ஸல்) அவர்கள் மலை உச்சியில் ஒரு பிரிவினர் இருப்பதைக் கண்டார்கள். அவர்களைக் கீழே இறக்குவதற்கு சில படை வீரர்களை அனுப்பிவிட்டு, ''அவர்கள் எங்களை விட உயர்வாக இருக்கக் கூடாது. யாஅல்லாஹ் உன் மூலம் மாத்திரமே நாங்கள் பலம் பெறுகிறோம்'' எனக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் முடிவடைந்தது. அபூ ஸுப்யான், தானும் ஏனைய முஷ்ரிக்கு களும் பத்ரில் அடைந்த தோல்வியிலிருந்து மீட்சியடைந்ததை வெளிப் படுத்தும் வகையில் ''பத்ருடைய தினத்துக்குப் பகரமாக இன்னுமொரு நாள்'' எனக் கூறினார்.

இந்த யுத்தத்தில் கொலை செய்யப்பட்டவர்களுள் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையான ஹம்ஸா (றழி) அவர்களும் அடங்குவார். அபூ ஸுப்யா னின் மனைவி ஹின்த், ஹம்ஸாவின் உடலை பயங்கரமாக சிதைத்து அவர்களது ஈரலை எடுத்து மென்றாள். கசப்பாக இருந்ததை உணர்ந்த அவள் அதனைத் துப்பி விட்டாள். இக்காட்சியைக் கண்ட நபி (ஸல்) அவர் கள் ஆழ்ந்த கவலையடைந்து பின்வருமாறு கூறினார்கள். ''குறைஷியருக்கு எதிரான இன்னுமொரு யுத்தத்தில் அல்லாஹ் எனக்கு வெற்றியளித்தால் நிச்சயம் அவர்களில் 30 பேரை இவ்வாறு சிதைப்பேன்'' என்றார்கள். எனினும் அல்லாஹ் இவ்வாறு சிதைப்பதை பின்னர் தடை செய்தான்.

இந்த யுத்ததில் முஸ்லிம்களின் தரப்பில் சுமார் 70 பேர் ஷஹீதாக்கப் பட்டார்கள். முஷ்ரிக்குகளின் தரப்பில் 23 பேர் கொலை செய்யப் பட்டார்கள்.

இப்போராட்டத்தில் முஃமின்களின் தோல்விக்கான காரணம் குறித்து அல்லாஹ் பல வசனங்களை இறக்கி வைத்தான்.

> ''எனவே நீங்கள் தைரியத்தை இழக்காதீர்கள். கவலை கொள்ளாதீர்கள். நீங்கள் முஃமின்களாக இருந்தால் நீங்கள் தாம் உன்னதமானவர்களாக இருப்பீர்கள். உங்க்ளுக்கு காயம் ஏற்பட்டது என்றால், அதேபோல மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய (சோதனைக்) காலங்களை மனிதர்களிடையே நாமே மாறி மாறி வரச் செய்கின்றோம். இதற்குக் காரணம், ஈமான் கொண் டோரை அல்லாஹ் அறிவதற்கும், உங்களில் உயிர்த் தியாகம் செய்வோரை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குமே ஆகும். இன்னும், அல்லாஹ் அநியாயம் செய்வோரை நேசிப்பதில்லை. நம்பிக்கை கொண்டோரை பரிசுத்தமாக்குவதற்கும், காஃபிர்களை அழிப்பதற் கும் அல்லாஹ் இவ்வாறு செய்கின்றான். உங்களில் (அல்லாஹ் வின் பாதையில் உறுதியாகப்) போர் புரிபவர்கள் யார் என்றும், (அக்காலை) பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள் யார் என்றும் அல்லாஹ் (பரிசோதித்து) அறியாமல் நீங்கள் சுவனபதியில் நுழைந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றீர்களா?
> *(ஸூறா ஆல இம்ரான் : 139-142)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"இன்னும் அல்லாஹ் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறை வேற்றித் தந்தான். (அவ்வமயம் உஹதுக் களத்தில்) பகைவர்களை அவன் அனுமதியின் பிரகாரம் நீங்கள் அழித்து விடும் நிலையில் இருந்தபோது நீங்கள் தயங்கினீர்கள். நீங்கள் (உங்களுக்கிடப்பட்ட) உத்தரவு பற்றித் தர்க்கிக்கத் துவங்கினீர்கள். நீங்கள் விரும்பிய (வெற்றியை) அவன் உங்களுக்குக் காட்டிய பின்னரும் நீங்கள் அந்த உத்தரவுக்கு மாறு செய்யலானீர்கள். உங்களில் இவ்வுலகை விரும்பு வோரும் இருக்கிறார்கள். இன்னும் உங்களில் மறுமையை விரும்பு வோரும் இருக்கிறார்கள். பின்னர், உங்களைச் சோதிப்பதற்காக அவ்வெதிரிகளைவிட்டு உங்களைப் பின்னடையுமாறு திருப்பினான். நிச்சயமாக அவன் உங்களை மன்னித்தான். மேலும் அல்லாஹ் முஃமின்க்ளிடம் அருள் பொழிவோனா கவே இருக்கின்றான். (நினைவு கூருங்கள்! உஹத் களத்தில்) உங்கள் பின்னால் இருந்து இறைதூதர் உங்களை அழைத்துக் கொண்டிருக்க, நீங்கள் எவரையும் திரும்பிப் பார்க்காமல் மேட்டின்மேல் ஏறிக்கொள்ள ஓடிக் கொண்டி ருந்தீர்கள். ஆகவே (இவ்வாறு இறை தூதருக்கு நீங்கள் கொடுத்த துக்கத்தின்) பலனாக இறைவன் துக்கத்தின்மேல் துக்கத்தை உங்களுக்குக் கொடுத்தான். ஏனெனில் உங்களுக்குக் கிடைக்க வேண்டியது தவறி விட்டாலோ, உங்களுக்குச் சோதனைகள் ஏற்பட் டாலோ நீங்கள் (சோர்வும்) கவலையும் அடையாது (பொறுமை யுடன் இருக்க வேண்டும் என்பதற் காகத்தான்). இன்னும், அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிபவனாக இருக்கின்றான். (ஸூறா ஆலஇம்ரான் : 152-153)*

### 3. பனூ நுழைர் யுத்தம்

மதீனாவுக்குப் பக்கத்தில் வாழ்ந்த யூதர்களில் ஒரு பிரிவினரான இவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தினரோடு நெருங்கிய உறவைப் பேணி வந்தார்கள். ஏற்கனவே குறிப்பிட்டது போல முஸ்லிம்களுக்கும் இவர் களுக்கும் இடையில் சமாதானத்திற்கும், பரஸ்பர ஒத்துழைப்பிற்கு மான ஒரு உடன்பாடு காணப்பட்டது. என்றாலும் யூதர்களின் இயல்புடன் கலந்திருந்த தீமை செய்தல், ஏமாற்றுதல் போன்ற தீயகுணங்கள் இந்த உடன்படிக்கையை முறிப்பதற்கு அவர்களைத் தூண்டியது.

றஸூல் (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களில் சிலரும் பனூ நுழைரில் அவர்களது வீடொன்றின் கூரைச் சுவரிலே சாய்ந்திருந்தார்கள். அவ்வேளை குறித்த வீட்டின் கூரையிலிருந்து ஒரு பாராங்கல்லை நபி (ஸல்) அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது உருட்டி அவர்களைக் கொலை செய்து விட சூழ்ச்சி செய்தார்கள். இதனை அறிந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு தேவையை நிறைவேற்ற எத்தனிப்பதுபோல் விரைவாக அங்கிருந்து எழுந்து மதீனாவை நோக்கி நடந்தார்கள். ஸஹாபாக்களும் நபி (ஸல்) அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் முஹம்மத் பின் மஸ்லமாவை யூதர்களிடம் அனுப்பி, அவர்களது ஏமாற்றும் முயற்சி குறித்து விளக்கி, அந்த பிரதேசத்தில் அவர்கள் தொடர்ந்தும் வாழக் கூடாது எனவும், அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட வேண்டும் எனவும் கட்டளையிட்டார்கள். இதற்கென அவர்களுக்கு பத்து நாட்கள் கால அவகாசம் கொடுத்தார்கள்.

எனினும் பனூ நுழைர் கோத்திரத்தினர் குறித்த பிரதேசத்தில் இருந்து வெளியேறத் தயாராகினார்கள். முனாபிக்குகளின் தலைவனான அப்துல்லாஹ் இப்னு உபை, அவர்களை வெளியேற வேண்டாம் எனவும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவென தனது சமூகத்திலிருந்து இரண்டாயிரம் பேரை அனுப்புவதாகவும் வாக்குறுதியளித்து தூதனுப்பினான். எனவே, அவர்களும் தமது கருத்தை மாற்றி, தத்தமது அரண்களி லேயே பாதுகாப்பாக இருப்பதென முடிவு செய்தார்கள். ''நாம் எமது வாழ்விடங்களிலிருந்து வெளியேறிச் செல்லப்போவதில்லை, நீங்கள் நாடியதைச் செய்யுங்கள்'' என அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குத் தூதனுப்பினார்கள்.

இதன் விளைவாக நபி (ஸல்) அவர்கள், தமது ஸஹாபா படையோடு யூதர்களை நோக்கி நகர்ந்தார்கள். அலி இப்னு அபீ தாலிப் (றழி) அவர்கள் முஸ்லிம் படையின் கொடியை ஏந்தியிருந்தார்கள். இதனைக் கண்ட யூதர்கள் அம்பு, கல் முதலான ஆயுதங்களைப் பயன்படுத்தி முஸ்லிம்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். ஆனால் முனாபிக்குகளின் தலைவன் வாக்குறுதி யளித்த படை உதவி அவர்களை வந்தடையவில்லை.

நபி (ஸல்) அவர்கள், அவர்கள் முற்றுகையைத் தொடர்ந்தார்கள். அவர்களது ஈத்த(ம் பழ) மரங்களை வெட்டி விட நபி (ஸல்) அவர்கள் நிர்ப்பந்திக்கப்படும் வரை அவர்களும் உறுதியாக இருந்தார்கள். பின்னர் ''நாங்கள் உங்களுடைய நாட்டில் இருந்து வெளியேறிச் சென்று விடுகிறோம் என அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது அவர்கள் ஆயுதங்கள் எதனையும் எடுத்துச் செல்லக் கூடாது எனவும், ஒட்டகம் சுமக்கும் அளவு செல்வங்களை மாத்திரமே தம்மோடு எடுத்துச் செல்ல முடியும் எனவும் நபி (ஸல்) அவர்கள் நிபந்தனை விதித்தார்கள்; ஒரு துளி இரத்தம் கூட சிந்தப்பட மாட்டாது'' என உறுதியளித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறி விடுவதென்ற முடிவுக்கு வந்த அவர்கள், தம்மால் இயன் றளவு பொருட்களை எடுத்துக் கொண்டு நகர ஆரம்பித்தார்கள். முஸ்லிம் கள் பயன்படுத்திவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் தமது வீடுகளை அழித்து விட்டார்கள். அவர்களில் சிலர் மதீனாவுக்கு நூறு மைல் தொலை விலுள்ள கைபர் பிரதேசத்திலும், மேலும் சிலர் ஷாமுக்கு தெற்கேயுள்ள ஜரஷ் பகுதியிலும் குடியேறினார்கள். அவர்களில் இருவர் மாத்திரம் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

இந்த யுத்தம் குறித்து ஸூறா அல் ஹஷ்ர் இறக்கப்பட்டது. இந்த ஸூறாவில் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

"வேதத்தை உடையோரில் எவர்கள் நிராகரித்துக் கொண்டிருந் தனரோ, அவர்களை அவர்களுடைய வீடுகளிலிருந்து முதல் வெளி யேற்றத்தில் வெளியேற்றியவன் அவனே, எனினும் அவர்கள் வெளி யேறுவார்கள் என்று நீங்கள் நினைக்கவில்லை. அவர்களும், தங்களுடைய கோட்டைகள் நிச்சயமாக அல்லாஹ்வை விட்டும் தங்களைத் தடுத்துக் கொள்பவை என்று நினைத்தார்கள். ஆனால், அவர்கள் எண்ணியிராத விதத்தில் அவர்கள்பால் அல்லாஹ் (வேதனையைக் கொண்டு) வந்து அவர்களுடைய இதயங்களில் பீதியையும் போட்டான். அன்றியும் அவர்கள் தம் கைகளாலும் முஃமின்களின் கைகளாலும் தம் வீடுகளை அழித்துக் கொண்டனர். எனவே அகப்பார்வையுடையோரே! நீங்கள் (இதிலிருந்து) படிப் பினை பெறுவீர்களாக. தவிரவும், அவர்கள் மீது வெளியேறுகையை அல்லாஹ் விதிக்காதிருந்தால், இவ்வுலகிலேயே அவர்களைக் கடினமாக வேதனை செய்திருப்பான். இன்னும் அவர்களுக்கு மறுமையிலும் (நரக) நெருப்பின் வேதனை உண்டு. அதற்கு(க் காரணம்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் விரோதம் செய்தார்கள். அன்றியும், எவன் அல்லாஹ் வை விரோதிக்கின்றானோ, (அவனை) நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் கடினமானவன். (ஸூறா அல் ஹஷ்ர்: 2-4)

### 4. அஹ்ஸாப் போராட்டம்

ஹிஜ்ரி 5 ஷவ்வால் மாதம் இடம்பெற்ற இந்த யுத்தம் கந்தக் போர் எனவும் அழைக்கப்படுகிறது. இதன் பின்னணியாவது, பனூ நுழைர் கோத்திரத்தினர் நாடு கடத்தப்பட்ட பின்னர் அவர்களின் சில தலைவர்கள் மக்காவிலுள்ள குறைஷிகளிடம் வந்து, நபி (ஸல்) அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிடுமாறு வேண்டுகோள் விடுத்து ஊக்கமளித்தனர். குறைஷியர் இதற்கு சாதகமான பதிலை வழங்கியதையடுத்து அந்த யூதத் தலைவர்கள் அத்பான் கோத்திரத்தினரிடம் சென்றனர். அவர்களில் பனூ பதாரா, பனூ முர்ரா என்ற இரு பிரிவினரும் அவர்களுக்கு சாதகமாகப் பதிலளித்தனர்.

எனவே அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிக உற்சாகத்தோடு மதீனாவை நோக்கிப் படைநடத்தினர். இதனைக் கேள்வியுற்ற நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களோடு கலந்தாலோசித்தபோது ஸல்மான் (றழி) அவர்கள் மதீனாவைச் சூழ அகழி வெட்டுமாறு ஆலோசனை வழங்கி னார்கள். இதனை ஏற்ற நபி (ஸல்) அவர்கள் அகழி வெட்டும் பணியில் ஈடுபடுமாறு ஸஹாபாக்களுக்கு கட்டளையிட்டதோடு தாமும் அப்பணி யில் இணைந்து கொண்டார்கள்.

குறைஷிகளும் அவர்களது சகாக்களும் மதீனாவை வந்தடைந்ததும் தமக்கு முன்னால் அகழி வெட்டப்பட்டிருப் பதைக் கண்டு பீதியடைந் தனர். ஏனெனில் அறபிகளைப் பொறுத்தவரை இந்நடவடிக்கை புதுமை யானதாகவே இருந்தது. போருக்கு வந்த காபிர்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகவும் முஸ்லிம் போராளிகளின் எண்ணிக்கை சுமார் 3,000 ஆகவும் காணப்பட்டது.

குறைஷிகளையும் ஏனைய பிரிவினர்களையும் முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் புரியுமாறு ஊக்குவித்த முக்கியமானவர்களுள் ஹுயை இப்னு அஹ்தப் என்ற யூதனும் ஒருவனாவான். அவன் பனூ குறைழாக்களின் தலைவரான கஃப் இப்னு அஸதிடம் சென்று முஸ்லிம்களுடன் அவர்கள் செய்துகொண்டிருந்த சமாதான உடன்படிக்கையை முறித்துக் கொள்ளு மாறு வேண்டினான். நபி (ஸல்) அவர்கள் மதீனாவின் விளைபொருட்க ளில் மூன்றில் ஒரு பங்கினை பனூ குறைழாக்களுக்கு வழங்கி அவர் களோடு சமரசம் செய்து கொள்வது நல்லதெனச் சிந்தித்தார்கள். ஆனால் கொள்கையில் மிக உறுதியுடன் இருந்த அன்சாரிகள் வாக்குறுதிகளையும் உடன்படிக்கைகளையும் மதிக்கத் தவறும் இவர்களோடு சமரசம் செய்து கொள்வதை மறுத்துரைத்தார்கள்.

காபிர்களின் குதிரை வீரர்களில் சிலர் அகழியின் ஒரு புறத்தே காணப் பட்ட ஒடுக்கமானதொரு இடத்தைப் பயன்படுத்தி உட்புகவே யுத்தம் ஆரம்பமானது. முஸ்லிம்களும் அவர்களோடு போரிட்டனர். பிறகு நுஐம் இப்னு மஸ்ஊத் இப்னு ஆமிர் என்பவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டதாகவும் தனது கூட்டத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அறிய மாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார். மேலும், தான் பனூ குறைழாக்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருவதால் அவர்கள் தன்மீது உறுதியான நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருப்பதாக வும் கூறி, தான் விரும்பும் வகையில் தனக்குக் கட்டளையிடுமாறு நபி (ஸல்) அவர்களிடம் வேண்டிக் கொண்டார்.

அதற்கிணங்க நபி (ஸல்) அவர்கள் ''நீங்கள் எங்களில் ஒருவராக இருக்கின்றீர்கள். உங்களுக்கு முடியுமாயின் அவர்களை ஏமாற்றிவிடுங்கள். ஏனெனில் யுத்தம் என்பது ஏமாற்றுவதுதான்'' எனக் குறிப்பிட்டார்கள். நுஐம் தனது அறிவுக் கூர்மையைப் பயன்படுத்தி குறைஷிகள், அவர்களின் நேசர்களுக்கிடையேயும் பனூ குறைழாக்களுக்கிடையேயும் பிளவை ஏற்படுத்தி விட்டார். இரண்டு பிரிவினர்களது உள்ளங்களிலும் அடுத்த பிரிவினர் பற்றிய சந்தேகங்களை விதைத்து விட்டார்.

கடுமையான குளிரடித்த மாரி கால இரவொன்றில் அல்லாஹ் அவர் களின் மீது பலமானதொரு காற்றை அனுப்பி விட்டான். இதன் காரணமாக அவர்களது தீப்பந்தங்கள் அணைந்து போனதுடன் முகாம்களும் அழிந்து போயின. இதனால் அவர்களது உள்ளங்களில் அச்சம் ஆட்கொண்டு விட குறித்த இரவிலேயே அவர்கள் வெளியேறி விட்டார்கள். முஸ்லிம்கள் காலை யில் எழுந்தபோது அவர்களில் எவரையும் அங்கு காண முடியவில்லை.

இந்த யுத்தம் தொடர்பாக அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

''முஃமின்களே! உங்கள் மீதும் அல்லாஹ் புரிந்திருக்கும் அருட் கொடையை நினைத்துப் பாருங்கள். உங்களிடம் (எதிரிகளின்) படைகள் வந்தபோது (புயல்) காற்றையும், நீங்கள் (கண்களால்) பார்க்கவியலா (வானவர்களின்) படைகளையும் அவர்கள் மீது நாம் ஏவினோம். மேலும், நீங்கள் செய்வதை அல்லாஹ் உற்று நோக்கு பவனாக இருக்கிறான். உங்களுக்கு மேலிருந்தும், உங்களுக்குக் கீழிருந்தும் அவர்கள் உங்களிடம் (படையெடுத்து) வந்த போது, (உங்களுடைய) இருதயங்கள் தொண்டை(க் குழி முடிச்சு) களை அடைந்து (திணறி) அல்லாஹ்வைப் பற்றி பலவாறான எண்ணங் களை எண்ணிக் கொண்டிருந்த சமயம் (அல்லாஹ் உங்களுக்கு செய்த அருட்கொடையை) நினைவுகூருங்கள். அவ்விடத்தில் முஃமின்கள் (பெருஞ்) சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு, இன்னும் கடுமையாக அதிர்ச்சியடையச் செய்யப்பட்டார்கள்.''

*(ஸூறா அல் அஹ்ஸாப்: 9-11)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நயவஞ்சகர்களின் நிலைப்பாட்டையும் அவர்கள் யுத்தத்தில் இழிவடைந்து பின் வாங்கிச் சென்றதையும் விளக்கிவிட்டு, முஃமின்கள் குறித்து பின்வருமாறு வர்ணிக்கின்றான்.

''அன்றியும், முஃமின்கள் எதிரிகளின் கூட்டுப் படைகளைக் கண்ட போது, ''இதுதான், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எங்களுக்கு வாக்க ளித்தது; அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையே உரைத்தார்கள்'' என்று கூறினார்கள். இன்னும் அது அவர்களுடைய ஈமானையும், (இறைவ னுக்கு) முற்றிலும் வழிபடுவதையும் அதிகப்படுத்தாமல் இல்லை.

முஃமின்கள் அல்லாஹ்விடம் அவர்கள் செய்துள்ள வாக்குறுதியில் உண்மையாக நடந்து கொண்டார்கள். அவர்களில் சிலர் (ஷஹீதாக வேண் டும் என்ற) தம் இலட்சியத்தையும் அடைந்தார்கள். வேறு சிலர் (ஆர்வத் துடன் அதை) எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்- (எந்த நிலைமை யிலும்) அவர்கள் தங்கள் வாக்குறுதியிலிருந்து சிறிதும் மாறுபடவில்லை.

உண்மையாளர்களுக்கு அவர்களின் உண்மைக்குரிய கூலியை அல்லாஹ் திடமாக அளிப்பான். அவன் நாடினால் முனாஃபிக்குகளை வேதனையும் செய்வான், அல்லது அவர்களை மன்னிப்பான் - நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன்; மிக்க கிருபையுடையவன்.

நிராகரிப்பவர்களை தங்களுடைய கோபத்தில் (மூழ்கிக்கிடக்குமாறே அல்லாஹ் அவர்களைத் திருப்பிவிட்டான் (ஆதலால் இந்தப் போரில்) அவர்கள் ஒரு நன்மையையும் அடையவில்லை, மேலும் போரில் முஃமின் களுக்கு அல்லாஹ் போதுமானவன், மேலும் அல்லாஹ் பேராற்றலுடைய வன் (யாவரையும்) மிகைத்தவன்.'' (ஸூறா அல் அஹ்ஸாப்: 22 - 25).

## 5. பனூ குறைழாக்களுக்கு எதிரான போராட்டம்

அஹ்ஸாப் யுத்தத்தைத் தொடர்ந்து ஹிஜ்ரி 5ம் ஆண்டு இந்த யுத்தம் இடம்பெற்றது. பனூ குறைழா யூதர்களின் உள்ளங்களில் உறைந்து போயிருந்த ஏமாற்றுகின்ற மனோபாவம், முஸ்லிம்களுக்கு எதிராக குறைஷிகளுடனும் அவர்களது நேசர்களுடனும் கூட்டுச் சேர்கின்ற நிலைப்பாடு போன்றவற்றை நபி (ஸல்) அவர்கள் அறிந்து கொண்டார்கள். இதேவேளை அஹ்ஸாப் போராட்டம் உக்கிரமாக இடம்பெற்றுக் கொண்டி ருந்தபோது அவர்கள் நபி (ஸல்) அவர்களோடு தாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொள்வதாகவும் அறிவித்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதீனாவில் றஸூல் (ஸல்) அவர்களோடும் முஸ்லிம்களோடும் கலந்து வாழ்ந்த இவர்கள், அஹ்ஸாப் போராட்டத்தின் முடிவு முஸ்லிம்களுக்கு சார்பாக அமைந்திருக்காவிட்டால், முஸ்லிம்கள் அனைவரையும் தீர்த்துக் கட்டிவிடுகின்ற வகையில் ஒரு மிகப்பெரும் அத்துமீறலை முஸ்லிம்களுக் கெதிராக மேற்கொள்ள அவர்கள் முயற்சித்திருப்பார்கள் என்பதை நபி (ஸல்) அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

எனவே, நபி (ஸல்) அவர்கள் இந்த ஏமாற்றுக்காரர்களுக்கு பாடம் புகட்டி தனது தஃவாவினதும், ஜிஹாதினதும் மைய இடமாக விளங்கிய மதீனாவை அவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டார்கள். ஏனெனில், இதன் பின்னர் இத் தகையதொரு சந்தர்ப்பம் அவர்களுக்கு கிட்டிவிட்டால் நிச்சயம் தம்மோடு வாழ்கின்ற முஸ்லிம்களை அழித்து விடுவார்கள். இதுவே சபிக்கப்பட்ட ஏமாற்றுக்கார யூத சமூகத்தின் இயல்பாக இருந்து வந்துள்ளது.

ஆயிஷா (றழி) அறிவிக்கிறார்கள்: ''நபி (ஸல்) அவர்கள், கந்தக் (அஹ்ஸாப்) போராட்டம் முடிந்து திரும்பி வந்து ஆயுதங்களைக் களைந்து விட்டு குளித்துக் கொண்டார்கள். அவ்வேளை ஜிப்ரீல் (அலை) அவர்கள் தலையில் தூசு படிந்தவர்களாக நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'ஆயுதங் களை கீழே வைத்து விட்டீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக நீங்கள் ஆயுதங்களை கீழே வைக்கக்கூடாது' எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் எங்கே? என வினவியபோது, அதற்கு ஜிப்ரீல் (அலை): இதோ இங்கே எனக் கூறி பனூ குறைழாக்களைச் சுட்டிக் காட்டினார்கள். எனவே றஸூல் (ஸல்) உடனடியாக அவர்களை நோக்கி வெளியேறிச் சென் றார்கள்.'' (நூல்: புகாரி)

பனூ குறைழாக்களிடம் சென்ற பிறகே அஸர் தொழுகையை அனை வரும் நிறைவேற்ற வேண்டுமெனக் கட்டளையிடுமாறு அழைப்பாளரைப் பணித்த நபி (ஸல்) அவர்கள், ஸஹாபாக்களோடு வெளியேறிச் சென்றார் கள். 3000 பேரைக் கொண்ட முஸ்லிம் படையின் கொடியை அலி (றழி) அவர்கள் ஏந்தியிருந்தார்கள். அவர்களிடம் 36 குதிரைகள் காணப்பட்டன. அலி (றழி) அவர்கள் பனூ குறைழாக்களின் கோட்டையை நெருங்கிய போது அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் பற்றியும் அவர்களுடைய மனைவிமார்களைப் பற்றியும் மிக மோசமாகக் கதைத்துக் கொண்டிருப் பதை செவிமடுத்தார்கள். இதனை நபி (ஸல்) அவர்களிடம் கூறிய அலி (றழி), இந்த அசுத்தமானவர்களை நெருங்கிவிட வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு நபி (ஸல்) அவர்கள் தன்னை அவர்கள் கண்டால், அவர்களிடம் காணப்படுகின்ற நயவஞ்சகத்தனத்தின் காரணமாக, இவ்வாறு எதையுமே கதைக்க மாட்டார்கள் எனப் பதில் கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் ஏலவே குறிப்பிட்டதுபோல அவர்கள் நபி (ஸல்) அவர்களைக் கண்டதும் அவர்களோடு இரக்கமாக நடந்து கொண்டார்கள்.

முஸ்லிம்கள் பனூ குறைழாக்களை 25 தினங்கள் முற்றுகையிட்டிருந்தார்கள். பின்னர் அவர்கள் தமது இயலாமையை உணர்ந்து நபி (ஸல்) அவர்களின் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதாக உடன்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராக இருந்த ஸஃத் பின் முஆத் (றழி) அவர்களிடம் இவர்கள் தொடர்பான தீர்ப்பை வழங்கும் பணியை ஒப்படைத்தார்கள். பனூ குறைழாக்கள் அவ்ஸ் கோத்திரத்தினருடன் மிக நெருங்கிய நட்புணர்வைப் பேணி வந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இதனடிப்படையில் ஸஃத் (றழி) அவர்கள், முஸ்லிம்களுடன் போரிட வந்தவர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களது கண்காணிப்பின் கீழ் உள்ளவர்கள் நாடு கடத்தப்பட வேண்டும் எனவும் அவர்களது செல்வங்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கினார்கள். இத்தீர்ப்பை நபி (ஸல்) அவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள். இதன் மூலம் நபி (ஸல்) அவர்கள், தமக்கும் தமது தஃவாவுக்கும் எதிராக மதீனாவிலும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களிலும் யூதர்கள் மேற்கொண்டு வந்த சூழ்ச்சிகளை முழுமையாக அழித்தொழித்தார்கள்.

இந்த யுத்தம் தொடர்பாக பல அல்குர்ஆன் வசனங்கள் இறங்கின. அவை யூதர்களிடம் காணப்பட்ட ஏமாற்றுதல், உடன்படிக்கைகளை முறித்தல் போன்ற மோசமான பண்புகளை விளக்கிக் காட்டுவதோடு அஹ்ஸாப் போராட்டத்தில் முஸ்லிம் படையணிக்கு முன்னால் அவர்கள் அடைந்த இழிவையும் சுட்டிக் காட்டுகின்றன.

''மேலும், அவர்களில் ஒரு கூட்டத்தார் (மதீனாவாசிகளை நோக்கி) ''யத்ரிப் வாசிகளே! (பகைவர்களை எதிர்த்து) உங்களால் உறுதியாக நிற்க முடியாது, ஆதலால் நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள்'' என்று கூறியபோது, அவர்களில் (மற்றும்) ஒரு பிரிவினர். ''நிச்சயமாக எங்களுடைய வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன'' என்று -அவை பாதுகாப்பற்றதாக இல்லாத நிலையிலும் -கூறி, (போர்க்களத்திலிருந்து சென்றுவிட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்களிம் அனுமதி கோரினார்கள்- இவர்கள் (போர்க் களத்திலிருந்து தப்பி) ஓடுவதைத் தவிர (வேறெதையும்) நாட வில்லை. அதன் பல பாகங்களிலிருந்தும் அவர்கள் மீது படைகள் புகுத்தப்பட்டு, குழப்பம் செய்யும்படி அவர்களிடம் கேட்கப்பட்டி ருக்குமானால், நிச்சயமாக அவர்கள் (அதை ஏற்று அவ்வாறே) செய்து இருப்பார்கள். அதை (குழப்பத்தை) சிறிது நேரமே தவிர தாமதப்படுத்த மாட்டார்கள். எனினும், அவர்கள் (போரிலிருந்து) புறங்காட்டி ஓடுவதில்லை என்று அல்லாஹ்விடத்தில் இதற்கு முன்னர் நிச்சயமாக வாக்குறுதி செய்திருந்தார்கள். ஆகவே, அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதி பற்றி (அவர்களிடம்) கேட்கப் படும். "மரணத்தை விட்டோ அல்லது கொல்லப்படுவதை விட்டோ, நீங்கள் விரண்டோடினீர்களாயின், அவ்வாறு விரண்டு ஓடுவது உங்களுக்கு யாதொரு பயனும் அளிக்காது -அதுசமயம் வெகுசொற்ப மேயன்றி (அதிக) சுகம் அனுபவிக்க மாட்டீர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக. *(ஸூறா அல் அஹ்ஸாப்: 13-16)*

இன்னும், வேதக்காரர்களிலிருந்தும் (பகைவர்களுக்கு) உதவி புரிந்தார் களே அவர்களை (அல்லாஹ்) அவர்களுடைய கோட்டை களிலிருந்து கீழே இறக்கி, அவர்களின் இருதயங்களில் திகிலைப் போட்டுவிட்டான். (அவர்களில்) ஒரு பிரிவினரை நீங்கள் கொன்று விட்டீர்கள். இன்னும் ஒரு பிரிவினரைச் சிறைப்பிடித்தீர்கள். இன்னும், அவன் உங்களை அவர்களுடைய நிலங்களுக்கும், அவர்களுடைய வீடுகளுக்கும், அவர்களுடைய பொருள்களுக்கும், (இது வரையில்) நீங்கள் மிதித்திராத நிலப்பரப்புக்கும் வாரிசுகளாக ஆக்கி விட்டான். மேலும் அல்லாஹ் எல்லாப் பொருட்கள் மீதும் சக்தியுடையவன். *(ஸூறா அல் அஹ்ஸாப்: 26-27)*

### 06. ஹுதைபியா போராட்டம்

இந்நிகழ்வு ஹிஜ்ரி 6ம் ஆண்டு துல்கஃதா மாதம் இடம்பெற்றது. நபி (ஸல்) அவர்கள், தானும் ஏனைய ஸஹாபாக்களும் தலைமுடிகளை சிரைத்தவர்களாகவும் கட்டையாக்கியவர்களாகவும் மக்காவிலுள்ள புனித கஃபாவிற்குள் அச்சமின்றி பாதுகாப்பாக நுழைவதை கனவில் கண்டார்கள்.

எனவே, உம்றா செய்வதற்காக மக்கா செல்லத் தயாராகுமாறு மக்களை அழைத்தார்கள். இதில் குறைஷியருடன் போராடுகின்ற நோக்கமெதுவும் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 6 வருடங்களாக புனித கஃபாவை தரிசிக்கும் சந்தர்ப்பம் கிட்டாத முஹாஜிரீன்களும் அன்ஸாரிகளும் அவ்வில்லத்தைக் காண வேண்டும் என்ற பேரார்வத்தோடு நபி (ஸல்) அவர்களுடன் மக்காவை நோக்கி வெளியேறிச் சென்றார்கள். அவர்களுடன் சில நாட்டுப்புற அறபிகளும் இணைந்து கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் கஃபாவை கண்ணியப் படுத்துவதற்காக வழமையாக கொண்டு செல்லப்படும் ஆடு, ஒட்டகை களையும் தமக்கு முன்னால் ஓட்டிச் சென்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள், தாம் யுத்தத்திற்காக வரவில்லை என்பதை மக்க ளுக்கு -குறிப்பாக குறைஷியர்களுக்கு உணர்த்துவதற்காக துல் ஹுலைபா என்ற இடத்தில் உம்றாவிற்கான இஹ்ராமை கட்டிக் கொண்டார்கள். சுமார் 1500 பேர் நபி (ஸல்) அவர்களுடன் வந்திருந்தார்கள்.

அக்காலத்தில் பயணிகள் தமது தற்காப்புக்கென எடுத்துச் செல்லும் உறையிலிடப்பட்ட வாள்களை மாத்திரமே அவர்களும் எடுத்துச் சென்றி ருந்தனர். 'அஸ்பான்' என்ற இடத்தை வந்தடைந்த நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து ''உங்களது வருகையைக் கேள்விப்பட்ட குறைஷியர் உங்களை தமது பிரதேசத்தில் நுழைவதை தடுத்துவிடும் நோக்கில் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தவர்களாக புலித்தோலணிந்து வெளியேறியுள்ளார்கள்'' எனக் கூறினார். இதைக் கேட்ட நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

''குறைஷியருக்கு கேடு உண்டாகட்டும். யுத்தம் அவர்களை நாசமாக்கி விட்டது. எனக்கும் ஏனைய அறபிகளுக்கும் வழிவிட்டால் அவர்களுக்கு என்ன நேர்ந்து விடப் போகிறது. அவர்கள் எனக்கு தீங்கு செய்வதையே விரும்புகிறார்கள். அல்லாஹ் எனக்கு வெற்றியளித்தால் அவர்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தினுள் நுழைந்து விடுவார்கள். இல்லாவிட்டால் அவர்களிடம் பலம் இருக்கும் வரை போராடுவார்கள். குறைஷியர் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக அல்லாஹ் எனக்கு வழங்கி அனுப்பி வைத்த இத்தூதுக்கு வெற்றி கிட்டும் வரை அல்லது அதன் பாதையில் மரணிக்கும் வரை நான் தொடர்ந்தும் போராடிக் கொண்டே இருப்பேன்''.

நபி (ஸல்) அவர்களும் ஏனைய ஸஹாபாக்களும் மக்காவுக்கு அண்மை யிலுள்ள -தற்போது மக்கா -ஜித்தா பாதையில்- ஹுதைபியா என்ற இடத்தை வந்தடைந்தார்கள். அவ்வேளை ஹுஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அவர்களுடைய வருகைக்கான காரணம் குறித்து வினவினார்கள். நபி (ஸல்) அவர்கள், தான் கஃபாவை தரிசித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்றா கடமையை நிறைவேற்றவே வந்துள்ளதாக அவர்களிடம் குறிப்பிட்டார்கள். பின்னர் அவர்கள் குறைஷியரிடம் திரும்பிச் சென்று ''நீங்கள் முஹம்மதுடைய விடயத்தில் அவசரப்படுகிறீர்கள். அவர் யுத்தம் புரிய வரவில்லை. மாறாக கஃபாவை தரிசிக்கவே வந்திருக்கிறார்'' என அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். இதைக் கேட்ட குறைஷியர் ''இல்லை! அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர் எமது பிரதேசத்தினுள் பலாத்காரமாக ஒருபோதும் நுழைய முடியாது. அறபு மக்கள் இது விடயம் தொடர்பாக எங்களைப் பற்றி இழிவாகக் கதைக்கக் கூடாது'' என்று கூறினார்கள்.

இந்த விடயம் தொடர்பாக நபியவர்களோடு பேசவென குறைஷியர் தமது தரப்பிலிருந்து உர்வத் இப்னு மஸ்ஊத் அஸ்ஸகபி என்பவரை அனுப்பி வைத்தார்கள். இவருக்கும் சில ஸஹாபாக்களுக்கும் இடையில் இடம்பெற்ற நீண்ட நேர கருத்துப் பரிமாறலின் பின்னர் குறைஷியரிடம் அவர் திரும்பிச் சென்று ஸஹாபாக்கள், நபி (ஸல்) அவர்கள் மீது கொண்டுள்ள அன்பு, கௌரவம் குறித்தும் சமாதானத்தில் அவர்கள் கொண்டுள்ள வேட்கை தொடர்பாகவும் எடுத்துரைத்தார். ஆனால் அதனை குறைஷியர் ஏற்க மறுத்தனர்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் தமது வருகை பற்றிய நோக்கத்தை தெளிவுபடுத்தும் வகையில் மக்காவாசிகளிடம் உஸ்மான் இப்னு அப்பான் (றழி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். உஸ்மானுடைய வருகை தாமதமாகவே அவர் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்ற செய்தி முஸ்லிம்களுக்கு மத்தியில் பரவத் தொடங்கியது. அவ்வேளை நபி (ஸல்) அவர்கள் ''இந்தக் கூட்டத்தாரோடு யுத்தம் புரியாது இவ்விடத்திலிருந்து நகரவே மாட்டோம்'' எனக் கூறிவிட்டு ஜிஹாதில் ஈடுபடவும் அல்லாஹ்வின் பாதையில் ஷஹாதத் (வீர மரணம்) அடையவும் பைஅத் செய்யுமாறு முஸ்லிம்களிடம் வேண்டிக் கொண்டார்கள். இதற்கிணங்க அங்கிருந்த (வாழை) மரமொன்றின் நிழலில் நின்று போராட்டத்தில் பின்வாங்கி ஓடுவதில்லை எனவும் ஒன்றில் சமாதானம் அல்லது ஷஹாதத் எனவும் அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு உறுதி மொழி (பைஅத்) வழங்கினார்கள்.

பைஅத் விடயம் தொடர்பாக அறிந்து கொண்ட குறைஷியர்கள் அச்சமுற்று பின்வரும் நிபந்தனைகளின் கீழ் சமாதானம் செய்துகொள்ள முன்வந்தார்கள். இதன்படி இவ்வருடம் நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் மதீனாவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அடுத்த வருடம் திரும்பி வந்து 3 நாட்கள் மாத்திரமே மக்காவில் தங்கிச் செல்ல முடியும். அவ்வாறு வரும்போது பயணிகள் வழக்கமாக எடுத்துச் செல்லும் உறையிலிடப்பட்ட வாள்களையும், ஈட்டிகளையும் மாத்திரமே எடுத்து வர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்காக குறைஷியர் தமது தரப்பிலிருந்து சுஹைல் இப்னு அம்ர் என்பவரை அனுப்பி வைத்தார்கள். குறைஷியரின் விருப்பத்திற்கேற்ப இறுதியில் உடன்படிக்கை கைச்சாத்தானது. இதன்போது பின்வரும் விடயங்களிலும் உடன்பாடு காணப்பட்டது. இரண்டு பிரிவினருக்குமிடையில் 10 வருடங்களுக்கு யுத்தம் இடம்பெற மாட்டாது. முஹம்மதிடமிருந்து மக்கா வரும் எவரும் திருப்பியனுப்பப்பட மாட்டார்கள். அது போலவே மக்காவிலிருந்து முஹம்மதிடம் வரும் அனைவரும் மக்காவுக்கு திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

இந்த விடயங்கள் முஸ்லிம்களுக்கு மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியது. உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள நிபந்தனைகள் தொடர்பாக ஸஹாபாக்களில் சிலர் நபி (ஸல்) அவர்களோடு தர்க்கிக்க ஆரம்பித்தார்கள். அவர்களில் உமர் (றழி) அவர்கள் மிகக் கடுமையாக இருந்தார்கள். எனவே நபி (ஸல்) அவர்கள், ''நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடிமை, அவன் ஒருபோதும் என்னை வழிதவறச் செய்யமாட்டான்'' எனக் கூறி தர்க்கத்திற்கு முடிவு கட்டினார்கள்.

பின்னர், நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களிடம் உம்றாவைக் களையுமாறு பணித்தார்கள். மக்காவினுள் நுழைவதற்குத் தடுக்கப் பட்டமையாலும் சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளின் குறைபாடுகளாலும் ஏற்பட்ட கவலையின் காரணமாக குறித்த கட்டளையை அவர்கள் நடைமுறைப்படுத்தாது தாமதித்தார்கள். எனவே, நபி (ஸல்) அவர்கள் தாமாகவே முன்வந்து முதலில் உம்றாவைக் களைந்தார்கள். அதனைத் தொடர்ந்து, முஸ்லிம்கள் அனைவரும் நபி (ஸ்ல்) அவர்களைப் பின்பற்றி உம்றாவைக் களைந்தார்கள்.

ஸஹாபாக்களுக்கு ஆத்திரத்தையூட்டிய ஆனால் நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்ட இந்த நிபந்தனைகளின் பயன்களை பிற்பட்ட காலங்களிலே காண முடிந்தது. இவை நபி (ஸல்) அவர்களின் தூர நோக்கு, அறிவுக் கூர்மை, கருத்திலும் செயலிலும் அவர்களை நேர்வழிப்படுத்திய வஹியின் வழி காட்டல் என்பவற்றினால் பெறப்பட்டனவாகும்.

இந்தக் களத்தை அல்லாஹ் அல்குர்ஆனில் தெளிவான வெற்றி எனக் குறித்துக் காட்டியுள்ளான்.

''(நபியே!) நிச்சயமாக நாம் ஒரு தெளிவான வெற்றியாக உமக்கு வெற்றி அளித்துள்ளோம். உமக்காக உம்முடைய முந்திய தவறுகளையும், பிந்தியவற்றையும் அல்லாஹ் மன்னித்து, உமக்காக தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கொடையையும் பூர்த்தி செய்து உம்மை நேரான வழியில் நடத்துவதற்காகவும். அல்லாஹ் ஒரு வலிமை மிக்க உதவியாக உமக்கு உதவி செய்வதற்காகவும் (தெளிவான இவ்வெற்றியை அவன் அளித்தான்). *(ஸூறா அல் பத்ஹ்: 1-3)*

பிறகு அல்குர்ஆன் ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களுக்கு பைஅத் செய்தமை குறித்துக் குறிப்பிடுகிறது.

''நிச்சயமாக எவர்கள் உம்மிடம் பைஅத்து (வாக்குறுதி) செய்கிறார்களோ, அவர்கள் அல்லாஹ்விடமே பைஅத் (வாக்குறுதி) செய்கின்றனர் -அல்லாஹ்வின் கை அவர்களுடைய கைகளின் மேல் இருக்கிறது. ஆகவே, எவன் (அவ்வாக்குறுதியை) முறித்து விடுகிறானோ, நிச்சயமாக அவன் தனக்குக் கேடாகவே (அதை) முறிக்கிறான். எவர் அல்லாஹ்விடம் செய்த அவ்வாக்குறுதியை நிறைவேற்றுகிறாரோ அவருக்கு அல்லாஹ் மகத்தான நற்கூலியை விரைவில் வழங்குவான். *(ஸூறா அல் பத்ஹ்: 10)*

மரத்தடியில் பைஅத் செய்த ஸஹாபாக்களை அல்லாஹ் பொருந்திக் கொண்டதாகவும் அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

''முஃமின்கள் அந்த மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்த போது மெய்யாகவே அல்லாஹ் அவர்களைப் பொருந்தி (ஏற்று)க் கொண்டான். அவர்களுடைய இதயங்களில் இருப்பதை அவன் அறிந்து, அவர்கள் மீது (சாந்தியையும்) அமைதியை(யும்) இறக்கியருளி, அவர்களுக்கு அண்மையில் வெற்றியையும் அளித்தான்.'' *(ஸூறா அல் பத்ஹ்: 18)*

ஹுதைபியா போராட்டத்துக்குக் காரணமாக அமைந்த நபி (ஸல்) அவர்களின் கனவு குறித்தும் அல்குர்ஆன் பேசுகிறது.

''நிச்சயமாக அல்லாஹ் தன் தூதருக்கு (அவர் கண்ட) கனவை உண்மையாக்கி விட்டான். அல்லாஹ் விரும்பினால், நிச்சயமாக நீங்கள் மஸ்ஜிதுல் ஹராமில் அச்சம் தீர்ந்தவர்களாகவும், உங்களுடைய தலைகளைச் சிரைத்துக் கொண்டவர்களாகவும் (உரோமம்) கத்தரித்துக் கொண்டவர்களா கவும் நுழைவீர்கள். (அப்போதும் எவருக்கும்) நீங்கள் பயப்பட மாட்டீர்கள். ஆகவே, நீங்கள் அறியாதிருப்பதை அவன் அறிகிறான் -(அதன் பின்னர்) இதனை அன்றி நெருங்கிய ஒரு வெற்றியையும் (உங்களுக்கு) ஆக்கிக் கொடுத்தான்.'' *(ஸூறா அல் பத்ஹ்: 27).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஹுதைபியா உடன்படிக்கையின் விளைவுகளுள் ஒன்றாக அமைந்த மக்கா வெற்றியைச் சுட்டிக்காட்டுவதுபோல் அமைந்துள்ளது. இது தொடர்பாக பாடங்களும் படிப்பினைகளும் என்ற பகுதியில் விளக்க வுள்ளோம். பின்னர், அல்குர்ஆன் இந்த மார்க்கமே அனைத்து மார்க்கங் களையும் மிகைத்து நிற்பதாகவும் அதுவே வெற்றி பெறும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

''அவனே தன் தூதரை நேரான வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பியருளினான். சகல மார்க்கங் களையும் விட அதை மேலோங்கச் செய்வதற்காக (இதற்கு) அல்லாஹ் சாட்சியாக இருப்பதே போதுமானது''. (ஸூறா அல் பத்ஹ்: 28)

வல்ல அல்லாஹ் உண்மையையே உரைக்கின்றான்.

## 7- கைபர் யுத்தம்

இந்த யுத்தம் ஹிஜ்ரி 7ம் ஆண்டு முஹர்ரம் மாத இறுதிப் பகுதியில் இடம்பெற்றது. கைபர் பிரதேசம் ஷாம் பக்கமாக மதீனாவுக்கு வடக்கே 100 மைல் தொலைவில் அமைந்துள்ள, யூதர்கள் வாழ்ந்த ஒரு பெரும் நிலப் பிரதேசமாகும்.

இப்போராட்டம் இடம்பெறுவதற்கான பின்னணிக் காரணம் பின்வரு மாறு அமைந்தது.

குறைஷியரோடு செய்து கொண்ட ஹுதைபியா உடன்படிக்கையின் மூலம் ஒரு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொண்ட நபி (ஸல்) அவர்கள் மதீனாவைச் சூழ வாழ்ந்த யூதக் குழுமங்களின் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் எனத் தீர்மானித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஏலவே மதீனாவில் வாழ்ந்த யூதர்களை வெளியேற்றி விட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கைபர் பிரதேசத்தில் யூதர்களுக்கு மிகப் பாதுகாப்பான அரண்கள் காணப்பட்டன. அவற்றில் சுமார் 10,000 போராளிகள் வாழ்ந்து வந்தனர். பாரிய அளவிலான ஆயுத பலங்களையும் ஏனைய வசதிகளையும் பெற்றி ருந்த அவர்கள் மிக மோசமானவர்களாகவும், தந்திரமிக்கவர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் காணப்பட்டனர். எனவே, முஸ்லிம்களின் தலை நகரான மதீனாவில் இவர்கள் பிரச்சினைக்குரியவர்களாக மாறுமுன்னர் அவர்களது பிரச்சினையை அவசியம் தீர்த்துவிட வேண்டி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாகவே றஸூல் (ஸல்) அவர்கள் முஹர்ரம் மாதத்தின் இறுதிப் பகுதியில் 1600 போர் வீரர்களோடு கைபரை நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களில் 200 குதிரை வீரர்களும் அடங்கியிருந்தனர். ஹுதைபியா உடன்படிக்கையில் கலந்துகொண்ட, சூழவுள்ள ஸஹாபாக் களையும் நபி (ஸல்) அவர்கள் யுத்தத்துக்குச் செல்ல வருமாறு அழைப்பு விடுத்தார்கள்.

கைபர் பிரதேசத்தை அண்மித்தபோது நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக் களை குறித்த இடத்தில் தரித்து நிற்குமாறு பணித்துவிட்டு திரும்பி நின்று அல்லாஹ்விடம் பின்வருமாறு பிரார்த்தனை புரிந்தார்கள்.

''(யா அல்லாஹ்), வானங்களினதும் அவை நிழல் கொடுப்பவைகளின தும் இரட்சகனே, பூமிகளினதும் அவை சுமந்திருப்பவையினதும் இரட்ச கனே, ஷைத்தான்களினதும் அவை வழிகெடுத்தவைகளினதும் இரட்ச கனே, காற்றுகளினதும் அவை சுமந்து சென்றவைகளினதும் இரட்சகனே, நாம் உன்னிடம் இந்தப் பிரதேசத்தின் நன்மையையும், அதன் நல்லவர் களையும், நல்லவைகளையும் கேட்கிறோம். மேலும் உன்னிடம் இப்பிர தேசத்தின் தீமையிலிருந்தும், அதன் தீயவர்களிடமிருந்தும், தீயவைகளிலி ருந்தும் பாதுகாப்புத் தேடுகிறோம்.'' இவ்வாறு பிரார்த்தனை செய்துவிட்டு நபி (ஸல்) அவர்கள், ''அல்லாஹ்வின் பெயரால் முன்னோக்கிச் செல்லுங் கள்'' எனக் கூறினார்கள்.

கைபர் பிரதேசத்தை வந்தடைந்த நபி (ஸல்) அவர்கள் அங்கு காணப் பட்ட 'ஹுஸ்னுன் நுதாத்' என்ற ஒரு அரணுக்கு பக்கத்தே முகாமிட்டார் கள். யூதர்கள் தமது போராளிகளை அவ்வரணிலேயே ஒன்று கூட்டி இருந் தார்கள். ஹப்பாப் இப்னுல் முன்திர் (றழி) அவர்கள் குறித்த இடத்திலிருந்து வேறு ஒரு இடத்துக்கு நகருமாறு நபி (ஸல்) அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஏனெனில், நுதாத் வாசிகளைப் பற்றி அவர் நன்கு அறிந்திருந்தார்.

குறி தவறாது அதிக தூரத்திற்கு அம்பெய்யக் கூடியவர்களில் அவர்களை மிகைக்க யாரும் இருக்கவில்லை. அவர்கள் முஸ்லிம்கள் இருந்த இடங் களை விட உயர்ந்த இடங்களிலே இருந்தனர். அவர்கள் எய்தும் அம்புகள் முஸ்லிம்களின் அணிகளை மிக விரைவாக வந்து தாக்கும் சாத்தியம் காணப்பட்டது. மாத்திரமன்றி, அங்கு செறிந்து காணப்பட்ட ஈச்ச மரங்க ளுக்குப் பின்னால் நின்று இரவு வேளைகளில் முஸ்லிம்களை தாக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. எனவே, நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களோடு பிரிதொரு இடத்துக்கு நகர்ந்து சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் ஆரம்பமானது. முஸ்லிம்கள் ஒவ்வொரு கோட்டையாக வெற்றி கொள்ள ஆரம்பித்தார்கள். இறுதியில் இரண்டு கோட்டைகள் மாத்திரமே யூதர்கள் வசமிருந்தன. அக்கோட்டைகளில் இருந்த யூதர்கள் நபி (ஸல்) அவர்களோடு சமாதானம் செய்து கொள்ள விரும்பினார்கள். இதன்படி தமது போராளிகளின் இரத்தத்தை சிந்தக் கூடாதெனவும், தமது பிள்ளை கள், பெண்களோடு கைபர் பிரதேசத்திலிருந்து நாம் வெளியேறிச் செல்ல அனுமதிக்க வேண்டுமெனவும், ஒவ்வொருவரும் ஒரேயொரு ஆடையை மாத்திரமே எடுத்துச் செல்வதாகவும் குறிப்பிட்டனர். இதற்கு உடன்பட்ட நபியவர்கள் இதற்குப் பின்னால் அவர்கள் ஏதும் மறைத்து வைத்திருந்தால் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் பொறுப்பி லிருந்து அவர்கள் நீங்கிவிடுவார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

பின்னர் யூதர்கள் அவ்விரு கோட்டைகளிலிருந்தும் வெளியேறிச் சென்றார்கள். முஸ்லிம்கள் அங்கு அதிகமான ஆயுதங்களையும் தௌராத் பிரதிகளையும் கண்டெடுத்தார்கள். யூதர்கள் அவற்றை மீளக் கேட்டு வரவே நபி (ஸல்) அவர்களும் அவற்றை திருப்பிக் கொடுத்து விடுமாறு பணித்தார்கள். இந்த யுத்தத்தில் 93 யூதர்கள் கொல்லப்பட்டதோடு, முஸ்லிம்கள் தரப்பில் 15 பேர் ஷஹீதானார்கள்.

## 8. முஅத்தா போராட்டம்

இப்போராட்டம் ஹிஜ்ரி 8 ஜமாதுல் ஊலா மாதம் இடம்பெற்றது. ஷாம் பிரதேசத்தின் எல்லையிலுள்ள 'முஅத்தா' கிராமம் சாக்கடலிற்கு (Dead Sea) தென்கிழக்கே அமைந்துள்ள 'அல் கரக்' என்ற பிரதேசமென தற்போது அடையாளப்படுத்தப்படுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கையைத் தொடர்ந்து அறபுத் தலைவர்களையும், அரசர்களையும் இஸ்லாத்தின் பால் அழைத்து கடிதங்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இதன் தொடராக ஹிர்கல் மன்னனினால் பஸராவின் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த ஹாரிஸ் இப்னு அபீ ஷமர் அல் கஸ்ஸானி என்பவரை இஸ்லாத்தின்பால் அழைத்து, ஹாரிஸ் இப்னு உமைர் அல் அஸ்தி என்ற ஸஹாபியிடம் கடிதம் ஒன்றைக் கொடுத்து அனுப்பினார்கள்.

குறித்த ஸஹாபி முஅத்தா பிரதேசத்தை அடைந்தபோது உரோமச் சக்கர வர்த்தியான கைஸரின் கீழ் பணி புரிந்த கஸாஸினா அறபுத் தலைவர்களுள் ஒருவன் அவரைச் சந்தித்து, ''எங்கே செல்கிறீர்? முஹம்மதின் தூதுவர் களில் ஒருவராக இருப்பதுபோல் தெரிகிறதே? என வினவினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவர், 'ஆம்' என்றார். உடனே அவன் அவரை இறுகக் கட்டிக் கொலை செய்து விட்டான். இச்செய்தியைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் மிகுந்த கவலையடைந்தார்கள். ஏனெனில், இதற்கு முன்னர் இவ்வாறு எந்தவொரு தூதுவரும் கொல்லப்படும் வழக்கம் இருக்கவில்லை.

எனவே 3000 பேர் அடங்கிய ஒரு படையை நபி (ஸல்) அவர்கள் தயார் செய்து ஸைத் பின் ஹாரிஸா என்ற ஸஹாபியை தலைவராக நியமித்தார்கள். பின்னர் ஸைத் கொலை செய்யப்பட்டால் ஜஃபர் இப்னு அபீ தாலிபை படைக்குத் தலைவராக நியமித்துக் கொள்ளுமாறும் அவரும் கொலை செய்யப்பட்டால், அப்துல்லாஹ் இப்னு ரவாஹாவை தலைவராக நியமித்துக் கொள்ளுமாறும் நபி (ஸல்) அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்.

மேலும், ஹாரிஸ் பின் உமைர் கொலை செய்யப்பட்ட இடத்திற்குச் சென்று இஸ்லாத்தின்பால் வருமாறு அவர்களை அழைக்கும்படியும் அதற்கு அவர்கள் சாதகமான பதில் கூறினால் அவர்களை அவ்வாறே விட்டு விடுமாறும், இன்றேல் அல்லாஹ்விடம் உதவி கோரியவர்களாக அவர்களுடன் போராடுமாறும் பணிப்புரை வழங்கினார்கள்.

அத்தோடு அவர்களுக்கு பின்வருமாறு உபதேசம் செய்தார்கள்: ''அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுமாறும், உங்களுடன் இருக்கும் ஏனைய முஸ்லிம்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும்படியும் உங்களுக்கு உபதேசிக்கிறேன். அல்லாஹ்வின் பெயர் கூறி அவனுடைய பாதையிலே நிராகரிப்பாளர்களோடு யுத்தம் புரியுங்கள். பிறரை ஏமாற்றாதீர்கள். (சொத்துக்களை) திருடாதீர்கள். எந்தவொரு குழந்தையையோ, பெண்ணையோ, வயோதிபரையோ, துறவு மடங்களில் தியானத்தில் ஈடுபட்டிருப்பவரையோ கொலை செய்து விடாதீர்கள். எந்தவொரு ஈச்சம் மரத்தையோ ஏனைய மரங்களையோ வெட்டாதீர்கள். எந்தவொரு கட்டிடத்தையும் உடைத்து விடாதீர்கள்''.

நபி (ஸல்) அவர்கள் தாமாகவே படையை வழியனுப்பி வைத்தார்கள். தொடர்ச்சியான பயணத்தின் பின்னர் படை 'மஆன்' என்ற பிரதேசத்தை அடைந்தது. ஹிர்கல் மன்னன் (Heraclius) அறபிகளையும் ரோமர்களையும் உள்ளடக்கிய பெரும் படையொன்றைத் திரட்டி வந்து 'பல்கா' பிரதேசத்தின் 'மஆப்' பகுதியில் (டமஸ்கஸிற்கு அண்மையில்) முகாமிட்டிருப்பதாக முஸ்லிம் படைக்கு செய்தி கிட்டியது. ரோமர்களின் படை கிறிஸ்தவ அறபிகளையும் உள்ளடக்கி இருந்தது.

தமக்கிடையே ஆலோசனை செய்த முஸ்லிம்கள் நபி (ஸல்) அவர்களிடம் உதவி கோருவது, அல்லது அவர்களிடமிருந்து பிரிதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையைப் பெற்று அதன் படி செயலாற்றுவது எனக் கருத்துத் தெரிவித்தார்கள். அவ்வேளை அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (றழி) பின்வருமாறு கருத்துக் கூறினார்கள்:

''அல்லாஹ்வின் மீது ஆணையாக, நீங்கள் எதனை வெறுக்கிறீர்களோ அதற்காகவே நீங்கள் வெளியேறி வந்தீர்கள். ஷஹாதத் (வீரமரணம்) அடைவதை நோக்கமாகக் கொண்டே வந்தீர்கள். நாங்கள் ஒருபோதும் எண்ணிக்கையையோ அல்லது பலத்தையோ அடிப்படையாக வைத்துக் கொண்டு மக்களோடு யுத்தம் புரிவதில்லை. மாறாக, அல்லாஹ் எம்மை கண்ணியப்படுத்திய இந்த மார்க்கத்தை அடிப்படையாக வைத்தே அவர்களோடு போராடுகிறோம். எனவே, ஒன்றில் வெற்றி அல்லது ஷஹாதத் (வீரமரணம்) என்பதுவே எமது முடிவாக அமைய வேண்டும்.'' இக்கருத்தை ஏற்றுக் கொண்ட ஸஹாபாக்கள் யுத்தத்தில் குதிப்பதென்ற உடன்பாட்டுக்கு வந்தார்கள்.

யுத்தம் ஆரம்பமானது. போராட்டத்தின் இடையே ஸைத் (றழி) கொலை செய்யப்பட ஜஃபர் பின் அபீ தாலிப் (றழி) முஸ்லிம் படையின் கொடியைத் தூக்கிக் கொண்டார்கள். குதிரையில் அமர்ந்து யுத்தத்தில் ஈடுபட்ட அவர், அதிலிருந்து இறங்கிப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார். அவரது வலது கை துண்டிக்கப்பட்டது. கொடியை இடது கையில் ஏந்திக் கொண்டார். இடது கையும் துண்டிக்கப்பட்டதால் முஸ்லிம் படையின் கொடியை தன்மேனியில் அணைத்தவாறு இறுதியில் கொல்லப்படும் வரை போராடினார். அவரது உடம்பில் வாள் வெட்டு, அம்புத் தாக்குதல் என எழுபது சொச்சம் காயங்கள் காணப்பட்டன.

பிறகு முஸ்லிம் படையின் கொடியை ஏந்திய அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (றழி)வும் கொலை செய்யப்படும் வரை போராடினார். இதனைத் தொடர்ந்து ஸஹாபாக்கள் காலித் பின் வலீத் (றழி) அவர்களை தளபதியாக நியமிப்பது என உடன்பட்டார்கள். -காலித் (றழி) இஸ்லாத்தை ஏற்ற பின்னர் கலந்து கொண்ட முதல் போராட்டம் இதுவாகும். தன்னிடம் காணப்பட்ட போர்த் திறமைகளைப் பயன்படுத்திக் கொண்ட காலித் (றழி) முஸ்லிம் படையை அழிவிலிருந்து மீட்டெடுத்து மதீனாவுக்கு அழைத்துச் சென்றார்.

முஸ்லிம்கள் அறபுத் தீபகற்பத்திற்கு வெளியே சென்று ரோமர்களுடன் மோதிய முதலாவது யுத்தமாக இது அமைகிறது. சுமார் 3000 பேர் கொண்ட ஒரு பெரும் படையணி இந்த யுத்தத்தில் பங்குகொண்டதால் நபி (ஸல்) அவர்கள் இதில் பங்கு கொள்ளாவிட்டாலும் இது 'கஸ்வா' என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகிறது. 3000 வீரர்கள் யுத்தத்தில் கலந்து கொள்வதென்பது 'ஸரிய்யா'க்களில் பங்கு கொள்ளும் வீரர்களின் எண்ணிக்கையை விட அதிகமானதாகும் என்பது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

இந்த யுத்தத்தின் முடிவில் நபி (ஸல்) அவர்கள் காலித் பின் வலீத் (றழி) அவர்களுக்கு 'ஸைபுல்லாஹ்' (அல்லாஹ்வின் வாள்) என்ற சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவித்தார்கள்.

## 9. வெற்றிப் போராட்டம்

மக்கா வெற்றி என அழைக்கப்படும் இப்போராட்டம் ஹிஜ்ரி 8 றமழான் மாதம் இடம்பெற்றது. எந்தவொரு அறபுக் கோத்திரமும் தாம் நாடினால் நபி (ஸல்) அவர்களுடனோ அல்லது குறைஷியருடனோ உடன்படிக்கை செய்துகொள்ள முடியும் என ஹுதைபியா உடன்படிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது. இதன்படி 'குஸாஆ' கோத்திரம் நபி (ஸல்) அவர்களோடும் 'பனூ பக்ர்' கோத்திரம் குறைஷியரோடும் உடன்படிக்கை செய்து கொண்டனர். ஹிஜ்ரி 8ம் ஆண்டு பனூ பக்ர் கோத்திரத்தினர் குஸாஆ கோத்திரத்தினரைத் தாக்கி அவர்களில் சுமார் 20 பேரைக் கொலைசெய்து விட்டனர். குறைஷியர் அவர்களுக்கு ஆயுதங்களையும் செல்வங்களையும் வழங்கி உதவி புரிந்தனர்.

இதனைக் கேள்வியுற்ற நபி (ஸல்) அவர்கள் மிகக் கடுமையாகக் கோபமடைந்தார்கள். குறைஷியரோடு யுத்தம் புரியத் தயாராகினார்கள். என்றாலும் தனது நோக்கத்தை மக்களுக்கு அறிவிக்க விரும்பவில்லை. அவ்வாறு அறியச் செய்தால் குறைஷியர் யுத்தத்துக்குத் தயாராகி விடுவார் கள். இதனால் அல்லாஹ்வின் புனித இல்லமான கஃபதுல்லாஹ் இருக்கும் புனித பூமியின் அனைத்துப் பகுதிகளும் பிணங்களால் நிரம்பி அதன் புனிதத் தன்மைக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும் எனப் பயந்தார்கள். எனினும் ஹாதிப் பின் அபீ பல்தஆ அல் பத்ரி என்பவர் நபி (ஸல்) அவர்களின் வருகை தொடர்பான கடிதமொன்றை எழுதி இரகசியமாக மக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

இது விடயமாக அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு வஹி மூலம் அறிவிக்கவே ஸஹாபாக்களில் சிலரை, இக்கடிதத்தை எடுத்துச் செல்லும் பெண்ணைச் சோதனையிடுவதற்காக அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அவளிடமிருந்து கடிதத்தைக் கண்டெடுத்தார்கள். ஹாதிபை அழைத்து இவ்வாறு கடிதம் எழுதுவதற்கான காரணம் யாது? என (ஸல்) அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினவினார்கள். அதற்கு அவர்: அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்டிருக்கிறேன். இந்த நிலைப்பாட்டிலிருந்து நான் ஒருபோதும் மாறவில்லை. எனது குடும்பத்தினர் எவரும் என்னுடன் இல்லை. எனது மனைவியும் ஒரு பிள்ளையும் மக்காவிலேயே இருக்கின்றார்கள். அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டே இவ்வாறு செய்தேன் என்றார்.

அங்கிருந்த உமர் (றழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே, எனக்கு அனுமதி தாருங்கள். அவரது கழுத்தை வெட்டிவிடுகிறேன். நிச்சயமாக இந்த மனிதர் நயவஞ்சகராகி விட்டார் என்றார். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், 'அவர் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருக்கிறார். யார் அறிவார் சிலவேளை அல்லாஹ் பத்ரில் கலந்து கொண்டவர்களை பார்த்து ''நீங்கள் விரும்பியவாறு செயற்படுங்கள். நான் உங்களது பாவங்களை மன்னித்து விட்டேன்'' என்று கூறியிருக்கக் கூடுமல்லவா' எனக் கூறினார்கள்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள் றமழான் மாதம் பத்தாம் நாள் மதீனாவிலிருந்து வெளியேறிச் சென்றார்கள். நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் பயணத்தின்போது ஏற்பட்ட களைப்பு, கஷ்டம் காரணமாக இடைநடுவே தமது நோன்பை முறித்துக் கொண்டார்கள். மதீனாவிலிருந்து வெளியேறியபோது (10,000) பத்தாயிரம் பேர் கொண்ட முஸ்லிம் படையில் அறபுக் கோத்திரங்களைச் சேர்ந்த மேலும் சிலரும் வழியில் இணைந்து கொண்டார்கள். படை 'மர்ரு லஹ்றான்' என்ற இடத்தை அடைந்தபோது நபி (ஸல்) அவர்களின் காவலாளிகள் அபூ ஸுப்யானையும் மேலும் இருவரையும் சிறைபிடித்து அழைத்து வந்தார்கள்.

பின்னர் அபூஸுப்யான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். இஸ்லாத்தை ஏற்று மதீனாவுக்கு வந்து கொண்டிருந்தவேளை நபி (ஸல்) அவர்களைச் சந்தித்த அப்பாஸ் (றழி) அவர்கள், அபூஸுப்யான் பெருமையை விரும்புவதாகவும் அவர் பெருமைப்படும் வகையில் ஏதேனுமொன்றை அவருக்குச் செய்யுமாறும் நபியவர்களிடம் வேண்டிக் கொண்டார். இதற்கிணங்கிய நபி (ஸல்) அவர்கள் ''யார் அபூஸுப்யானின் வீட்டில் நுழைகிறாரோ அவர் பாதுகாப்புப் பெற்றுவிட்டார்'' எனக் கூறினார்கள்.

படை மக்காவை அடைந்தது. நபி (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து பேச்சாளர் ஒருவர் பின்வருமாறு அறிவிப்புச் செய்தார். யார் தன்னுடைய வீட்டில் நுழைந்து கதவை மூடிக் கொள்கிறாரோ அவர் பாதுகாப்புப் பெற்று விட்டார். யார் கஃபாவில் நுழைந்து விடுகிறாரோ அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புப் பெற்றுவிட்டார். யார் அபூஸுப்யானின் வீட்டில் நுழைகிறாரோ அவரும் பாதுகாப்புப் பெற்றுவிட்டார் எனக் கூறிவிட்டு இஸ்லாத்துக்கும், அதனது தூதருக்கும் பாரிய அளவில் பாதிப்பு ஏற்படுத்திய பதினைந்து பேருக்கு மாத்திரம் இந்தப் பாதுகாப்பு கிட்டாது என விலக்களித்தார்.

றஸூல் (ஸல்) அவர்கள் தனது ஒட்டகையில் அமர்ந்தவாறு, இந்த மிகப் பெரும் வெற்றியைத் தந்த அல்லாஹ்வுக்கு நன்றி கூறும் பொருட்டு தனது நெற்றி ஒட்டகத்தின் திமிலை தொட்டுவிடும் அளவு தலையை முன்னோக்கித் தாழ்த்தியவர்களாக மக்காவினுள் நுழைந்தார்கள். பிறகு கஃபதுல்லாஹ்வைச் சுற்றி விட்டு அதனைச் சூழ இருந்த 360 சிலைகளையும் அகற்றினார்கள். பின்னர் கஃபாவினுள் நுழைந்து இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு அதன் வாயிலின் முன்னால் நின்றுகொண்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தமக்கு என்ன செய்துவிடப் போகிறார்களோ என்று குறைஷியர் அஞ்சினர். அவர்களைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள், ''குறைஷியரே நான் உங்களுக்கு என்ன செய்வேன் என நினைக்கின்றீர்கள்'' எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் ''நீங்கள் நல்லதையே செய்வீர்கள். நீங்கள் கண்ணியமானதொரு சகோதரன். கண்ணியமான ஒரு சகோதரனின் மகன்'' என்றார்கள். இதனைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், ''எனது சகோதரன் யூசுப் இதற்கு முன்னர் கூறிய வார்த்தைகளையே இன்று நான் உங்களுக்கும் கூறுகிறேன்: ''இன்று உங்கள் மீது எவ்விதக் குற்றச்சாட்டும் இல்லை அல்லாஹ் உங்களை மன்னித்தருள்வானாக! அவனே கிருபையாளர்களிலெல்லாம் மிக்க கிருபையாளனாக இருக்கின்றான்'' (ஸூறா யூசுப்: 92) என்ற அல்குர்ஆன் வசனத்தை ஓதி, சென்று விடுங்கள், நீங்கள் அனைவரும் விடுதலை பெற்றுவிட்டீர்கள் என்றார்கள்.

மக்கள் இஸ்லாத்தை ஏற்று நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்வதற்காக 'ஸபா' மலையைச் சுற்றி ஒன்று சேர்ந்தார்கள். 'ஸபா' மலையிலே அமர்ந்து கொண்டு நபி (ஸல்) அவர்கள், தமக்கு இயலுமான அனைத்து விடயங்களிலும் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் முழுமையாக கட்டுப்பட்டு வாழ்வதாக அவர்களிடமிருந்து வாக்குறுதி (பைஅத்) பெற்றுக் கொண்டார்கள். முதலில் ஆண்களும் பிறகு பெண்களும் இக்கடமையைச் செய்தார்கள். இதன்போது நபி (ஸல்) அவர்கள் எந்தப் பெண்ணுடையதும் கையையும் பிடித்து முஸாபஹா செய்யவில்லை. இவ்வாறு பைஅத் செய்தவர்களில் அபூ ஸுப்யானின் மனைவி ஹிந்தும் காணப்பட்டார். மக்கா வெற்றியின்போது கொலை செய்யப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவர்களில் ஒருத்தியாக இவரை நபி (ஸல்) அவர்கள் கருதியிருந்த போதிலும் அவர் பைஅத் செய்ய வந்திருந்ததை அறிந்தபோது அவளை மன்னித்து பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

மக்காவை வெற்றி கொண்ட அந்நாளில் நபி (ஸல்) அவர்கள், பிலால் (றழி) அவர்களிடம் கஃபாவின் மேல் ஏறி நின்று லுஹர் தொழுகைக்காக அதான் கூறுமாறு பணித்தார்கள். இதுவரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாது அங்கு கூடியிருந்த குறைஷியருக்கு இது மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. எனினும், நபி (ஸல்) அவர்கள் வேண்டுமென்றே மிக முக்கியமானதொரு நோக்கத்துக்காக இதனை மேற்கொண்டார்கள்.

### 10. ஹுனைன் யுத்தம்

ஹிஜ்ரி 8 ஷவ்வால் மாதம் பிறை 10 இல் அதாவது மக்கா வெற்றிக்கு ஒரு மாதத்தின் பின்னர் இப்போராட்டம் இடம்பெற்றது. மக்கா வெற்றியைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் தம்மைக் குறிவைக்கக் கூடுமென அச்சம் கொண்ட ஹவாஸுன், ஷகீப் கோத்திரத் தலைவர்கள் தாமாகவே யுத்தத்தை ஆரம்பிப்பது எனத் தீர்மானித்தார்கள்.

மாலிக் பின் அவ்ப் என்ற 30 வயது நிரம்பிய இளைஞனை தமக்குத் தலைவராக நியமித்துக் கொண்டார்கள். யுத்தத்தில் உறுதியுடன் நின்று பிடித்து போராடும் நோக்கில் போராளிகள் அனைவரும் தமது செல்வங்கள், கால் நடைகள், பெண்கள், பிள்ளைகளோடு யுத்தத்துக்கு வரவேண்டும் என மாலிக் கட்டளையிட்டான். எதிர்பார்க்கப்பட்ட இப்போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த அவர்களது போராளிகளின் எண்ணிக்கை இருபதாயிரத்துக்கும் முப்பதாயிரத்துக்கும் இடைப்பட்டிருந் தது.

யுத்தத்துக்குச் செல்வதென்ற தனது தீர்மானத்தை அறிவித்த நபி (ஸல்) அவர்கள், தன்னுடன் யுத்தத்துக்கு வந்த ஸஹாபாக்கள், புதிதாக இஸ்லாத்தை ஏற்று தன்னோடு இணைந்து கொண்ட மக்காவிலிருந்த ஏனைய ஸஹாபாக்களையும் அழைத்துக் கொண்டு ஹுனைன் பள்ளத்தாக்கை வந்தடைந்தார்கள்.

அவ்வேளை, ஹவாஸுன் கோத்திரத்தினரும் அவர்களது நேசர்களும் திடீரென அதிகாலை வேளையில் முஸ்லிம் படையைத் தாக்க ஆரம்பித்தனர். முஸ்லிம்களும் திருப்பித் தாக்கி அவர்களை வெற்றி கொண்டனர். முஸ்லிம்கள் கனீமத் பொருட்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது முஷ்ரிக்குகள் அம்புகளினால் முஸ்லிம் படையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்க ஆரம்பித்தார்கள். இதனால் அவர்கள் நிலை குலைந்து போயினர். மக்காவாசிகளும், ஏனைய புதிய முஸ்லிம்களும் பின்வாங்கி ஓடினார்கள். போராட்டக் களத்தில் உறுதியுடன் நிலைத்திருந்த நபி (ஸல்) அவர்கள் தனது கோவேறு கழுதையில் (Mule) அமர்ந்தவாறு ''நானே நபி, அதில் எந்தப் பொய்யும் இல்லை. நான் அப்துல் முத்தலிபின் மகன்'' எனக் குறிப்பிட்டார்கள்.

இவ்வேளை நபி (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற வதந்தி முஸ்லிம்களுக்கு மத்தியில் பரவவே முஸ்லிம் படையணியில் இருந்த பலர் நம்பிக்கையிழந்து தமது ஆயுதங்களைக் கீழே வைத்தனர். எனினும், முஹாஜிர்களிலும் அன்ஸாரிகளிலும் காணப்பட்ட ஒரு சில ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களைச் சுற்றி நின்று உறுதியுடன் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் குரல்வன்மை கொண்ட அப்பாஸ் (றழி), முஸ்லிம்களை நோக்கி அல்லாஹ்வின் தூதரவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள் என சத்தமிட்டுக் கூறினார்.

களத்தை விட்டு ஓடிக் கொண்டிருந்த ஸஹாபாக்கள் இதைக் கேட்டவுடன் களத்துக்கு திரும்பி வந்தனர். முஃமின்களது படை அதிகரித்தது. அவர்கள் முஷ்ரிக்குகளை இரண்டாவது தடவையாகவும் வெற்றி கொண்டார்கள். அவர்கள் தொடர்ச்சியாகப் போராடி முஷ்ரிக்குகளில் பலரைக் கொலை செய்ததோடு பலரை சிறைப்பிடித்தும் வைத்தார்கள். இந்த யுத்தத்தில் எதிரியிடமிருந்து பெற்ற பெருந்தொகையான கனீமத் பொருட்களை நபி (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு பகிர்ந்தளித்தார்கள். அன்ஸாரி கள் உறுதியான ஈமான் உடையோராக இருந்தமையினால் அவர்களுக்கு இவற்றில் எதனையும் வழங்கவில்லை.

இந்த யுத்தம் தொடர்பாக அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

''நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குப் பல போர்க்களங்களில் உதவி செய்திருக்கின்றான். (நினைவு கூறுங்கள்). ஆனால் ஹுனைன் (போர் நடந்த) அன்று. உங்களைப் பெருமகிழ்ச்சி கொள்ளச் செய்த உங்களுடைய அதிகமான (மக்கள்) தொகை உங்களுக்கு எவ்விதப் பலனும் அளிக்கவில்லை, (மிகவும்) பரந்த பூமி உங்களுக்கு (அப்போது) சுருக்கமாகிவிட்டது. அன்றியும் நீங்கள் புறங்காட்டிப் பின்வாங்கினீர்கள். பின்னர் அல்லாஹ் தன்னுடைய தூதர் மீதும், முஃமின்கள் மீதும் தன்னுடைய சாந்தியை இறக்கியருளினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீங்கள் பார்க்க முடியாப் படைகளையும் இறக்கி வைத்தான். (அதன் மூலம்) நிராகரிப்போரை வேதனைக்குள்ளாக்கினான் -இன்னும் இதுவே நிராகரிப்போரின் கூலியாகும்.'' (ஸூறா அத்தவ்பா: 25,26)*

முஸ்லிம்களுக்கும் நிராகரிப்பாளர்களுக்குமிடையில் இடம்பெற்ற இறுதிப் (கஸ்வா) போராட்டமாக இந்த யுத்தம் கருதப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அறபிகள் சிலைகளை உடைத்தெறிந்து விட்டு இஸ்லாத்தில் நுழைந்து கொண்டார்கள்.

## *11. தபூக் யுத்தம்*

ஹிஜ்ரி 9 ரஜப் மாதம் இடம்பெற்ற இப்போராட்டம் கஷ்டப் போராட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. தபூக் பிரதேசம் ஹிஜாஸில் உள்ள 'அல் குரா' பள்ளத்தாக்கிற்கும் ஷாம் பிரதேசத்துக்குமிடையில் அமைந்துள்ளது. உரோமர்கள் லஹூம், ஜுதாம், ஆமிலா, கஸ்ஸான் போன்ற அறபு கிறிஸ்தவ கோத்திரத்தினர் உள்ளிட்ட ஒரு பெரும் படையணியை ஷாம் பிரதேசத்திலே ஒன்று திரட்டினார்கள். இப்படையின் மூலம் மதீனாவைத் தாக்கி அறபுத் தீபகற்பத்திலே வளர்ந்துவரும் முஸ்லிம் தேசத்தை அழித்துவிட வேண்டுமென ஹிர்கல் மன்னன் இலக்கு வைத்திருந்தான். ஏனெனில், அதன் செய்திகளும் அது அடைந்து வருகின்ற வெற்றிகளும் அவனுக்குத் திகைப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருந் தன.

இதனை அறிந்து கொண்ட நபி (ஸல்) அவர்களும் மக்களை போராட்டத்துக்கு செல்லத் தயாராகுமாறு கட்டளையிட்டார்கள். குறித்த காலம் கடுமையான வெப்பம் நிறைந்த கஷ்டமான காலமாக இருந்தது. நல்ல உள்ளம் படைத்த உண்மை முஃமின்கள் அனைவரும் யுத்தத்துக்குச் செல்ல தயாராகினர். உண்மையான ஈமான் உடைய அவர்களில் மூவர் மாத்திரம் யுத்தத்திற்கு செல்லாது பின்வாங்கினார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் இந்தக் கஷ்டமான படையை தயார் செய்யுமாறு செல்வந்தர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். எனவே அவர்கள் அதிகமான செல்வங்களை அங்கு கொண்டு வந்து குவித்தார்கள். இந்தவகையில் அபூபக்ர் (றழி) அவர்கள் தன்னிடமிருந்த முழு செல்வத்தையும் (40,000 திர்ஹம்) உமர் (றழி) அவர்கள் தன்னிடமிருந்த செல்வங்களில் அரைப் பகுதியையும் இந்த யுத்தத்திற்கென வழங்கினார் கள். அதிகமான செல்வங்களை அன்பளிப்புச் செய்த உஸ்மான் (றழி) அவர்கள் படையின் மூன்றிலொரு பகுதியை தயார் செய்தார்கள். இதனைக் கண்ட நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் உஸ்மானைப் பார்த்து ''உஸ்மான் இதற்குப் பிறகு என்ன செய்தாலும் அது அவருக்குத் தீங்காக அமையாது'' எனக் கூறினார்கள்.

யுத்தத்திற்கு செல்ல வாகனமின்றி வறிய ஸஹாபாக்கள் சிலர் அல்லாஹ்வின் தூதரிடம் வந்தபோது நபி (ஸல்) அவர்கள் ''உங்களை அழைத்துச் செல்வதற்கு என்னிடம் வாகனம் எதுவுமில்லையே'' எனக் கூறினார்கள். இதனைக் கேட்ட அவர்கள் தமக்கு செலவழிக்க எவரும் இல்லாமையினால் ஏற்பட்ட கவலையில் தேம்பித் தேம்பி அழுதவர்களாக திரும்பிச் சென்றார்கள்.

முனாபிக்குகளில் எண்பது சொச்சம் பேர் யுத்தத்துக்கு செல்லாது பின்வாங்கினர். மேலும் சில அறபிகள் போலிக் காரணங்களைக் கூறி யுத்தத்திற்குச் செல்லாது நபி (ஸல்) அவர்களிடமிருந்து அனுமதி பெற்றுக் கொண்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தன்னுடன் 30,000 படை வீரர்கள், 10,000 குதிரைகள் அடங்கிய ஒரு படையை வழிநடாத்திச் சென்றார்கள். உண்மையில் இப்படை அக்காலத்தில் அறபுலகு கண்ட மிகப்பெரும் படையாகக் காணப்பட்டது. தபூக் வரை தொடர்ந்து பயணித்த முஸ்லிம் படை சுமார் 20 நாட்கள் அங்கு முகாமிட்டிருந்தது. எனினும் அவர்கள் அங்கு எந்தவொரு எதிர்ப்பையோ, யுத்தத்தையோ எதிர் கொள்ளவில்லை.

இப்போராட்டமே நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட இறுதிப் போராட்டம் என குறிப்பிடப்படுகிறது. இப்போராட்டம் தொடர்பாக அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> நிச்சயமாக அல்லாஹ் நபியையும் கஷ்ட காலத்தில் அவரைப் பின்பற்றிய முஹாஜிர்களையும், அன்ஸாரிகளையும் மன்னித்தான். அவர்களில் ஒரு பிரிவினருடைய நெஞ்சங்கள் தடுமாறத் தொடங்கிய பின்னர், அவர்களை மன்னித்(து அருள் புரிந்)தான் - நிச்சயமாக அவன் அவர்கள் மீது மிக்க கருணையும், கிருபையும் உடையவனாக இருக்கின் றான். (அல்லாஹ்வின் உத்தரவை எதிர்பார்த்து) விட்டு வைக்கப்பட்டிருந்த மூவரையும், (அல்லாஹ் மன்னித்து விட்டான்). பூமி இவ்வளவு விசாலமாக இருந்தும், அது அவர்களுக்கு நெருக்கமாகி அவர்கள் உயிர் வாழ்வதும் கஷ்டமாகி விட்டது- அல்லாஹ்(வின் புகழ்) அன்றி அவனைவிட்டுத் தப்புமிடம் அவர்களுக்கு வேறு எதுவும் இல்லை யென்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்- ஆகவே, அவர்கள் பாவத்திலிருந்து விலகிக் கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு, அவர்களை அல்லாஹ் மன்னித்தான். நிச்சயமாக அல்லாஹ் (தவ்பாவை ஏற்று) மன்னிப்பவனாகவும், மிக்க கிருபை யுடையவனாகவும் இருக்கின்றான். (அத்தௌபா: 117-118)

இது மாத்திரமன்றி இப்போராட்டத்தில் கலந்து கொள்ளாது போலிக் காரணங்கள் கூறி பின்வாங்கிய அறபிகள் தொடர்பாகவும், இப்போராட்டம் குறித்த நயவஞ்சகர்களது நிலைப்பாடு பற்றியும் அல்குர்ஆனில் பல வசனங்கள் இடம்பெற்றுள்ளன. நபி (ஸல்) அவர்கள், இவர்கள் கூறிய காரணங்களை ஏற்றுக்கொண்டமையைக் கண்டித்தும் ஆயத்துக்கள் இறங்கின. அதிகமாக இவ்வசனங்கள் ஸூறா அத்தௌபாவில் இடம் பெற்றுள்ளன.

## பாடங்களும் படிப்பினைகளும்

இஸ்லாத்தில் யுத்தம் அனுமதிக்கப்பட்டமை, அதற்கான காரணிகள், அதன் பொதுவிதிகள் என்பவற்றை ஆரம்பத்தில் நோக்குவோம்.

நபி (ஸல்) அவர்கள் தனது தஃவாப் பணியை நற்செயல்கள், நல்லுப தேசங்களினூடாகவே ஆரம்பித்தார்கள். தனக்கு இறங்குகின்ற அல்குர்ஆன் வசனங்களை சமூகத்தினருக்கு ஓதிக் காட்டினார்கள். அறபிகள் தமது வாழ்வின் அடிப்படையாக வைத்துக் கொண்டிருந்த சிலை வணக்கம், மூடநம்பிக்கை, வழிகேடு, மடமை போன்ற தீமைகளில் இருந்து அவர் களை விலக்கி, அவர்களது கண்களைத் திறந்து விடும் வகையில் நபி (ஸல்) அவர்கள் தனது உள்ளத்தாலும் அறிவாலும் அவர்களோடு உரையாடி னார்கள். என்றாலும் ஆரம்பத்தில் நபி (ஸல்) அவர்களை மறுத்து ஏளனம் செய்த அவர்கள், பிறகு அவர்கள் மீது கட்டுக் கதைகள் பரப்பி துன்பங்கள் கொடுக்க ஆரம்பித்தார்கள். இறுதியில் அவர்களைக் கொலை செய்து விடுவதற்கான சூழ்ச்சியில் இறங்கினார்கள்.

பின்னர் அல்லாஹ் தனது தூதரின் தஃவாப் பணிக்கு நிலையானதும், பாதுகாப்பானதும், அமைதியானதுமானதொரு இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தான். இப்புதிய தளத்திலும் நபி (ஸல்) அவர்கள் தனக்கு எதிராக சூழ்ச்சி செய்யக் கூடிய இரண்டு சக்திகளை எதிர்கொண்டார்கள்.

**1. குறைஷியர்:** நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொண்டமையும் மதீனாவாசிகள் இஸ்லாத்தின் தூதை ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டமையும் குறைஷியரது இருப்பை ஆட்டம் காணச் செய்தன. தமது திட்டங்களை துவம்சம் செய்து விடுமளவுக்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்திற்கூடாக பலம் பெற்றிருந்தார்கள்.

**2. யூதர்கள்:** நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் நிலைகொண்டதிலிருந்து யூதர்களுடன் நல்லுறவைப் பேண வேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்தினார்கள். எனினும் பொறாமை, தந்திரம், சூழ்ச்சி போன்ற தீய பண்புகள் யூதர்களின் இயல்போடு ஒட்டிப் பிறந்திருந்தன. எனவே நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் நிலைகொண்டு முஹாஜிர்களதும் அன்ஸாரிகளதும் தலைமைப் பொறுப்பை ஏற்ற மறுகணமே யூதத் தலைவர்கள் தமக்குப் போட்டியாக வந்துள்ள, மதீனாவை முழுமையாக ஆக்கிரமித்துள்ள தலைமை மீது கோபமும் பொறாமையும் கொள்ள ஆரம்பித்தனர்.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் தங்கியிருந்த ஆரம்ப காலங்களில், முஷ்ரிக்குகள் கூறுகின்றவற்றை பொறுமையோடு சகித்துக் கொள்ளுமாறு பணித்தே அல்குர்ஆன் வசனங்கள் இறங்கிக்கொண்டிருந்தன.

*"அன்றியும், அவர்கள் (உமக்கெதிராகக்) கூறுவதைப் பொறுத்துக் கொள்வீராக, மேலும், அழகான கண்ணியமான -முறையில் அவர்களை விட்டும் வெறுத்து ஒதுங்கி விடுவீராக."*
*(அல் முஸ்ஸம்மில்: 10)*

பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தி அல்குர்ஆன் வசனங்கள் இறங்குகின்றபோதெல்லாம் முஷ்ரிக்குகளின் அத்துமீறல்களும், துன்புறுத்தல்களும், சூழ்ச்சிகளும், அதிகரித்துக் கொண்டே சென்றன. அவ்வேளையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவும் பலவீனர்களாகவும் இருந்தமையின் காரணமாக அவற்றைத் தடுத்து நிறுத்த அவர்களால் இயலவில்லை.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் நிலை கொண்டதன் பிறகு முஸ்லிம்களுக்கு பலமும் பாதுகாப்பும் கிடைத்தன. அவ்வேளை, குறைஷியரின் எதிர்ப்பையும் யூதர்களின் சூழ்ச்சிகளையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. ஏனெனில், முஸ்லிம்களுக்கெதிராக அவர்கள் எந்த வேளையிலும் தாக்குதல் தொடுக்கக் கூடிய சூழ்நிலை காணப்பட்டது.

இஸ்லாம் யதார்த்தமான மார்க்கம் என்ற வகையில், அது யதார்த்தங்களை மறுத்து ஊகங்களைப் பின்பற்றுவதில்லை. வாழ்க்கைக்கான முழுமையான வழிகாட்டல்களைக் கொண்ட மார்க்கம் அதனை நிராகரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற, இழிவுபடுத்துகின்றவர்களுக்கு முன்னால் தற்போது நிறுத்தப் பட்டுள்ளது. எனவே, பலத்தை பிரயோகித்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியத் தேவை அந்த மார்க்கத்துக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக எதிர்ப்புகளுக்கு பதிலடி கொடுக்கவும் அசத்தியம் என்ற தீய சக்தியை அழித்து விடவும் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டது. ஏனெனில், இத்தகையதொரு நடவடிக்கையை எடுப்பதன் மூலம் மாத்திரமே சுதந்திரமான, சிறப்பான இந்த தஃவாவை மேற்கொள்வதற்கான வழி திறந்து விடப்பட முடியும். விளைவாக அந்த தஃவா அறிவோடு உரையாடி, உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி, சீர்கேடு களை இல்லாதொழிக்கும். நன்மையின் பால் வழிகாட்டக்கூடிய மைல் கற்களையும், நன்மையையும் நேர்வழியையும் நாடி வருவோரின் பாதைக் கான ஒளி விளக்குகளையும் அது தோற்றுவிக்கும்.

இதற்காகவும் இதுபோன்ற இன்னும் சில காரணங்களுக்காகவுமே அல்லாஹ் ஹிஜ்ரி 2ம் ஆண்டு பின்வரும் அல்குர்ஆன் வசனங்களை இறக்கி யுத்தம் செய்வதை அங்கீகரித்தான்.

''போர் தொடுக்கப்பட்டோருக்கு - அவர்கள் அநியாயம் செய்யப் பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த காஃபிர் களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டி ருக்கிறது. நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன். இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாய மின்றித் தம் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். ''எங்களு டைய இறைவன் ஒருவன்தான்'' என்று அவர்கள் கூறியதைத் தவிர (வேறெதுவும் அவர்கள் சொல்லவில்லை). மனிதர்களில் சிலரை சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும் கிறிஸ்தவக் கோயில்களும், யூதர்களின் ஆலயங்களும், அல்லாஹ் வின் திருநாமம் தியானிக்கப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப் பட்டுப் போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு திடமாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கோனும், (யாவரையும்) மிகைத்தோனுமாக இருக்கின்றான். அன்றியும், இவர்கள் (எத்தகையோரென்றால்) இவர்களுக்கு நாம் பூமியில் இடம்பாடாக்கிக் கொடுத்தால், இவர் கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடிப்பார்கள். ஸகாத்தும் கொடுப்பார்கள். நன்மையான காரியங்களைச் செய்ய ஏவுவார்கள். தீமையை விட்டும் விலக்குவார்கள். மேலும், சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது. *(அல்ஹஜ்: 39-41)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யுத்தம், அதனை அனுமதித்தல் தொடர்பாக இறங்கிய ஆரம்ப வசனங்களாகும். இவ்விடத்தில் இந்த வசனங்களை சிறிது ஆழமாக அவதானிப்பதனூடாக யுத்தம் செய்ய அனுமதிக்கப்பட்டமைக்கான காரணம், அதன் விளைவுகள், இலக்குகள் என்பவற்றை அறிந்துகொள்ள முயல்வது பொருத்தமானதெனக் கருதுகிறோம்.

(i) வசனத்தின் ஆரம்பப் பகுதியில் முஃமின்கள் யுத்தம் புரிவது அனுமதிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு முஃமின் கள் 'போர் தொடுக்கப்பட்டோருக்கு' (லில்லதீன யுகாதலூன) என்ற சொற்றொடரினூடாக விளக்கப்படுகின்றமை நோக்கத்தக்கதாகும். இந்த வகையில் 'யுகாதலூன்' என்பது 'முகாதலா' என்ற வசன அடியிலிருந்து பிறந்ததாகும். அதாவது யுத்தம் புரிய அனுமதி வழங்கப்பட்ட இந்த முஃமின்கள் யுத்தத்துக்கு உட்படுத்தப்பட்டே இருந்தார்கள். அதாவது அவர்கள் துன்புறுத்தல்களுக்கும் வேதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டிருந் தார்கள். அவர்கள் மீது யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. இதன்படி அவர்கள் மீது ஏலவே அநியாயங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தமை யின் காரணமாகவே யுத்தம் புரிய அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது.

நிராகரிப்பாளர்களின் அத்துமீறல்களுக்கு பதிலடி வழங்குவதாகவும், அவர்கள் முஸ்லிம்களை எதிர்க்க கையாளுகின்ற வழிமுறையைக் கையாண்டே அவர்களை எதிர்கொள்வதற்கான ஒரு நடவடிக்கையாகவுமே இது மேற்கொள்ளப்படுகிறது. இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் விளக்குகின்றன.

> "ஆகவே, எவனாவது (அம்மாதத்தில்) உங்களுக்கு எதிராக வரம்பு கடந்து நடந்தால், உங்கள் மேல் அவன் எவ்வளவு வரம்பு மீறியுள்ளானோ அதேயளவு நீங்கள் அவன்மேல் வரம்பு மீறுங்கள்." *(அல் பகரா: 194)*

> "இன்னும் தீமைக்குக் கூலி அதைப் போன்ற தீமையேயாகும்." *(அஷ்ஷூரா: 40)*

(ii) குறிப்பிட்ட இதே வசனத்தில் இன்னொரு விடயமும் விளக்கப் பட்டுள்ளது. அதாவது முஸ்லிம்கள் மீது முடுக்கி விடப்பட்டிருந்த இந்த யுத்தம் எவ்வித அடிப்படையுமற்ற அநியாயமும் அத்துமீறலுமேயாகும். இதனையே "அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பத னால்" என்ற பகுதி விளக்குகிறது. மக்காவில் வாழ்ந்த முஃமின்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநியாயக்காரர்களாகவோ கடின சித்தம் கொண்டவர்களாகவோ இருக்க வில்லை. மாறாக அவர்கள் தங்களுடைய அகீதா எனப்படும் 'நம்பிக்கைக் கோட்பாட்டை' பாதுகாத்து, தங்களுடைய சமூகத்தினரை கெட்ட பண்பு கள், மூட நம்பிக்கைகள், ஊகங்கள் போன்வற்றிலிருந்து விடுவிப்பதற்கு அழைப்பு விடுக்கக் கூடியவர்களா கவே காணப்பட்டார்கள்.

(iii) இரண்டாவது வசனம் அத்துமீறல்கள் இடம்பெற்ற வரலாற்று உண்மைகளை எடுத்துக் கூறுகிறது. அதாவது யுத்தம் புரிய அனுமதிக்கப் பட்ட இந்த முஃமின்கள் தமது வாழிடங்களிலிருந்து வெளியேற்றப் பட்டிருந்தார்கள். ஒரு மனிதனை தனது சொந்தப் பூமியிலிருந்து அல்லது நாட்டிலிருந்து பலவந்தமாக வெளியேற்றுவதை விட பாரிய அநியாயம் வேறு எதுவும் இருக்க முடியாது.

(iv) குறித்த அதே வசனத்தில் முஃமின்கள் தமது வாழிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கான காரணமும் விளக்கப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் சிலை வணக்கத்தையும் பிழையான பலதெய்வ வழிபாட்டையும் மறுத்ததன் காரணமாகவே அவர்கள் தமது சமூகத்துடன் முரண்பட்டார்கள். அத்துடன் அவர்கள் ஏக அல்லாஹ்வை மாத்திரமே வணங்கியும் வந்தார் கள். எனவே, அவர்கள் தாம் பின்பற்றிய அகீதாவுக்காகவே துன்புறுத்தப் பட்டார்கள். ஏனெனில், குறைஷியர் இது விடயத்தில் எவருக்கும் சுதந்திரம் வழங்க விரும்பாதிருந்தார்கள்.

(v) முஃமின்கள் தமது கொள்கைச் சுதந்திரத்தை இழந்திருந்தனர். எனவே, இந்த சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே யுத்தம் விதியாக்கப்பட்டது. ஏனெனில் இதுவே மனிதன் இந்த வாழ்க்கையில் கண்ணியப்படுகின்ற மிக உயர்ந்த பெறுமானமாகக் காணப்படுகிறது.

(vi) பின்னர் அல்லாஹ் யுத்தத்தை முஃமின்கள் மீது விதியாக்கியதனால் விளைந்த பயன் முஸ்லிம்களின் மதச் சுதந்திரத்தை மாத்திரம் பாதுகாத்துக் கொடுப்பதாக அமைந்திருக்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் புறத்தி லிருந்து இறங்கிய யூத கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றுகின்றவர்களும் இதன் மூலம் பயனடைந்தார்கள் என்பதை விளக்கிக் காட்டுகிறான். ஏனெனில், அன்று முஸ்லிம்கள் மத சிந்தனை இல்லாத சிலை வணங்கிக ளோடு தான் போர் புரிந்து வந்தார்கள். எனவே இதில் முஸ்லிம்களின் பலம் ஓங்கினால் நிச்சயம் அவர்கள் தமது பள்ளிவாயில்களைப் பாது காப்பது போலவே யூத, கிறிஸ்தவர்களின் வணக்கஸ்தலங்களையும் பாதுகாத்துக் கொடுக்க சக்தி பெறுவார்கள். இதனால் நாஸ்திகர்களும் சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கிகளும் அல்லாஹ்வினால் இறக்கப்பட்ட மார்க்கங்களோடு போராடி அவற்றின் வணக்கஸ்தலங்களை மூடிவிடுவதற்கு சக்தி பெறாது போய் விடுவார்கள். இதனையே பின்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்குகிறது.

> "மனிதர்களில் சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும் கிறிஸ்தவக் கோயில்களும், யூதர்களின் ஆலயங்களும், அல்லாஹ்வின் பெயர் ஞாபகப்படுத்தப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டுப் போயிருக்கும்." *(அல் ஹஜ்: 40)*

'அஸ்ஸவாமிஉ' என்ற சொல் துறவிகள் தனிமையில் இருக்கும் ஆசிரமங்களையும் 'அல்பியஉ' என்ற சொல் கிறிஸ்தவ கோயில்களையும் 'அஸ்ஸலவாத்' என்ற சொல் யூத ஆலயங்களையும் குறிக்கும்.

இதன்படி அல்லாஹ்வினால் இறக்கப்பட்ட மார்க்கங்களையும் அவற்றினுடைய வணக்கஸ்தலங்களையும் அழிப்பதற்காக இஸ்லாத்தில் யுத்தம் விதியாக்கப்படவில்லை. மாறாக நாஸ்திகர்களும் சிலை வணங்கிகளும் இந்த மார்க்கங்களை மிகைத்து விடாது பாதுகாப்பதற் காகவும், அவற்றின் ஆலயங்களை அவர்கள் அழித்து விட அல்லது மூடி விட சக்தி பெறாதிருக்கவுமே யுத்தம் விதியாக்கப்பட்டது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

(VII) விதியாக்கப்பட்ட இந்த யுத்தத்தில் முஃமின்கள் வெற்றி பெறுவதன் மூலம் அடையப் பெறக் கூடிய விளைவுகளை மூன்றாவது வசனம் விளக்கிக் காட்டுகிறது. மக்களை காலனித்துவத்துக்கு உட்படுத்துவதாகவோ, அவர்களது செல்வங்களையும் ஏனைய வளங்களையும் சூறையாடுவதாகவோ, அல்லது அவர்களை இழிவுபடுத்துவதாகவோ அவை ஒருபோதும் அமையப் போவதில்லை. மாறாக மனித நலனையும், சமூகங்களுக்கான பயன்களையும் பிரதிபலிப்பனவாகவே குறித்த விளைவுகள் அமைந்து காணப்படும். அவ்விளைவுகளாவன:

(அ) இபாதத்தினூடாக ஆன்மீக உயர்ச்சியை உலகில் பரப்பி விடுதல். (அவர்கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடிப்பார்கள்).

(ஆ) ஸகாத்தினூடாக மக்களுக்கு மத்தியில் சமூக நீதியை நிலைநாட்டுதல். (அவர்கள் ஸகாத்தும் கொடுப்பார்கள்).

(இ) சமூகத்தின் நன்மை, முன்னேற்றம், கௌரவம் உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல். (நன்மையான காரியங்களைச் செய்யவும் ஏவுவார்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) தீமை, குற்றம், சீர்கேடு போன்வற்றுக்கெதிராகப் போராடுவதற்கு ஒத்துழைத்தல். (அவர்கள் தீமையை விட்டும் விலக்குவார்கள்).

முஃமின்கள் யுத்தத்தில் எதிரிகளை வெற்றி கொள்வதால் பெறப்படுகின்ற விளைவுகளே இவை. அதாவது இதன் மூலம் இஸ்லாமிய அரசொன்று உதயமாகும். அது ஆன்மீக உயர்ச்சிக்காகவும், சமூக பொறுப் புணர்வுக்காகவும், நற்செயல்களினூடான மனித முன்னேற்றத்திற்காகவும், வீழ்ச்சிப் பாதையிலிருந்து மனித சமூகத்தை மீட்டெடுப்பதற்காகவும் செயற்படும் எனலாம்.

யுத்தம் விதியாக்கப்பட்டமைக்கு இதனை விட உயர்ந்ததொரு மனிதாபிமான நோக்கம் இருக்க முடியுமா? முழு மனித இனத்துக்கும் பயனளிக்கக் கூடிய, அனைத்து சமூகங்களையும் காத்திரமான முன்னேற் றம், அபிவிருத்திப் பாதையில் அழைத்துச் செல்லக் கூடிய இந்த நோக் கத்தை அடிப்படையாகக் கொண்டமைந்த எந்தவொரு யுத்தத்தையும் உலகம் கடந்த காலங்களிலோ, நிகழ்காலத்திலோ கண்டதில்லை. இஸ்லாமியப் போராட்டம் ஆரம்ப ஜாஹிலிய்ய சமூகம் பின்பற்றிய அடிப்படைகளையோ, அதே போன்று சடவாத மேலைத்தேய நாகரிகம் பின்பற்றுகின்ற அடிப்படைகளையோ ஒரு போதும் பின்பற்றியதில்லை.

இஸ்லாத்தில் யுத்தம் அனுமதிக்கப்பட்டமைக்கான நோக்கங்களை நாம் அறிந்து கொண்டால், அது அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் ஒன்று என்பதற்கான அர்த்தத்தையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள் வோம். இந்தவகையில் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதென் பது நன்மை, சமாதானம், முன்னேற்றம், நீதி போன்றவற்றை சமூகங்க ளுக்கு ஈட்டிக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகும். அல்லாஹ்வின் பாதையே அதன் வழியாகும். அல்லாஹ்வை நோக்கிய பாதை நன்மை, அன்பு, இறையச்சத்திலும் நல்ல விடயங்களிலும் பரஸ்பர ஒத்துழைப்பு போன்றவற்றின் அடியாகவே அமைந்து காணப்படும். மாறாக அது தீமை, அத்துமீறல் போன்றவற்றின் அடிப்படையில் அமைந்தி ருக்காது.

இஸ்லாத்தில் யுத்தம் அனுமதிக்கப்பட்டமைக்கான நோக்கங்களும் அதற்கான வரலாற்றுக் காரணிகளும் இங்கு சுருக்கமாக விளக்கப்பட்டுள் ளன. தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இடம்பெற்ற ஆரம்ப போராட்டங்களில் இருந்து பெறப்படக் கூடிய பாடங்களையும், படிப்பினைகளையும் இங்கு நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் ஒவ்வொரு போராட்டத்தையும் தனித்தனியே எடுத்து அவற்றின் படிப்பினைகள் குறித்து பேச வேண்டும் என விரும்பியிருந் தேன். எனினும் கால அவகாசமின்மையாலும் குறித்த பணி அதிக பக்கங்களை எடுத்துக் கொள்ளும் என்பதாலும் ஒரே தடவையில் இந்த அனைத்துப் படிப்பினைகளையும் தொகுத்து வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டேன். ஒவ்வொரு யுத்தத்திலிருந்தும் ஒரு படிப்பினைக்குக் குறையாத வகையில் இங்கு எடுத்துரைத்துள்ளேன்.

1. இந்த யுத்தங்களில் முதல் யுத்தமாக பத்ர் யுத்தம் கருதப்படுகிறது. ஷாம் தேசத்திலிருந்து மக்கா நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த குறைஷிக் கோத்திர வியாபாரக் கூட்டத்தை வழிமறிப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் வெளியேறிச் சென்றிருந்தார்கள். எனினும், வியாபாரக் கூட்டம் தப்பிச் சென்றுவிட்டது. முஷ்ரிக்குகள் முஸ்லிம்களுடன் யுத்தம் புரிய வேண்டும் என உறுதியுடன் இருந்ததன் காரணமாக நாம் ஏற்கனவே விளக்கியது போல யுத்தம் மூண்டு நடந்தவை நடந்து முடிந்தன.

முஸ்லிம்கள் குறைஷியரின் வியாபாரக் கூட்டத்தை வழிமறிக்கச் சென்ற மையானது, கீழைத்தேய பொய்யர்கள் வாதிடுவது போல அவர்களது செல்வங்களை சூறையாடுவதற்காகவோ அல்லது வழிப்பறிக் கொள்ளை யில் ஈடுபடுவதற்காகவோ மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட முடியாது. மாறாக குறைஷியர் ஹிஜ்ரத் வந்த முஃமின்களின் செல்வங்களை சூறை யாடியமைக்கு பழிவாங்குவதே குறித்த செயலை ஊக்குவித்த காரணியாக அமைந்து காணப்பட்டது. ஹிஜ்ரத் வந்த ஸஹாபாக்கள் தமது வீடு வாசல்களையும் ஏனைய சொத்து செல்வங்களையும் மக்காவிலேயே விட்டு விட்டு வருவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவர்கள் ஹிஜ்ரத் மேற் கொண்டு மக்காவிலிருந்து வெளியேறிச் சென்று விட்டார்கள் என்பதை அறிந்த மறுகணமே காபிர்கள் அவர்களது வீடு வாசல்களை விற்று விட்டார் கள். அவர்களது சொத்து செல்வங்களை ஆக்கிரமித்துக் கொண்டார்கள்.

எனவே, சர்வதேச சட்டங்கள் அங்கீகரிக்கின்ற 'பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் கோட்பாட்டின்' (Recinrocal Theory) அடிப்படையில் அவர் களோடு இவ்வாறு நடந்து கொள்வது ஆகுமானதே. இந்த நிலையே இன்று எமக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் காணப்படுகிறது.

பத்ர் யுத்தத்துக்கு முன்னர் ஏழு தடவைகள் குறைஷியரின் வியாபாரக் கூட்டத்தை வழிமறிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது இங்கு அவசியம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முயற்சிகளின்போது முஹாஜிர்கள் மாத்திரமே சென்றனர். அன்ஸாரிகள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில், முஹாஜிர்கள் குறைஷியரின் வியாபாரக் கூட்டத்தை வழிமறித்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டால், குறித்த செயல் அனைத்து இறை சட்டங்களும், மனித சட்டங்களும் அங்கீகரித்த தமது உரிமையொன்றை அடைய முயற்சித்த தாகவே கருதப்படும். குறித்த ஏழு முயற்சிகளும் பின்வருமாறு.

''ஹிஜ்ரத் செய்து 7 மாதங்களில் ஹம்ஸா (றழி) அவர்களை அனுப்பியமை.

- ஹிஜ்ரத் செய்து 8ஆவது மாதத்தில் உபைதா இப்னுல் ஹாரிஸ் (றழி) தலைமையிலான சிறியதொரு படையை (ஸரிய்யா) அனுப்பியமை.
- ஹிஜ்ரத் செய்து 9ஆவது மாதத்தில் ஸஃத் பின் அபீ வக்காஸ் (றழி) தலைமையிலான சிறியதொரு படையை (ஸரிய்யா) அனுப்பியமை.
- ஹிஜ்ரத் செய்து 12 மாதங்களில் இடம்பெற்ற 'கஸ்வது வதான்' யுத்தம்.
- ஹிஜ்ரத் செய்து 13 மாதங்களில் இடம்பெற்ற 'கஸ்வது பவாத்' யுத்தம்.
- ஹிஜ்ரத் செய்து 13 மாதங்களில் இடம்பெற்ற 'முதல் பத்ருப் போர்'.
- ஹிஜ்ரத் செய்து 16 மாதங்களில் இடம்பெற்ற 'கஸ்வதுல் அஷீரா' எனும் யுத்தம்.

இவ்வனைத்து யுத்தங்களிலும், சிறு படைகளிலும் முஹாஜிர்கள் மாத்திரமே பங்கெடுத்தனர். ஒரு அன்ஸாரி கூட அவற்றில் இடம்பெற்றிருக்கவில்லை. இது நாம் மேலே குறிப்பிட்ட உண்மையை மேலும் உறுதிப்படுத்துவதாய் உள்ளது.

2. யுத்தங்களில் வெற்றி பெறுவதென்பது ஆள், ஆயுத பலங்களினால் தீர்மானிக்கப்படுவதில்லை. படையினரின் ஆன்மீக பலத்தின் அடிப்படையில்தான் அது தீர்மானிக்கப்படுகிறது. இந்த யுத்தங்களில் பங்கேற்ற முஸ்லிம் படை தூய அகீதாவையும் சீரான ஈமானையும் பிரதிபலிப்பதாக இருந்தது. அது அல்லாஹ்வின் பாதையில் உயிர்த் தியாகம் செய்வதை மகிழ்ச்சியுடன் ஏற்கின்ற, அல்லாஹ்வின் கூலியையும் சுவனத்தையும் அடைந்து கொள்ள ஆசை கொள்கின்ற படையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அப்படை வழிகேடு, பிளவு, பிரச்சினையிலிருந்து விடுதலை அடைவதையிட்டு மகிழ்ச்சியடையக் கூடியதாகவும் காணப்பட்டது. அதேவேளை முஷ்ரிக்குகளின் படையோ மிக மோசமான அநீதாவையும், கீழ்த்தரமான பண்பாடுகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது. அது சமூக ரீதியான பிணைப்பற்றதாகவும், உலக இன்பங்களில் மூழ்கியதாகவும் காணப்பட்டது. மாத்திரமன்றி, அழிந்து போகக் கூடிய பாரம்பரிய நடைமுறைகளையும், கடந்த கால மூதாதையர்களையும் போலியான கடவுள்களையும், குருட்டுத்தனமாகப் பின்பற்றுகின்ற இயல்பைக் கொண்டதாகவும் குறித்த படை காணப்பட்டது.

யுத்தம் ஆரம்பிக்க முன்னர் இரண்டு படைகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளை அவதானியுங்கள். பத்ருப் போர் ஆரம்பிக்க முன்னர் முஷ்ரிக்குகள் மதுபானம் அருந்தி பெண்கள் மேளம் தட்டி இசை பாட, நெருப்பு மூட்டி பத்ரில் மூன்று நாட்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு கழிக்க வேண்டும் எனவும், தாம் செய்கின்றவற்றை கேட்டு அறபுலகம் அச்சம் கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் ஆசை கொண்டனர். இதனை அவர்கள் வெற்றிக்கான ஒரு வழியாகக் கருதினர்.

அதேவேளை முஸ்லிம் படை வீரர்களோ யுத்தம் ஆரம்பிக்க முன்னர் தங்களது உள்ளங்களை அல்லாஹ்வின்பால் நோக்கச் செய்து அவனிடம் வெற்றியையும், ஷஹாதத்தையும் கேட்கக் கூடியவர்களாகவும், சுவனத்து வாடைகளை நுகரக் கூடியவர்களாகவும் இருந்தனர். அல்லாஹ்வின் தூதரவர்கள் அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்தவர்களாகவும் அவனிடம் முஃமினான அடியார்களுக்கு வெற்றியை வழங்குமாறு வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டவர்களாகவும் காணப்பட்டார்கள். விளைவாக அல்லாஹ்வை அஞ்சிய நல்லடியார்கள் வெற்றி பெற்றார்கள். அவனை மறந்து பொடுபோக்காக இருந்தவர்கள் தோல்வியடைந்தார்கள்.

ஒவ்வொரு யுத்தத்திலும் பங்குகொண்ட முஸ்லிம் படையினதும் நிராகரிப்பாளர்களின் படையினதும் எண்ணிக்கையை ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தால், அவர் முஷ்ரிக்குகளின் படை முஸ்லிம்களின் படையை விட எண்ணிக்கையில் பன்மடங்கு கூடியதாக இருந்ததை அவதானிப்பார். அவ்வாறிருந்தும் முஸ்லிம் படையே அவற்றில் வெற்றிவாகை சூடியதைக் கண்டு கொள்வார். முஸ்லிம்கள் வெற்றி பெற்ற உஹத், ஹுனைன் போராட்டங்களிலும் கூட தமது தரப்பில் தவறுகள் இடம்பெறாது, (ஸல்) அவர்களின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடந்திருந்தால் ஆரம்பத்தில் அவர்கள் சந்தித்த தோல்விகளைக் கூட ஒருபோதும் சந்தித்திருக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. யுத்தத்தில் குதிக்க வேண்டுமென்பதில் படையினர் காட்டும் உத்வேகமும், அவர்கள் எதிரியை எதிர்கொள்வதில் காட்டும் மகிழ்ச்சிப் போக்குமானது, படைத்தலைவர் தனது திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான உந்து சக்தியாகவும் அல்லாஹ்வின் உதவியிலும், வெற்றியிலும் ஆழ்ந்த நம்பிக்கையை அவரிலே ஏற்படுத்தும் ஒரு காரணியாகவும் அமையும். இதுவே பத்ருப் போரிலும் நிகழ்ந்தது.

4. படை வீரர்கள் யுத்தத்தில் குதிப்பதற்கு விருப்பமற்றவர்களாக இருக்குமிடத்து அவர்களது விருப்பத்தையும் உறுதியையும் உறுதிப் படுத்திக் கொள்ளும்வரை அவர்களை படைத் தலைவர் யுத்தம் புரிய நிர்ப்பந்திக்கக் கூடாது. இதன் காரணமாகவே, நபி (ஸல்) அவர்கள் பத்ருடைய தினத்தில் யுத்தத்தில் குதிக்கமுன் தனது ஸஹாபாக்களோடு ஆலோசனை நடத்தினார்கள்.

5. யுத்தத்திலும் தஃவாவிலும் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசையிருப்பின் படை வீரர்கள் தமது தலைவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் அவசியம் கவனம் செலுத்த வேண்டும். இதனைத் தலைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவரது வாழ்விலேயே தஃவாவின் வாழ்வும் தங்கியிருக்கிறது. அவர் அழிந்து விட்டால் யுத்தமும் தோல்வியில் முடிந்ததாகக் கருதப்படும்.

பத்ருப் போரின்போது நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு தனக்கு பல்லாக்கு ஒன்றைக் அமைப்பதற்கு அனுமதித்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். மேலும் உஹத், ஹுனைன் போன்ற யுத்தங்களின்போது எவ்வாறு உண்மை முஃமின்கள் ஆண்களும் பெண்களுமாக அனைவரும் நபி (ஸல்) அவர்களைச் சூழ்ந்து கொண்டு எதிரிகளின் அம்புகள் நபி (ஸல்) அவர்களைத் தாக்கிவிடாது தங்களைக் கேடயங்களாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் பார்த்தோம். நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உதவியிலும், தனது வீரத்திலும் நம்பிக்கை கொண்டவர் களாக இருந்த போதிலும் இந்த செயற்பாட்டை மறுக்கவோ நிராகரிக்கவோ இல்லை. மாறாக நபி (ஸல்) அவர்கள் தன்னைச் சூழ்ந்து கொண்டிருந்தவர் களைப் புகழ்ந்தார்கள். நஸீபா உம்மு அமாரா என்ற பெண்மணியைப் புகழ்ந்து அவரும் அவரது கணவனும் பிள்ளைகளும் தன்னுடன் சுவனத்தில் இருக்க வேண்டும் எனவும் பிரார்த்தித்தார்கள்.

6. அல்லாஹ் தனது உண்மையான முஃமினான அடியார்கள் யுத்தங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அவர்களை தன் தரப்பிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு படையை அனுப்பி பாதுகாக்கிறான். இதன் பின்னணியிலேயே பத்ரில் மலக்குமார்களை இறக்கினான். அஹ்ஸாப் போரில் காற்றை அனுப்பினான். இந்த முஃமின்கள் தன்னுடைய பாதையில் போராடுகின்றபோது எவ்வாறு அவன் அவர்களை விட்டும் ஒதுங்கியிருக்க முடியும். இதனையே அல்லாஹ் பின்வரும் வசனங்களில் எடுத்துக்காட்டுகிறான்.

"மேலும் முஃமின்களுக்கு உதவி புரிதல் நம் கடமையாகும்." (அர்ரூம் :47)

"நிச்சயமாக, அல்லாஹ் ஈமான் கொண்டவர்களை (முஷ்ரிக்குகளின் தீமைகளிலிருந்து) பாதுகாத்துக் கொள்கிறான்." (ஹஜ்: 38)

7. உண்மையான அழைப்பாளன் இயல்பாகவே தனது எதிரிகளுக்கும் நேர்வழி (ஹிதாயத்) கிட்ட வேண்டும் எனவும் அல்லாஹ் அவர்களது உள்ளங்களில் நேர்வழியை இட்டு விடுவதற்கான பாதை விசாலப்பட வேண்டுமெனவும் வேட்கை கொள்வான். இந்தப் பின்னணியில் இருந்து கொண்டுதான் நபி (ஸல்) அவர்கள் பத்ரில் பிடிபட்ட கைதிகளை நஷ்டஈடு பெற்று விடுவிப்பதற்கு விரும்பியதன் இரகசியத்தை நாம் விளங்கிக் கொள்கின்றோம். அவர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட வேண்டும். அவர்களுக்குப் பின்னர் தோன்றக் கூடிய அவர்களது சந்ததியினர் அல்லாஹ்வை வணங்கக் கூடியவர்களாகவும் அவன்பால் அழைக்கக் கூடியவர்களாகவும் மாறவேண்டும் என நபி (ஸல்) அவர்கள் எதிர் பார்த்தார்கள்.

இவ்வாறு நடந்து கொண்டமைக்காக அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களைக் கண்டித்தமையானது, குறித்த சந்தர்ப்பத்தில் இஸ்லாத்திற்கு வேறு ஒரு நலன் இருப்பதை அடிப்படையாகக் கொண்டமைந்திருக்க முடியும். அதாவது அல்லாஹ்வின் எதிரிகளை அச்சம் கொள்ளச் செய்து வழிகேடு, பிரச்சினைகளின் மூல வேர்களை முழுமையாக அழித்தொழிப்பதற்காக இருக்க முடியும். அதாவது, பத்ரில் சிறை பிடிக்கப்பட்ட கைதிகள் கொலை செய்யப்பட்டிருந்தால் தமது தலைவர்களும், முஸ்லிம்களுக்கு எதிராக பிரச்சினைகளை மூட்டிவிடக் கூடியவர்களும் தீர்த்துக் கட்டப்பட்டதன் விளைவாக குறைஷியரின் எதிர்ப்பு பலவீனப்படுத்தப்பட்டிருக்கும்.

நபி (ஸல்) அவர்கள் நஷ்டஈட்டை ஏற்றுக் கொண்டமைக்கு இன்னும் ஒரு இரகசியம் இருக்க முடியும் என எனக்குத் தோன்றுகிறது. நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாகிய அப்பாஸும் கைதிகளில் ஒருவராக காணப்பட்டார். அவர் தான் இஸ்லாத்தை தழுவியதாக அறிவிக்க முன்னர் நபி (ஸல்) அவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் உதவியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது பைஅதுல் அகபாவில் இரகசியமாக பங்கு கொண்டிருந்தார். குறைஷியரின் அனைத்து நகர்வுகள் குறித்தும் நபி (ஸல்) அவர்களுக்கு செய்தி அறிவிக்கக் கூடியவராகவும் அவர் இருந்தார். என்னைப் பொறுத்த வரை இவை அவர் நிச்சயமாக இஸ்லாத்தை இரகசியமாக ஏற்றிருந்தார் என்பதையும் ஆனால் அதனை வெளிப்படையாக அறிவிக்காது மறைத்து வைத்திருந்தார் என்பதையும் உறுதிபட நம்பச் செய்கிறது. எனவே, விடயம் இவ்வாறு இருக்கின்றபோது எவ்வாறு நபி (ஸல்) அவர்கள் அவரைக் கொலை செய்ய முடியும்.

அப்பாஸ் முஸ்லிமாக இருந்தார் என வைத்துக் கொள்வோம் எனின், நபி (ஸல்) அவர்கள், அப்பாஸை விதிவிலக்காக நோக்காது அவர் முஸ்லிமாக இருந்தும் அவரைக் கொலை செய்யத் தீர்மானித்திருப்பின் 'முஸ்லிமை கொலை செய்வது ஹராமாகும்' என்ற ஷரீஆ சட்டத்துக்கு முரணாக நபி (ஸல்) அவர்கள் நடந்து கொண்டதாக ஆகிவிடும்.

அப்பாஸ் முஷ்ரிக்காக இருந்தார் என வைத்துக் கொள்வோம் எனின், அல்லாஹ்வுடனும் றஸூலுடனும் போராடுகின்ற அனைவரையும் உறவுக் காரர், தூரமானவர் என்ற பேதம் பாராது அவர்களோடு யுத்தம் புரிய வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருக்க வேண்டும் என்பது ஷரீஅத் கூறும் கட்டளையாகும். இதனைக் கருத்திற் கொள்ளாது அப்பாஸ் முஷ்ரிகாக இருந்தும் நபி (ஸல்) அவர்கள் அவரை விடுதலை செய்திருப் பின், சந்தர்ப்பத்தை முஷ்ரிக்குகளும் முனாபிக்குகளும் பயன்படுத்தி இது விடயமாக மக்களிடம் பிரபல்யப்படுத்தியிருப்பார்கள். இதன் மூலம் நபி (ஸல்) அவர்களிடம் காணப்பட்ட நீதி தவறாது நடந்து கொள்ளும் பண்பு, அனைத்து விடயங்களிலும் மனோ இச்சையிலிருந்து தூரமாகி நிற்கும் போக்கு போன்றன குறித்து மக்களிடம் காணப்படும் நம்பிக்கையை பலவீனப்படுத்த அவர்கள் முயற்சித்திருப்பார்கள். இது எந்தவகையிலும் தஃவாவின் நலனுக்கு ஏற்புடையதாக அமைய மாட்டாது.

8. உறுதியான தூரநோக்குள்ள படைத் தலைவரின் கட்டளைக்கு முரணாக நடப்பது யுத்தத்தில் தோல்வியையே ஈட்டித் தரும். இதுவே உஹத் யுத்தத்தின்போது இடம்பெற்றது. நபி (ஸல்) அவர்கள் கட்டளை யிட்டதன் பிரகாரம் படைக்குப் பின்னால் நிறுத்தப்பட்டிருந்த அம்பு எய்தக் கூடிய வீரர்கள் தத்தமது இடங்களிலேயே உறுதியாக இருந்திருப்பின் முஷ்ரிக்குகள் முஸ்லிம்களைச் சூழ்ந்து யுத்தத்தின் ஆரம்பத்தில் அடைந்த தோல்வியை இறுதியில் வெற்றியாக மாற்றிக் கொள்ள சக்தி பெற்றிருக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மாறுசெய்வது சந்தர்ப்பங்கள் நழுவ விடப்படுவதற்கும், எதிரிகளின் வெற்றிக்கும் வழியமைத்துக் கொடுக்கும். இதனால் தான், முஃமின்கள் தமது தூதரின் கட்டளைக்கு மாற்றமாக நடந்தால் அல்லாஹ் வின் தண்டனை அவர்களுக்கு நிச்சயம் கிட்டும் என அல்குர்ஆன் பின்வருமாறு எச்சரித்துள்ளது.

''ஆகவே எவர் அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்''. *(அந்நூர்: 63)*

9. கனீமத் பொருட்கள் முதலான உலகியல் ஆசைகளில் மூழ்கிப் போவது போராட்டத்தில் தோல்வியையே பெற்றுத் தரும். உஹதுக் களத்தில் நிறுத்தப்பட்டிருந்த அம்பெய்துபவர்கள் கனீமத் பொருட்களை அடைந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கையில் தமது நிலைகளிலிருந்து விலகிச் சென்றபோது நடந்தது இதுதான். மாத்திரமன்றி, ஹுனைன் போராட்டத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றபோது, அவர்களில் சிலர் கனீமத் பொருட்களில் வேட்கை கொண்டு எதிரிகள் தம்மைத் தொடர்வதைக் கவனிக்காது செயற்பட்டனர். இது எதிரிகள் திரும்பி வந்து முஸ்லிம்களைத் தாக்குவதற்கும், அவர்களை தோல்வி யடையச் செய்வதற்கும் வழிவகுத்தது.

நபி (ஸல்) அவர்களும் அவரைச் சூழவிருந்த உண்மையான முஃமின் களும் உறுதியோடிருந்து போராடியிருக்காவிட்டால் இந்தத் தோல்வி தெளிவான வெற்றியாக ஒருபோதும் மாறியிருக்க மாட்டாது. இதுதான் தஃவா அமைப்புகளினதும் நிலமை. அழைப்பாளர்கள் உலக இலாபங் களை அடைந்து கொள்ளவும் சொத்து செல்வங்களை அதிகரித்துக் கொள்ளவும் ஆசை கொண்டு செயற்படும்போது குறித்த தஃவா இயக்க மும், அது உள்ளங்களில் ஏற்படுத்திவிட்ட தாக்கமும் சீர்கெட்டுப்போய் விடுகிறது. ஏனெனில் இத்தகைய செயற்பாடானது அழைப்பாளன், தான் அழைப்பு விடுக்கின்ற விடயத்தில் எவ்வளவு தூரம் வாய்மையுடன் நடந்து கொள்கிறான் என்பதில் மக்களுக்கு மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தி விடுகிறது.

மட்டுமன்றி அவன் தனது தஃவாப் பணியை அல்லாஹ்வை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளவில்லை. மாறாக சீர்திருத்தம், மார்க்கம் என்ற பெயரில் அழிந்து போகக் கூடிய உலக செல்வங்களை சேகரித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதையே இலக்காகக் கொண்டு செயற்படுகிறான் என அவன் மீது குற்றம் சுமத்துவதற்கும் அவர்களைத் தூண்டி விடுகிறது. மக்கள் மனதில் இத்தகையதொரு நம்பிக்கையை ஏற்படுத்துவதானது அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு தடையேற்படுத்துவதாகும். மாத்திரமன்றி உண்மையோடும், தூய்மையோடும் சீர்திருத்தத் பணியில் ஈடுபடும் ஒவ்வொருவர் மீதும் மேற்கொள்ளப்படும் அத்துமீறலுமாகும்.

10. முஸ்லிம்கள் உஹதுப் போரில் நபி (ஸல்) அவர்களை விட்டும் விலகிச் சென்றபோது நஸீபா உம்மு அமாராவும் அவரது கணவரும் பிள்ளைகளும் நபி (ஸல்) அவர்களைச் சூழவிருந்து உறுதியோடு போராடினார்கள். இது இஸ்லாமிய தஃவாப் பணிக்காக மேற்கொள்ளப் படும் போராட்டத்தில் முஸ்லிம் பெண் மிகப்பெரும் பங்காற்ற முடியும் என்பதற்கான பல்வேறு ஆதாரங்களில் ஒன்றாகும். மேலும் முஸ்லிம் பெண் தஃவாப் பணியின் சுமையை புதிதாக சுமந்து கொள்ள வேண்டிய தன் இன்றைய அவசியத் தேவையை வலியுறுத்திக் காட்டுவதாகவும் குறித்த சம்பவம் காணப்படுகிறது.

தாய்மார்கள், மனைவிமார்கள், யுவதிகள் என்ற அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் தஃவாப் பணியை அவள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாத்திரமன்றி தனது குழந்தைகளை அல்லாஹ்வின் மீதும் அவனது றஸூலின் மீதும் அன்பு செலுத்தக் கூடியவர்களாகவும், இஸ்லாத்தையும் அதன் போதனைகளையும் பற்றிப் பிடித்துக்கொள்ளக் கூடியவர்களாகவும், சமூகத்தின் நன்மைக்கும் அதன் சீர்திருத்தத்திற்குமாக செயற்படுகின்றவர்களாகவும் வளர்த்து விட வேண்டியது அவளது பணியாக இருக்கிறது.

தஃவாக் களத்திலே முஸ்லிம் பெண்கள் இல்லாதபோது அல்லது போதியளவு அவர்களது பிரதிநிதித்துவம் காணப்படாத போது அப்பணி மிக மெதுவாகவே தொடர்ந்து செல்லும். சமூகத்தில் அரைப் பங்கினராக இருக்கும் பெண்கள் சமூகம் இந்த அழைப்புப் பணிக்கு செவிதாழ்த்தாத வரை, அவர்களது உள்ளங்கள் நன்மையில் அன்பு வைக்கக்கூடியனவாகவும், மார்க்கத்தைப் பின்பற்றுவதில் முனைப்புடன் செயற்படக்கூடியனவாகவும், அதனது கொள்கையை உறுதியாக பற்றிப்பிடித்துக் கொள்ளக் கூடியனவாகவும் எழுச்சி பெறாதவரை சீர்திருத்தப் பணியானது குறையுடையதாகவே தொடர்ந்தும் இருக்கும்.

11. உஹதுப் போரிலே நபி (ஸல்) அவர்களுக்கு காயம் ஏற்பட்டது. அழைப்பாளர்கள் அல்லாஹ்வின் பாதையிலே உடலியல் ரீதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுத்தப்படுவார்கள். அவர்கள் தமது சுதந்திரத்தை மீறும் சிறைவைப்பு, கைது போன்ற நிகழ்வுகளை சந்திக்க நேரிடும். மாத்திரமன்றி அவர்கள் கொலை செய்யப்படக் கூட முடியும் என்பதை குறித்த நிகழ்வு சுட்டிக் காட்டுவதோடு அவற்றுக்கான ஆறுதலாகவும் அது காணப்படுகிறது. இது தொடர்பாக அல்லாஹ் அல்குர்ஆனிலே பின்வருமாறு சொல்லிக் காட்டுகிறான்.

''அலிஃப், லாம், மீம். 'நாங்கள் ஈமான் கொண்டிருக்கின்றோம்' என்று கூறுவதனால் (மட்டும்) அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப் படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம் -ஆகவே உண்மையுரைப்பவர்களை நிச்சய மாக அல்லாஹ் அறிவான். இன்னும் பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான்.'' *(அல் அன்கபூத்: 1-3)*

*12.* உஹதுப் போரிலே முஷ்ரிக்குகள், கொல்லப்பட்ட முஸ்லிம்களின் உடல்களை குறிப்பாக நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஹம்ஸா (றழி) அவர்களின் உடம்பை சிதைத்தார்கள். இச்செயலானது இஸ்லாத்தின் எதிரிகள் எந்த வகையிலும் மனிதாபிமானவற்றவர்கள், இரக்கமில்லாதவர்கள் என்பதற்கு ஒரு தெளிவான ஆதாரமாகும்.

உண்மையில் கொலையுண்டவரின் உடம்பைச் சிதைப்பதனால் கொலையுண்டவருக்கு எத்தகைய வேதனையும் ஏற்படுவதில்லை. இது அறுக்கப்பட்ட ஆட்டை உரிக்கும்போது அந்த ஆடு எவ்வாறு அச்செயலை உணராதிருக்குமோ அதனை ஒத்ததாகும். என்றாலும், அவர்களது உள்ளங்களில் நிரம்பிக் காணப்பட்ட மிக மோசமான பொறாமையை எடுத்துக் காட்டுவதாகவே குறித்த செயல் அமைந்துள்ளது. எந்தவொரு மனித உள்ளமும், உயிருள்ள எந்தவொரு படைப்பும் கவலை கொள்கின்ற இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளிலிருந்து இந்த உண்மை தெளிவாகின்றது.

உஹதில் கொல்லப்பட்ட முஸ்லிம்களோடு இவ்வாறு முஷ்ரிக்குகள் நடந்து கொண்டதைப் போலவே யூதர்களும் பலஸ்தீனில் போராட்டங்களின்போது கொல்லப்பட்ட எமது முஸ்லிம் சகோதரர்களோடும் நடந்து கொள்கிறார்கள். இவ்விரு பிரிவினருமே அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்ளாத தமது உள்ளங்களின் அடியிலிருந்து ஒரே வகையான ஊற்றையே வெளிப்படுத்துகிறார்கள். அதுதான் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் நேர்வழி பெற்ற, அல்லாஹ்வையும் அவனது றஸூல் மார்களையும் மறுமை நாளையும் மிகச் சரியாகவும், உண்மையாகவும், உறுதியாகவும் ஈமான் கொண்ட முஃமின்கள் மீது வெளிப்படுத்தும் பொறாமை ஆகும்.

*13.* நபி (ஸல்) அவர்கள் பத்ருப் போரின் போது யுத்தத்துக்கெனத் தான் தெரிவு செய்த தங்குமிடத்தை மாற்றிக் கொள்ளுமாறு கூறிய ஹப்பாப் இப்னு முன்திர் (றழி) அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் கைபர் போராட்டத்தின் போதும் அவர் கூறிய ஆலோசனையை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். மக்களின் விருப்பமோ நாட்டமோ இன்றி அவர்களை அதிகாரத்தின் மூலம் அடக்கி ஆள முயற்சிக்கும் சர்வாதிகாரிகளின் கர்வத்தை, குறித்த சம்பவங்கள் உடைத்தெறிந்து விடுகின்றன. அறிவும், சிந்தனையில் தூரநோக்கும் தமக்கே இருக்கிறது என்ற அவர்களது வாதம் அவர்களை மக்களது நாட்டத்திற்கு முரணாகச் செயற்படவும், அறிஞர்கள் சிந்தனையாளர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்து வாழவும் அவர்களைத் தூண்டியது.

ஆனால் அல்லாஹ் தனது பூரணத்துவமான இறுதி றிஸாலத்தின் சுமைகளை சுமப்பதற்கு தகைமை பெறுவதற்கான அனைத்துப் பண்பு களையும் வழங்கியிருந்த நபி (ஸல்) அவர்களோ இராணுவ விவகாரங் களிலும் யுத்த பூமிகளின் இயல்பு தொடர்பாகவும் அறிவுடைய தனது ஸஹாபாக்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். 'நான் அல்லாஹ்வின் தூதர். ' நான் இவ்வாறு ஏவினால் இவ்வாறு தடுத்தால் போதுமானது' என்று ஒருபோதும் நபி (ஸல்) அவர்கள் கூறவில்லை. மாறாக வஹியின் வழிகாட்டல் கிடைக்காத விடயங்களில் ஸஹாபாக்களின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இந்த வகையில் அனுபவத்திலோ அறிவிலோ மக்களை எந்த வகை யிலும் மிகைத்து விடாத சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக அல்லது தந்திரமான வழிமுறைகளின் ஊடாக அதிகாரத்தை தம் வயப்படுத்திக் கொண்ட அதிகமான ஆட்சியாளர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? தாம் ஆட்சி செலுத்துகின்ற அதிகமான விடயங்களில் அனுபவமோ அறிவோ மிகவும் குன்றிய இந்த மனிதர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? இவர்கள் கருத்துக் கூறக் கூடியவர்களோடு ஆலோசனை செய்வதும் உபதேசகர்களின் உபதேசங்களையும் அனுபவசாலிகளின் ஆலோசனைகளையும் ஏற்று நடப்பது அவர்கள் மீது கடமையாக மாட்டாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வாதிகாரிகளிடத்தில் காணப்படும் அகங்காரமானது அவர்களையும் அவர்களது சமூகங்களையும் அழித்து விட்டதை கடந்த கால நிகழ்கால வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும், அது சமூகத்தை பல தசாப் தங்களின் பின்னர் அல்லது பல நூறு வருடங்களின் பின்னரேயன்றி எழுந்து நிற்க முடியாதவாறு அதல பாதாளத்தில் தள்ளி விட்டுள்ளது. எனவே நபி (ஸல்) அவர்கள் பத்ரிலும் கைபரிலும் ஹப்பாப் (றழி) அவர்களின் ஆலோ சனையை ஏற்றுக் கொண்டமை ஒவ்வொரு தூய்மையான ஆட்சியாளனுக் கும் அறிவுள்ள படைத் தலைவனுக்கும் உண்மையான அழைப்பாளனுக்கு மான முன்மாதிரியாக காணப்படுகின்றது.

இஸ்லாத்தின் ஆட்சிக் கோஷங்களின் பிரதானமான ஒன்றாக 'ஷூறா' என்றழைக்கப்படும் 'கலந்தாலோசனை செய்தல்' என்ற விடயம் காணப்படுகின்றது.

''அன்றியும் தம் காரியங்களைத் தம்மிடையே கலந்தாலோசித்துக் கொள்வர். *(அஷ் ஷூரா: 38)*

மேலும் வரலாற்றிலே நிலைத்து வாழக்கூடிய முஸ்லிம் ஆட்சியாள னின் மிகப் பிரதானமான பண்புகளுள் ஒன்றாக ஒவ்வொரு துறையிலும் அவ்வத்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களோடு கலந்தாலோசனை செய்து, அவர்களோடு கருத்துப் பரிமாறல் செய்தல் என்ற பண்பு காணப்படுகிறது.

''தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும்.'' *(ஆல இம்ரான்:159).*

''ஆகவே (அவர்களை நோக்கி) 'நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாமலிருந்தால் (முந்திய) வேத ஞானம் பெற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங் கள்'' (என்று கூறுவீராக). *(அந்நஹ்ல்: 43), (அல் அன்பியா: 7).*

14. எல்லா யுத்தங்களின்போதும், ஸஹாபாக்கள் சுட்டிக்காட்டும் நேரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும, நபி (ஸல்) அவர்கள் முன்வரிசையில் இருந்து போராட்டத்தில் ஈடுபடக்கூடியவர்க ளாக இருந்தார்கள். எப்போதும் உறுதியும் துணிச்சலும் நிறைந்த ஒருவரே தலைமைத்துவத்துக்கு வரவேண்டும். கோழைகளும், சக்தியற்றவர்களும் மக்களுக்கோ, படைகளுக்கோ, சீர்திருத்த இயக்கங்களுக்கோ, தஃவா இயக்கங்களுக்கோ தலைமைத்துவம் வழங்க பொருத்தமற்றவர்கள் என்பதற்கான ஆதாரமாக நபி (ஸல்) அவர்களின் குறித்த நடவடிக்கை காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒரு தலைவர் அல்லது அழைப்பாளர் தனது சொல்லிலும் செயலிலும் காட்டும் துணிச்சலானது தன்னுடைய படைவீரர்களினதும், உதவியாளர்களினதும் உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்வதற்கு, மக்களுக்கு வழங்குகின்ற ஆயிரமாயிரம் உணர்வைத் தூண்டும் உபதேசங்களை விடவும், அதிகம் பயன்மிக்கதாக அமையும். பொதுவாக படைவீரர்களும் உதவியாளர்களும் தமது தலைமையினதும் முன்னோடியினதும் பலத்தைக் கொண்டுதான் பலம் பெறுகின்றனர். தலைமை எதிரிகளைச் சந்திக்கின்ற நிலமைகளில் கோழையாகிவிட்டால், கஷ்டங்களின் போது பலவீனம் அடைந்து விட்டால் அவர், தான் எந்த விடயத்துக்காக கொடி தூக்கியுள்ளாரோ அதற்கவர் பாரிய தீங்கிழைத்து விட்டார் என்றே கருத வேண்டி ஏற்படும்.

15. படை வீரர்களும் தஃவாவுக்கு உதவி செய்வோரும் தூர நோக்குள்ள உறுதியான தலைமை, நிறைவேற்ற உறுதி கொள்ளும் எந்தவொரு செயலுக்கும் முரணாக நடக்காமலிருப்பது அவசியமாகும். மிகப் பெரும் பொறுப்பை சுமந்த இத்தகைய தலைமை தன்னோடு இருப்பவர்களோடு கருத்துப் பரிமாறல் செய்து அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்த பிறகு குறித்த ஒரு விடயத்தில் இறங்குவதெனத் தீர்மானித்தார் எனின் அவர் நிச்சயம் நம்பிக்கைக்குரியவர். அவர்கள் அவரைப் பின்பற்றுவது கடமையாகும். ஹுதைபியா உடன்படிக்கையின்போது நபி (ஸல்) அவர்களோடு நடந்தது அதுதான்.

நபி (ஸல்) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார்கள். அவை தஃவாவின் நலனுக்கு உதவியாக இருந்தமை என்பது பின்னர் தெளிவானது. மேலும் அவ்வுடன்படிக்கை அவர்களுக்கு அரசியல் ரீதியான வெற்றியாகவும் அமைந்து விட்டது. உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு வருட காலத்தினுள் இஸ்லாத்தைத் தழுவியோரின் எண்ணிக்கை இதற்கு முன்னர் இஸ்லாத்தைத் தழுவியோரின் எண்ணிக்கையை விட பன்மடங்காக அதிகரித்தது.

இது இவ்வாறிருக்க உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் ஸஹாபாக்களுக்கு ஆரம்பத்தில் வருத்தத்தைக் கொடுத்தன. எந்தளவுக்கெனில் ஸஹாபாக்களில் சிலர் தமது தூதரும் தலைவருமாகிய நபி (ஸல்) அவர்களோடு பேண வேண்டிய ஒழுக்கப் பண்பாட்டு வரையறைகளையெல்லாம் மீறிச் சென்றனர். இதுபோன்றதொரு நிகழ்வே ரித்தத் (மதம் மாறியோர்) பிரச்சினை ஏற்பட்டபோது அபூ பக்ர் (றழி)க்கும் நிகழ்ந்தது. மதம் மாறியவர்களோடு யுத்தத்திற்குச் செல்லக் கூடாது என்பதே அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸஹாபாக்களினதும் கருத்தாக இருந்தது. ஆனால் அபூபக்ர் (றழி)யோ யுத்தம் புரிய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்தார். அவர் யுத்தம் செய்வதெனத் தீர்மானித்த உடனே ஸஹாபாக்கள் அவருக்குக் கட்டுப் பட்டார்கள். யுத்தத்திற்கு அவசரமாக தயாராகி அதிலே ஈடுபாட்டோடு பங்கேற்றார்கள். மதம் மாறியவர்களோடு யுத்தம் புரிவதென அபூபக்ர் (றழி) எடுத்த முடிவுதான் அறபுத் தீபகற்பத்தில் இஸ்லாத்தை நிலைக்கச் செய்தது. அத்துடன் முஃமின்கள் பூமியின் அனைத்துப் பாகங்களையும் வெற்றி கொண்டு நேர்வழிகாட்டிகளாக செல்வதற்கும் அதுவே வழிவகுத்தது என்பது பின்னர் தெளிவாகியது.

16. அஹ்ஸாப் போராட்டத்தின்போது நுஐம் இப்னு மஸ்ஊதிடம் முடிந்தளவு காபிர்களின் குழுக்களுக்கு மத்தியில் பிளவை ஏற்படுத்தி விடும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டார்கள். எதிரிகளோடு யுத்தம் புரியும்போது தந்திரங்களை கையாள்வது வெற்றிக்கு வழிவகுக்கும் என்றிருந்தால் அது ஷரீஆவில் அனுமதிக்கப்பட்டதாகும்.

இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் ஏமாற்றுதல், நம்பிக்கைக்கு துரோகம் செய்தல் என்பன தவிர்ந்த வெற்றிக்கும், உயிர்ப் படுகொலைகளைக் குறைப்பதற்கும் இட்டுச்செல்லக் கூடிய அனைத்து வழிமுறைகளும் ஆகுமானதாகும் என்பதற்கு குறித்த நிகழ்வு ஆதாரமாகும். இது நபி (ஸல்) அவர்களின் அரசியல், இராணுவ அறிவுப் பின்னணியிலிருந்து வந்த ஒன்று. இது இஸ்லாமிய பண்பாட்டு அடிப்படைகளோடு ஒருபோதும் முரண்படு வதாக அமைய மாட்டாது. ஏனெனில் யுத்தங்களின் போது உயிர் அழிவு களின் எண்ணிக்கையை குறைப்பது மனிதாபிமான நலனாகும்.

நிராகரிப்பும், தீமையும், குழப்பமும் தோல்வியடைவதால் பெறப்படக் கூடிய நன்மையானது மனிதாபிமான பண்பாட்டியல் நலனாகவே கருதப்படுகிறது. எனவே போராட்டங்களின்போது ஏமாற்றுகின்ற வழிமுறையைக் கையாள்வது அப்போராட்டங்களில் அதிகம் தீமைகள் இருப்பதாக கருதுகின்ற மனிதத்துவப் பண்பாடுகளோடு இயைந்து செல்வதாக அமைகிறது. நிர்ப்பந்தமாக யுத்தங்கள் ஏற்படின் அதனை எந்த வழியிலேனும் முடிவுக்குக் கொண்டு வருவது அவசியமானதாகும். ஏனெனில் நிர்ப்பந்தம் என்பது அதற்குரிய அளவை வைத்தே மதிப்பிடப் படுகிறது. ஒரு மார்க்கத்தை அல்லது ஒரு சமூகத்தை அல்லது ஒரு நிலத்தை பாதுகாப்பதற்காகவே அல்லாஹ் யுத்தத்தை கடமையாக்கினான். எனவே எதிரிகளை தோல்வியுறச் செய்யக்கூடிய வகையில் தந்திரங்களைக் கையாள்வது, நிராகரிப்பாளர்கள் எதிர்த்துப் போராடுகின்ற சக்தியத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமாக வெற்றியை ஈட்டித் தரும். இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் அஹ்ஸாப் போராட்டத்தின்போது உர்வத் இப்னு மஸ்ஊதிடம் 'யுத்தம் என்பது ஏமாற்றுவதே ஆகும்' எனக் குறித்துக் காட்டினார்கள். அனைத்து ஷரீஆக்களிலும், சட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையாக இது கொள்ளப்படுகிறது.

17. கர்தக் போராட்டத்தின்போது ஸல்மான் (றழி) வழங்கிய அகழி தோண்டும் ஆலோசனையை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அறபிகளுக்கு மத்தியில் அறிமுகமில்லாத ஒரு விடயமாகவே குறித்த செயல் காணப்பட்டது. சமூகத்திற்கு பயன் தரக்கூடிய வகையிலமைந்த ஏனைய சமூகங்களின் அனுபவங்களின் மூலம் பயன் பெற்றுக்கொள்வதில் இஸ்லாம் எந்த வகையிலும் பின்நிற்காது என்பதை இது எடுத்துக் காட்டு கிறது. சந்தேகமின்றி இந்த அகழியானது காபிர்களின் தாக்குதலிலிருந்து மதீனாவைப் பாதுகாப்பதற்கு அதிகம் பயனளித்தது.

மேலும், நபி (ஸல்) அவர்கள் இந்த ஆலோசனையை ஏற்றமையானது, அவர்களிடம் காணப்பட்ட நெகிழ்வுப் போக்கையும் அடுத்த சமூகங்களில் இருக்கின்ற நல்ல விடயங்களை ஏற்றுக் கொள்வதற்கான அவர்களது தயார் நிலையையும் எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு பலமுறை நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்தவகையில் நபி (ஸல்) அவர்கள் அரசர்களுக்கும் சமூகத் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்ப முற்பட்டபோது அனுப்புபவரின் பெயர் முத்திரையிடப்படாத எந்தக் கடிதத்தையும் ஏற்றுக்கொள்ளாதிருப்பது அவர்களின் வழக்கமாகும் எனக் குறிப்பிடப்பட்டது. எனவே உடனடியாக நபி (ஸல்) அவர்கள் 'முஹம்மத் றஸூலுல்லாஹ்' எனப் பொறிக்கப்பட்ட ஒரு மோதிரத்தை தனக்குத் தயார் செய்து தருமாறு பணித்தார்கள். அந்த மோதிரத்தைக் கொண்டே தான் எழுதுகின்ற கடிதங்களுக்கு முத்திரையிடக் கூடியவர்களாக இருந்தார்கள்.

மக்கா வெற்றியைத் தொடர்ந்து அறபுத் தீபகற்கத்தின் நாலா புறங்களிலி ருந்தும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தூதுக் குழுக்கள் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தபோது அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தூதுக் குழுக்களை அழகான பெறுமதியான ஆடைகளை அணிந்து வரவேற்பதே அரசர்களினதும் தலைவர்களினதும் வழக்கம் எனக் கூறப்பட்டது. எனவே நபி (ஸல்) அவர்கள் தனக்கு ஒரு ஆடையை கொள்வனவு செய்து தருமாறு பணித்தார்கள். அதன் விலை 400 திர்ஹம் அல்லது 400 கோவேறு கழுதை களின் பெறுமதியுடையது எனக் கூறப்படுகிறது. இந்த ஆடையை அணிந்து கொண்டுதான் தூதுக் குழுக்களை நபி (ஸல்) அவர்கள் வரவேற்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியானதும் காலத்தால் அழியாததுமான மார்க்கத்தை வழங்கி அனுப்பப்பட்ட நபி (ஸல்) அவர்களின் செயற்பாடு இவ்வாறுதான் இருந்தது. இது எல்லாக் காலங்களிலும் எல்லா சூழல்களிலும் தன்னைப் பின்பற்றுபவர்கள் ஏனைய சமூகங்களிடம் உள்ள தமக்குப் பயனளிக்கக் கூடிய நல்ல விடயங்களை, அவை ஷரீஆ சட்டங்களோடும் அதன் பொது விதிகளோடும் முரண்படாதபோது, அவசியம் ஏற்று நடப்பதுவே அவர்களுக்கு நலன் பயக்கும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு பயன்படுத்தாதிருப்பது இஸ்லாத்தின் இயல்பு ஏற்றுக் கொள்ளாத தேக்க நிலையாகவே கருதப்படும். இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

''ஆகவே (என்னுடைய) நல்லடியார்களுக்கு நன்மாராயங் கூறுவீராக! அவர்கள் சொல்லை - நல்லுபதேசத்தைச் செவியேற்று அதிலே அழகானதைப் பின்பற்றுகிறார்கள்''. *(அஸ்-ஸுமர்: 17-18)*

மேலும் ஏனைய சமூகத்தவர்களிடமிருந்து பயனுள்ள விடயங்களை எடுத்துக்கொண்ட நபி (ஸல்) அவர்களுடைய இயல்பும் இத்தகைய தேக்க நிலையை அங்கீகரிப்பதாக அமைந்திருக்கவில்லை. இதனைத்தான் நபி (ஸல்) அவர்கள் ''அறிவு என்பது முஃமினின் தவறவிடப்பட்ட ஒரு சொத்து அதனை அவர் எங்கு கண்டுகொண்டாலும் பெற்றுக்கொள்வார்'' என கூறினார்கள். *(பார்க்க: இஜ்லூனி அவர்களின் கஷ்புல் கபா).*

அண்மைக்காலங்களில் குறிப்பாக ஐரோப்பிய எழுச்சிக்குப் பின்னர் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் இந்த உன்னதமான அடிப்படையை கவனத்திற் கொள்ளாது செயற்பட்டனர். அவர்கள் ஏனைய சமூகங்களின் நல்ல விடயங்கள் அனைத்தையும் அவை தமக்கு அவசியமாக தேவைப்பட்டபோதும் அவற்றின் மூலம் பயன்பெறாது எதிர்த் தமையினால் வீழ்ச்சி கண்டார்கள். அடுத்தவர்கள் முன்னேற இவர்கள் பின்னோக்கிச் சென்றார்கள்.

''சகல காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது.'' *(அல்-ஹஜ்: 41)*

*18.* முஅத்தா போராட்டத்தின்போது நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம் படைக்கு வழங்கிய உபதேசங்கள் இஸ்லாமியப் போராட்டத்தில் எந்தளவு தூரம் மனிதாபிமானம் காணப்படுகின்றது என்பதை தொட்டுக் காட்டுகின்றன. அதாவது யுத்தத்திற்கு வராத எவரும் கொலை செய்யப்படக் கூடாது. அத்தியாவசியத் தேவைக்காகவன்றி யுத்தத்திற்கு செல்லும் வழியில் காணப்படக்கூடிய எதுவும் அழிக்கப்படக் கூடாது. இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேசங்களை ஸஹாபாக்களும் பிற்கால முஸ்லிம்களும் காலம் காலமாக பேணி வந்துள்ளனர். அவர்கள் செய்த யுத்தங்கள் வரலாறு கண்ட மிகவும் இரக்கவாஞ்சை நிறைந்த யுத்தங்களாக காணப்படுகின்றன. போராட்டக் களத்திலே மிக உயர்ந்த பண்பாடுடையோராக அவர்கள் காணப்பட்டனர். சமாதானத்தின்போது அடுத்தவர்களை விட மிகுந்த இரக்க சிந்தையுடை யோராகவும் அவர்கள் காணப்பட்டனர். இது தொடர்பாக முஸ்லிம்களுக் கென நல்ல பக்கங்களை வரலாறு பதிந்து வைத்திருப்பது போலவே நிராகரிப்பாளர்களுக்கென மிக மோசமான பக்கங்களையும் பதிந்து வைத்துள்ளது. இந்நிலைதான் இன்றுவரைக்கும் தொடர்ந்து வருகிறது.

சிலுவை வீரர்கள் பைத்துல் முகத்தஸை வெற்றி கொள்வதற்கு கையாண்ட காட்டுமிராண்டித்தனத்தையும் ஸலாஹுத்தீன் ஐயூபி அதனை மீட்டெடுத்தபோது அவர்கள் வெளிக்காட்டிய உயர்ந்த மனிதாபிமானத்தை யும் யார் தான் அறிய மாட்டார்கள். சிலுவைப் படையும் அதன் தலைவர் களும் திரிப்போலி, மஅர்ரா போன்ற இஸ்லாமிய நகரங்களை ஆக்கிரமித்த போது மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனத்தையும் முஸ்லிம் படையும் அதன் தலைவர்களும் அவற்றை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெ டுத்தபோது அவர்கள் வெளிக்காட்டிய இரக்கவாஞ்சையையும் எங்களில் யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

நாம் இன்று ஐரோப்பாவின் நயவஞ்சகம் நிறைந்த காலத்திலே வாழுகிறோம். அவர்கள் தம்மிடத்தில் தான் நாகரிகமும் மனிதாபிமானமும் இரக்கமும் மக்களுக்கு நன்மை செய்கின்ற விருப்பமும் இருக்கின்றதென வாதிடுகிறார்கள். ஆனால் அவர்கள் தான் நாடுகளை அழிக்கிறார்கள். பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் எனப் பார்க்காது குற்றமற்றவர்களை கொலை செய்கிறார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன் பூமியில் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட காலத்தில் மிகுந்த கவலையோடு நாங்கள் வாழ்ந்திருக்கிறோம். தியர் யாஸீன், குபையா, ஹைபா, யாபா, அக்கா, ஸபத் போன்ற பலஸ்தீனக் கிராமங்களிலும் நகரங்களிலும் யூதர்கள் மேற்கொண்ட காட்டுமிராண்டித் தனங்களையும் அடக்குமுறைகளையும் உலகமே அறியும். இவ்வாறிருந் தும் மனிதாபிமானத்துக்கெதிராக அவர்கள் செயற்பட்டுக் கொண்டே தம்மிடத்தில்தான் அது இருக்கின்றதென வாதிடுகின்றனர். ஆனால் நாங்களோ அந்த மனிதாபிமானத்திற்காக செயற்படுகின்றோம். அதனைக் கூறி நாம் பெருமையடித்துக் கொள்வதுமில்லை. ஏனென்றால் யுத்தத்தின் போதும் சமாதானத்தின்போதும் கடைப்பிடிக்க வேண்டிய அழகான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு அடிப்படைகளை உள்ளத்திலே சுமந்திருக்கும் சமூகத்தினர் நாங்கள். நாம் அவற்றை உள ஆறுதலோடும் அமைதியோடும் நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஆனால் நிராகரிப்பாளர்களின் உள்ளங்களின் ஆழத்தில் இந்த அடிப்படைகள் பதிந்தனவாக இல்லை. நயவஞ்சகத் தனத்தோடும் ஏமாற்றுகின்ற நோக்குடனுமே இவற்றுக்கான அழைப்பை அவர்கள் விடுக்கின்றனர்.

இரக்கம் நிறைந்த பலமான அல்லாஹ்வை ஈமான் கொண்ட சமூகத்தினர் நாங்கள். எங்களுடைய பலம் அன்பாகத்தான் இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரை அவர்களது சமூகங்களுடனான உறவுகளிலோ முஸ்லிம்களோடும் ஏனைய தமது எதிரிகளோடும் மேற்கொள்கின்ற போராட்டங்களிலோ இந்த அன்பினதும் இரக்கத்தினதும் எத்தகைய தாக்கத்தையும் காண முடியாது.

எங்களைப் பொறுத்தமட்டில் மனித சமூகத்தின் நன்மைக்காகவே எமது யுத்தங்கள் அமைந்து காணப்பட்டிருக்கின்றன. அவற்றின்போது நாம் மக்களுக்கு அதிகம் நன்மை செய்யக்கூடியவர்களாக இருந்து வந்திருக்கிறோம். ஆனால் அவர்கள் மேற்கொண்ட யுத்ததங்களோ காலனித்துவம், அதிகார அடைவு, செல்வங்களை சூறையாடுதல் போன்ற நோக்கங்களையே அடிப்படைகளாகக் கொண்டமைந்திருந்தன. எனவே அவர்கள் மக்களின் பரம விரோதிகளாகக் காணப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க நாங்கள் இன்று எங்களுடைய பூமியையும் உரிமையையும் கௌரவத்தையும் தற்காத்துக் கொள்வதற்காகவே அவர்களோடு யுத்தம் செய்து வருகின்றோம். மனிதாபிமானம், இரக்கம், கண்ணியம் போன்ற அடிப்படைகளை விளங்கிக் கொள்ளாத சமூகத்தோடு எங்களுடைய அடிப்படைகளை விட்டுக் கொடுப்பது எத்தகைய பயனையும் எமக்களிக்காது. எங்களுடைய றஸூலும் ஷரீஆவும் காட்டித் தந்த அடிப்படைகளை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டு மிகச் சரியான தீர்ப்பாளனாகிய அல்லாஹ் எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு தீர்ப்பை வழங்கும் வரை அவர்களோடு தொடர்ந்தும் போராடுவது எம்மீது கடமையாகும். அவனே தீர்ப்பாளர்களுக்கெல்லாம் மிகச் சரியான தீர்ப்பாளன்.

19. ஈமான், இஹ்லாஸ், உணர்வு போன்றவற்றில் படை சமநிலையற்றதாக இருந்து அதில் பலவீனர்களும் போலியானவர்களும் செல்வமீட்டுவதற்காகச் செயற்படுவோரும் காணப்படுமிடத்து, குறித்த படை எதிரிகளை வெற்றி கொள்ளும் என உத்தரவாதமளிக்க முடியாது. இதுவே ஹுனைன் யுத்தத்தில் நிகழ்ந்தது. இவ்வாறுதான் தஃவா இயக்கங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுக்காக கைதட்டக் கூடிய அதிக எண்ணிக்கையினரில் சார்ந்திருக் காது, அதன் பாதையில் தியாகம் செய்யக் கூடிய முஃமின்களின் எண்ணிக் கையிலேயே தங்கியிருக்க வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

20. நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற யுத்தங்களிலிருந்து நாம் பெறக்கூடிய இன்னுமொரு படிப்பினைதான் யஹூதிகள் தொடர் பான நபி (ஸல்) அவர்களின் நிலைப்பாடு. அதுபோன்று நபி (ஸல்) அவர்களது தஃவா தொடர்பான யூதர்களின் நிலைப்பாடு.

மதீனாவில் நிலைகொண்ட ஆரம்ப காலங்களிலேயே நபி (ஸல்) அவர்கள் யூதர்களுடன் சமாதான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண் டும் எனவும் அவர்களது செல்வங்களுக்கும் மார்க்கத்துக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் வேட்கை கொண்டார்கள். இது தொடர்பாக அவர்களுடன் சாசனமொன்றை எழுதினார்கள். எனினும் அவர்கள் ஏமாற்றுகின்ற சமூகமாக இருந்தமையால் சாசனம் எழுதப்பட்டு சொற்ப காலத்திலேயே நபி (ஸல்) அவர்களை கொலை செய்து விட சூழ்ச்சி செய்தார்கள். இது 'பனூ நுழைர்' யுத்தம் நிகழ்வதற்கு வழி வகுத்தது.

பிறகு நபி (ஸல்) அவர்களோடு மேற்கொண்ட உடன்படிக்கையை மிகவுமே இக்கட்டானதொரு சந்தர்ப்பமான 'அஹ்ஸாப்' போராட்டத்தின் போது அவர்கள் முறித்தார்கள். இது 'பனூ குறைழா' போராட்டம் நிகழ்வ தற்கு காரணமாக அமைந்தது. பின்னர் அவர்கள் மதீனாவை மோசமாகத் தாக்கி அங்கிருக்கும் முஃமின்களை அழித் தொழிக்க வேண்டும் என்ற நோக்கில் பல வழிகளிலும் ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்து ஆயுதங்களை தயார் செய்யலானார்கள். இது 'கைபர்' போராட்டம் நிகழ்வதற்கு காரண மாக அமைந்தது.

யூத சமூகத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நன்மை செய்வது ஒருபோதும் பயனளிக்காது. அவர்கள் வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டார்கள். உடன்படிக்கையை சீராக நடைமுறைப்படுத்த மாட்டார்கள். சிறியதொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டு விடுவார்கள். நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளில் பிழையேதும் இருக்கிறதா? அவர்களது சூழ்ச்சிகள், ஏமாற்றுதல், உடன் படிக்கையை முறித்தல் போன்ற மோசமான செயல்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் சூழ்ச்சி களையும் பிரச்சினைகளையும் எதிர்பார்த்துக் கொண்டு எப்போதுமே கலக்கத்தோடும் எச்சரிக்கையோடும் தான் தொடர்ந்தும் வாழ வேண்டுமா? எனவே நபி (ஸல்) அவர்கள் யூதர்களுக்கெதிராக மிகக் கடுமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை எடுப்பதனூடாக தனது புதிய தேசத்தின் எல்லைகளையும், தனது தஃவா அறபுத் தீபகற்பத்திலும் பின்னர் உலகின் நாலா பாகங்களிலும் பரந்து செல்வதையும் உத்தரவாதப்படுத்திக் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கடுமையாக நடந்து கொண்டதை ஒரு யூதன் அல்லது வெறிபிடித்தவன் அல்லது ஒரு காலனித்துவ வாதியே விமர்சிக்க முடியும்.

இதன் பின்னரான யூதர்களது வரலாறும் முழுமையாகவே சூழ்ச்சிகளும், ஏமாற்றுதல்களும் குழப்படிகளும் நிறைந்ததாகவே இருந்து வந்துள்ளது. ஏன் அவர்களது நவீன கால வரலாறும் கூட இந்தப் பண்புகளைப் பெற்றே காணப்படுகிறது. பலஸ்தீன் யுத்தத்திற்கும் இஸ்ரேல் அப்பூமியில் பிரகடனப்படுத்தப்பட முன்னரும் இந்த யூதர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி அவர்களோடு பரஸ்பரம் ஒத்துழைத்து வாழ வேண்டுமென எங்களில் சிலர் அழைப்பு விடுக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். யூதர்களோடு ஒத்துழைத்து வாழ வேண்டுமென்ற பெரிய நாடுகளில் உள்ள தமது நண்பர்களின் அழைப்புக்கு அடிமைபட்டுச் செல்லக்கூடியவர்களும் எம்மில் காணப்பட்டனர்.

இதன் விளைவாக பலஸ்தீன பிரச்சினையை கையாள்வதில் உறுதியான கருத்தொருமைப்பாட்டிற்கு வர முடியாது போய் இழிவடைய நேர்ந்தது. எனவே, யூதர்களின் தீங்கிலிருந்து விடுதலை பெறுவதெனில் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு அவர்களோடு கடுமையாக நடந்து கொண்டார்களோ அவ்வாறு நாமும் செயற்படுவதே நமக்குமுன் உள்ள ஒரே தீர்வாகும். இதன் மூலமே எமது நாடுகள் அமைதியடைய முடியும். பூமியிலுள்ள எல்லா சமூகங்களுக்கும் இஸ்லாத்தின் தூதையும் சமாதானத்தையும் சுமந்து செல்கின்ற எமது அடுத்த கட்டப் பணியில் எம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

அடுத்த பரம்பரைக்கு ஈமானோடும், உண்மையோடும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய அமானிதமே இது. இழிவுற்றிருக்கும் எமது இப்பரம்பரை இதனைச் செய்வதற்கு சக்தியற்றுப் போகுமிடத்து, வருகின்ற பரம்பரை நிச்சயம் இதனை சாதித்து முடிக்கும்.

21. ரோமர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நிகழ்ந்த முதல் சந்திப்பாக 'முஅத்தா' போராட்டம் கருதப்படுகிறது. நபி (ஸல்) அவர்கள் பஸரா கவர்னரிடம் அனுப்பிய தூதுவரை கஸ்ஸானிய அறபிகள் கொலை செய்திருக்காவிட்டால் போராட்டம் இடம்பெறாதிருந்திருக்க முடியும். எனினும் பஸரா கவர்னரிடம் அனுப்பப்பட்ட தூதுவரின் கொலையானது அத்துமீறிய ஒரு செயலாகவே அனைத்து இறைவேதங்களிலும் கருதப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. மேலும், இச்செயல் ரோமர்களின் இந்தக் கையாட்கள் மிக மோசமானவர்கள் என்பதையும், அவர்கள் அண்டை அயலவர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்கிறார்களில்லை என்பதையும் உறுதிப் படுத்துவதாய் உள்ளது. இதன் காரணமாக நபி (ஸல்) அவர்கள் ரோமத் தலைவர்களுக்கும், மக்களுக்கும் புதிய முஸ்லிம் தேசத்தின் பலத்தை எடுத்துக் காட்டி அது தன்னை தற்காத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதை எச்சரித்துக் கூறும் நோக்கிலும் இதன் பிறகு முஸ்லிம்களின் மீது அவர்கள் அத்துமீறுவது குறித்து சிந்திக்காதிருக்கவும் முஅத்தா படையை அனுப்புவதென தீர்மானித்தார்கள்.

முஸ்லிம்கள் முஅத்தாவை வந்தடைந்தபோது ரோமர்களையும் அவர் களது ஆளுகையின் கீழ் இருந்த கிறிஸ்தவ அறபிகளையும் உள்ளடக்கிய பெருந்தொகையானோர் கூடியிருப்பதைக் கண்டார்கள். இவர்கள் இரண்டு இலட்சம் பேர் வரை இருந்தனர் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகி றார்கள்.

இப்படையை ஹிர்கலின் (Heraclis) சகோதரன் வழிநடாத்தி வந்து இன்று அம்மானுக்கு அண்மையில் அமைந்துள்ள 'மஆப்' என்ற பிரசேத்தில் முகாமிட்டிருந்தான். ரோமர்கள் புதிய முஸ்லிம் தேசத்தை தாக்குவதற்கும் அதனை அழித்தொழிப்பதற்கும் உறுதியோடு இருக்கிறார் கள் என நபி (ஸல்) அவர்கள் எதிர்பார்த்தமையை உறுதிப்படுத்துவதாக அமைந்திருந்தது. ஏனெனில், அறபுத் தீபகற்பத்தில் சுதந்திரமானதோர் அறபு தேசம் உருவாவது அவர்களது நாடுகள் மீதான காலனித்துவத்திற்கும் ஹிஜாஸ் வரையான அதன் எல்லைகளில் வாழுகின்ற அறபிகளை அடிமைப்படுத்துகின்ற தமது செயற்பாட்டிற்கும் முடிவு கட்டும் எச்சரிக் கையாக அமையுமென அவர்கள் கருதினர். இவ்வாறு தான் முஸ்லிம் களுக்கும் ரோமர்களுக்குமிடையேயான யுத்தம் ஆரம்பமானது.

22. உண்மையான ஈமான் முஃமின்களுடைய உள்ளங்களில் எவ்வளவு தூரம் யுத்தம் புரிவதற்கான உத்வேகத்தைத் ஏற்படுத்தி அல்லாஹ்வின் பாதையில் செலவிடுவதற்கான உந்து சக்தியை வழங்குகிறது என்பதற்கும், வெப்பம், கஷ்டம், கடுமையான களைப்பு போன்றவற்றையெல்லாம் அல்லாஹ்வின் பாதையிலும் அவனது திருப்திற்காகவும் சகித்துக் கொள்ளத் தூண்டுகிறது என்பதற்கும் தபூக் யுத்தத்திலே தெளிவான ஆதாரங்களை கண்டு கொள்ள முடியும்.

இவ்வாறு தான் காரணமின்றி இந்த யுத்தத்திற்குச் செல்லாது பின்வாங்கிய மூன்று உண்மையான முஃமின்களின் விடயத்தில் நபி (ஸல்) அவர்கள், அவர்களுடனான உறவுகளை துண்டித்துக் கொள்ளுமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையிட்டார்கள். எனவே அவர்களது மனைவியர் பெற்றோர் உட்பட அனைத்து முஸ்லிம்களுமே அவர்களுடன் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டார்கள். இது அவர்களில் ஒருவரை பள்ளிவாயில் தூணில் தன்னைக் கட்டிக் கொள்ளவும் இன்னுமொருவரை வீட்டிலே சிறைப் படுத்திக் கொள்ளவும் நிர்ப்பந்தித்தது. சூரிய வெப்பத்திலிருந்து தப்பவும் ஓய்வெடுக்கவுமேயன்றி வேறு எத்தகைய நியாயமான காரணமுமின்றி தமது கடமையை நிறைவேற்ற பின்வாங்கிய இவர்களிடமிருந்து முஸ்லிம் கள் சிறந்ததொரு பாடத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே அல்லாஹ் அவர்களுக்கு மன்னிப்பை வழங்கினான். அது வரைக்கும் அவர்களின் இப்புறக்கணிப்பு தொடர்ந்தது.

23. மக்கா வெற்றியைப் பொறுத்தவரையில் அதிலிருந்து பெறக்கூடிய பாடங்களையும் படிப்பினைகளையும் ஓரிரு பக்கங்களில் விளக்குவ தென்பது சாத்தியமற்றதாகும். குறித்த நிகழ்விலே தனது எதிரிகள் மீது உள்ளத்தளவில் கூட பொறாமை கொள்ளாத இயல்புடையவர்களாக நபி (ஸல்) இருந்ததைக் காண்கின்றோம்.

நபி (ஸல்) அவர்களையும் அவர்களைப் பின்பற்றிய ஸஹாபாக்களை யும் அவரது தஃவாவையும் அழித்தொழிப்பதற்கான எந்தவொரு வழியை யும் விட்டுவைக்காது தொடர்ச்சியாக இருபத்தொரு வருடங்கள் யுத்தம் புரிந்த தனது எதிரிகளுடன் கூட நபி (ஸல்) அவர்கள் அன்புடன் நடந்து கொண்டார்கள். எனவே அவர்களை வெற்றி கொண்டு சிலை வணக்கத்தின் தலை நகர் தன் ஆட்சியின் கீழ் வந்தபோது அவர்களுக்காக பாவமன்னிப்புக் கோரி அவர்களை விடுதலை செய்து விட்டார்கள்.

இத்தகையதொரு செயலை வரலாற்றிலே வேறு எவரும் ஒருபோதும் செய்ததுமில்லை, செய்யப் போவதுமில்லை. தனது தஃவாவின் மூலம் எந்தவொரு அதிகாரத்தையும் ஆக்கிரமிப்பையும் அடைய விரும்பாத கண்ணியமிக்க தூதர் (ஸல்) அவர்கள் மட்டும்தான் இச்செயலை செய்தி ருக்கிறார்கள். ஏனெனில் அல்லாஹ் அவர்களை நேர்வழிகாட்டியாகவும் அறிவையும் உள்ளங்களையும் திறந்து விடக்கூடியவர்களாகவும் இருப்பதற் காகவே இவ்வுலகிற்கு அனுப்பினான். எனவே தான், நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி கூறியவர்களாக அல்லாஹ்வுக்குப் பயந்தவர்களாக மக்காவினுள் நுழைந்தார்கள். ஏனைய தலைவர்கள்போல பெருமை யடித்துக் கொண்டு செல்லவில்லை.

24. மக்கா வாசிகளோடு நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டமைக்கு இன்னுமொரு நோக்கம் இருக்க முடியும். அதாவது இந்த அறபு சமூகமே எதிர்காலத்தில் இத்தூதை உலகுக்கு சுமந்து செல்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியவர்களாக இருப்பார்கள் என்பதை அல்லாஹ் அறிந்து வைத்திருந்தான். எனவே அறபுலகின் தலைவர்களாயிருந்த அவர்கள் இஸ்லாத்திலே நுழைந்து அதன் தூதை உலக சமூகங்களுக்கு எடுத்துச் செல்வதற்காகவும், அப்பாதையில் அவர்கள் தமது உயிர்களையும் சொத்து சுகங்களையும் செலவழித்து அச்சமூகங்களின் குருட்டுத் தன்மையை போக்கி அவர்களை இருளில் இருந்து ஒளியின்பால் மீட்டெடுப்பதற் காகவும் அல்லாஹ் அவர்களை தொடர்ந்தும் வாழவிட்டான்.

25. நபி (ஸல்) அவர்கள் பங்கு கொண்ட யுத்தங்களிலிருந்து பெறக்கூடிய படிப்பினைகளில் இறுதியாக நாம் குறிப்பிடுவது, அல்லாஹ்வின் பாலான தஃவாப் பணியானது மனித அறிவு எண்ணிப் பார்க்க முடியாத குறுகிய கால எல்லைக்குள் வெற்றியில் முடிந்தது என்ற உயரிய படிப்பினையாகும். முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள். இஸ்லாம் என்பது அல்லாஹ்வின்பால் அழைப்பு (தஃவா) விடுத்தலேயாகும், அழைப்புப் பணிக்கும் அதனை மேற்கொள்கின்றவர்களுக்கும் அதனை நம்பியவர்களுக்கும் அதன் கொடியை சுமந்து செல்லக் கூடியவர்களுக்கும் வெற்றி உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றுக்கான மிகத் தெளிவான ஆதாரங்களுள் ஒன்றாக குறித்த வெற்றி காணப்படுகின்றது.

தஃவாப் பணியே சத்தியமானது. அதுவே அருளாகவும் ஒளியாகவும் இருக்கின்றது. எனவே, அல்லாஹ் அதனை விட்டு ஒருபோதும் ஒதுங்கி விட மாட்டான். அல்லாஹ்வே சத்தியவானாகவும் அருளாளனாகவும் அன்புடையோனுமாக இருக்கிறான். அவனது அன்பு முழு பிரபஞ்சத்தையுமே உள்ளடக்கியிருக்கிறது. வானங்கள் பூமி என்பவற்றின் ஒளியும் அவனே. அவனது ஒளியை அணைத்து விடுவதற்கு யார் தான் சக்தி பெறுவார்கள்? மேலும் எவ்வாறு அவன் அசத்தியம், சத்தியத்திற்கெதிராக இறுதி வெற்றியடைவதை திருப்தியுடன் ஏற்றுக்கொள்வான்? அன்பையும் சீர்திருத்தத்தையும் மோசமான காட்டுமிராண்டித்தனமும் குழப்பமும் இறுதியில் மிகைப்பதற்கு எவ்வாறு அவன் அனுமதிப்பான்?

உஹத், ஹுனைன் போராட்டங்களின் போது நபி (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் காயங்கள் ஏற்பட்டன. இது அழைப்புப் பணியின் போது சோதனைகளும் காயங்களும் இழப்புகளும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதை எடுத்துக் காட்டுகிறது. ''நிச்சயமாக அல்லாஹ் தனக்கு உதவி செய்பவர்களுக்கு உதவி செய்கிறான். நிச்சயமாக அல்லாஹ் பலமிக்கவனும் கண்ணியத்திற்குரியவனுமாவான்.'' *(அல்-ஹஜ்: 40)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் பிரிவு

# மக்கா வெற்றி கொள்ளப்பட்டது முதல் நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை இடம்பெற்ற சில முக்கிய நிகழ்வுகள்

## *1. ஹுனைன் யுத்தம்*

*நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் அல்லாஹ்வின் உதவியால் மக்காவை வெற்றி கொண்டதன் விளைவாக, நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் கிடைத்ததிலிருந்து 21 வருடங்களாக தொடர்ந்த குறைஷியரின் எதிர்ப்பலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. எனினும் இதனைத் தொடர்ந்து ஹவாஸுன் கோத்திரத்தினர் முஸ்லிம்களுக்கெதிராக யுத்தம் புரியத் தயாராகினர். விளைவாக இக்கோத்திரத்தினரோடு ஒரு யுத்தம் நிகழ்ந்தது. இதனையே ஹுனைன் யுத்தம் என அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த யுத்தம் குறித்த தெளிவுகளை ''ஸீறா இப்னு ஹிஷாம்'' என்ற வரலாற்று நூலிலே கண்டு கொள்ள முடியும்.*

*இப்போராட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய சில படிப்பினைகளை கீழே குறிப்பிடுகிறோம்.*

*01. பலம் மிக்க இளைஞனாக இருந்த 'மாலிக் பின் அவ்ப்' தலைமைத்துவ வேட்கை கொண்டவனாகவும், தனக்கு மாத்திரமே சீராக சிந்திக்கின்ற ஆற்றல் இருக்கிறது என தற்பெருமை அடிக்கக் கூடியவனாகவும் இருந்தான். இதன் காரணமாக 'துரைத் இப்னு அஸ்ஸும்மா'வின் ஆலோசனையை ஏற்க மறுத்தான். பலவீனமான வயோதிபனாக இருந்த துரைத்தின் ஆலேசனைக்கு கட்டுப்பட்டு விட்டான் என சமூகம் தன்னைப் பற்றிக் கதைத்தால் தனது பெருமைக்கு என்னவாகும் என எண்ணியே குறித்த*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனையை அவன் ஏற்க மறுத்தான். உண்மையில் துரைத்தின் ஆலோசனையை அவன் ஏற்றிருந்தால் தனது சமூகத்தின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட பாரிய அழிவுகளைத் தவிர்த்திருக்க முடியும். மாத்திரமன்றி தனது சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் முஸ்லிம்களால் சிறைப்பிடிக்கப்பட வழிவகுத்ததன் காரணமாக ஏற்பட்ட பெரும் இழிவையும் தவிர்த்துக் கொண்டிருக்க முடியும்.

பொதுவாக கர்வமும், தலைமைத்துவ அகங்காரமும் மனித சமூகங் களை அழிவிற்கு இட்டுச் சென்று இறுதியில் அவற்றைத் தோல்வியடையச் செய்து விடுகின்றன. இந்த அகங்காரமே மாலிக் பின் அவ்பை, நீண்ட போராட்டங்களுக்கும் கடுமையான சோதனைகளுக்கும் பின்னர் குறைஷி யரின் அகங்காரத்தை அடக்கி அடிபணிய வைத்த, இஸ்லாத்தின் சக்திக்கு முன்னால் அடிபணிய மறுக்கச் செய்தது. தன்னிடமிருக்கும் ஆட்பலம், செல்வங்களை வைத்து புதிதாக எழுந்துள்ள இஸ்லாம் என்ற சக்தியின் பலத்தையும் அதன் இலட்சியங்களையும், அதன் கட்டமைப்பையும், அதனைப் பின்பற்றுவோரையும் மிகைத்து விட முடியும் என அவன் எண்ணியிருந்தான். மேலும், இந்த அகங்காரத்தின் காரணமாகவே தோல்வி யைத் தவிர்க்கும் நோக்கில் படை வீரர்கள் தமது பெண்களையும், செல்வங் களையும் தம்மோடு யுத்தத்துக்கு அழைத்து வர வேண்டுமென அடம் பிடித்தான். இந்த விடயத்தில் 'தோல்வியடைந்து ஒருவன் புறமுதுகு காட்டி ஓடுவதற்கு எத்தனிக்கின்றபோது எந்த ஒன்றினாலும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாது' என்ற துரைத்தின் ஆலோசனையைத் தட்டிக் கழித்தான்.

யுத்தத்துக்கு வந்திருந்த முஸ்லிம்கள் செல்வத்தையோ, எண்ணிக்கை யையோ, ஆயுதங்களையோ சார்ந்திருந்து அதில் வெற்றியை எதிர்பார்க்க வில்லை. மாறாக அவர்கள் யாவற்றையும் அடக்கியாளும் பலமிக்க அல்லாஹ்வின் சக்தியையும், அவன் அவர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதி யளித்துள்ள சுவனத்தையும் வெற்றியையுமே சார்ந்திருந்தார்கள். அவர்கள் வெறுமனே தமது செல்வங்களையும் பெண்களையும் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் யுத்தத்தில் தோல்வியைத் தவிர்க்க முயலவில்லை. மாறாக அல்லாஹ்வின் கூலியை அடைந்து கொள்ளும் ஆசையிலும், போராட்டக் களத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடுவோருக்கு அவன் வாக்களித்துள்ள மிகக் கடுமையான தண்டனைக்கும் பயந்தே அவர்கள் தோல்வியைத் தவிர்க்க முயற்சிக்கிறார்கள். இந்த யதார்த்தங்களை மாலிக் கவனத்தில் எடுக்காதிருந்தான்.

"(எதிரிகளை) வெட்டுவதற்காகவோ அல்லது (தம்) கூட்டத்தா ருடன் சேர்ந்து கொள்வதற்காகவோ அன்றி, அந்நாளில் எவரேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் புறமுதுகைக் காட்டித் திரும்புவாரானால், நிச்சயமாக அவர் அல்லாஹ்வின் கோபத்திற்கு உள்ளாகி விடுவார் - அவர் தங்குமிடம் நரகமே இன்னும் அது மிகவும் கெட்ட தங்குமிடம்.''
*(அல்-அன்பால்: 16)*

இவ்வாறு மாலிக்கும் அவனது ஹவாஸுன் கோத்திரத்தினரும் அவனோடு இருந்த ஏனையோரும் தோல்வியைத் தழுவிக் கொண்டனர். அவனது பெருமையினாலும் அகங்காரத்தினாலும் ஏற்பட்ட துரதிஷ்டம் அவனை மட்டும் பாதிக்கவில்லை. அது அவனது முழு சமூகத்தையுமே பாதித்தது. ஏனெனில், அவர்களும் அவனது அகங்காரத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள். யார் தனது கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லையோ அவரை வாளால் வெட்டிக் கொலை செய்து விடுவதாக எச்சரித்த மறுகணமே மக்கள் விரைந்து வந்து அவனுக்குக் கீழப்படிந்தார்கள். அவர்கள் தமது அனுபவமிக்க வயது முதிர்ந்த தலைவரின் அலோசனையை ஏற்றுப் பின்பற்றி தமது இளைய தலைவனின் பெருமைக்கு முடிவு கட்டியிருந்தால், நிச்சயம் தமக்கு ஏற்பட்ட அழிவுகளைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் அகங்காரம் பிடித்த தமது தலைவனின் கோபத்துக்கு உள்ளாவதையிட்டு அவர்கள் அஞ்சினார்கள்.

அவனைக் கோபமடையச் செய்வதால் என்ன நேர்ந்துவிட முடியும் என அவர்கள் தம்மைத் தாமே தட்டிக் கேட்டிருந்தால்; தமது தலைவரை இழக்க நேரிடும் எனப் பதில் கிட்டியிருக்கும். அவ்வாறு அவனை இழப்பதால் என்ன நேர்ந்திடப் போகிறது? அகங்காரமும் சுயநலனும் பிடித்த ஒரு தலைவன் அழிந்து போவதால் என்ன நடந்து விடப் போகிறது? யுத்தங்கள், அவற்றோடு தொடர்புடைய விவகாரங்கள் குறித்து தன்னை விட அறிவும் அனுபவமுள்ளவர்களின் பங்களிப்பின்றி யுத்தத்தில் ஈடுபட்டு அதன் வெற்றியினால் அடையக்கூடிய கௌரவத்தை தனக்கு மாத்திரம் சுருக்கிக் கொள்ளவல்லவா அவன் விரும்புகிறான். ஒரு மனிதனின் உயிர் ஒரு கோத்திரத்தின் அல்லது ஒரு சமூகத்தின் அனைத்து மனிதர்களினதும் உயிர்களுக்கு சமனாகும் எனக் கருத முடியுமா?

முழு சமூகமும் அகங்காரம் பிடித்த தலைவர்களின் மனோஇச்சைகளுக்கு கீழ் படிந்து நடப்பதால் ஏற்படக் கூடிய விளைவு குறித்து அல்லாஹ் அல்குர்ஆனிலே எம்மை எச்சரித்துள்ளான். மூஸா (அலை) அவர்களுக்கும் பிர்அவ்னுக்கும் இடையில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வுகள் குறித்து குறிப்பிடும் அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"(இவ்வாறாக) அவன் தன் சமூகத்தாரை (அவர்களுடைய அறிவை) இலேசாக மதித்தான். அவனுக்கு அவர்களும் கீழ்ப்படிந்து விட்டார்கள். நிச்சயமாக அவர்கள் வரம்பை மீறிய சமூகத்தாராகவும் ஆகி விட்டார்கள். பின்னர், அவர்கள் நம்மை கோபப்படுத்திய போது, நாம் அவர்களிடம் பழி தீர்த்தோம். அன்றியும், அவர்கள் யாவரையும் மூழ்கடித்தோம். இன்னும் நாம், அவர்களை (அழிந்து போன) முந்தியவர்களாகவும், பின்வருவோ ருக்கு உதாரணமாகவும் ஆக்கினோம்." (அஸ்-ஸுஃஹ்ருப்: 54-56 )*

02. நபி (ஸல்) அவர்கள் 100 கவசங்கள் உட்பட யுத்தத்துக்குத் தேவை யான ஆயுதங்களை முஷ்ரிக்காக இருந்த ஸப்வானிடமிருந்து இரவலாகப் பெற்றார்கள். இது பின்வரும் விடயங்களை எடுத்துக் காட்டுகிறது. அதா வது, எதிரிகளோடு யுத்தம் புரியச் செல்லும்போது தம்மை முழுமையாகத் தயார்செய்து கொள்வது அவசியமாகும். அத்துடன் தமக்குத் தேவையான ஆயுதங்களை நிராகரிப்பாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யவோ அல்லது அவர்களிடமிருந்து இரவல் வாங்கவோ முடியும். இதன் மூலம் நிராகரிப்பாளர்கள் பலம் பெறுவதற்கும், அவர்கள் முஸ்லிம்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குமான சந்தர்ப்பம் அற்றுப் போய்விடும். அத்துடன் அவர்கள் அந்த ஆயுதங்களைப் பயன்படுத்தி முஸ்லிம்களைத் தாக்குவதற்கும் அவர்களுக்கு தீங்கிழைப்பதற்கும் முடியாது போய்விடும்.

இதனடிப்படையில் மக்கா வெற்றியைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் ஸப்வானிடமிருந்து ஆயுதங்களை இரவல் வாங்கியிருந்தார்கள். பலவீனனாக இருந்தமையால் நபி (ஸல்) அவர்களுக்கு நிபந்தனைகளை விதிக்க ஸப்வானால் இயலாதிருந்தது. நபி (ஸல்) அவர்கள் அவனிடமி ருந்து ஆயுதங்களைக் கேட்டபோது அவர்களிடம் அவன் கூறிய வார்த்தை கள் இதனை எடுத்துக் காட்டுவதாய் உள்ளன. "முஹம்மதே, இவற்றை நீங்கள் பலாத்காரமாகவா எடுத்துக் கொள்கிறீர்கள்?' என அவன் வினவ, அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இல்லை, உத்தரவாதம் வழங்கப்பட்ட இரவலாகவே உம்மிடம் கேட்கிறேன், அவற்றை உம்மிடம் திருப்பித் தருவோம்" எனப் பதில் கூறினார்கள்.

வெற்றிகொள்ளப்பட்ட எதிரிகளோடு முஸ்லிம்கள் எவ்வாறு அழகிய முறையில் நடந்து கொண்டார்கள் என்பதற்கும் குறித்த சம்பவம் சிறந்த தொரு உதாரணமாக அமைந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் ஆயதங்களை ஸப்வானிடமிருந்து பலாத்காரமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென நாடியிருந்தால் நிச்சயம் அவர்களால் அதனைச் செய்திருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸப்வானால் எதுவுமே பேச முடியாது போயிருக்கும். என்றாலும், நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. யுத்த வெற்றியின்போதும், வெற்றிகொள்ளப்பட்டோருடன் உறவாடுகின்றபோதும் இந்த வழிமுறை யையே அவர்கள் பின்பற்றி இருக்கிறார்கள். யுத்தம் முடிவடைந்து ஆயுதங் களைக் கீழே வைத்த பிறகு நபி (ஸல்) அவர்கள் அவர்களது செல்வங்களை சூறையாடவில்லை.

நபி (ஸல்) அவர்களுக்கு முன்னரோ அல்லது பின்னரோ இவ்வாறு யாரும் நடந்து கொண்டதாக எமக்கு அறியக் கிடைக்கவில்லை. வெற்றி வாகை சூடிய முஸ்லிம் படையினர் வெற்றி கொள்ளப்பட்டோரை நடாத்திய விதமும், அவர்களுடைய செல்வங்களையும், அவர்களுக்குரிய உரிமைகளையும், கௌரவங்களையும் முழுமையாக வழங்கியமையும் நாம் மேலே கூறியவற்றுக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக உள்ளன.

> ''அல்லாஹ் உண்மையையே கூறுகிறான்: இன்னும் அவன் நேர்வழியையே காட்டுகிறான்.'' (அல்-அஹ்ஸாப்: 4 )

03. நபி (ஸல்) அவர்கள் இந்த யுத்தத்துக்காக வெளியேறிச் சென்றபோது அவர்களோடு 12,000 வீரர்கள் இருந்தார்கள். அவர்களில் பத்தாயிரம் பேர் மதீனாவிலிருந்து நபி (ஸல்) அவர்களோடு வந்து மக்கா வெற்றியில் பங்கு கொண்டவர்கள். அவர்களில் முஹாஜிர்கள், அன்ஸாரிகள் உட்பட மதீனாவைச் சூழவிருந்த அல்லது மதீனாவுக்குச் செல்லும் வழியிலிருந்த கோத்திரங்களைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருந்தனர். எஞ்சிய இரண்டா யிரம் பேரும் மக்கா வெற்றியைத் தொடர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட வர்களாகக் காணப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோரது உள்ளங் களில் இன்னும் இஸ்லாத்தின் வழிகாட்டல் ஆழப் பதிந்திருக்கவில்லை. இஸ்லாத்துக்கு எதிராக யுத்தம் செய்து அதனை மிகைத்து விடும் தமது எதிர்பார்ப்புக்களில் தோல்வியடைந்ததன் காரணமாக இஸ்லாத்தினுள் நுழைந்து கொண்ட சிலரும் அவர்களில் காணப்பட்டனர்.

எனவே, அல்லாஹ்வின் மார்க்கத்தை நிலைநிறுத்துவதற்காக தமது செல்வங்களையும் உயிர்களையும் அல்லாஹ்வின் பாதையில் விற்று விட்ட உண்மையான முஃமின்களோடு மார்க்கத்தில் பலவீனமானவர்களும், இஸ்லாம் வெற்றிபெற்று விட்டதால் கவலைகளையும் இஸ்லாத்தின் மீதான குரோதங்களையும் உள்ளத்தில் வைத்துக் கொண்டு விருப்பமின்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டோரையும் உள்ளடக்கியதாக முஸ்லிம் படை காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் படையில் இருந்தவர்கள் ஆன்மீக பலத்திலும், தாம் எதற்காகப் போராடுகிறோம் என்ற இலக்குகளில் வைத்துள்ள நம்பிக்கையிலும் சம தரமற்றோராகக் காணப்பட்டனர். யுத்த வெற்றியின் மூலம் கிடைக்கக் கூடிய கனீமத் பொருட்களையும் ஏனைய செல்வங்களையும் அடைந்து கொள்ளும் ஆர்வத்தோடு அவர்களில் சிலர் களத்திலே இருந்தனர். இந்த வகையில் முஸ்லிம் படை ஆரம்பத்தில் தோல்வியைத் தழுவிக் கொண்டமை ஆச்சரியப்படத்தக்க ஒரு விடயமன்று. எனவே தான் நபி (ஸல்) அவர்கள் தன்னோடு அதிகமான எண்ணிக்கையினர் இருந்ததைக் கண்டு பின்வருமாறு கூறினார்கள். ''அவர்கள் எண்ணிக்கையில் குறைந்த வர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை நாம் இன்று மிகைக்க முடியாது.''

*(குறிப்பு: இதனை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்பது உறுதிப் படுத்தப்படவில்லை. இதனை இப்னு இஸ்ஹாக் ''மகாஸி'' என்ற நூலிலே அறிவிப்புச் செய்துள்ளார். இதன் அறிவிப்பாளர் வரிசையில் மயக்கமும் தொடரின்மையும் காணப்படுகின்றது. இதனை ஸலமத் இப்னு ஸுலாமா பின் வக்ஷ் கூறியதாக சிலரும் அபூபக்ர் ஸித்தீக் (றழி) கூறியதாக சிலரும் அப்பாஸ் (றழி) கூறியதாக வேறு சிலரும் பனூபக்ர் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் கூறியதாக இன்னும் சிலரும் குறிப்பிட்டுள்ளனர்.)*

அதாவது அதிகமான எண்ணிக்கையைக் கொண்டிருந்த இது போன்ற தொரு படை, அதிலுள்ள தனிமனிதர்களின் உளப் பண்புகள், அவர்களது ஈமான், ஆன்மீக பலம், தூய்மை, தியாகங்கள் போன்றனவற்றுடன் தொடர்புபட்ட கருத்தியல் சார்ந்த விடயங்களின் மூலம் மாத்திரமே எதிரிப் படையை மிகைக்க முடியும். இதற்கமையவே நபி (ஸல்) அவர்கள் எமக்கு அழகானதொரு விதியை வரைந்து தந்திருக்கிறார்கள். அதாவது வெற்றி யென்பது அதிக எண்ணிக்கையினாலோ, ஆயுத பலத்தினாலோ தீர்மானிக் கப்படுவதில்லை. மாறாக போராளிகளின் உள்ளங்களை நிரப்பியிருக்கும் கருத்தியல் சார்ந்த விடயங்களினாலேயே அது தீர்மானிக்கப்படுகிறது. அவை அவர்களை அர்ப்பணிப்புடன் செயலாற்றவும் தியாகங்கள் செய்ய வும் தூண்டுகிறது. இதனை அல்குர்ஆன் பல இடங்களில் வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளது.

> ''எத்தனையோ சிறு கூட்டத்தார்கள், பெருங் கூட்டத்தாரை அல்லாஹ்வின் (அருள் மிக்க) அனுமதி கொண்டு வென்றிருக்கின் றார்கள். மேலும் அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின் றான்'' என்று கூறினார்கள். *(அல்-பகரா: **249** )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் முடிவடைந்த பின்னர் இறங்கிய அல்குர்ஆன் வசனங்களில் இக்கருத்து மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

''நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குப் பல போர்க்களங்களில் உதவி செய்திருக்கின்றான். (நினைவு கூறுங்கள்) ஆனால் ஹுனைன் (போர் நடந்த) அன்று உங்களைப் பெருமகிழ்ச்சி கொள்ளச் செய்த உங்களுடைய அதிகமான (மக்கள்) தொகை உங்களுக்கு எவ்விதப் பலனும் அளிக்கவில்லை. (மிகவும்) பரந்த பூமி உங்களுக்கு (அப்போது) சுருக்கமாகிவிட்டது. அன்றியும் நீங்கள் புறங்காட்டிப் பின்வாங்கலானீர்கள். பின்னர் அல்லாஹ் தன்னுடைய தூதர் மீதும், முஃமின்கள் மீதும் தன்னுடைய சாந்தியை இறக்கியருளினான். நீங்கள் பார்க்க முடியாப் படைகளையும் இறக்கி வைத்தான். (அதன் மூலம்) நிராகரிப்போரை வேதனைக்குள்ளாக்கினான் - இன்னும் இதுவே நிராகரிப்போரின் கூலியாகும். *(அத்தெளபா: 25-26)*

04. யுத்தத்திற்குச் செல்லும் வழியில் முஸ்லிம்களில் சிலர் நபி (ஸல்) அவர்களிடம், ''அல்லாஹ்வின் தூதரவர்களே, முஷ்ரிக்குகளுக்கு 'தாத்து அன்வாத்' ஐப் போல எமக்கும் ஒரு 'தாத்து அன்வாத்' ஐ ஆக்கித்தாருங்கள் எனக் கேட்டார்கள். ('தாத்து அன்வாத்' என்பது நாட்டுப் புற அறபிகள் மிக கெளரவமாக மதித்த ஒரு மரமாகும். அவர்கள் ஒவ்வொரு வருடமும் குறித்த மரம் இருக்கும் இடத்துக்குச் சென்று அதிலே தமது ஆயுதங்களைத் தொங்க விடக் கூடியவர்களாகவும், அதன் அருகே மிருகங்களை அறுத்துப் பலியிடக் கூடியவர்களாகவும், தமது ஒரு நாள் முழுவதையும் அதற்காக அர்ப்பணம் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தனர்.) அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''முஹம்மதின் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக, நீங்கள், மூஸாவுடைய சமூகத்தினர் மூஸாவுக்கு கூறியது போன்றதொன்றையல்லவா கூறுகிறீர்கள்'' எனக் கூறிவிட்டு பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

''உடனே அவர்கள், ''மூஸாவே! அவர்களிடமிருக்கும் கடவுள் களைப் போல் நமக்கும் நீங்கள் ஒரு கடவுளை ஆக்கித்தருவீர் களாக!'' என்று வேண்டினர். ''நிச்சயமாக நீங்கள் ஓர் அறிவில்லாத கூட்டத்தாராக இருக்கின்றீர்கள்'' என்று மூஸா (அவர்களிடம்) கூறினார்.'' *(அல்-அஃராப்: 138)*

மேலும், ''இவை ஒரே வகையான வாழ்க்கை வழிமுறைகள், உங்க ளுக்கு முன்பிருந்தோரின் வாழ்க்கை வழிமுறைகளையே நீங்கள் பின்பற்று கின்றீர்கள்'' எனவும் குறிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்களின் இந்தப் பதிலானது, இந்த உம்மத் எதிர்காலத்திலே முன்னைய சமூகங்களின் வாழ்க்கை வழிமுறைகளைப் பின்பற்றும் என்ற உண்மையை சுட்டிக் காட்டுவதோடு, அது குறித்து எச்சரிக்கை விடுப்பதாயும் அமைந்துள்ளது. மேலும், மடமை மேலோங்கியதன் காரணமாகவே இவ்வாறு அவர்கள் பிற சமூகங்களைப் பின்பற்றுவார்கள் என்ற கருத்தும் அதிலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எனவே, நன்மை தீமைக்கான வழிகளையும், பயன்தரக் கூடிய தீங்கு பயக்கக் கூடிய வழிகளையும் அறிந்துள்ள சமூகங்கள் நன்மையை எடுத்துப் பின்பற்றுவதோடு தீமையைத் தவிர்த்து அதிலிருந்து விரண்டோடி விடும்.

அந்த சமூகங்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கும் எனக் கருதக் கூடிய எந்தவொரு வழியையும் -அதனை முன்னைய சமூகங்கள் பின்பற்றி இருந்த போதிலும் கூட- பின்பற்ற மறுக்கும். எந்தவொரு சமூகம் விளைவுகளைக் கருத்திற்கொள்ளாது பிறிதொரு சமூகத்தின் நடைமுறைகளைக் கண்மூடித் தனமாக பின்பற்றுகிறதோ அது, குறித்த விடயத்தை அதற்குப் பொருத்தமற்ற இடத்தில் வைத்து விட்டது என்பதாகவே கருதப்படும். இந்த அறியாமையையே அல்லாஹ் ''நீங்கள் அறியாத சமூகத்தினராகவே இருக்கிறீர்கள்.'' (அல்-அஃராப்: 138) என அல்குர்ஆனிலே குறிப்பிடுகிறான்.

தன்னிலே நம்பிக்கையுள்ள, தனது ஆளுமையக் கொண்டு பெருமைப் பட்டுக் கொள்கின்ற, தன்னிடமுள்ள சத்தியம், நன்மையைக் கொண்டு அமைதியடைந்து கொள்கின்ற எந்தவொரு சமூகமும் அதன் அடிப்படைகளோடு முரண்படுகின்ற, அதற்குத் தீங்கிழைக்கின்ற வேறு எந்தவொரு சமூகத்தையும் ஒருபோதும் பின்பற்ற மாட்டாது. எந்த சமூகம் பிறிதொரு சமூகத்தை கண்மூடித்தனமாக பின்பற்றுகிறதோ, அது ஆளுமைப் பலவீனமுள்ள சிந்தனைச் சிக்கல் நிறைந்த மனோஇச்சைகளுக்குக் கட்டுப்பட்ட குழம்பிப்போன பின்னடைந்த சமூகமாகவே காணப்படும்.

இந்த அறியாமையில் (ஜாஹிலிய்யா) இருந்துதான் அல்லாஹ் எங்களை அவனது றஸூல், வேதம், ஷரீஆவினூடாகப் பாதுகாத்தான். சீர்திருத்த இயக்கங்களின் பார்வையில் அறிவு, மடமை என்பன எழுத்தறிவையும், எழுத்தறிவின்மையையும் வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக அது நேர்வழி, வழிகேடு, சிந்தித்துச் செயலாற்றுவது, மடமை போன்ற காரணிகளின் அடியாகவே தீர்மானிக்கப்படுகிறது. இந்தவகையில், பயனளிக்கக் கூடியவை எவை? தீங்கிழைக்கக் கூடியவை யாவை? என்பதை உணர்ந்து கொள்கின்ற சமூகமே -அது எழுத வாசிக்கத் தெரியாத சமூகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும்- அறிவுள்ள சமூகமாகும். அதே போன்று நன்மைக்கான எந்தவொரு வழியையும் வழிமுறையையும் கண்டு கொள்ளாத சமூகமே -அது பல்வேறு அறிவியல் கலைகளையும் கலாசாரங்களையும் அறிந்துவைத்துள்ள சமூகமாக இருப்பினும்- அறிவற்ற ஜாஹிலிய்ய சமூகமாகும்.

சமூகங்களைப் பொறுத்தமட்டில் -அது எந்தவொரு சமூகமாக இருப்பினும்- அவற்றினது அங்கத்தவர்களின் உள்ளங்களையும் மனோஇச்சைகளையும் அறியாமை (ஜாஹிலிய்யத்) ஆக்கிரமித்துக் கொள்கின்றபோதே அவை வீழ்ச்சியடைந்திருக்கின்றன, அல்லது வீழ்ச்சியடைகின்றன. வரலாற்றை சிறிது திரும்பிப் பாருங்கள். கிரேக்க, ரோமானியா நாகரீகங்களை அறியாமை ஆக்கிரமித்துக் கொண்டதன் விளைவாகவல்லவா அவை அழிந்து போயின.

கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்கள், அவர்கள் எவ்வளவுதான் கற்றறிந்தவர்களாக இருந்தபோதிலும், மடையர்களே. அவர்கள் எவ்வளவு தான் வயதில் மூத்தவர்களாக இருந்தபோதிலும், சிறுவர்களே. இதிலிருந்து விடுதலை பெறும்வரை அவர்கள் தொடர்ந்தும் மடையர்களாகவும் சிறுவர்களாகவுமே காணப்படுவர்.

05. இந்தப் போராட்டத்திலே முஸ்லிம்கள் ஆரம்பத்திலே தோல்வியடைந்து நபி (ஸல்) அவர்களிடமிருந்து பிரிந்து ஓடிய பின்னர் 'ஷைபா இப்னு உஸ்மான்' என்பவன் தன்னால் நபி (ஸல்) அவர்களைப் பழிவாங்கி விட முடியும் என எண்ணினான். அவனது தந்தை உஹதுப் போராட்டத்தில் கொலை செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இது குறித்து ஷைபா பின்வருமாறு குறிப்பிடுகின்றான்: 'நான் நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் நோக்கில் அவர்களை நெருங்கியபோது என்னை நோக்கி ஏதோ ஒன்று வந்து எனது உள்ளத்தை மூடிக் கொண்டது. என்னால் அவர்களைக் கொலை செய்ய இயலவில்லை. இதன் காரணமாக அவர்கள் என்னிடமிருந்து பாதுகாப்புப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.'

இத்தகைய நிகழ்வுகள் ஸீறாவின் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. மக்காவிலும் மதீனாவிலும் அபூ ஜஹ்லுடனும் இன்னும் பலருடனும் இது போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்யும் நோக்கில் சூழ்ச்சிகள் செய்யக் கூடியவர்களைத் திடுக்கிடச் செய்யும் வகையிலானதொரு பயங்கர சூழலை அல்லாஹ் அவர்களைச் சூழ ஏற்படுத்தி வைத்திருந்தான் என்ற உண்மையுடன் குறித்த நிகழ்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் உடன்படுகின்றன. இது எமக்குப் பின்வரும் உண்மைகளைப் புலப்படுத்திக் காட்டுகின்றது. அதாவது, நபி (ஸல்) அவர்கள் தனக்கு தூது (ரிஸாலத்) வழங்கப்பட்டுள்ளமை குறித்து முன்வைத்த வாதம் உண்மையானது. நபி (ஸல்) அவர்கள் தனது தூதை மக்களுக்கு எத்தி வைத்து, தன்மீது சாட்டப்பட்டுள்ள பொறுப்பை (அமானத்தை) நிறைவேற்றி, அறபுத் தீபகற்பத்தை அறியாமையிலிருந்து மீட்டெடுத்து, அங்குள்ள மக்களை அறிவுள்ளவர்களாகவும் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும் அடுத்தவர்களைப் பாதுகாக்கக் கூடியவர்களாகவும் உருவாக்கி எடுக்கும் வரை அல்லாஹ் அவர்களை எதிரிகளின் அனைத்து சூழ்ச்சிகளிலிருந்தும் பாதுகாத்து, தொடர்ந்தும் உயிருடன் வாழ வைக்க வேண்டும் எனத் தீர்மானித்திருந்தான்.

அல்லாஹ்வின் பாதுகாப்பு நபி (ஸல்) அவர்களுக்கு இருந்திருக்காவிட்டால் நிச்சயமாக முஷ்ரிக்குகள் தஃவாவின் ஆரம்ப கட்டங்களிலேயே நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்திருப்பார்கள். விளைவாக அல்லாஹ்வின் தீனும், அருளும் பூரணம் பெற்றிருக்க மாட்டா. தூதின் ஒளியும், நேர்வழியும் அதன் அருளும் ஒருபோதும் எம்மை வந்தடைந்திருக்க மாட்டா. அது மாத்திரமன்றி இஸ்லாத்தின் பரம்பல் மூலமும், அநியாயம் அடக்குமுறை என்பவற்றின் அடியாக அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்த அரசர்களினதும் ஏனைய தலைவர்களினதும் மக்களை அடிமைப்படுத்தி ஆட்சி செய்கின்ற காலம் நிறைவடைந்ததன் விளைவாகவும் ஏற்பட்ட, மனித சமூகத்தை அதன் குருட்டுத் தனத்திலிருந்தும் தீமையிலிருந்தும் விடுதலை செய்த, வரலாற்று மாற்றம் ஒருபோதும் நிகழ்ந்திருக்க மாட்டாது. அல்லாஹ் தனது தூதர் தன் மீது சாட்டப்பட்டுள்ள பொறுப்பை பூரணமாகவும் குறைவின்றியும் நிறைவேற்றும் வரை அவர்களைப் பாதுகாத்ததன் விளைவாகவே இவை அனைத்தும் நிகழ்ந்தன.

சந்தேகமின்றி அல்லாஹ் தனது தூதருக்கு வழங்கிய சிறப்பு மிகப் பாரியது.

> ''உம்மீது அல்லாஹ்வின் அருட்கொடை மகத்தானதாகவே இருக்கின்றது''. *(அந்நிஸா: 113)*

அல்லாஹ் முழு மனித சமூகத்துக்கும் மத்தியில் தனது தூதருக்கு வழங்கிய சிறப்பு மிகப் பாரியது.

> ''(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு ரஹ்மத்தாக -ஓர் அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை.'' *(அல்-அன்பியா:107)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதிலிருந்து ஆரம்பித்த அல்லாஹ் வினுடைய அருளின் தொடராகவே, சத்தியப் பாதையில் அழைக்கின்ற அழைப்பாளர்கள் எதிரிகளின் சூழ்ச்சிகளிலிருந்தும் அவர்களது கண்காணிப் பிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றார்கள். இதில் எத்தகைய சந்தேகமும் கிடையாது.

அழைப்பாளர்கள், தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர், எப்போதும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பாதுகாப்பிலேயே நாட்டம் கொண்டவர் களாக இருக்க வேண்டும். மேலும், அவர்கள் பின்வரும் விடயங்களில் உறுதியான நம்பிக்கை உடையோராகவும் இருக்க வேண்டும். அதாவது, நிச்சயமாக அல்லாஹ் தங்களுடனேயே இருக்கிறான். அவனே தங்களுக்கு உதவி செய்து பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கிறான். எதிரிகளின் சூழ்ச்சியிலிருந்து அல்லாஹ் யாரை பாதுகாக்க நாடுகிறானோ அவர் நிச்சயம் அவர்களிடமிருந்து -அவர்கள் எவ்வளவுதான் அதிகாரமுடையவர் களாகவும், மிகப் பயங்கரமான சூழ்ச்சிகளும் குற்றங்களும் புரியக் கூடியவர்களாகவும் இருந்த போதிலும்- தப்பித்துக் கொள்வார். எனவே பாதுகாப்பும் உதவியும் அல்லாஹ்விடமிருந்து மாத்திரமே கிடைக்கும். அவனே இழிவுக்கு உட்படுத்துபவன். அவனது தீர்மானங்களும் கட்டளை களுமே நடைமுறையாகும்.

"(முஃமின்களே!) அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வானானால், உங்களை வெல்பவர் எவரும் இல்லை." *(ஆல இம்ரான்: 160)*

அநியாயக்கார மனிதனின் சூழ்ச்சி எவ்வளவுதான் பாரியதாக இருந் தாலும் நீதியான அல்லாஹ்வின் உதவி அதை விட மிக உயர்ந்ததும் மேலானதுமாகும். எனவே, எந்தவொரு அழைப்பாளரும், சீர்திருத்தவாதி யும் ஒருபோதும் பயப்படவோ கோழையாகிவிடவோ மாட்டார். அல்லாஹ்வையும் அவனது உதவியையும் உறுதியாக நம்பியிருக்கின்ற முஃமின் ஒருபோதும் சத்தியத்தை நடைமுறைப்படுத்துவதில் பின்வாங்கி விட மாட்டார்.

"மேலும் முஃமின்களுக்கு உதவி புரிதல் நம் கடமையாகும்." *(அர்ரூம்: 47)*

"நிச்சமயாக எவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரை யும் எதிர்க்கிறார்களோ, நிச்சயமாக அவர்களே மிகவும் தாழ்ந்தவர் கள். நானும் என்னுடைய தூதர்களும் நிச்சயமாக மிகைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவோம்'' என்று அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க சக்தியுடையவன், யாவரையும் மிகைத்தவன்.''
*(அல்-முஜாதலா: 20-21)*

அல்லாஹ்வின் எதிரிகள் சில சந்தர்ப்பங்களில் தஃவாப் பணியின் சில தலைவர்களை கொலைசெய்து விடுவதில் அல்லது அவர்களுக்குத் தீங்கேதும் ஏற்படுத்துவதில் வெற்றிபெற முடியும். இது நாம் மேற்கூறிய உண்மையுடன் முரண்படுவதில்லை. நிச்சயமாக மரணம் சத்தியமானது. ஒவ்வொரு மனிதனும் அதனைச் சுவைத்தே ஆக வேண்டும். இதில் விதி விலக்கு என்பதற்கு இடமெதுவும் இல்லை.

இந்த வகையில் அநியாயக்காரர்களினால்தான் ஒருவருக்கு மரணம் நிகழ வேண்டுமென அல்லாஹ் எழுதியிருந்தால், அவன் அவரை கண்ணியப்படுத்தியிருக்கின்றான், அவர் மீது அருள்பாலித்திருக்கிறான் என்பதே அதன் பொருளாகும். ஏனெனில் அல்லாஹ்வின் பாதையில் ஏற்படுகின்ற மரணம் ஷஹாதத் ஆகும். அழைப்புப் பணியிலே ஏற்படுகின்ற ஒவ்வொரு துன்பமும் கண்ணியமாகும். சீர்திருத்தப் பணியிலே சோதனையென்பது நிரந்தரமானதாகும்.

''ஏனென்றால் அல்லாஹ்வின் பாதையில் இவர்களுக்கு ஏற்படும் தாகம், களைப்பு (துயர்), பசி, காஃபிர்களை ஆத்திரமூட்டும் படியான இடத்தில் கால்வைத்து அதனால் பகைவனிடமிருந்து துன்பத்தையடைதல் ஆகிய இவை யாவும் இவர்களுக்கு நற்கருமங்களாகவே பதிவு செய்யப்படுகின்றன -நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோரின் கூலியை வீணாக்க மாட்டான்.''
*(அத்-தௌபா: 120).*

06. போராட்டத்தின் ஆரம்பத்திலே எதிரிகளின் திடீர் தாக்குதலினால் முஸ்லிம்கள் திடுக்கமுற்றார்கள். இது முஸ்லிம் படை அணிகளிலே கோளாறுகள் ஏற்பட்டு, அவர்கள் குழப்பமடைந்து றஸூல் (ஸல்) அவர்களிடமிருந்து பிரிந்து செல்வதற்கு வழிகோலியது. நபி (ஸல்) அவர்களோடு ஒரு சிலரே உறுதியாக இருந்தார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் ''மக்களே! என்னிடத்தில் வாருங்கள்! என்னிடத்தில் வாருங்கள்! நான் அல்லாஹ்வின் தூதர், அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத்'' என அழைப்பு விடுத்தார்கள். எனினும், நபி (ஸல்) அவர்களது அழைப்பு மக்களுக்கு கேட்கவில்லை. எனவே, நபி (ஸல்) அவர்கள் உரத்த தொனியுடையவராக இருந்த அப்பாஸ் (றழி)யிடம் மக்களை நோக்கி, 'ஓ அன்ஸாரிகளே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகேசியா (Acacia) மரத்தின் சினேகிதர்களே! என அழைப்பு விடுக்குமாறு பணித்தார்கள்.

'பதிலளித்து விட்டோம், பதிலளித்து விட்டோம்' எனக் கூறி மக்கள் அழைப்புக்குப் பதில் கூறினார்கள். அவர்களில் ஒருவர் தனது கோவேறு கழுதையைத் திருப்பி விட முயற்சிக்கிறார். முடியாது போகிறது. எனவே அவர் தனது கவசத்தை எடுத்து கழுத்தில் மாட்டிக் கொண்டு, வாளையும் கைக் கவசத்தையும் (Shield) எடுத்துக் கொண்டு கோவேறு கழுதையை அது செல்லும் பாதையில் செல்ல விட்டுவிட்டு, சத்தம் வருகின்ற திசையை நோக்கி விரைந்து சென்று நபி (ஸல்) அவர்களை அடைந்து கொள்கிறார். இவ்வாறு சுமார் நூறு பேர் அளவு நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒன்று சேர்ந்ததன் பிறகு அவர்கள் அனைவருமாக எதிரிகளை நோக்கிச் சென்று போராடினார்கள். இறுதியில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிட்டியது.

இந்த சம்பவத்தில் அழைப்பாளர்களும் படை வீரர்களும் பெற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பல பாடங்களும் படிப்பினைகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் ஒவ்வொருவரும் கூர்ந்து அவதா னிப்பது அவசியமாகும். ஏதேனுமொரு தஃவா இயக்கம் யுத்தத்திலே தோல்வியடைவதற்கு சில வேளை அதனைச் சார்ந்தவர்கள் சிலருடைய அகீதாவிலே காணப்படுகின்ற பலவீனம், தூய்மை (இக்லாஸ்) இன்மை, சத்தியத்தின் பாதையிலே தியாகங்கள் செய்வதற்கான தயாரின்மை போன்றன காரணமாக அமைய முடியும். அதேபோன்று, நெருக்கடியான சந்தர்ப்பங்களின்போது தஃவாப் பணியை வழிநடாத்திச் செல்லும் தலைவரிடம் காணப்படும் உறுதியும், துணிவும் அவர் அல்லாஹ்விலும் அவனது உதவியிலும் வைக்கும் உறுதியான நம்பிக்கையும், தோல்வியை வெற்றியாக மாற்றுவதிலும், அவரோடு இருக்கின்ற பலவீனர்கள், பின்வாங்கிச் செல்லக்கூடியவர்களுடைய உள்ளங்களைப் பலப்படுத்துவதி லும் பாரிய பங்காற்ற முடியும். அது மாத்திரமன்றி, சத்தியத்துக்காக உறுதி யோடிருந்து போராடுகின்ற உண்மையான படை வீரர்கள் தமது துணிவு மிக்க துய்மையான தலைவரை சூழ்ந்திருப்பதுவும் தோல்வியை வெற்றி யாக மாற்றுவதில் அதிக தாக்கம் செலுத்த முடியும்.

யுத்தத்தின் ஆரம்பத்தில் தோல்வி ஏற்பட்ட பின்னரும் கூட நபி (ஸல்) அவர்களுடன் உறுதியாக நின்று போராடியவர்களதும், நபி (ஸல்) அவர்களின் அழைப்பை ஏற்று களத்துக்கு திரும்பி வந்தவர்களதும் மொத்த எண்ணிக்கை நூறு (100) பேரைக் கூட கடந்து செல்லவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் தான் போராட்டத்தின் போக்கு மாற்றமடைந்து அல்லாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினுடைய உதவி முஃமின்களுக்குக் கிடைக்க ஆரம்பித்தது. அதேபோன்று எதிரிகள் இழிவடைந்து அவர்களது உள்ளங்களிலும் அணிகளிலும் பலவீனம் ஏற்பட ஆரம்பித்தது. இந்த வகையில், தஃவாவின் தலைவரும் அதன் படைவீரர்களும் தாம் சத்தியத்திலேயே இருக்கிறோம். நிச்சயமாக அல்லாஹ் உண்மை முஃமின்களுடனேயே இருக்கிறான் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்கின்ற போதெல்லாம் அவர்களது மனோவலிமை அதிகரித்து, அர்ப்பணங்கள், தியாகங்கள் செய்வதற்கான அவர்களது முன்வருகையும் அதிகரிக்கிறது.

''நான் அல்லாஹ்வின் தூதர்'' இப்னு ஹிஷாமின் பிறிதொரு அறிவிப்பின் படி ''நான் தான் நபி, இதில் பொய்யேதும் இல்லை. நான் அப்துல் முத்தலிபின் மகன்'' என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்று, றஸூல் (ஸல்) அவர்கள் தனக்கு றிஸாலத் வழங்கப்பட்டுள்ளது என்று முன்வைத்த வாதம் உண்மையானது என்பதையும் அவர்கள் அல்லாஹ்வின் உதவியில் மிக ஆழமான நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. மேலும், படைத் தலைவர் கஷ்டங்களின்போது இவ்வாறுதான் எப்போதும் இருக்க வேண்டும். அதாவது அவர் தன்னிலே நம்பிக்கை உடையவராகவும், அல்லாஹ்வை நோக்கித் திரும்பியவராக வும், எப்போதும் அவனது உதவி தனக்குக் கிட்டும், அவன் என்றும் தன் மீது கரிசனை காட்டிக் கொண்டே இருக்கின்றான் என்ற உறுதியான நம்பிக்கை உடையவராகவும் இருக்க வேண்டும்.

அது மாத்திரமன்றி படைத் தலைவர் தனது நோக்கம், இலட்சியம், பணி போன்றவற்றில் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையானது, அவருடைய வெற்றியிலும், மக்கள் அவரைச் சூழ திரண்டிருக்கச் செய்வதிலும் பாரிய பங்களிப்புச் செய்ய முடியும். அத்துடன் அவருக்கு நிகழும் சோதனைகளை இலகுவாக்கிக் கொடுத்து, அவற்றினால் ஏற்படும் துன்பங்களை அவர் உளத்திருப்தியோடும் மன அமைதியோடும் ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும் அது பாரிய பங்காற்ற முடியும்.

07. யுத்தத்தின்போது உம்மு ஸுலைம் பின்த் மில்ஹான் (றழி) அவர்கள் எடுத்த நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில், அதனை இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம் பெண்களுக்கு பெருமை தேடித் தரக் கூடிய வகையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வாகக் குறிப்பிட முடியும். கர்ப்பிணியாக இருந்த உம்மு ஸுலைம் தனது உடலின் வயிற்றுப் பகுதியை ஒரு துணியால் கட்டிக் கொண்டு கணவர் அபூ தல்ஹாவுடன் யுத்த களத்திலே இருந்தார்கள். அபூ தல்ஹாவின் ஒட்டகத்தை தன்னுடன் வைத்திருந்த அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கைநழுவிச் சென்று விடுமோ எனப் பயந்து ஒட்டகையின் மூக்கில் இடப்பட்டிருந்த வளையத்தினுள் தனது கையை போட்டுக் கொண்டார்கள். உம்மு ஸுலைமைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், ''உம்மு ஸுலைமா''? என அவரை ஆச்சரியத்துடன் நோக்கினார்கள். அதற்கு அவர், 'ஆம், அல்லாஹ்வின் தூதரவர்களே; எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். உங்களை விட்டும் விரண்டோடக் கூடிய இவர்களை -நீங்கள் உங்களோடு யுத்தம் புரியக் கூடியவர்களோடு யுத்தம் செய்வது போல- கொலை செய்து விடட்டுமா? நிச்சயமாக அதற்கு அவர்கள் தகுதியானவர்கள்' எனக் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''உம்மு ஸுலைமே! அல்லாஹ் போதுமானவன்'' எனக் கூறினார்கள்.

உம்மு ஸுலைமிடம் குத்துவாள் (Dagger) ஒன்று இருந்தது. அவருடைய கணவர் அபூ தல்ஹா (றழி) அதன் இரகசியம் குறித்து வினவியபோது அவர் 'முஷ்ரிக்குகளில் எவனும் என்னை நெருங்கினால் அவனைக் குத்தி விடுவதற்காகவே குத்துவாளை எடுத்துக் கொண்டேன்' எனக் குறிப்பிட்டார். அபூ தல்ஹா (றழி) தனது மனைவியின் குறித்த செயலை மெச்சிவிட்டு நபி (ஸல்) அவர்களின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வந்தார்கள்.

அன்றைய முஸ்லிம் பெண் இப்படித்தான் இருந்தாள். இவ்வாறுதான் இன்றைய முஸ்லிம் பெண்ணும் இருக்க வேண்டும். போராட்டக் களங்களிலே நேரடியாகக் கலந்துகொண்டு அவற்றுக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய துணிச்சல்மிக்கவளாக அவள் இருக்க வேண்டும். தேவைப் படுகின்ற சந்தர்ப்பங்களில் அல்லது எதிரிகள் அவளை நெருங்கி விடுகின்ற போது, தோல்வியைத் தழுவி கைதியாக மாறி விடாது தானாக முன்வந்து அத்துமீறலை எதிர்கொள்ளக் கூடியவளாக அவள் இருக்க வேண்டும்.

இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலங்களில் முஸ்லிம் பெண் சந்தித்த சோதனைகள், அவளது அர்ப்பணிப்புகள், தியாகங்கள், துணிச்சல் நிறைந்த செயற்பாடுகள் பற்றிப் பேசுகின்ற பல நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இஸ்லாம் பெண்ணை ஒடுக்குகிறது, அது அவளை இழிவு படுத்துகிறது, அவளது இயல்பான பணிக்குரிய வரையறைக்குள்ளிருந்து செயற்படுகின்ற வகையில் சமூகத்தில் அவளுக்குப் பொருத்தமான இடத்தை அது வழங்குவதில்லை, மாத்திரமன்றி, அவள் சுவனம் செல்வதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் இஸ்லாம் அவளுக்கு விட்டு வைக்கவில்லை. எனவே அவள் எவ்வளவு தான் அல்லாஹ்வை அஞ்சி வணக்கங்களிலும் நற்செயல்களிலும் ஈடுபட்டாலும் சுவனம் நுழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டாள் போன்ற கீழைத்தேய, மேலைத்தேய முஸ்லிம் விரோத சக்திகளின் போலிக் குற்றச்சாட்டுக்களைப் பொய்ப்பிக்கின்றனவாக குறித்த நிகழ்வுகள் அமைந்து காணப்படுகின்றன.

இந்தப் போலிக் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலடி கூறும் வகையில் அமைந்த தெளிவான அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் ஒரு புறமிருக்க, இஸ்லாத்தைப் பரப்புவதிலும் அதன்பால் அழைப்பதிலும் அதன் பாதையிலே தியாகங்கள் புரிவதிலும் அவள் செய்த பங்களிப்புக்கள் குறித்து இஸ்லாமிய வரலாறு -வேறு எந்தவொரு மார்க்கமும் பதிவு செய்யாத அளவுக்கு- பதிவுசெய்து வைத்துள்ளது. ஹுனைன் யுத்தத்திலே உம்மு ஸுலைமுடன் தொடர்புபடுத்தி பேசப்படுகின்ற இந்நிகழ்வு இது குறித்துப் பேசப்படுகின்ற நூற்றுக் கணக்கான உதாரணங்களில் ஒன்று மாத்திரமே.

நாம் மேலே குறிப்பிட்ட விடயத்திலே முஸ்லிம் விரோத சக்திகளுக்குப் பதில் கூறுவதை விடவும், குறித்த நிகழ்விலிருந்து மிக முக்கியமானதொரு பாடத்தைக் கற்றுக் கொள்வதே மிக முக்கியமானதாகும். அதாவது, இஸ்லாத்துக்குச் சேவையாற்றுவதில் முஸ்லிம் பெண் தனக்கிருக்கின்ற இயல்பான பங்கை நிறைவேற்றவும், அவள் எமது எதிர்காலப் பரம்பரைகளை இஸ்லாத்தின் அடிப்படைகள், வழிகாட்டலின் கீழ் வளர்த்தெடுக்கவும் முன்வர வேண்டும் என்ற புதியதொரு அழைப்பை முஸ்லிம் பெண்களை நோக்கி விடுப்பதற்கு எம்மைத் தூண்டுகின்ற காரணியாக குறித்த நிகழ்வு அமைந்துள்ளது.

இன்றைய முஸ்லிம் பெண்களுக்கு மத்தியில் இரண்டு வகையானவர்களைக் காண முடியும். ஒரு பிரிவினர் ஸாலிஹான சீர்மையான பெண்கள். அவர்கள் தொழுகையை நிறைவேற்றி, அல்குர்ஆனை பாராயணம் செய்து, ஹராமான விடயங்களிலிருந்து தூரமாகி இருக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அடுத்த பிரிவினர் மேற்கத்தேய நாகரிக அலையில் அடிபட்டுச் சென்று வழிபிறழ்ந்து சென்றவர்கள். அவர்கள் இஸ்லாமிய ஒழுக்கங்களையும் அறபு முஸ்லிம் பெண்களின் பண்பாடுகளையும் ஓரங்கட்டி விட்டு, அவற்றுக்குப் பகரமாக தனக்கும் தனது குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் அழிவையும் துரதிஷ்டத்தையும் தேடித் தரக் கூடிய மேற்கத்தேய பெண்களின் ஒழுக்கப் பண்பாடுகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வரலாற்றிலே நிலையான தாக்கம் விளைவித்த மிகச் சிறந்த கண்ணியமிக்க பெண்கள் பரம்பரையினர் வளர்த்த இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களிலிருந்து முஸ்லிம் பெண்களை தூரமாக்கி விடுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று சிலர் முயற்சித்து வருகின்றனர். ஆனால் இஸ்லாமும் அதன் வரலாறும் -குறிப்பாக நபி (ஸல்) அவர்களது வரலாறு- இன்றைய முஸ்லிம் பெண்கள் தமது இயல்பான பணியினதும் கடமையினதும் வரையறைகளுக்குள் இருந்து கொண்டு, தமக்குரிய புனிதம், கற்பு, பணிவு, வெட்கம் போன்ற சிறப்பியல்புகளைப் பேணி, இஸ்லாத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் பணி செய்ய முன்வர வேண்டும் என ஊக்குவிக்கிறது.

கதீஜா (றழி), அயிஷா (றழி), அஸ்மா (றழி), கன்ஸா (றழி), உம்மு ஸுலைம் (றழி) போன்ற ஸஹாபிப் பெண்களின் வீர வரலாறுகளை மார்க்கப் பற்றுள்ள எமது யுவதிகள் மீட்டிப் பார்க்க மாட்டார்களா? வரலாற்றிலே நிரந்தர இடம்பிடித்துக் கொண்ட மின்னும் தாரகைகளாக விளங்கும் இப்பெண்மணிகளின் வரலாற்றை இவர்கள் இன்று மீட்டிக் காட்ட மாட்டார்களா? இன்னும் பல கதீஜாக்களும், ஆயிஷாக்களும், அஸ்மாக்களும், உம்மு ஸுலைம்களும் இன்று அவர்களில் தோன்றுவதென்பது கஷ்டமானதொரு விடயமா? இல்லை. ஒருபோதும் இல்லை. சரியான வழிகாட்டலும் உயிரோட்டமுள்ள ஈமானும் இருந்தால் அதுவே அதற்குப் போதுமானது. வழிகேடர்களின் அழைப்புக்களையும், இஸ்லாம், நன்மை, சத்தியம், நற்செயல் போன்றவற்றை இழிகண் கொண்டு பார்க்கின்றவர்களின் இழிவான செயற்பாடுகளையும் கவனத்திற் கொள்ளாது, நவீன உலகிலே முஸ்லிம் பெண்களுக்கான நிலையான பதிவேட்டை யார்தான் ஆரம்பித்து வைப்பாரோ?

08. இந்த யுத்தத்தின்போது காலித் பின் வலீத் (றழி) அவர்களினால் கொலை செய்யப்பட்ட ஒரு பெண்ணை நபி (ஸல்) அவர்கள் கடந்து சென்றார்கள். மக்கள் அவளைச் சூழ முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். இதனைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் காரணத்தை வினவ, காலித் பின் வலீத் அவர்களால் கொலை செய்யப்பட்ட ஒரு பெண் என அவர்கள் பதிலளித்தார்கள். எனவே, றஸூல் (ஸல்) அவர்கள் தன்னோடு இருந்த ஒருவரை அழைத்து, ''நபி (ஸல்) அவர்கள் எந்தவொரு சிறுபிள்ளையையும், பெண்ணையும், கூலிக்கு அமர்த்தப்பட்டவரையும் கொலை செய்யக் கூடாதெனத் தடை செய்துள்ளார்கள்'' என காலிதிடம் சென்று கூறுமாறு பணித்தார்கள்.

பலவீனர்களை அல்லது போராட்டத்தில் பங்குகொள்ளாத துறவிகள், பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் போன்றோரையும், போராடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட விவசாயிகள், கூலியாட்கள் போன்றோரையும் கொலை செய்வதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. சந்தேகமின்றி இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக யுத்த வரலாறுகளில் இஸ்லாத்தில் மாத்திரம் காணப்படக் கூடிய தனிப்பெரும் சிறப்பம்சமாகும். மனிதாபிமானமும் இரக்கமும் நிறைந்த தனித்துவமான இத்தகையதொரு சட்டத்தை இஸ்லாத்திற்கு முந்திய காலங்களிலோ அல்லது அதற்குப் பின்னைய (இன்று வரையான) காலங்களிலோ வேறு எங்குமே காணக் கிடைப்பதில்லை.

யுத்தங்களின்போது எதிர்த் தரப்பிலுள்ள அனைத்துப் பிரிவினர்களையும் விதிவிலக்கின்றி கொலை செய்ய முடியும் என்பது பொதுவாக அனைத்து சமூகங்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாக இருந்து வந்துள்ளது. பலவீனமான சமூகங்களுக்கு உதவி செய்யவும், அத்துமீறல் களைத் தடுத்து நிறுத்தவுமென மிகப்பெரும் சர்வதேச அமைப்பொன்று தோற்றம் பெற்றுள்ள, மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இக்காலப்பிரிவிலும் கூட, மேலே குறிப்பிட்ட மக்கள் பிரிவினரை கொலை செய்யாது தடுக்கின்ற எந்தவோர் அறிவிப்பினையும் வெளியிடுகின்ற நிலையை மனிதன் காணவில்லை.

முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தங்களின்போது எத்தனை நகரங்கள் அங்கிருந்த மக்கள் கூட்டத்தினரோடு சேர்த்து அழிக்கப்பட்டன என்பதை யும், எவ்வாறு கூட்டுப் படுகொலைகள் ஆகுமாக்கிக் கொள்ளப்பட்டது என்பதையும் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். அத்துடன் மக்கள் தமது வாழும் உரிமைகளையும் கௌரவத்தையும் வென்றெடுப்பதற்காக மேற்கொண்ட மக்கள் எழுச்சிப் போராட்டங்களின்போது அவற்றுக்கு எதிராக காலனித்துவவாதிகள் மேற்கொண்ட யுத்தங்கள் தொடர்பாகவும் நாம் அறிந்து வைத்திருக்கின்றோம். இந்த எழுச்சிப் போராட்டங்களை அடக்குவதற்காக அவர்கள் எத்தனையோ நகரங்களையும் கிராமங்களையும் அழித்தொழித்தார்கள். அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தார்கள். பிரான்ஸ் அல்ஜீரியாவிலும், பிரித்தானியா அதன் காலனித்துவ நாடுகளிலும், போர்த்துக்கல் அதனது காலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆபிரிக்க நாடுகளிலும் மேற்சொன்ன நாடகத்தையே அரங்கேற்றியிருக்கின்றன.

யுத்தம் புரிய நிர்ப்பந்திக்கப்படுகின்ற விவசாயிகள், கூலியாட்களைக் கொலை செய்யக் கூடாது என்ற சட்டத்தை உலகில் தோன்றிய எந்தவொரு சமூகத்திலும் -அது பண்டைய சமூகங்களாக இருந்தாலும் நவீன சமூகங் களாக இருந்தாலும்- எம்மால் கண்டுகொள்ள முடியாது. ஆனால், இஸ்லாம் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே அதனைத் தடுத்து விட்டது. குறித்த தண்டச் சட்டமாக மாத்திரம் சுருங்கி விடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக அதுவே நடைமுறையிலும் யதார்த்தத்திலும் காணப்பட்டது. எனவேதான், இந்த ஷரீஆவின் சொந்தக்காரரும் அதனை அல்லாஹ்விடமிருந்து பெற்று எமக்கு எத்திவைத்தவருமான நபி (ஸல்) அவர்கள் ஹுனைன் போராட்டத்தின்போது ஒரு பெண் கொலை செய்யப்பட்டதைக் கண்டு கோபப்பட்டார்கள். தனது படைத் தலைவர்களுள் ஒருவருக்கு பெண்கள், பிள்ளைகள், கூலியாட்களுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கப்படக் கூடாது எனச் செய்தி அனுப்பினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் -தான் வபாத்தாவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர்- உஸாமா (றழி) அவர்களின் தலைமையிலான படையை ரோமர்களோடு போராடச் செல்வதற்கு தயார் செய்தபோது, யுத்தத்துக்கு வராத அல்லது அதற்கு உதவிசெய்யாத பெண்கள், சிறுவர்கள், இயலாதவர்கள், துறவிகள், போன்றோரைக் கொலை செய்வதைத் தவிர்ந்து கொள்ளுமாறு உபதேசம் செய்தார்கள். குறித்த படையை அல்லாஹ்வின் பாதையில் (அதாவது சத்தியம், நன்மை, நேர்வழி, நீதியை நோக்கிய பாதை) யுத்தம் புரிய அனுப்புகின்ற பணியை நிறைவேற்றிய கலீபா அபூ பக்ர் (றழி) அவர்கள் இவ்வாறுதான் நடந்து கொண்டார்கள். ஸைபுல்லாஹ் என்றழைக்கப்படும் காலித் பின் வலீத் (றழி) அவர்கள் ஈராக்கை வெற்றி கொண்டபோதும் இவ்வாறுதான் நடந்து கொண்டார்கள். தமது பூமியிலே விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விவசாயிகளுக்கு அவர்கள் எவ்விதத் தீங்கும் இழைக்கவில்லை.

உலகில் காணப்பட்ட எந்தவொரு படையினதும் வரலாற்றில் காணக் கிடைக்காத இந்த உன்னதமான மனிதாபிமான அடிப்படைகள் முஸ்லிம் படையில் எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் பொதுவான நடைமுறைகளாக மாற்றம் பெற்றன. ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் சிலுவைப் படையை வெற்றி கொண்டு பைதுல் முகத்தஸை மீட்டெடுத்த பின்னர், அவர்களோடு நடந்து கொண்ட விதமானது முஸ்லிம் படை எந்தளவு தூரம், குறித்த நடைமுறைகளைப் பேணிப் பின்பற்றுவதில் ஆர்வம் காட்டியது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

வயோதிபர்கள், மதத் தலைவர்கள், பெண்கள், சிறுவர்கள், ஏன் கடுமையாக யுத்தம் புரிந்தவர்களுக்குக் கூட அவர்கள் பாதுகாப்பு வழங்கினார்கள். அவர்களுக்கு எவ்விதத் தீங்கும் நிகழா வண்ணம் முஸ்லிம் படையின் பாதுகாப்புடன் அவர்களைத் தமது கூட்டத்தினரோடு சேர்த்து விட்டார்கள். ஆனால், சிலுவைப் படையினர் பைத்துல் முகத்தஸை வெற்றி கொண்டபோது அவர்களது நிலைப்பாட்டில் ஏமாற்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறையும், கொடுங்கோன்மையும் மேலோங்கிக் காணப்பட்டன. பைத்துல் முகத்தஸ் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு மேலால் வெள்ளைக் கொடியைப் பறக்க விட்டால் அவர்களது உயிர்கள், செல்வங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக சிலுவைப் படையினர் உத்தரவாதம் வழங்கினார்கள்.

எனவே, முஸ்லிம்கள் இந்த வாக்குறுதியினால் ஏமாற்றப்பட்டவர்களாக அவ்விடத்தில் ஒன்று கூடினார்கள். சிலுவைப் படையினர் பைத்துல் முகத்தஸில் நுழைந்தபோது அங்கு ஒதுங்கியிருந்தவர்கள் அனைவரையும் படுகொலை செய்தனர். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் அறிஞர்கள், துறவிகள், பெண்கள் சிறுவர்கள் அடங்கலாக எழுபதாயிரம் பேரளவு காணப்பட்டனர். இந்தத் தெளிவான வெற்றி குறித்து பாப்பரசருக்கு நற்செய்தி கூறி செய்தி அனுப்பிய ஒரு கிறிஸ்தவ எழுத்தாளன் பின்வருமாறு பெருமையுடன் குறிப்பிட்டான். முஸ்லிம்களின் இரத்தம் தெருக்களில் ஓடியது. எந்தளவுக்கெனில் சிலுவைப் படையினருடைய குதிரைகளின் முழங்கால்கள் மூழ்கி விடுமளவுக்கு இரத்தம் காணப்பட்டது.''

''அறபு சமூகத்தினரை விடச் சிறந்த இரக்க சிந்தையுள்ள மிக நீதியான வெற்றியாளர்களை வரலாறு கண்டதில்லை'' என்று 'லேபோன்' (Le Bon) என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிட்ட எமது படைவீரர்களினதும், படைத் தலைவகளினதும், அவர்கள் பெற்ற வெற்றிகளினிதும், வரலாறுகளை பெருமைக்காக இங்கு நாம் கூறவில்லை. மாறாக இருபதாம் நூற்றாண்டில் வாழுகின்ற இந்த மேற்கத்தேயர்களை விட நாங்கள் மனித இனத்தின் மீது நன்மை பயக்கக் கூடியவர்களாகவும் அதன் மீது மிகவும் இரக்கமுடையவர்களாகவும் இருந்தோம் என்பதையும், அவர்கள் தமது நாகரிக உயர்ச்சியை எடுத்துக் காட்டுவதற்காக மனித உரிமை தினம், சிறுவர் தினம், அன்னையர் தினம் போன்றன பற்றி எங்களோடு பேசுகின்றபோது, அவர்கள் எங்களை ஏமாற்றவில்லை. மாறாக எமது சமூகத்தைச் சார்ந்தவர்கள் எனவும் எமது சமூகத்தின் அறிஞர்கள் எனவும் போலியாக வாதிட்டுக் கொள்ளும் மடையர்களையும், புத்திசாதுரியம் அற்றவர்களையும், தமது சமூகம் குறித்தும் அதன் வரலாறு குறித்தும் நம்பிக்கையற்று இருப்போரையுமே ஏமாற்றுகின்றனர் என்பதையும் அவர்களுக்கு உணர்த்திக்காட்டவே இதனை நாம் குறிப்பிடுகிறோம்.

எங்களுடைய தற்காலப் பரம்பரை இந்த சூழ்ச்சிகளை நன்கு விளங்கியவர்களாக்வும், தமது மார்க்கம் அதனது மனிதத்துவம் நிறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த நாகரிகப் பாரம்பரியம் குறித்து ஆழமான நம்பிக்கை உடையவர் களாகவும் இருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். விளைவாக, அவர் கள் இழிவடைந்த வறியவன் பலமிக்க பணக்காரனின் முன் மண்டியிட்டு விழுவது போல மேற்கத்தேயர்களுக்கு முன்னால் அடிபணிந்து விழ மாட்டார்கள். அந்துப் பூச்சிகள் நெருப்பை நோக்கி விரைந்து சென்று அதில் எரிந்து விடுவதுபோல அவர்கள் மேற்கத்தேயர்களின் சிந்தனைப் பாரம் பரியத்தை, அதிலுள்ள நல்லது எது தீயது எது எனப் பிரித்தறியாது, அவற்றைக் கற்று அழிந்து போக விரைய மாட்டார்கள்.

உலகிலுள்ள மார்க்கங்களில் இஸ்லாம் ஒன்றே மிகச் சிறந்த மாாக்க மெனவும் அதுவே மனித இயல்புக்கு மிகவும் நெருக்கமானதெனவும் அந்த மார்க்கமே மனித நலன்களுக்கு மிகக் கூடுதல் உத்தரவாதம் வழங்குகிறது எனவும் நவீன விஞ்ஞானம் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், இஸ்லாமியப் போராட்டங்களே உலகில் நிகழ்ந்த அன்பு நிறைந்த, அழிவு குறைந்த, அதிக நன்மைகள் நிகழ்ந்த, புனிதமான இலக்குடைய போராட்டங்களாக காணப்பட்டன என்பதை வரலாறு உண்மைப்படுத்தியுள்ளது. அது மாத்திரமன்றி இஸ்லாமே அல்லாஹ்வின் மார்க்கம். முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர். உண்மையான முஸ்லிம்களே அல்லாஹ் வின் தெரிவுசெய்யப்பட்ட அடியார்கள். அவர்களே முழு மனித சமூகத்தி லும் சிறந்தவர்கள். இத்தகைய உண்மைகளை உறுதிப்படுத்துகின்ற புதுப் புது ஆதாரங்கள் ஒவ்வொரு நாளும் தோன்றிய வண்ணமே இருக்கின்றன.

''நிச்சயமாக (இவ்வேதம்) உண்மையானது தான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் பொருட்டு நம்முடைய அத்தாட்சிகளை (உலகத்தின்) பல கோணங்களிலும், அவர்களுக்குள்ளேயும் சீக்கிரமே நாம் அவர்களுக்குக் காண்பிப்போம். (நபியே!) உம் இறைவன் நிச்சயமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது உமக்குப் போதுமானதாக இல்லையா?'' *(அல் புஸ்ஸிலத்: 53)*

09. நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் தாயிபில் உள்ள ஷகீப் கோத்திரத்தினரிடம் சென்ற ஹவாஸூன் கோத்திரத்தினரை துரத்திச் சென்று அவர்களைப் பல நாட்கள் முற்றுகையிட்டு அதில் வெற்றி கிட்டாத வேளை மதீனாவுக்குத் திரும்பினார்கள். வழியிலே ஹுனைன் யுத்தத்தில் கிடைத்த கனீமத் பொருட்களை நபி (ஸல்) அவர்கள் பங்கிட்டார்கள். கைப்பற்றப்பட்ட கனீமத் பொருட்களில் பெண்கள், சிறுவர்கள் உட்பட ஆறாயிரம் பேரும், எண்ணிலடங்காத ஆடுகளும், ஒட்டகைகளும் காணப் பட்டன. இவற்றில் மிகக் கூடுதலான பங்கை இஸ்லாத்தை ஏற்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்கும் நோக்கில் அறபிகளின் முக்கிய பிரமுகர்களுக்கும் மற்றொரு பங்கை குறைஷியருக்கும் வழங்கினார்கள். அன்ஸாரிகளுக்கு எதனையும் கொடுக்கவில்லை.

அன்ஸாரிகளில் சிலர் தமக்குக் கனீமத் பொருட்கள் கிடைக்காமையின் காரணமாகக் கவலையடைந்தவர்களாக பின்வருமாறு பேசிக் கொண்டனர். 'றஸூல் (ஸல்) அவர்கள் தனது கூட்டத்தினரோடு சேர்ந்து விட்டார்கள். அதாவது அல்லாஹ் அவர்களுக்கு மக்கா வெற்றியைக் கொடுத்து குறைஷியரை இஸ்லாத்திற்குக் கட்டுப்பட வைத்துவிட்ட பின்னர் நபி (ஸல்) அவர்கள் எங்களைப் பற்றி சிந்திக்க மாட்டார்கள்.' இதைக் கேள்வி யுற்ற நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளை ஒன்றுகூட்டி ஒரு பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள். அதில் அல்லாஹ்வைப் புகழ்ந்ததன் பிறகு பின்வருமாறு குறிப்பிட்டார்கள். அன்ஸாரிகளே! நீங்கள் கூறியவை எனது காதுகளுக்கு எட்டியுள்ளன. நீங்கள் என்னைப் பற்றி உங்களுடைய உள்ளங்களால் குறையாக நினைக்கின்றீர்களா? வழி தவறியிருந்த உங்களுக்கு அல்லாஹ் நேர்வழிகாட்டவில்லையா? வறியவர்களாக இருந்த உங்களை அல்லாஹ் செல்வந்தர்களாக்கவில்லையா? எதிரிகளாக இருந்த உங்களுடைய உள்ளங்களுக்கிடையில் அல்லாஹ் பிணைப்பை ஏற்படுத்தவில்லையா? அன்ஸாரிகளே! எனக்கு நீங்கள் விடையளிக்க மாட்டீர்களா?

அதற்கு அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! நாம் உங்களுக்கு எவ்வாறு விடை கூறுவது? 'சிறப்பும் இரக்கமும் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமே உரித்தானவை' எனக் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நீங்கள் நாடினால் இப்படிச் சொல்லி உண்மையாளர்களாகி விடலாம்" எனக் கூறி, பின்வருமாறு தெளிவுபடுத்தினார்கள். "நீங்கள் பொய்ப்பிக்கப்பட்ட நிலையில் இருந் தீர்கள். நாங்கள் உங்களை உண்மைப்படுத்தினோம். கைவிடப்பட்டவர் களாக வந்தீர்கள் உங்களுக்கு நாம் உதவி செய்தோம். விரட்டியடிக்கப்பட்ட வர்களாக வந்தீர்கள்; உங்களுக்கு புகலிடம் வழங்கினோம். குடும்பச் சுமையுள்ளவர்களாக வந்தீர்கள் உங்களுக்கு ஆறுதல் வழங்கினோம்."

"அன்ஸாரிகளே, உங்களை நான் இஸ்லாத்தில் வாழச்செய்து விட்டு, மற்றொரு கூட்டத்தை இஸ்லாத்தில் இணைத்துக் கொள்வதற்காகப் பயன் படுத்திய உலகின் சொற்ப பொருட்களை வைத்துத் தானா உங்களுக்குள் குறைப்பட்டுக் கொள்கிறீர்கள்? அன்ஸாரிகளே, மக்கள் ஆடுகளோடும், கழுதைகளோடும் செல்கின்றபோது, நீங்கள் அல்லாஹ்வின் தூதரை உங்களோடு அழைத்துக் கொண்டு திரும்பிச் செல்வதையிட்டுத் திருப்தியுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையா? முஹம்மதின் உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக ஹிஜ்ரத் இல்லாவிட்டால் நான் நிச்சயம் அன்ஸாரிகளில் ஒருவராகவே இருந்திருப்பேன். மக்கள் அனைவரும் ஒரு பள்ளத்தாக்கில் செல்ல அன்ஸாரிகள் இன்னொரு பள்ளத்தாக்கில் சென்றால் நிச்சயமாக நான் அன்ஸாரிகளின் பள்ளத்தாக்கிலேயே செல்வேன். யா அல்லாஹ் அன்ஸாரிகள் மீது அருள்பாலிப்பாயாக. அன்ஸாரிகளது பிள்ளைகளுக்கும் அவர்களது பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அருள்பாலிப்பாயாக!''

இதைக் கேட்ட அன்ஸாரிகள் அனைவரும் தமது தாடி நனையுமளவு தேம்பித் தேம்பி அழுதார்கள். அவர்கள் 'அல்லாஹ்வின் தூதரை நாம் எமது பங்காக திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறோம்' எனக் குறிப்பிட்டார்கள்.

இதனுடன் தொடர்பான மற்றும் சில விடயங்களை இங்கு நோக்குவோம்.

**முதலாவதாக:**

இஸ்லாமியப் போராட்ட ஒழுங்கின் ஒரு பகுதியாக விளங்கும் கனீமத் பொருட்கள் தொடர்பானது.

இஸ்லாத்தின் எதிரிகள் விமர்சிப்பதற்காகக் கையாளுகின்ற ஒரு விடயமாக கனீமத் அமைகிறது. அதாவது, கனீமத் பொருள், இஸ்லாத்தில் யுத்தம் பிரகடனப்படுத்தப்படுவதற்கான ஒரு பௌதிக ரீதியான தூண்டற் காரணியாகவும், முஸ்லிம் படைவீரர்களை அர்ப்பணங்கள் தியாகங்கள் புரிவதற்குத் தூண்டும் முக்கிய காரணியாகவும் காணப்படுகிறது. எனவேதான் அவர்கள் யுத்தம் -இந்த யுத்தத்தில் நடந்து கொண்டதுபோல- முடிந்த பின்னர் கனீமத் பொருட்களுக்காக தமக்கிடையே முண்டியடித்துக் கொள்ளக் கூடியவர்களாகக் காணப்பட்டனர் என அவர்கள் வாதிடு கின்றனர்.

நடுநிலையாக சிந்திக்கின்ற எவரும் இந்த வாதத்தை மறுத்துரைப்பார் கள் என்பதில் சந்தேகம் இல்லை. இஸ்லாத்தில் யுத்தத்தை ஊக்குவிக்கின்ற காரணிகள் கருத்தியல் (ஆன்மீகம்) சார்ந்தனவே. சத்தியத்தை உலகில் பரப்பி ஆக்கிரமிப்பையும் பகைமையையும் இல்லாதொழிப்பதையே அது இலக்காகக் கொண்டுள்ளது. இதனையே எண்ணற்ற அல்குர்ஆன் வசனங் களும் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களும் தெளிவாக எடுத்துக் கூறி யுள்ளன. ஒருவர் சடரீதியானதொரு கனீமத் பொருளை -அது எவ்வளவு பெரியதாக இருப்பினும்- அடைந்து கொள்ளும் வேட்கையில் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரை அர்ப்பணம் செய்து, தனது குடும்பத்தின் எதிர்காலத்தை கேள்விக் கிடமாக்கி யுத்தத்தில் ஈடுபடுவார் எனக் கூறுவது ஆச்சரியத்துக்குரியதாகும்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில் முஸ்லிம் போராளிகளிடம் தோன்றிய வழமைக்கு மாற்றமான வீரதீரச் செயல்களுக்கு சடரீதியான கனீமத் பொருட்களை அடைந்து கொள்வதில் உள்ள வேட்கைதான் இட்டுச் சென்றிருக்குமென ஒருபோதும் கூற முடியாது. மேலும் நபி (ஸல்) அவர் களுடைய காலத்தில் அறபிகளோடு இடம்பெற்ற யுத்தங்களின் போதும் அதன் பின்னர் ரோம, பாரசீகர்களோடு இடம்பெற்ற யுத்தங்களின்போதும் அடையப் பெற்ற திடுக்கிடும் முடிவுகளுக்கு அந்த வேட்கைதான் இட்டுச் சென்றிருக்கிறது எனக் குறிப்பிடவும் முடியாது.

அது மாத்திரமன்றி, இஸ்லாத்தின் எதிரிகள் சடரீதியான பேராசைகள் குறைந்தவர்களாக இருந்தார்கள் என்று சொல்வதற்குமில்லை. முஸ்லிம்கள் தோல்வியடைகின்றபோது அவர்கள் கொள்ளையிட்டுக் கொள்கின்ற முஸ்லிம்களின் செல்வங்களும், சிறை பிடிக்கப்படுவோரும் அவர்களுக் குரிய சொத்துக்களாகவே கருதப்பட்டன. எனவே, முஸ்லிம்கள் மாத்திரமே -எதிரிகளை வெற்றிகொள்கின்றபோது- அவர்களின் செல்வங்களையும் கைதிகளையும் தமக்கிடையே பங்கிட்டுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதற்கில்லை. மாற்றமாக போராட்டத்தில் பங்கு கொள் கின்ற இரண்டு தரப்பினருக்கும் பொதுவான ஒன்றாகவே இது காணப் பட்டது. அவ்வாறாயின் எதிரிகளிடம் காணப்பட்ட சடரீதியான பேராசை கள் ஏன் அவர்களை வழமைக்குப் புறம்பான வீரதீரச் செயல்களில் ஈடுபடுவதற்கும், முஸ்லிம் படை வீரர்கள். இஸ்லாமியப் போராட்டக் களங்களில் ஏற்படுத்தியது போன்ற திடுக்கிடும் விளைவுகளை தோற்று விப்பதற்கும் இட்டுச் செல்லவில்லை?

முஸ்லிம் படை வீரனைப் போராட்டத்துக்கு இட்டுச் சென்ற மிகப் பிரதானமான காரணியாக சட ரீதியான ஊக்குவிப்புக்களே காணப்பட்டன என்பதை முற்றாக மறுத்துரைக்கும் பல நிகழ்வுகளை இஸ்லாமியப் போராட்டங்களில் காண முடியும். பத்ர், உஹத், முஅத்தா போன்ற அனைத்துப் போராட்டங்களிலும் முஸ்லிம் படைவீரர்கள் ஷஹாதத்தின் சிறப்பையும், சுவனத்தையும் அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்புடனேயே யுத்த களத்தை நோக்கி செல்லக் கூடியவர்களாக இருந்ததைக் காணலாம்.

நபி (ஸல்) அவர்கள் ஷுஹதாக்களுக்கு சுவனம் கிட்டுவதாக வாக்களித் ததை செவியுற்ற ஒரு ஸஹாபி தனது வாயிலிருந்த ஈச்சம் பழத்தை எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிந்து விட்டு, நல்லது! நல்லது! எனக்கும் நான் சுவனத்தில் நுழைவதற்கு மிடையில் இந்த ஈச்சம் பழங்களே தடையாக இருக்கின்றன. அல்லாஹ் வின் மீது ஆணையாக நிச்சயமாக இது மிகத் தூரமான இடைவெளியாகும் எனக் கூறிக் கொண்டு யுத்த களத்தில் குதிக்கக் கூடியவராகவும், இறுதியில் கொலை செய்யப்படும் வரை தொடர்ந்தும் போராடக் கூடியவராகவும் இருந்தார். இன்னுமொருவர் சுவனம்! சுவனம்! அல்லாஹ்வின் மீது சத்திய மாக சுவனத்தின் வாடை உஹத் மலையை விட மிக நெருக்கமாக இருப்ப தைக் காண்கிறேன் என்று கூறிக் கொண்டு எதிரிகளோடு யுத்தம் புரிய வெளியேறிச் செல்லக் கூடியவராக இருந்தார். (குறித்த நிகழ்வு உஹதுப் போராட்டத்தின்போது இடம்பெற்றது).

பாரசீகர்களுடனான யுத்தத்தின்போது 'ருஸ்தும்' முஸ்லிம்களிடம், யுத்தம் புரியாது நாட்டுக்குத் திரும்பிச் சென்றால் செல்வங்களும் ஆடை களும் தருவதாகக் கூறினான். அதன்போது முஸ்லிம் தூதுக் குழுவின் தலைவருடைய பதில் பின்வருமாறு அமைந்திருந்தது. 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக நாங்கள் இதற்காக வெளியேறி வரவில்லை. நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் படைப்புகளை வணங்குவதிலிருந்து உங்களைப் பாது காத்து, வல்லமை மிக்க ஒரே அல்லாஹ்வை வணங்கச் செய்யும் நோக்குட னேயே வந்திருக்கிறோம். நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் உங்களுடைய செல்வங்களையும் பூமியையும் உங்களிடமே விட்டுவிட்டுத் திரும்பிச் சென்று விடுவோம். அவற்றில் எதற்காகவேனும் உங்களோடு நாம் போராட மாட்டோம்'. நிலத்தையும் செல்வங்களையும் ஆக்கிரமித்து, கனீமத் பொருட்களை அடைந்து கொள்ளும் நோக்கில் வெளியேறி வந்த ஒரு கூட்டத்தினரின் பதிலாக இது இருக்க முடியுமா?

ஹுனைன் யுத்தத்தின் பின்னர் கனீமத் பொருட்களைப் பங்கீடு செய்த போது அப்பொருட்கள் தமக்குக் கிடைக்காமையின் காரணமாக அன்ஸாரி கள் குழம்பிப் போனதையும், போராளிகள் பலர் தமக்கு கனீமத் பொருட் கள் கிடைக்க வேண்டும் என ஆசை வைத்ததையும் மேற்கூறப்பட்ட போலி வாதத்துக்கான ஆதாரமாக இஸ்லாத்தின் எதிரிகள் முன்வைக்கின்ற னர். அவர்கள், குறித்த போராட்டத்தினதும் அதில் கலந்து கொண்ட போராளிகளினதும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமலேயே இவ்வாறு கூறுகின்றனர். உண்மையில் இஸ்லாத்தின் போதனைகள் -ஆரம்ப முஸ்லிம்களிடம் காணப்பட்டது போல- உள்ளங்களில் ஆழமாகப் பதிந்திராத நிலையில் காணப்பட்ட புதிய முஸ்லிம்களே இவ்வாறு தமக்கு கனீமத் பொருட்கள் கிடைக்க வேண்டுமென ஆசை வைத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூ பக்ர் (றழி), உமர் (றழி), உஸ்மான் (றழி), அலி(றழி), இப்னு அவ்ப் (றழி), தல்ஹா (றழி), ஸுபைர் (றழி) போன்ற பெரிய ஆரம்பகால ஸஹாபாக்கள் எவரும் இந்த கனீமத் பொருட்களின் மீது ஒருபோதும் ஆசை கொள்ளவில்லை. அன்ஸாரிகளுக்கு மத்தியில் நிகழ்ந்தது என்னவெனில், அவர்களில் சிலர் கனீமத் பொருட்களை பங்கீடு செய்வதில் சிலரை விட சிலருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது எனக் கதைத்துக் கொண்டமையே ஆகும். இத்தகைய நிகழ்வுகள் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் வாழ்கின்ற பெரும்பாலானவர்களுக்கு ஏற்படுகின் றன. ஒவ்வொரு மனிதனும் இத்தகைய நிலமைகளின்போது இவ்வாறு சிந்திப்பது இயல்பானதே.

நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளை நோக்கி பிரசங்கம் நிகழ்த்திய போது அவர்கள் அழுது பிரலாபித்தமை, அவர்கள் அல்லாஹ்வினது திருப்தியையும், கூலியையும், சுவர்க்கத்தையும் எதிர்பார்த்தும், அவனது தூதருக்கு கட்டுப்பட்டுமே நடந்தார்கள் என்பதற்குப் போதுமான ஆதார மாகும். றஸூல் (ஸல்) அவர்கள் அவ்வுபதேசத்தில் ''அன்சாரிகளே! மக்கள் ஆடுகளோடும், கழுதைகளோடும் செல்ல நீங்கள் அல்லாஹ்வின் தூதரை உங்களோடு அழைத்துக் கொண்டு திரும்பிச் செல்வதை ஏற்றுக் கொள்ள வில்லையா? எனக் கேட்டார்கள். எனவே, நபி (ஸல்) அவர்களுடன் தோழமை பூண்டு, அவர்கள் தம்மோடு நெருக்கமாக இருப்பதை அனைத்து செல்வங்களையும், உலகியல் அடைவுகளையும் விட மேலானதாகக் கருதிய அவர்களைப் பார்த்து, அவர்கள் சொத்து செல்வங்களுக்காகத்தான் போராடினார்கள் எனக் கூறுவது சரியாகுமா?

இஸ்லாம் ஏன் கனீமத் பொருட்களை யுத்தத்தில் பங்கேற்ற போராளி களுக்குரிய பங்காக ஆக்கியது? தற்காலத்தில் போன்று அதை ஏன் அரசுக்குரிய சொத்தாக ஆக்கவில்லை என சிலர் கேட்கின்றனர். உண்மை யில் இவ்வாறு கேட்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. ஏனெனில், அக்கால மக்களின் இயல்பையும், யுத்த மரபுகளையும் புரிந்துகொள்ளா மையின் காரணமாகவே அவர்கள் இவ்வாறு பேசுகிறார்கள். முஸ்லிம் படை மாத்திரமே கனீமத் பொருட்களில் ஐந்தில் நான்கு பங்கை போராளி களிடையே பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்பதற்கில்லை. மாறாக, ரோம பாரசீக படைகள் உட்பட எல்லாப் படைகளுக்கும் பொது வானதொரு அம்சமாகவே இது இருந்து வந்தது. தற்காலத்தில் முஸ்லிம் படை கைப்பற்றுகின்ற கனீமத் பொருட்கள் அரசாங்கத்துக்கே கொடுக்கப் பட வேண்டும் என இன்று எவரேனுமொரு முஜ்தஹித் குறிப்பிட்டால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இஸ்லாமிய அடிப்படைகளுக்கும் அதன் இயல்புக்கும் மாற்றமாக அமைந்ததென ஒருபோதும் கொள்ளப்பட மாட்டாது.

**இரண்டாவதாக:**

புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்களுக்கு அதிகமாக கனீமத் பொருட்களை கொடுத்தமையானது, நபி (ஸல்) அவர்களின் அறிவுக் கூர்மையையும், தனது சமூகத்தின் இயல்புகள் குறித்து அவர்களுக்கிருந்த அறிவுப் பின்னணியையும், விவகாரங்களைக் கையாள்வதில் அவர்களிடம் காணப்பட்ட தூர நோக்கையும் எடுத்துக் காட்டுகின்றது. உண்மையில் அவர்கள் மக்கா வெற்றி வரை நபி (ஸல்) அவர்களோடு யுத்தம் புரியக் கூடியவர்களாகவும், தஃவாவை நிராகரிக்கக் கூடியவர்களாகவும் இருந்து வந்தார்கள். முஸ்லிம்கள் யுத்தத்தின் ஆரம்பத்திலே தோல்வியைத் தழுவியபோது தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டிய சிலர் கூட அவர்களில் காணப்பட்டனர்.

எனவே, அவர்களது உள்ளங்களை இஸ்லாத்தில் இணைத்து, தாம் எதனை அடைவதற்காக முஸ்லிம்களோடு யுத்தம் புரியக் கூடியவர்களாக இருந்தார்களோ அந்த சடரீதியான இலாபங்களும் இஸ்லாத்தை தழுவிக் கொண்டதன் விளைவாகக் கிட்டுகின்றன என்பதை அவர்களுக்கு உணர்த்திக் காட்ட வேண்டிய அவசியத் தேவை இருந்து வந்தது. ஏனெனில் உண்மையில் சமூகத்திலுள்ள முக்கிய பிரமுகர்களாகக் காணப்பட்ட அவர்கள் தமது தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொள்ளவும், தமது சடரீதியான நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவுமே முஸ்லிம்களோடு யுத்தம் புரியக் கூடியவர்களாக இருந்து வந்தார்கள்.

மக்கா வெற்றியைத் தொடர்ந்து பலவீனமடைந்த அவர்கள், குறித்த வெற்றி குறித்து தமது உள்ளங்களின் ஆழங்களிலே பொறாமை கொண் டோராகவும், தமது தோல்வியும் உடைவும் குறித்து கவலை கொண்டோ ராகவும் தொடர்ந்தும் இருக்க முடியும். இஸ்லாம் நேர்வழியினதும் சீர்திருத்தத்தினதும் மார்க்கம். அது மனித உள்ளங்களினதும் ஆன்மாக்களின தும் விருப்பு வெறுப்புக்களைக் கவனத்திற் கொள்ளாது, பலத்தில் மாத்திரம் தங்கி நின்று இருப்பை உறுதி செய்து கொள்ள எத்தனிக்கின்ற ஏனைய கொள்கைகளைப் போன்று அடக்குமுறையினால் அதிகாரத்தை மக்களுக்கு திணிக்கின்ற மார்க்கமன்று. மாறாக உள்ளங்கள் இஸ்லாத்தை நோக்கித் திறபட வேண்டும், அவை அதன் வழிகாட்டலை ஏற்று அதன் அடிப்படைகளையும், போதனைகளையும் பின்பற்ற ஆசை வைக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக மாற்றமடைய வேண்டும் என அது எதிர்பார்க்கிறது. எனவே, சில ருக்கு கொடுப்பதுதான் அவர்களுடைய உள்ளங்களை சீர்திருத்துவதற்கும் அவர்களிடமிருந்து குரோத உணர்வை இல்லாதொழிப்பதற்கும் பயனளிக்குமென்றால் நபி (ஸல்) அவர்கள் செய்ததுபோல அவர்கள் திருப்தியுரும் வரை கொடுப்பதுவே அறிவுபூர்வமானதாகும்.

இறுதியாக அறபுத் தீபகற்பத்தில் வெற்றி வாகை சூடிய தஃவா, உலகின் கிழக்கிலும் மேற்கிலுமாக எல்லாப் பாகங்களிலும் பரவிச் செல்வது அவசியமாகும் என்பதை அல்லாஹ் அறிந்து வைத்திருந்தான். எனவே, அறபிகள் அனைவரையும் இந்தத் தூதை சுமப்பதற்கும் அதன் பாதையில் தியாகங்கள் செய்வதற்கும் தயார்செய்ய வேண்டிய அவசியம் காணப் பட்டது. இந்தக் கொடைகளின் மூலம் சமூகத்தின் முக்கிய பிரமுகர்களது ஆன்மாக்கள் சீர்பெற்று விடுமாயின் நிச்சயம் இதன் பிறகு அவர்களது உள்ளங்கள் தஃவா ஒளியின்பால் திறபட்டு அதன் சுமைகளைச் சுமந்து கொள்ளத் தயாராகிவிடும். உண்மையில் இதுவே நடந்தது. இந்தத் தலைவர்களது உள்ளங்களை நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் இணைத்து விட்டதன் பயனாக இஸ்லாத்தின் மீதும் தஃவாவின் மீதும் அவர்களது உள்ளங்களில் புரையோடிக் காணப்பட்ட குரோதம், பொறாமை போன்ற தீய எண்ணங்கள் அனைத்தும் நீங்கிச் சென்றன.

இஸ்லாத்தின் அடிப்படைகளை போதிக்கவும் மக்களை இருளிலிருந்து ஒளியின்பால் இட்டுச் செல்லவுமென முஸ்லிம் படை பூமியின் எல்லாப் பாகங்களிலும் பரந்து விரிந்து சென்றபோது, முழு அறபுத் தீபகற்பமுமே இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பணியை மேற்கொள்வதற்குத் தயாரான நிலையில் காணப்பட்டது. புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இந்தத் தலைவர்கள் விடுதலைப் போராட்டத்தில் குதிக்க திருப்தியோடு உந்தப் பட்டுவந்த முன்னிலை வீரர்களாகவும் காணப்பட்டனர். இவர்களில் அதிகமானோர் இஸ்லாமிய வெற்றிகளில் ஆற்றிய பங்களிப்புக்களும் சாதனைகளும் குறித்து வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. மேலும், அறபுத் தீபகற்பத்துக்கு வெளியே இஸ்லாத்தின் நிலைகளைப் பலப்படுத்து வதிலும், அதன் பரந்து விரிந்த சாம்ராஜ்யத்தை நிருவகிப்பதிலும், எல்லாப் பாகங்களிலும் முன்னேறிச் சென்ற முஸ்லிம் படைகளுக்குத் தலைமைத் துவம் வழங்குவதிலும் அவர்களில் அதிகமானோருக்கு முக்கிய பங்கு காணப்பட்டது என்பதையும் வரலாறு உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்த போராளிகள் இஸ்லாத்தை ஏற்ற ஆரம்பத்தில் அவர்களது உள்ளங்களை அதனை நோக்கி ஈர்த்தெடுக்க வேண்டியேற்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவர்கள் இஸ்லாத்தை ஏற்பது மக்கா வெற்றிவரை தாமதமாகியமை அவர்களுக்கு பாதிப்பேற்படுத்திய காரணிகளாகக் கொள்ளப்பட முடியாது. ஏனெனில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாமதித்து வருகின்றவர் முன்சென்றவரை அடைந்து கொள்ளக் கூடியவராக இருப்பார். பலவீனமானவர் பலமானவரின் சிறப்பை அடைந்து கொள்ளக் கூடியவராக இருப்பார். தூய்மையாக தனது செயற்பாட்டை ஆரம்பிக்காத ஒருவர் பின்னர் தனது செயற்பாடுகளை தூய்மையாக அமைத்துக் கொள்ளக் கூடியவராக மாற்றமடைவார்.

இதனை ஹஸன் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள். ''நாங்கள் இந்த அறிவை அல்லாஹ் அல்லாத வேறு நோக்கத்துக்காகக் கற்றுக் கொண்டோம். பின்னர் அது அல்லாஹ்வுக்காக மாத்திரமே இருக்க வேண்டுமென என்று ஆகிவிட்டது. மேலும் ஒருவர் குறிப்பிடுகையில் 'நாம் இந்தக் கல்வியை எத்தகைய (நிய்யத்) எண்ணமும் இன்றிக் கற்றோம். பிறகுதான் எமக்கு எண்ணம் (நிய்யத்) தோன்றியது.' அல்லாஹ் தாமதித்து வந்தவர்களுக்கு அல்குர்ஆனிலே வாக்களித்திருக்கின்ற மிகச் சிறந்த வெகுமதி அவர்களுக்குப் போதுமானது.

''*(மக்கா)* வெற்றிக்கு முன்னர் செலவு செய்து, போரிட்டவர்களுக்கு உங்களில் நின்றும் (எவரும்) சமமாக மாட்டார். (மக்காவின் வெற்றிக்குப்) பின், செலவு செய்து போரிட்டவர்களைவிட, அவர்கள் பதவியால் மிகவும் மகத்தானவர்கள், எனினும் அல்லாஹ் எல்லோருக்குமே அழகானதையே வாக்களித்திருக்கின்றான். அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு தெரிந்தவன்.'' *(அல் ஹதீத்: 10)*

**மூன்றாவதாக:**

கனீமத் பொருட்கள் கிடைக்காமையினால் தாக்கமுற்றிருந்த அன்ஸாரிகளை திருப்திப்படுத்தும் நோக்கில் நபி (ஸல்) அவர்கள், அவர்களை ஒன்று கூட்டியமையானது, அவர்களின் சிறந்த இராஜதந்திரத்துக்கும் உயர்ந்த பண்பாடுகளுக்கும் ஆதாரமாய் உள்ளது. கனீமத் பொருள் விவகாரம் தொடர்பாக அவர்களில் சிலர் பேசிக் கொள்வதைக் கேள்வியுற்ற மறுகணமே அவர்களை ஒன்று கூட்டி அவர்களைத் திருப்திப்படுத்தும் விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

உண்மையில் அவர்கள் தன்னை நேசிக்கிறார்கள், தன்னைப் பின்பற்றுகிறார்கள், அல்லாஹ்வின் பாதையிலே தமது செல்வங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களையும் செலவழித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஈமானில் குறை ஏற்படுத்தக் கூடிய அல்லது அல்லாஹ்வினதும் றஸூலினதும் கோபத்தை அவர்களுக்கு ஈட்டித் தரக் கூடிய எந்தவொரு காரணியும் இருப்பதற்கான பயமும் இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் நபி (ஸல்) அவர்கள் தனது ஆழமான வசனங்களினூடாக குறித்த விடயம் தொடர்பாக சிலரது உள்ளங்களிலே காணப்பட்ட சந்தேகங்களை நீக்கி விடுவதற்கு விரும்பினார்கள்.

பொதுவாக எல்லாத் தலைவர்களும் தமது நேசத்துக்குரியவர்கள், உதவியாளர்களோடு நடந்துகொள்ளும்போது இந்த அழகான வழிமுறையைப் பின்பற்றுவது அவசியமாகும். ஏனெனில், எதிரிகள், தலைவருக்கும் அவரது நேசர்களுக்குமிடையில் நிலவும் உறவை பலவீனப்படுத்துவதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ள எப்போதும் எதிர்பார்த்த வண்ணம் இருப்பார்கள். ஷைத்தான் மிக மோசமாக சூழ்ச்சி செய்யக் கூடியவன், மிக அவசரமான தந்திரக்காரன். எனவே தலைவர்கள் தமது நேசத்துக்குரியவர்களை எவ்வளவுதான் ஆழமாக நம்பினாலும் அவர்களைத் திருப்திப்படுத்துவதில் ஒருபோதும் கவனக் குறைவாக நடந்து விடக் கூடாது.

அன்ஸாரிகளை திருப்திப்படுத்துவதற்காக நபி (ஸல்) அவர்கள் கையாண்ட தாக்கம் நிறைந்த உன்னதமான வழிமுறையைப் பாருங்கள். வழிகேடு, பிளவு, பரஸ்பர குரோதம் போன்றவற்றிலிருந்து அவர்களைக் காப்பாற்றிய அல்லாஹ்வின் அருளை அவர்களுக்கு ஞாபகப்படுத்தியதன் பின்னர், இஸ்லாமிய தஃவாப் பணியில் அவர்களது சிறப்பு குறித்தும், அவர்கள் அல்லாஹ்வின் தூதருக்கு வழங்கிய உதவி குறித்தும் குறிப்பிட்டார்கள். தனது சமூகம் தன்னைப் பொய்ப்பித்து விரட்டியடித்தபோது தன்னை அவர்கள் உண்மைப்படுத்த விரைந்தமையையும் அங்கு சுட்டிக் காட்டினார்கள். தமக்குத் தவறிப்போன உலக செல்வங்களை விட தாம் ஈட்டிக் கொண்ட நேர்வழியும், சுபீட்சமுமே பாரியது என்பதை அவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளும் பொருட்டே இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதன் மூலம் நபி (ஸல்) அவர்களுக்கு இரண்டு விடயங்களை வலியுறுத்திக் கூறினார்கள். ஒன்று, அவர்களில் சிலர் கூறியதுபோல் தான் அன்ஸாரிகளை மறந்து விட்டு தனது கூட்டத்தினரோடு சேர்ந்துவிடவில்லை. மற்றது, அவர்களது உறுதியான ஈமானையும், மார்க்கப் பற்றையும், அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் அவர்கள் கொண்டிருந்த அன்பையும் அடிப்படையாக வைத்தே அவர்களுக்கு கனீமத் பொருட்களை வழங்காதிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களிடமிருந்து எந்தவொரு கூலியையும் நன்றியையும் எதிர்பார்க்காது உண்மையாகவும் தூய்மையாகவும் தஃவாவை ஈமான் கொண்டு அதன் சிறப்பை ஆரம்பமாக அடைந்து கொண்ட சிறப்புக்குரியவர்களை திருப்திப் படுத்துவதற்கு நபி (ஸல்) அவர்கள் கையாண்ட இந்த வழிமுறையை விடச் சிறந்த வேறு ஒரு வழிமுறை இருக்க முடியாது. நபி (ஸல்) அவர்கள் குறித்து அல்குர்ஆன் கூறும் பின்வரும் வசனம் எவ்வளவு உண்மையானது.

''மேலும், (நபியே) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர்''.

**நான்காவதாக:**

நபி (ஸல்) அவர்களின் உபதேசத்தைக் கேட்ட பின்னர் அன்ஸாரிகள் எடுத்துக் கொண்ட நிலைப்பாடானது அவர்களது ஈமானின் உண்மைத் தன்மைக்கும் அவர்களது உள்ளங்களின் இளகிய தன்மைக்கும் மிகச் சிறந்தொரு உதாரணமாகும். அல்லாஹ்வை அஞ்சவும், நேர்வழியை அடைந்து கொள்ளவும், அவன் புரிந்த அருளை அந்த உள்ளங்கள் பின்வருமாறு ஞாபகப்படுத்திக் கொண்டன.

தாம் மேற்கொண்ட ஜிஹாத், வழங்கிய ஏனைய உதவிகள் அனைத்தி னதும் சிறப்பு அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமே உரித்துடையது. அல்லாஹ்வின் அருள் இன்றேல் தாம் ஒருபோதும் நேர்வழி பெற்றிருக்க மாட்டோம். அவனது தூதர் இல்லாவிட்டால் தமது உள்ளங்களும் கண் களும் ஒளி பெற்றிருக்க மாட்டா. இஸ்லாம் இல்லாவிட்டால், பிளவுண்டி ருந்த தங்களை அல்லாஹ் ஒருபோதும் ஒன்று சேர்த்திருக்க மாட்டான். ஓட்டப்பட்டுக் கொண்டிருந்த தமது இரத்தத்தை அவன் பாதுகாத்திருக்க மாட்டான். யூதர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தம்மைக் காப்பாற்றி, இஸ்லாத்தின் மூலம் கண்ணியப்படுத்தியிருக்கவும் மாட்டான். அது மாத்திரமன்றி பக்கத்திலிருந்த ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தம்மை விடுவித்திருக்கவும் மாட்டான்.

பின்னர் உலக இன்பங்கள், செல்வங்கள் அனைத்தையும் விட அல்லாஹ்வின் தூதரே தமக்கு விருப்பத்துக்குரியவர்கள் என்பதை அவர்கள் அறிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் பிள்ளைகளது பிள்ளைகளுக்கும் அருள் பாலிக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிந்தபோது நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தம்மீது அக்கறையுடையவர்களாக இருக்கிறார்கள், அவர்களது பிரார்த்தனை நிச்சயம் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சிப் பெருக்கின் காரணமாக அவர்கள் கண்ணீர் வடித்தனர். அவர்களிடம் காணப்பட்ட ஈமானின் உண்மைத் தன்மைக்கு இதை விடவும் சிறந்ததொரு ஆதாரம் இருக்க முடியுமா? இந்த அன்பை விடவும் உயர்ந்ததொரு அன்பு உலகில் இருக்க முடியுமா?

அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக. அவர்களைத் திருப்தியுறச் செய்வானாக. உலக மக்களுக்கு மத்தியில் அவர்களது ஞாபகத்தை நிலைத்திருக்கச் செய்வானாக. இன்பம் நிறைந்த சுவனத்திலே அவர்களோடு எம்மையும் சேர்த்து விடுவானாக. அல்லாஹ்வின் அன்புக்குரிய தூதரோடும் அவன் அருள்பாலித்த ஏனைய நபிமார்கள், சத்தியவான்கள், ஷுஹதாக்கள், அவனுக்கு நெருக்கமானவர்களோடு எம்மையும் சேர்த்து வைப்பானாக.

இறுதியாக, இந்த நிலைப்பாடு குறித்தும், நபி (ஸல்) அவர்களுக்கும் அன்ஸாரிகளுக்குமிடையே இடம்பெற்ற நிகழ்வுகள் குறித்தும் ஒவ்வொரு அழைப்பாளனும் ஞாபகமூட்டிக் கொள்வதும், ஒவ்வொரு மாணவனும் படித்துக் கொள்வதும் அவசியமானதாகும். ஏனெனில் அது அவர்களின் ஈமானைப் பலப்படுத்தி நபி (ஸல்) அவர்கள் மீதும் அல்லாஹ் பொருந்திக் கொண்ட அனைத்து ஸஹாபாக்கள் மீதும் அதிகம் நேசம் கொள்வதற்கு வழியமைத்துக் கொடுக்கும்.

## 2. சிலைகளை உடைத்தல்

நூஹ் (அலை) அவர்களுக்குப் பின்னர் தோன்றிய நபிமார்களின் தந்தை என அழைக்கப்படும் இப்றாஹீம் (அலை) அவர்கள் சிலை வணக்கத்தை சமூகத்திலிருந்து இல்லாதொழிப்பதற்குப் போராடியவர்களுள் முக்கியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். இதன் காரணமாக சமூகம் அவர்களை நெருப்பிலிட்டுக் கொளுத்தி விடக் கூட முயன்றது. இதனை அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. அவர்கள் மக்காவுக்கு வந்து தனது புதல்வர் இஸ்மாஈலையும் மனைவியையும் விட்டு விட்டுச் சென்றார்கள். இஸ்மாஈல் (அலை) அவர்கள் வளர்ந்து வாலிப வயதை அடைந்ததும் இருவருமாகச் சேர்ந்து கஃபாவைக் கட்டி முடித்தார்கள்.

மக்கள் அல்லாஹ்வை வணங்கக் கூடிய, ஹஜ் செய்யக் கூடிய இல்லமாக அது அமைய வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாக இருந்தது. இஸ்மாஈலின் பரம்பரையினர் பல்கிப் பெருகினர். இவர்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதுபோல- அறபிகளாக மாறிய இஸ்மாஈலின் அறபுப் பரம்பரையினர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சிலை வணக்கம் குறித்தோ, சிலைகள் (அஸ்னாம்) குறித்தோ தொடர்ந்தும் அறியாதவர்களாகவே வாழ்ந்து வந்தனர்.

- **அஸ்னாம்:** அவர்கள் வணங்குவதற்காகப் பயன்படுத்திய சிலைகள்.
- **அன்ஸாப்:** அவர்கள் வணங்குவதற்கும் மிருகங்களை அறுத்துப் பலியிடுவதற்கும் பயன்படுத்திய கற்கள்.

பின்னர் அவர்களது வணக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது. அவர்களில் எவரும் மக்காவுக்கு வெளியே பயணம் சென்றால் ஹரமுக்கு கொடுத்த கௌரவத்தின் காரணமாக அங்கிருந்து ஒரு கல்லையும் மக்காவிலிருந்து இன்னுமொரு கூழாங்கல்லையும் எடுத்துச் செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் எங்கு சென்றாலும் அங்கு அந்தக் கல்லை வைத்து கஃபாவைச் சுற்றி (தவாப்) வலம் வருவது போல அதனைச் சுற்றி வலம் வரக் கூடியவர்களாக இருந்தார்கள். ஹரமை நேசித்து அதற்கு அன்பு வைத்தும், அதன் அருளை எதிர்பார்த்துமே இவ்வாறு அவர்கள் நடந்து கொண்டார்கள்.

'அம்ரு இப்னு லுஹை' சிலை வணக்கத்தை மக்காவுக்கு கொண்டு வந்து அறிமுகப்படுத்தும் வரை இந்நிலையே தொடர்ந்தும் இருந்து வந்தது. இந்நிகழ்வு வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவது போல நுபுவ்வத்துக்கு 500 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இவனே, இஸ்மாஈல் (அலை) அவர்களின் மார்க்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய முதலாமவனாகக் கருதப்படுகிறான்.

இதன் பின்னணி யாதெனில், ஜுர்ஹூம் வாசிகள் மக்காவிலிருந்தும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலிருந்தும் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து கஃபாவுக்கு பணிவிடை செய்கின்ற பொறுப்பை அம்ரு ஏற்றுக் கொண்டான். பின்னர் அவன் மிகக் கடுமையாக நோய்வாய்ப்பட்ட போது அவனிடம் பின்வருமாறு கூறப்பட்டது. 'சிரியாவின் அல்-பல்கா என்ற பிரதேசத்தில் ஹும்மா என்ற ஒரு இடம் இருக்கிறது. (இன்று அது அல் ஹும்மா என அழைக்கப்படுகிறது.) அங்கு நீர் சென்றால் குணமடைந்து விடுவீர்'.

எனவே, அவன் அங்கு சென்று குளித்ததும் குணமடைந்து விட்டான். குறித்த பிரதேசவாசிகள் சிலை வணக்கத்தில் ஈடுபடுவதைக் கண்ட அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தொடர்பாக அவர்களிடம் வினவினான். அதற்கு அவர்கள் நாம் இவற்றின் மூலம் மழை வேண்டுகிறோம், எதிரிகளுக்கு எதிராக உதவி தேடுகிறோம் என்றார்கள். எனவே, அச்சிலைகளில் சிலதை தனக்கும் வழங்குமாறு அவர்களிடம் அவன் கேட்கவே அவர்களும் கொடுத்துவிட்டனர். அவன் அவற்றை மக்காவுக்குக் கொண்டு வந்து கஃபாவைச் சூழ வைத்தான். (ஹிஷாம் இப்னு முஹம்மத் இப்னு அஸ் ஸாஇப் அல் கல்பி என்பவரின் 'அல் அஸ்னாம்' என்ற நூலில் இருந்து).

இதன் பிறகுதான் அறபுத் தீபகற்பத்தில் சிலை வணக்கம் பரவியது. எந்தளவுக்கெனில் மக்காவிலிருந்த ஒவ்வொரு வீட்டிலும் அவர்கள் வணங்கி வழிபடக் கூடிய ஒரு சிலை காணப்பட்டது. அவர்களில் எவரும் பயணம் செல்ல நாடினால் இறுதியாக அவர் வீட்டிலிருந்து வெளியேறி வரும் போது அதனைத் தடவிக் கொள்ளக் கூடியவராக இருந்தார். மேலும், பிரயாணத்தை முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்து விட்டாலும் முதலில் அச்சிலையைத் தடவிக் கொள்ளக் கூடியவராக இருந்தார்.

பின்னர் அறபிகள் சிலை வணக்கத்தில் மூழ்கிப் போனார்கள். அவர்களில் சிலர் அதற்கென இல்லம் கட்டி வைத்துக் கொண்டனர். மேலும், சிலர் தமக்கென பிரத்தியேகமானதொரு சிலையைச் செய்து கொண்டனர். சிலை செய்யவோ இல்லம் கட்டவோ வசதி இல்லாதவர்கள் ஹரமுக்கு முன்னால் அல்லது தான் விரும்பக் கூடிய ஓர் இடத்தில் ஒரு கல்லை வைத்து கஃபாவை வலம் வருவது போல அதனை வலம் வந்தனர். அவர்களில் எவரும் பயணம் சென்று ஒரு இடத்தில் தங்கிவிட்டால் அந்த இடத்தில் நான்கு கற்களை எடுத்து அவற்றில் தான் அழகானதெனக் கண்டதை இரட்சகனாக (றப்பாக) எடுத்துக்கொண்டார்கள். எஞ்சிய மூன்று கற்களையும் (சமையலுக்காகப் பயன்படுத்தப்படும்) பானையை வைப்பதற்குப் பயன்படுத்தினர். அவர் குறித்த இடத்தை விட்டும் சென்று விட்டால் அவற்றை அவ்விடத்திலேயே வைத்து விடுவார். வேறு ஒரு இடத்தில் தங்கினாலும் இவ்வாறே அவர் நடப்பார். (அல் கல்பியின் அல் அஸ்னாம் என்ற நூலில் இருந்து).

அறபிகளுக்கு மத்தியில் அவர்கள் கண்ணியப்படுத்தக் கூடிய மூன்று பெரும் சிலைகள் காணப்பட்டன. அவற்றுக்காக ஹஜ் செய்யக் கூடியவர்களாகவும், மிருகங்களை அறுத்துப் பலியிடக் கூடியவர்களாகவும் இருந்தனர். அவற்றில் மிகப் பழமையானதாக ''மனாத்'' என்ற சிலை காணப்பட்டது. மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையில் உள்ள 'கதீத்' என்ற பிரதேசத்தில் 'முஷல்லல்' என்ற இடத்துக்கு அருகே உள்ள கடற்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரமாக அது வைக்கப்பட்டிருந்தது. பொதுவாக அறபிகள் அனைவருமே அதனை கௌரவிக்கக் கூடியவர்களாக இருந்தனர். குறிப்பாக அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தினர் அச்சிலைக்கு அதிக கண்ணியம் கொடுத்து வந்தனர்.

நபி (ஸல்) அவர்கள் ஹி.8இல் மக்காவை வெற்றிகொள்வதற்காக வெளியேறிய போது அச்சிலை இருக்கும் இடத்துக்கு அலி (றழி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். அதனை அவர் அழித்துவிட்டு அதிலிருந்தவைகளை எடுத்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அவர் எடுத்து வந்தவைகளில் இரண்டு வாள்கள் காணப் பட்டன. அவ்விரு வாள்களையும் 'கஸ்ஸான்' மன்னன் 'அல்ஹாரிஸ் இப்னு அபீ ஷம்மர் அல் கஸ்ஸானி' குறித்த சிலைக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தான். அவனே தன்னை இஸ்லாத்தின்பால் அழைத்து நபியவர்கள் கடிதம் கொடுத்து தூது அனுப்பிய 'ஷுஜாஃ இப்னு வஹப் அல் அஸதி (றழி)' என்ற நபித்தோழரை, குறித்த கடிதத்தை சமர்ப்பித்த போது, கொலை செய்தான். இவரைத் தவிர நபி (ஸல்) அவர்களின் வேறு எந்தவொரு தூதுவரும் கொலை செய்யப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவது சிலை தாயிபில் காணப்பட்ட ''லாத்'' என்ற சிலையாகும். அது சதுர வடிவிலான ஒரு கல்லாக இருந்தது. குறைஷியர் உட்பட அனைத்து அறேபியரும் அதனை கண்ணியப்படுத்தக் கூடியவர்களாக இருந்தனர். மக்கா வெற்றியைத் தொடர்ந்து நபியவர்கள் மதீனாவுக்குத் திரும்பியதன் பின்னர் 'ஸகீப்' கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு தூதுக் குழுவினர் நபியவர்களிடம் வந்து 'லாத்' சிலையை அழிக்காது மூன்று வருட காலத்துக்கு தமக்காக விட்டு வைக்குமாறு வேண்டினார்கள். அதற்கு நபியவர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். ஒரு வருடமேனும் அதனை உடைக்காதிருக்குமாறு கேட்டனர். அதனையும் நபி (ஸல்) அவர்கள் மறுக்கவே ஒரு மாதமேனும் அதனை விட்டுவைக்குமாறு வேண்டினார் கள். அதற்கும் நபி (ஸல்) அவர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள்.

இப்னு ஹிஷாம் பின்வருமாறு கூறுகிறார்: சமூகத்தில் இருந்த மடையர்கள், பெண்கள், பிள்ளைகளின் தொல்லைகளிலிருந்து பாதுகாப் புப் பெறுவதற்கும், தமது சமூகத்தினர் இஸ்லாத்தில் நுழைவதற்கு முன்னர் அதனை உடைத்தெறிவதனால் அவர்களை மானசீக ரீதியாக அதிர்ச்சியுறச் செய்வதை வெறுத்ததன் காரணமாகவுமே இவ்வாறு அவர்கள் 'லாத்' சிலையை விட்டுவைக்க வேண்டும் என விரும்பினார்கள். எனினும் நபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஸல்) அவர்களோ அபூஸுஃப்யான் இப்னு ஹரபையும், முகீரத் இப்னு ஷுஃபாவையும் அனுப்பி அதனை உடைத்துவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். முகீரா கோடாரியால் அதனை அடித்து உடைக்க ஆரம்பித்தபோது 'ஸகீப்' கோத்திரத்துப் பெண்கள் வெளியே வந்து கவலையின் மேலீட்டால் அழுது பிரலாபித்து பின்வரும் கருத்துப்பட கவிதை பாடலானார்கள்:

''சோதனைகள் நீக்கி, எதிரிகளிடமிருந்து எம்மைப் பாதுகாத்து வந்த இந்தச் சிலைக்கு நேர்ந்த கதிக்காக நாம் கவலைப்படுகிறோம். கோழைகள் அதனை அழிவுக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். அதனை அவர்கள் பாதுகாக்க முன்வரவில்லை. அதற்காக அவர்கள் வாளேந்திப் போராடவு மில்லை.''

மூன்றாவது பெரும் சிலையாகிய 'அல் உஸ்ஸா' சிலை மக்காவிலிருந்து ஈராக் செல்லும் பாதையில் வலது புறத்தே இருந்தது. இதனை -குறிப்பாக குறைஷியர் கௌரவித்து வந்தனர். இச்சிலையையும் ஏனைய சிலைகளை யும் கடிந்து அல்குர்ஆனில் வசனம் இறங்கிய போது குறைஷியருக்கு அது மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது.

அபூ உஹைஹா என்றழைக்கப்படும் ஸஈத் இப்னுல் ஆஸ் இப்னு உமையா இப்னு அப்து ஷம்ஸ் இப்னு அப்து மனாப் நோய்வாய்ப்பட்டி ருந்தபோது (இறுதியில் இந்த நோயினால் தான் அவன் இறந்து போனான்) அபூ லஹப் அவனை நோய் விசாரிக்கச் சென்றான். அவன் அழுது கொண்டிருப்பதைக் கண்ட அவன், 'அபூ உஹைஹாவே, என்ன காரணத் துக்காக அழுகிறாய்? தவிர்க்க முடியாத மரணத்தை எண்ணியா அழுகிறாய்'? என வினவினான். அதற்கு அவன்: 'இல்லை, எனக்குப் பின்னால் உஸ்ஸா வணங்கப்பட மாட்டாதே என அஞ்சுகிறேன்' என்றான். அதற்கு அபூ லஹப் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக, உனது வாழ்க்கையில் உனக்காக ஒரு போதும் அதனை நீ வணங்கியதில்லை. அதுபோலவே, உனது மரணத்தின் காரணமாக உனக்குப் பின்னர் அது வணங்கப்படுவது நிறுத்தப்படப் போவதுமில்லை' எனக் கூறினான். இதற்கு அபூ உஹைஹா: 'எனக்கு ஒரு பிரதிநிதி இருப்பதை இப்போது தான் அறிந்து கொண்டேன்' என்றான். அதனை வணங்குவதில் அபூலஹப் காட்டிய ஆர்வம் அவனுக்கு ஆச்சரியத் தைக் கொடுத்தது. (அல்கல்பியின் அல்-அஸ்னாம் என்ற நூல்: பக்: 23)

மக்காவை வெற்றிகொண்ட ஆண்டில் நபியவர்கள் காலித் பின் வலீத் (றழி) அவர்களை அழைத்து அதனை உடைக்கச் செல்லுமாறு பணித்தார் கள். அவ்விடத்துக்கு வந்த காலிதைப் பார்த்து அதனைப் பாதுகாத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவிடை செய்து வந்த தைபா இப்னு ஹரமீ அஷ்ஷைபானி பின்வரு மாறு கவிதை பாடினான்.

''உஸ்ஸாவே காலிதை மிகக் கடுமையாகத் தாக்குவாயாக! உன்னுடைய திரையை ஒரு புறம் வீசி எறிந்து விட்டு கச்சை கட்டிக் கொள்வாயாக! உஸ்ஸாவே, இன்று நீ இந்த காலிதை கொலை செய்யாவிட்டால், நீ மிக அவசரமாக இழிவடைந்து கிறிஸ்தவனாகி விடுவாய்!''

அதற்கு காலித் (ரழி) அவர்கள்: 'ஓ உஸ்ஸாவே! உன்னை நான் நிராக ரிக்கிறேன்! நான் ஒருபோதும் உன்னிடம் மன்னிப்புக் கோர மாட்டேன்! அல்லாஹ் உன்னை இழிவுபடுத்தி விட்டதை நான் கண்டு விட்டேன்' எனக் கூறினார்கள்.

காலித் (றழி) அவர்கள் வெட்டிய மரமொன்றினுள் காணப்பட்ட குறித்த சிலை அபீஸீனியாவைச் சேர்ந்ததெனவும், அது தலைவிரி கோலம் பூண்ட நிலையிலும், கையைப் புயத்திலே வைத்த நிலையிலும் தோற்றமளிக்கக் கூடியதாக இருந்ததெனக் குறிப்பிடுகின்றனர். காலித் (றழி) அதற்கு அடித்து அதன் தலையை உடைத்து விட்டார். அது சாம்பல் துகள்கள் போன்று சிதறியது. தனது பணியை நிறைவேற்றிவிட்டதாக காலித் (றழி) நபி(ஸல்) அவர்களிடம் கூறவே அவர்கள் ''அந்த உஸ்ஸா, இதன் பிறகு அறேபி யருக்கு உஸ்ஸா இல்லை. அறிந்து கொள்ளுங்கள் இன்று முதல் அது ஒருபோதும் வணங்கப்பட மாட்டாது'' என்று கூறினார்கள்.

> ஜாஹிலிய்யாக் காலத்தில் அறபிகளுக்கு மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்த சிலைகளாக குறித்த மூன்று சிலைகளுமே காணப் பட்டன. இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:
> ''நீங்கள் (ஆராதிக்கும்) லாத்தையும், உஸ்ஸாவையும் கண்டீர்களா?
> மற்றும் மூன்றாவதான 'மனாத்'தையும் (கண்டீர்களா?)''
> (நஜ்ம்: 19-20).

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளில் நபி (ஸல்) அவர்கள் கஃபா வினுள் நுழைந்தபோது, அங்கு அவர்கள் மலக்குமார்களினதும் ஏனையவர் களினதும் படங்கள் தொங்கவிடப்பட்டிருப்பதைக் கண்டார்கள். குறி பார்க்கும் அம்புகளை கையில் வைத்துக் கொண்டிருப்பது போன்று இப்றாஹிம் (அலை) அவர்களினது படம் வரையப்பட்டிருந்தது. அதனைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: 'அல்லாஹ் அவர்களை அழித்து விடட்டும். எங்களுடைய தலைவரை (ஷைஹை) அம்பெய்திக் குறிபார்க்கக் கூடியவர்களாகவல்லவா இவர்கள் ஆக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறார்கள். இப்றாஹிம் (அலை) அவர்களுக்கும் குறிபார்க்கும் அம்புகளுக்கும் என்ன தொடர்பிருக்கிறது'.

''இப்ராஹீம் யூதராகவோ, அல்லது கிறிஸ்தவராகவோ இருக்க வில்லை. ஆனால் அவர் (அல்லாஹ்விடம்) முற்றிலும் (சரணடைந்த) நேர்மையான முஸ்லிமாக இருந்தார். அவர் முஷ்ரிக்குகளில் (இணைவைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை''.
*(ஆல இம்ரான்: 67)*

பிறகு குறித்த படங்கள் அனைத்தையும் அழித்து விடுமாறு பணிக்கவே அவை அனைத்தும் அழிக்கப்பட்டன.

இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்: மக்கா வெற்றி கொள்ளப்பட்ட தினத்தன்று தனது வாகனத்திலே மக்கா வினுள் நுழைந்து அதனைச் சுற்றி வந்த நபி(ஸல்) அவர்கள் கஃபாவைச் சூழ ஈயத்தினால் பொருத்தப்பட்ட சிலைகள் இருப்பதைக் கண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் தனது கையில் இருந்த ஒரு கோலினால் குறித்த சிலைகளைச் சுட்டிக்காட்டி ''சத்தியம் வந்தது அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியமானது அழிந்து போவதேயாகும்'' (அல் இஸ்ரா: 81) என்ற வசனத்தை ஓதினார்கள். நபி (ஸல்) அவர்கள் தனது கோலை ஒரு சிலையினது முகப் பக்கமாக வைத்து சுட்டிக் காட்டுகின்றபோது அது பின்புறமாக வீழ்ந்தது. அவர்கள், சிலையின் பின் புறமாக அதனை வைத்து சுட்டிக் காட்டுகின்றபோது அது முகங்குப்புற வீழ்ந்தது. இவ்வாறு எல்லாச் சிலைகளும் உடைத்தெறியப்பட்டன.

மக்கா வெற்றி கிட்டி சில மாதங்கள் கழிய முன்னரே அறபுத் தீபகற் பத்தில் இருந்த அனைத்து சிலைகளும் அவற்றின் சிம்மாசனங்களிலிருந்து வீழ்த்தப்பட்டன. அவற்றை வணங்கியவர்கள் அவற்றை நிராகரிப்போராக மாறினர். நேற்று அவற்றை வணங்கியவர் இன்று தனது இறந்தகால அற்பமான நிலைப்பாட்டை எண்ணி வெட்கிக்கக் கூடியவராக மாறினார். ஏனெனில், இதுவரை அவர் எந்தப் பயனும் அளிக்காத, நன்மையோ தீமையோ செய்யாத, உலக நிகழ்வுகளோடு எந்தத் தொடர்பும் இல்லாத ஒரு கல்லையல்லவா வணங்கி வந்திருக்கிறார்.

இஸ்லாத்தின் தூது ஆரம்பத்தில் மேற்கொண்ட பணி கடவுளர்களாக போற்றப்பட்ட இந்த சிலைகளை, நிந்தித்து அவற்றுக்கு வணக்கம் செலுத்துவதை இழிவான செயலென எடுத்துக் காட்டி, இயற்கை மார்க்கத் தின்பால் அழைப்பு விடுத்தமையாகும். அதாவது, இந்தப் பிரபஞ்சத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த, அனைத்து உலகங்களுக்கும் இரட்சகனாக (றப்பாக) இருக்கும் அல்லாஹ்வை மாத்திரம் வணங்கும்படி அழைப்பு விடுத்தமையாகும். ஆரம்பத்தில் அறபுத் தீபகற்பம் முழுவதுமே இந்த தஃவாவை எதிர்த்தது. அதன் முன்னணியில் குறைஷியர் காணப்பட்டனர். அவ்வழைப்பை அவர்கள் ஆச்சரியமாக நோக்கினர்.

''இவர் (எல்லாத்) தெய்வங்களையும் ஒரே நாயனாக ஆக்கி விட்டாரா? நிச்சயமாக இது ஓர் ஆச்சரியமான விடயமே! (என்றும் கூறினர்)'' *(அஸ் ஸாத்: 05).*

இந்தப் புதிய மார்க்கம் வந்ததும் அறபுத் தீபகற்பம் குழம்பிப் போய் அல்லோல கல்லோலப்பட்டது. அவர்கள் அதனை உயிருடன் புதைத்து விடவும், அதன் தூதரை தீர்த்துக் கட்டி விடவும் அனைத்து வழிகளிலும் முயற்சித்தனர். எனினும், 21 வருட கால தொடர் போராட்டத்தின் இறுதி வெற்றி அல்லாஹ்வின் தூதருக்கே உரித்துடையதாக இருந்தது. விளைவாக சிலை வணக்கத்தின் தலைநகர் வெற்றிகொள்ளப்பட்டு, அதன் கடவுளர் களாக மதிக்கப்பட்ட சிலைகள் அழித்தொழிக்கப்பட்டன. அதன் படைகள் தோற்கடிக்கப்பட்டு அதன் தலைவர்களுடைய சூழ்ச்சிகளுக்கு முடிவு கட்டப்பட்டன.

இவையனைத்தும் இத்தகையதொரு குறுகிய காலப்பிரிவிலே சாத்தியப் பட்டதென்பதை மனிதப் பகுத்தறிவினால் உண்மைப்படுத்த முடியுமா? ஏனெனில், நபியவர்கள் தனது தஃவாவை ஆரம்பித்த போது எந்தவொரு மனித ஜீவியும் அவர்களுடன் இருக்கவில்லை. எனவே, அல்லாஹ் இந்த தஃவாவுக்குப் பின்னால் இருந்து அதன் படைகளைத் தயார்செய்து அதன் யுத்தங்களின்போது வழிகாட்டியிருக்காவிட்டால் இவை ஒருபோதும் சாத்தியப்பட்டிருக்க மாட்டாது.

''(பகைவர்கள் மீது மண்ணை) நீர் எறிந்தபோது அதனை நீர் எறியவில்லை, அல்லாஹ்தான் எறிந்தான்'' *(அல்-அன்பால்: 17)*

முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் (ஸல்) அவர்கள் 500 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்த அறபிகளின் சிந்தனைச் சிக்கலுக்கு இத்துடன் முடிவு கட்டினார்கள். சிலை வணக்கத்தினதும் அதன் போலி மரபுகளினதும் விலங்குகளை அறபு சமூகத்தின் உள்ளங்களிலிருந்து அகற்றினார்கள். சிலை வணக்கத்தின் இழிவிலிருந்து அறபு சமூகத்தின் கௌரவத்தைக் காப்பாற்றி னார்கள். வெற்றிக்கான கதவுகளை -அவர்கள் நிரந்தரமாக நுழைந்து கொள்ளவென- அவர்களுக்குத் திறந்து கொடுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டபோது, அவர்கள் உண்மையைத் தான் சொல்லி இருக்கிறார்கள். "இதன் பிறகு அறபிகளுக்கு உஸ்ஸா இல்லை. அறிந்து கொள்ளுங்கள் இதன் பிறகு அது ஒருபோதும் வணங்கப்பட மாட்டாது". இதன் பிரகாரம், அறபுத் தீபகற்பம் முழுவதும் சிலை வணக்க வாழ்க்கைக்கு நிலையான பிரியாவிடை கொடுத்து விட்டது. அறபிகளின் சிந்தனை முதிர்ச்சி நிலையை அடைந்தது. எதையும் செவிமடுக்காத குருட்டுத்தனமான கல்லின் பாதங்களுக்குக் கீழ் தமது நெற்றியை வைக்க நிர்ப்பந்திக்கும் சிலைவணக்கம் என்ற சிறுமைத் தனத்தின்பால் மீண்டும் ஒருமுறை திரும்பிச் செல்வதை அந்த சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை.

நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னால் யுத்தங்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டன. சிலர் தமக்கு நபித்துவம் கிட்டியுள்ளதாக வாதிட்டனர். மேலும் சிலர் அல்குர்ஆனை எதிர்த்தார்கள். எனினும், எந்த ஒரு அறபியும் சிலைவணக்கத்தின்பால் மீள வேண்டுமென சிந்தித்ததாக நாம் கேள்விப் பட்டதில்லை. ஏனெனில், பகுத்தறியும் ஆற்றலைப் பெற்றவன் ஒருபோதும் சிறுபிள்ளையாக மாட்டான் அல்லவா? இவையனைத்தும் முஹம்மத் (ஸல்) அவர்களினதும், அவர்களது தூதினுடைய சிறப்பினாலுமே அடையப்பெற்றது. உலகம் முடியும் வரை வாழக்கூடிய அனைத்து அறபிகளையும் காப்பாற்றி சுதந்திரவான்களாக்கிய சிறப்பு நபி (ஸல்) அவர்களையே சாரும். பூமியில் உள்ள அனைத்து மக்கள் குழுமங்களுக்கும், -அவர்கள் நேர்வழியைப் பின்பற்றினாலும் சரியே, அதனைப் புறக்கணித்தாலும் சரியே- நேர்வழிக்கான பாதையை விசாலப்படுத்திக் கொடுத்த சிறப்பும் அவர்களையே சாரும். இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

"அவன்தான், எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான், அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்." *(அல்-ஜுமுஆ: 02)*

**3 - தபூக் யுத்தம்**

இந்த யுத்தத்திலிருந்து பெறக்கூடிய மிக முக்கியமான பாடங்களையும் படிப்பினைகளையும் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாவதாக:** இந்த யுத்தத்துக்கான பின்னணிக் காரணம் யாதெனில், ரோமர்கள் சிரியாவிலே (ஷாம்) அதிக எண்ணிக்கையான ஒரு படையை ஒன்று சேர்த்தனர். ஹிர்கல் மன்னன் ஒரு வருட காலத்துக்கு அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் முன்கூட்டியே வழங்கி இருந்தான். அவர் களோடு லகம், ஜுதாம், கஸ்ஸான், ஆமிலா போன்ற அறபுக் கோத்திரங் களும் இணைந்து கொண்டன. படையணிகள் சிரியாவுக்கும் வாதி அல் கராவுக்கும் இடையிலுள்ள 'அல்பல்கா' என்ற இடத்தை வந்தடைந்தன.

இந்தச் செய்தி நபி (ஸல்) அவர்களை எட்டியதும், அவர்கள் மக்களிடம் யுத்தத்துக்குத் தயாராகுமாறும் தபூக்கை நோக்கிச் செல்லுமாறும், அவர்களைப் பணித்தார்கள். மேலும், செல்வந்தர்களிடம் செலவழிக்க முன்வருமாறு வேண்டுகோள் விடுத்தார்கள்.

இஸ்லாமியப் போராட்டத்தின் இயல்பை இது எமக்கு எடுத்துக் காட்டு கிறது. அது ஆக்கிரமிப்போ அத்துமீறலோ அன்று. மாறாக மார்க்கத்தையும் நாட்டையும் பாதுகாத்து, ஆக்கிரமிப்பாளர்களைப் பயமுறுத்தி, அவர்கள் அநியாயத்திலும் அடாவடித்தனத்திலும் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக வுமே அது மேற்கொள்ளப்படுகிறது. இந்த உண்மையை அல்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் விளக்கியுள்ளன. இஸ்லாத்தில் யுத்தம் அனுமதிக்கப் பட்டமைக்கான காரணங்கள், அதன் நோக்கங்கள், அதன் வழிமுறைகள் போன்றன குறித்து நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். ரோமர்கள் மக்களை ஒன்று கூட்டி யுத்தத்திற்கு தயாராகிய பின்னர் நபி (ஸல்) அவர்கள் தபூக்கை நோக்கிப் புறப்பட்டுச் சென்றமையானது இங்கு நாம் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு வலுவூட்டுவதாய் அமைந்துள்ளது.

சில அறபுக் கோத்திரங்கள் முஸ்லிம்களுக்கெதிராக ரோமர்களோடு இணைந்து கொண்டமை பின்வரும் உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அதாவது, அவர்கள் இஸ்லாம் குறித்தும், முழு மனித சமூகத்தினதும் குறிப்பாக அறபு சமூகத்தினதும் விடுதலைக்காக வந்த அதன் தூது குறித்தும் அறியாதிருந்தார்கள். அதனை அறிந்திருந்தால் அவர்கள் ஒருபோதும் தமது சமூகத்தைச் சேர்ந்த அறபு முஸ்லிம்களுக்கெதிராக ரோமர்களுக்கு உதவி செய்திருக்க மாட்டார்கள்.

**இரண்டாவதாக:** நபி (ஸல்) அவர்கள் வெப்பம் நிறைந்த மிகவும் கஷ்டமானதொரு சூழலிலும் அறுவடைக் காலத்திலுமே யுத்தத்திற்குத் தயாராகுமாறு அழைப்பு விடுத்தார்கள். உண்மையான முஃமின்களைப் பொறுத்தவரையில் அவர்கள், எவ்விதக் கஷ்டத்தையும் இழப்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்படுத்தாது, றஸூல் (ஸல்) அவர்களுடைய அழைப்பிற்கு அவசர மாக பதில் கூறினார்கள். நயவஞ்சகர்களைப் பொறுத்தவரையில் அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் பல்வேறு காரணங்களைக் கூறி யுத்தத்திற்குச் செல்லாது பின்வாங்கினார்கள். இவ்வாறுதான் கஷ்டமான சந்தர்ப்பங்களின் போது தூய்மையானவர்களும் நயவஞ்சகர்களும் பிரித்தறியப்படுகிறார்கள். சோதனை நாட்களில்தான் விசுவாசமானவர்களின் விவகாரங்கள் வெளிப்படுகின்றன. இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

''அலிஃப், லாம், மீம். 'நாங்கள் ஈமான் கொண்டிருக்கின்றோம்' என்று கூறுவதனால் (மட்டும்) அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? நிச்சயமாக அவர்களுக்கு முன்பிருந்தவர்களையும் நாம் சோதித்திருக் கின்றோம்- ஆகவே உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிவான். இன்னும் பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான்.'' *(அல்-அன்கபூத்: 1-3)*

தஃவா இயக்கங்களிலும் சமூகங்களிலும் உள்ள நயவஞ்சகர்கள், ஏமாற்றுக்காரர்களின் அணிகள் களை பிடுங்கப்படும்போதுதான் அவை எழுச்சி பெற்று உயர்வடைகின்றன. தூய்மையான நிய்யத்தும் (எண்ணம்) உறுதியான அடிப்படையும் விசுவாசமும் உள்ளவர்கள் மாத்திரமே கஷ்டத் தின்போது நின்று பிடிப்பார்கள். சமூகத்தில் காணப்படுகின்ற சீர்திருத்த இயக்கங்களின் சீரான ஓட்டத்திற்கு தடைக்கற்களாக பெரும்பாலும் பலவீனர்களும் ஏமாற்றுக்காரர்களுமே இருந்து வந்துள்ளனர். அவற்றி னுடைய வெற்றிக்குத் தடையாக அவர்களே காணப்பட்டு வந்துள்ளனர். அல்லது அந்த வெற்றியை சிறிது காலத்திற்கேனும் பிற்போடுவதற்கான காரணிகளாகவேனும் அவர்கள் செயற்பட்டுள்ளனர்.

தபூக் யுத்தத்திற்குச் சென்ற முஸ்லிம் படை இத்தகைய மனிதர்களில் இருந்து, அவர்களது ஈமானியப் பலவீனமும், உண்மை நிலையும் அம்பலப்படுத்தப்பட்டதன் காரணமாக, தூய்மையடைந்தது. எனவே, ஒரே கலிமாவுக்காக ஐக்கியப்பட்டு, ஈமானியப் பலத்தோடும், அல்லாஹ் வோடும் செய்து கொண்ட உடன்படிக்கையை உண்மைப்படுத்தி யும், ஒரே அணியில் நின்று போராடுகின்ற படை -அது எண்ணிக்கையில் குறைந்த தாக இருப்பினும்- சமூகத்திற்கு வெற்றியை ஈட்டிக் கொடுப்பதற்கு அதிக எண்ணிக்கையுள்ள சிந்தனையிலும் பலத்திலும் உறுதியிலும் ஏற்றத்தாழ் வுள்ள படையை விட மிகவும் பயனுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எத்தனையோ சிறு கூட்டத்தார்கள், பெருங் கூட்டத்தாரை அல்லாஹ்வின் (அருள் மிக்க) அனுமதி கொண்டு வென்றிருக்கின் றார்கள். மேலும் அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின் றான் என்று கூறினார்கள்.'' *(அல்-பகரா: 249)*

**மூன்றாவதாக:** சமூகத்தில் செல்வந்தர்களாக இருந்த அபூ பக்ர் (றழி), உமர் (றழி), உஸ்மான் (றழி) போன்ற ஸஹாபாக்கள் செலவழிப்பதற்கு மிகவுமே அவசரப்பட்டார்கள். ஈமான் எந்தளவு தூரம் முஃமின்களின் உள்ளங்களை நன்மை செய்ய விரைவதற்கும், மனோஇச்சைகளுக்கெதிராக செயற்படுவதற்கும் தூண்டும் என்பதற்கான ஆதாரமாக இது அமைந்துள் ளது. அனைத்து சமூகங்களும், தஃவா இயக்கங்களும் எதிரிகளுக்கெதிராக வெற்றியை உத்தரவாதப்படுத்திக் கொள்ளவும் அவசியமான வளங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இந்த ஈமானின்பால் தேவையுடையனவாக இருக்கின்றன.

குறிப்பாக எமது இன்றைய சமூகம் இதன்பால் மிகவுமே தேவை யுடையதாக இருப்பதை நாம் காண்கிறோம். ஏனெனில், இன்று அதன் எதிரிகள் அதிகரித்து விட்டனர். அது சுமந்திருக்கும் சுமைகள் மிகவும் பாரமானவை. அது எதிர்கொண்டுள்ள போராட்டம் மிகப் பயங்கரமானது. அதனது எதிரிகள் தந்திரமும் பலமும் மிக்கவர்கள். எனவே, செல்வங் களையும் உயிர்களையும், ஆசைகளையும், மனோஇச்சைகளையும் அதிகமதிகம் அர்ப்பணம் செய்வதனூடாக மாத்திரமே இவற்றையெல்லாம் எம்மால் மிகைக்க முடியும்.

தெளிவாகவும் சரியாகவும் விளங்கிக் கொள்ளப்பட்ட இந்த மார்க்கத் தினால் மாத்திரமே இதனை சாத்தியப்படுத்த முடியும். ஏனெனில், செல வழிப்பதையும், சமூகத்துக்காக கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதை யும், போராட்டக் களங்களிலே போராடுகின்ற முஜாஹித்களுக்கு அல்லாஹ் கூலி வழங்குவதுபோல, கூலி வழங்கும் ஒரு ஜிஹாதாக கருதிச் செயற்படுவதற்கு இந்த மார்க்கமே உள்ளங்களைப் பயிற்றுவிக்கிறது.

சீர்திருத்தவாதிகளும், எழுச்சி இயக்கங்களின் தலைவர்களும் மக்களின் உள்ளங்களில் மார்க்கத்தை மிகச் சரியாகவும் சிறப்பாகவும் விதைத்து விடுவதே அவர்கள் செய்யும் மிகச் சிறந்த பணியாகும்.

மார்க்கத்திற்கெதிராக முன்னெடுக்கப்படுகின்ற ஒவ்வொரு எதிர் நடவடிக்கையும், அல்லது அந்த மார்க்கத்திலிருந்து விடுதலை பெற்று வருமாறு விடுவிக்கப்படுகின்ற ஒவ்வொரு அழைப்பும், அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரங்களை இரண்டாந்தரமாகக் கருத வைக்கும் ஒவ்வொரு முயற்சியும், மிக மோசமான விளைவுகளையும் பயங்கரமான பாதிப்புகளையும் கொண்டு வரக்கூடிய மிகப் பெரும் குற்றமாகும். இவ்வாறுதான் அல்லாஹ் எங்களுக்கு கற்றுத் தந்துள்ளான். இதனைத்தான் இறந்தகால வரலாறு எமக்கு உறுதிப்படுத்தியுள்ளது. மட்டுமன்றி, நிகழ்கால அனுபவமும் இதனையே எமக்குச் சொல்லித் தருகிறது. இந்த உண்மையை மறுப்பது குற்றமாகும். சத்தியம் ஆழப்பதிந்திராத, நன்மைகளுக்கான வாயில்கள் மூடப்பட்டுள்ள உள்ளங்களையுடைய, உயர்வு, புனிதம் போன்ற நற்பண்புகளை அணிகலன்களாகக் கொள்ளாத இயல்புகளையடைவர்களே இத்தகையதொரு நிலைக்கு வருவார்கள்.

**நான்காவதாக:** *சில ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து தம்மையும் ஜிஹாதுக்கு அழைத்துச் செல்லுமாறு வேண்டினார்கள். அவர்களை அழைத்துச் செல்வதற்கான வசதி காணப்படாமையின் காரணமாக நபி (ஸல்) அவர்கள் அவர்களைத் திருப்பியனுப்பினார்கள். நபி (ஸல்) அவர்களோடு ஜிஹாதுக்கு செல்லும் பாக்கியம் தமக்குக் கிட்டாததினால் ஏற்பட்ட கவலையின் காரணமாக தேம்பித் தேம்பி அழுதவர்களாக அவர்கள் திரும்பிச் சென்றார்கள். அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ள இச்சம்பவத்தில் ஈமான் நிகழ்த்தக் கூடிய அற்புதங்களை எடுத்துக் காட்டும் மிகச் சிறந்த உதாரணங்கள் காணப்படுகின்றன.*

பொதுவாக அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொள்கின்றபோதும் யுத்தங்களிலிருந்து தூரமாகிக் கொள்கின்றபோதும் மகிழ்ச்சியடைவது மனித இயல்பாகும். ஆனால், இந்த உண்மை முஃமின்களோ யுத்தத்தில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு கிட்டாமைக்காக அழுதிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள், தாம் அல்லாஹ்வின் பாதையில் ஷஹாதத்தை அடைந்து கொள்வதற்கான, அல்லாஹ்வின் கூலியை ஈட்டிக்கொள்வதற்கான பெரியதொரு சந்தர்ப்பத்தை நழுவ விட்டதாகவே இதனைக் கருதினர். எனவே, ஈமான் அவர்களது உள்ளங்களில் செய்த இந்த அற்புதத்தை வேறு எந்தவொரு அடிப்படையாலும் நிகழ்த்திக் காட்ட முடியுமா? இத்தகைய மனிதர்களை சமூகம் இழக்கின்றபோது சமூகத்துக்கு ஏற்படுகின்ற நஷ்டம் எவ்வளவு பாரியது?

**ஐந்தாவதாக:** களைப்படைவதை விட ஓய்வெடுப்பதையும், வெப்பத்தை விட நிழலையும், பயணத்தை விட தங்கி இருப்பதையும் மேலாகக் கருதி ஸஹாபாக்களில் மூவர் -அவர்கள் உண்மையான முஃமின்களாக இருந்தும்- ஜிஹாதுக்குச் செல்லாது பின்வாங்கினார்கள். இந்தச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவத்தில் மிகப் பெரியதொரு சமூக ரீதியான படிப்பினை இருக்கிறது. சிறிது நேரத்திலேயே அவர்களது உள்ளங்களில் ஈமான் விழிப்படைந்து கொண்டது.

நபி (ஸல்) அவர்களோடும் முஃமின்களோடும் செல்லாது பின்வாங்கிய தன் காரணமாக தாம் பெரியதொரு பாவம் இழைத்து விட்டதாக அவர்கள் உணர்ந்து கொண்டனர். அவ்வாறிருந்தும், அந்த உணர்வு அவர்களைத் தண்டனையிலிருந்து தப்பிக்கச் செய்து விடவில்லை. எனவே, அவர் களுக்கு வழங்கப்பட்ட தண்டனை மிகக் கடுமையானதாகவும் பயங்கர மானதாகவும் இருந்தது. அவர்கள் முழுமையாகவே சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டார்கள். அவர்களது மனைவிமார் உட்பட அனை வருமே அவர்களோடு உரையாடுவது தடுக்கப்பட்டது.

அவர்கள் உண்மையாகவே தௌபா செய்து மீண்டு விட்டார்கள், அவர்களது கவலையும் கைசேதமும் உச்ச நிலையை அடைந்துவிட்டது என்பதை அல்லாஹ் அறிந்தபோது அவர்களது குற்றங்களை மன்னித்து விட்டான். எனவே, இது குறித்து அவர்கள் நன்மாராயம் கூறப்பட்டபோது அளவில்லா மகிழ்ச்சியடைந்தார்கள். அல்லாஹ்வின் திருப்தி, அவனது பாவமன்னிப்பு என்ற அருளுக்காக அவர்கள் நன்றி கூறினார்கள். எந்தளவுக் கெனில், அவர்களில் ஒருவர் தனது செல்வங்கள், ஆடைகள் அனைத்தை யுமே களைந்து தியாகம் செய்துவிடக் கூடியவராக மாறினார்.

இத்தகைய படிப்பினைகள் உண்மையாக ஈமான் கொண்ட முஃமினை, தனக்கு கடமையானதொரு செயலிலிருந்து பின்வாங்கி விடுவதையும், மக்கள் களைப்படையும்போது தனக்கு மாத்திரம் ஓய்வை விரும்புவதை யும், மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தான் மாத்திரம் இன்பமாக இருப்பதையும் தடுத்துவிடும். இதுவே ஈமானின் இயல்பாகும். அதாவது முஃமின், தான் சமூகத்திலுள்ள ஒரு உறுப்பினன், அதன் ஒரு கூறு, சமூகத்துக்கு தீங்கிழைக்கின்ற அனைத்துமே தனக்கும் தீங்கிழைக் கும், அதற்குப் பயனளிக்கும் அனைத்துமே தனக்கும் பயனளிக்கும், சமூகம் துன்பப்பட்டு துரதிஷ்டத்தில் இருக்கின்றபோது, தான் மாத்திரம் இன்பமாக வாழ்வதில் அர்த்தம் இல்லை, மக்கள் களைப்படைந்து கொண்டிருக்கும் வேளையில் தான் மாத்திரம் ஓய்வெடுப்பதில் எத்தகைய இன்பமும் கிடையாது, மாத்திரமன்றி, கடமையிலிருந்து பின்வாங்குவதென்பது ஈமானில் உள்ள குறை, மார்க்கத்தில் ஏற்பட்டுள்ள கோளாறு, அவசியம் தௌபா செய்து மீளவேண்டியதொரு குற்றம் என்பதை எப்போதும், எந்த வேளையிலும் உணர்ந்து செயற்படக் கூடியவராக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சம்பவம் இன்னுமொரு பாடத்தை எமக்குக் கற்றுத் தருகிறது. அதாவது, 'அகீதா' குடும்ப உறவை விட மேலானது. ஷரீஆவில் கூறப்பட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்துவது மனோஇச்சைக்கு கட்டுப்படுவதை விட முற்படுத்தப்பட வேண்டியது. அல்லாஹ்வின் கோபத்துக்கும் வெறுப்புக்கும் முன்னால் குடும்ப உறவு எத்தகைய பெருமானத்தையும் பெறமாட்டாது.

''எவர் அவருடைய கட்டளைக்கு மாறுசெய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்.'' *(அந்-நூர்: 63)*

## 4. பிரியாவிடை ஹஜ்

நபித்துவம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஒரேயொரு ஹஜ் இந்தப் பிரியாவிடை ஹஜ்ஜாகும். நபி (ஸல்) அவர்கள் குறித்த அந்த வருடம் ஹஜ் செய்யவுள்ளார்கள் என்பதை கேள்விப்பட்டு அறபுத் தீபகற்பத்தின் நாலா புறங்களிலிருந்தும் ஹஜ்ஜுக்காக மக்கள் கூட்டங் கூட்டமாகத் திரண்டு வந்தனர். சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதுபோல அவர்களது எண்ணிக்கை ஒரு இலட்சத்து பதினான்காயிரமாக இருந்தது. இதனை நாம் அண்ணளவான எண்ணிக்கையாகவே கருதுகின்றோம். ஏனெனில், எவ்வாறு அவர்களது எண்ணிக்கையை இவ்வாறு கணக்கிட்டு சரியாக வரையறுத்துக் குறிப்பிட முடியும்?

நபி (ஸல்) அவர்கள் இந்த ஹஜ்ஜின்போது தனது பிரபல்யமான பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள். இஸ்லாத்தின் பொதுவான அடிப்படைகளை அறிவிக்கும் அறிவிப்பை உள்ளடக்கியதாக இந்தப் பிரசங்கம் அமைந்துள்ளமையால் ஒவ்வொரு மாணவனும் இதனை தனது உள்ளத்திலே ஆழப்பதித்துக்கொள்ள வேண்டும். இது நபி (ஸல்) அவர்களின் இறுதிப் பிரசங்கமாகக் கருதப்படுகிறது. அது பின்வருமாறு அமைந்திருந்தது.

''மனிதர்களே! எனது பேச்சை செவிமடுங்கள். இந்த வருடத்துக்குப் பின்னர் இந்த இடத்திலே உங்களை சந்திப்பேனா என்பதை நான் அறியமாட்டேன். -இது நபி (ஸல்) அவர்களின் அற்புதங்களில் ஒன்று- மனிதர்களே! நீங்கள் உங்களுடைய இரட்சகனைச் சந்திக்கும் வரை உங்களுடைய இரத்தமும் செல்வங்களும் கண்ணியமிக்க இந்த நாளைப் போல, கண்ணியமிக்க இந்த மாதத்தைப்போல, உங்களுக்குப் புனிதமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நிச்சயமாக உங்களுடைய இரட்சகனைச் சந்திப்பீர்கள். உங்களது செயல்கள் குறித்து அவன் உங்களிடம் வினவுவான். (இதனை) நான் உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேன். யாரிடத்தில் அமானிதமாக ஒப்படைக்கப்பட்ட பொருள் இருக்கிறதோ, அவர் அதனை உரியவரிடத்தில் ஒப்படைத்து விடட்டும்.

அனைத்து வட்டியும் நிராகரிக்கப்பட்டுள்ளது. என்றாலும், உங்களுடைய முதலீடுகள் உங்களுக்குரியவை. நீங்கள் அநியாயம் செய்யவும் வேண்டாம். அநியாயத்துக்கு உட்படவும் வேண்டாம். வட்டி இரத்துச் செய்யப்பட்டுள்ளது என அல்லாஹ் தீர்ப்பளித்து விட்டான். அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிபினுடைய அனைத்து வட்டிகளும் இரத்துச் செய்யப்பட்டு விட்டன. ஜாஹிலிய்யாக் (இஸ்லாத்துக்கு முற்பட்ட) காலத்தில் ஒட்டப்பட்ட இரத்தத்துக்காக பழி வாங்குவது இரத்துச் செய்யப்பட்டு விட்டது. இப்னு ரபீஆ, இப்னுல் ஹாரிஸ் இப்னு அப்துல் முத்தலிப் (பனூ லைஸின் பராமரிப்பில் வளர்க்கப்பட்ட அவர் ஹுதைல் என்பவனால் கொலை செய்யப்பட்டார்) இன் இரத்தத்துக்காக பழிவாங்குவதை ஆரம்பமாக இரத்துச் செய்து விடுகிறேன். ஜாஹிலிய்யாக் காலத்தில் நிகழ்ந்த இந்த இரத்தம் சிந்தும் நிகழ்விலிருந்து இதனை ஆரம்பிக்கிறேன்.

மனிதர்களே, ஷைத்தான் உங்களுடைய இந்தப் பூமியில் எப்பொழுதேனும் வணங்கப்படுவான் என்பதில் நம்பிக்கை இழந்து விட்டான். எனினும், அதுவல்லாத நீங்கள் அற்பமாகக் கருதக் கூடியவற்றில் அவனை வழிப்பட்டால் அவன் திருப்தியடைந்து கொள்வான். எனவே, உங்களுடைய மார்க்கத்தில் அவனை நீங்கள் அஞ்சிக் கொள்ளுங்கள்.

மனிதர்களே! போர் செய்யக் கூடாது என்று தடுக்கப்பட்ட இம்மாதங்களை தங்கள் விருப்பப்படி முன்னும் பின்னும் ஆக்குவது குஃப்ரை (நிராகரிப்பை)யே அதிகப்படுத்துகிறது. இதனால் நிராகரிப்பவர்களே வழி கெடுக்கப்படுகின்றனர். ஏனெனில் ஒரு வருடத்தில் அம்மாதங்களில் போர் புரிவதை அனுமதிக்கப்பட்டதாகக் கொள்கிறார்கள். மற்றொரு வருடத்தில் அதைத் தடுத்து விடுகின்றனர். இதற்கு காரணம் தாங்கள் தடுத்துள்ள மாதங்களின் எண்ணிக்கையை அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக்கி, அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களை தாங்கள் ஆகுமாக்கிக் கொள்வதற்காகத்தான்.

அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் இருந்த அமைப்பைப் போலவே காலம் சுழல்கிறது. அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரெண்டாகும். அவற்றிலே நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள் (யுத்தம் புரிய) ஹராமாக்கப்பட்ட புனிதமான மாதங்களாகும். அவற்றில் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக வரக் கூடியன. அடுத்தது ஜமாதாவுக்கும் ஷஃபானுக்கும் இடையில் வரக் கூடிய ரஜப் மாதமாகும்.

மனிதர்களே! உங்களுடைய மனைவிமார்கள் மீது உங்களுக்கு உரிமைகள் இருக்கின்றன. அவர்களுக்கும் உங்கள் மீது உரிமைகள் இருக்கின்றன. நீங்கள் வெறுக்கின்ற எவரையும், அவர்கள் உங்களுடைய வீட்டினுள் வர அனுமதிக்கக் கூடாது. மேலும் அவர்கள் எந்தவொரு தெளிவான பாவமும் செய்யக் கூடாது. அதனை அவர்கள் செய்தால், படுக்கை விரிப்பிலிருந்து அவர்களிடமிருந்து ஒதுங்கிக் கொள்வதையும், அவர்களுக்கு கடுமையாக அன்றி மெதுவாக அடிப்பதையும் உங்களுக்கு அல்லாஹ் அனுமதித்திருக்கிறான்.

இவ்விடயங்களிலிருந்து அவர்கள் தவிர்ந்து கொண்டால் நியாயமான அளவிலான உணவு உடைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர்களாகுவர். உங்களுடைய மனைவிமாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அவர்கள் உங்களிடத்தில் தங்கி வாழ்பவர்கள். அவர்கள் தாமாக எதையும் செய்துகொள்ள சக்தியற்றவர்கள். நீங்கள் அவர்களை அல்லாஹ்விடமிருந்து அமானிதமாகவே பெற்றிருக்கின்றீர்கள். அல்லாஹ்வின் வார்த்தைகள் கொண்டு அவர்களுடைய மர்மஸ்தானங்களை உங்களுக்கு ஆகுமாக்கிக் கொண்டுள்ளீர்கள்.

மனிதர்களே! என்னுடைய பேச்சை நன்கு விளங்கிக் கொள்ளுங்கள். நிச்சயமாக (செய்தியை) உங்களுக்கு எத்திவைத்து விட்டேன். நான் உங்களிடம் ஒன்றை விட்டு விட்டுச் செல்கிறேன். அதனை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்ளும் காலமெல்லாம் ஒருபோதும் வழிதவறி விட மாட்டீர்கள். அது மிகத் தெளிவானதொரு விடயம். அது தான் அல்லாஹ்வுடைய வேதமும் அவனுடைய நபியினுடைய ஸுன்னாவுமாகும்.

மனிதர்களே, என்னுடைய பேச்சைக் கேளுங்கள். அதனை நன்கு விளங்கிக் கொள்ளுங்கள். அறிந்து கொள்ளுங்கள் ஒவ்வொரு முஸ்லிமும் அடுத்த முஸ்லிமின் சகோதரனாவான். நிச்சயமாக அனைத்து முஸ்லிம்களும் சகோதரர்களே. எந்தவொரு நபரும் தனது சகோதரனுடைய எந்தவொன்றையும், அவர் உளத் திருப்தியுடன் வழங்கினால் அன்றி, எடுத்துக் கொள்வது தடுக்கப்பட்டதாகும். எனவே உங்களுக்கே நீங்கள் அநியாயம் செய்து கொள்ளாதீர்கள். யா அல்லாஹ் நான் (செய்தியை) எத்தி வைத்து விட்டேன்?''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாவிடை ஹஜ்ஜிலே கவனத்தை ஈர்க்கின்ற முதலாவது விடயம் தான் அங்கு சமூகம் தந்திருந்த பிரமாண்டமான சனத்திரள். அவர்கள், நபி (ஸல்) அவர்களை ஈமான் கொண்டவர்களாக, அவர்களுடைய றிஸாலத்தை உண்மைப்படுத்தியவர்களாக, அவர்களுடைய கட்டளைக்குக் கீழ்படிந்த வர்களாக அறபுத் தீபகற்பத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அவ்விடத் துக்கு வந்திருந்தார்கள். அவர்கள் அனைவருமே சுமார் இருபத்து மூன்று வருடங்களுக்கு முன்னர் சிலை வணக்கத்தில் ஈடுபாடுடையவர்களாகவும், இணைவைப்பாளர்களாகவும் இருந்து வந்தனர்.

அவர்கள், நபி (ஸல்) அவர்களின் றிஸாலத்தின் அடிப்படைகளை மறுப்பவர்களாகவும், தௌஹீதின் (ஏகத்துவம்) பால் அவர்கள் விடுத்த அழைப்பை ஆச்சரியமாக நோக்குபவர்களாகவும் இருந்தனர். சிலை வணங்கிகளாக இருந்த அவர்களது பெற்றோரை நபி (ஸல்) அவர்கள் கண்டித்து அவர்களது தர்க்கங்களை சிறுமைப்படுத்தியதை வெறுக்கக் கூடியவர்களாக இருந்தனர். ஏன் அவர்களில் அதிகமானோர் நபி (ஸல்) அவர்களுடைய விரோதிகளாகவே காணப்பட்டனர். அவர்களுக்குத் தீங்கிழைக்கக் காத்திருக்கக் கூடியவர்களாகவும், அவர்களைக் கொலை செய்ய சதிசெய்யக் கூடியோராகவும் அவர்கள் இருந்தனர். அது மாத்திரமன்றி, அவர்களுக்கெதிராக மக்களை ஒன்று திரட்டி வாள்களாலும், ஈட்டிகளாலும் அவர்களோடு யுத்தம் புரிந்தனர்.

இது இவ்வாறிருக்க, இந்த ஆச்சரியமான மாற்றம் இக்குறுகிய கால எல்லைக்குள் எவ்வாறு நிகழ்ந்து முடிந்தது? சிலை வணக்கம், அறியாமை, வீழ்ச்சி, பிளவு, போன்றவற்றிலுருந்து இந்த மக்கள் கூட்டத்தினரை மீட்டெடுத்து, அல்லாஹ்வை ஏகனாக ஏற்றுப் பின்பற்றுகின்ற, அவனு டைய உள்ளமையையும் (தாத்), பண்புகளையும் விளங்கிய, ஒரே கலிமா வின் கீழ் அணிதிரண்ட, ஒருமித்த இலக்கும், இட்சியமும் கொண்ட சமூக மாக அவர்களை நபி (ஸல்) அவர்களால் எவ்வாறு மாற்றிவிட முடிந்தது? கடிந்த இயல்பும், பகைமை உணர்வும், கொண்டிருந்த இந்தக் குரூரமான உள்ளங்களின் அன்பை அவர்களால் எப்படி சம்பாதித்துக்கொள்ள முடிந்தது? எந்தவொரு மனிதனும், அவன் எவ்வளவுதான் திறமைமிக்க வனாக, அறிவுக் கூர்மை உடையவனாக, பலமான ஆளுமை பெற்றவனாக இருந்த போதிலும், இந்த நிலையை பல நூற்றாண்டு கால முயற்சியின் விளைவாகக் கூட அடைந்து கொள்வது அசாத்தியமானதாகும்.

ஆரம்ப காலத்திலோ அல்லது பிற்காலத்திலோ தோன்றிய எவரும் இத்தகையதொரு நிலையை அடைந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது றிஸாலத்தையும், வஹியின் வழிகாட்டலையும், அல்லாஹ்வின் உதவியையும், பூரணத்துவமிக்க முழுமையான இந்த மார்க்கத்தின் அற்புதத்தையும் உண்மைப்படுத்திக் காட்டுகின்ற ஆதரமன்றி வேறில்லை. இந்த மார்க்கத்தின் மூலமாகத்தான் அல்லாஹ், அடியார்கள் மீதான தனது அருளையும், மனித சமூகத்துக்கான தூதுகளையும் பூரணப்படுத்தினான்.

மேலும், இந்த மார்க்கத்தின் மூலமாகத் தான் மனோஇச்சைகளுக்கும், குல கோத்திர வெறிகளுக்கும் அடிமைப்பட்டு வாழ்க்கை ஓட்டத்தில் வழி பிறழ்ந்திருந்த சமூகத்தின் துரதிஷ்டத்துக்கு முடிவு கட்டி விடவும், நேர்வழி யின்பால் அவர்களுக்கு வழிகாட்டி, அவர்களது கண்களைத் திறந்து விடவும், சமூகங்களுக்கு தலைமைத்துவம் வழங்கும் பொறுப்பை அவர் களுக்குச் சாட்டி, அதன் மூலம் வரலாற்று ஓட்டத்தையே மாற்றி விடவும், மனித சமூகம் அடைந்திருந்த இழிநிலையைப் போக்கி, அதற்குப் பகரமாக அல்குர்ஆனை நேர்வழிகாட்டியாகவும், அறிவுடையவர்களுக்கு ஞாபக மூட்டக் கூடியதாகவும் வழங்கி விடவும் அல்லாஹ் விரும்பினான்.

நபி (ஸல்) அவர்களைப் பொய்ப்பிப்பவர்களாக இருந்த ஒரு இலட்சத்து பதினான்காயிரம் பேர் நபியை உண்மைப்படுத்துவோராக மாறினர். அவர்களோடு யுத்தம் புரியக் கூடியவர்களாக இருந்த அவர்கள் கீழ்படியக் கூடியவர்களாக மாறினர். நபியை வெறுக்கக் கூடியவர்களாக இருந்த அவர்கள் அவர்களுக்கு அன்பு வைக்கக் கூடியவர்களாக மாறினர். நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக கலகம் செய்யக் கூடியவர்களாக இருந்த அவர்கள் அவர்களுக்கு கட்டுப்படக் கூடியவர்களாக மாறினர். இவை அனைத்தும் இருபத்து மூன்று வருடங்களில் நடந்து முடிந்தன.

சந்தேகமின்றி இவை அனைத்தும் அல்லாஹ்வின் செயலாகும். அவர்கள் இணை வைக்கின்றவற்றிலிருந்து அல்லாஹ் தூரமானவன். நாத்திகர்கள் அல்லாஹ்வினுடைய தூதர் குறித்து குறிப்பிடுகின்றவற்றி லிருந்து நபி (ஸல்) அவர்கள் தூய்மையானவர்கள். அவர்கள் வர்ணிப்பதை விட்டும், கண்ணியத்தின் இறைவனான உம்முடைய இறைவன் தூயவன். மேலும் முர்ஸல்(களான அவன் தூதர்)கள் மீது ஸலாம் உண்டாவதாக. வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் (இன்னும் புகழ் அனைத்தும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தாகும்).

பிரியாவிடை ஹஜ்ஜில் கவனத்தை ஈர்க்கும் இரண்டாவது விடயம் என்னவெனில், றஸூல் (ஸல்) அவர்கள் முழு மனித சமூகத்துக்கும் ஆற்றிய மதிநுட்பமானதும் பலமிக்கதுமான இந்தப் பிரசங்கமாகும். தனது தலைமைத்துவத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து தன்னுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிஸாலத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் நபி (ஸல்) அவர்கள் அறிவிப்புச் செய்த அடிப்படைகள், அவர்கள் தஃவாவின் ஆரம்பத்திலே தனிமையாகவும், இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்டும், அவர்களைப் பின்பற்றுபவர்கள் எண்ணிக்கையில் குறைந்தோராகவும் பலவீனமுற்ற நிலையிலும் இருந்த வேளையில் அறிவிப்புச் செய்த அடிப்படைகளை வலியுறுத்துவனவாகவே அமைந்திருந்தன.

எனவே, சிறுபான்மையாக இருந்தபோதும், பெரும்பான்மையாக இருந்தபோதும், யுத்த சூழலிலும் சமாதான சூழலிலும், வெற்றியின் போதும் தோல்வியின்போதும், உலகம் நிராகரிக்கும் வேளையிலும் அங்கீகரிக்கும் வேளையிலும், எதிரிகள் பலம் பெற்ற நிலையிலும் பலவீனப்பட்ட நிலையிலும் மாறாது நிலைத்து நிற்கும் அடிப்படைகளாக அவை காணப்பட்டன. ஆனால், ஏனைய உலகத் தலைவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அகீதாவையும், அடிப்படைகளையும் மாற்றிக் கொள்ளக் கூடியவர்களாகவும், பலத்திலும் பலவீனத்திலும் தங்கி நிற்கக் கூடியவர்களாகவும், இலக்குகளையும் வழிமுறைகளையும் மாற்றிக் கொள்ளக் கூடியவர்களாகவும், உள்ளொன்று புறமொன்று காட்டி செயலாற்றக் கூடியவர்களாகவும், தாம் நம்பிக்கை கொள்ளாதவற்றின் பால் அழைப்பு விடுக்கக் கூடியவர்களாகவும், பலவீனத்தின்போது துறவு ஆடை அணியக் கூடியவர்களாகவும், பலத்தின்போது ஓநாய்த் தோலைப் போர்த்திக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருந்ததை நாம் வரலாற்றிலே கண்டிருக்கிறோம்.

காரணம் இவர்கள் சுயநலன்களின் தூதுவர்கள். ஆனால், அவர்களோ அல்லாஹ்வின் தூதரவர்கள். பிணங்களின் மீது சவாரி செல்வோருக்கும் ஒளிமயமான கடலில் நீந்திச் செல்வோருக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கிறது. சுயநலனுக்காக செயற்படுவோருக்கும் மனித இனத்துக்காக செயற்படுவோருக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கிறது. ஷைத்தானின் நேசர்களுக்கும் அருளாளனான அல்லாஹ்வின் நேசர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கிறது.

> "அல்லாஹ்வே நம்பிக்கை கொண்டவர்களின் பாதுகாவலன் (ஆவான்). அவன் அவர்களை இருள்களிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் கொண்டு வருகின்றான். ஆனால் நிராகரிப்பவர்களுக்கோ -(வழி கெடுக்கும்) ஷைத்தான்கள் தாம் அவர்களின் பாதுகாவலர் கள். அவை அவர்களை வெளிச்சத்திலிருந்து இருள்களின் பக்கம் கொண்டு வருகின்றன. அவர்களே நரகவாசிகள். அவர்கள் அதில் என்றென்றும் இருப்பர்." (அல் பகரா: 257)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. உஸாமாவின் தலைமையில் படையனுப்புதல்

தஃவாவைப் பரப்பவும், புதிய முஸ்லிம் தேசத்துக்கெதிரான ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதல்களுக்கும், சூழ்ச்சிக்காரர்களின் சுழ்ச்சிகளுக்கும் பதிலடி கொடுக்கவும் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட இறுதிப் பணி உஸாமா பின் ஸைத் (றழி) அவர்களின் தலைமையில் ஒரு படையை சிரியாவை நோக்கிச் செல்லவென தயார் செய்தமையாகும்.

படையை பலஸ்தீன் பூமியின் 'அல்பல்கா', 'அத் தாரூம்' எல்லைகளுக்கு நகர்த்திச் செல்லுமாறு நபி (ஸல்) அவர்கள் அவருக்குக் கட்டளையிட்டார்கள். படையில் அனைத்து முஹாஜிர்கள், அன்ஸாரிகள் உட்பட மதீனாவைச் சூழவிருந்த முஸ்லிம்களும் இடம்பெற்றிருந்தனர். அவர்களில் எவருமே பின்வாங்கவில்லை. படை மதீனாவுக்கு வெளியே பயணத்தைத் தொடர்வதற்காகத் தயாரானபோது நபி (ஸல்) அவர்கள் நோய்வாய்ப் பட்டார்கள். இந்நோயின் காரணமாகவே அவர்கள் வபாத்தானார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நபி (ஸல்) அவர்கள் குணமடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்போடும், அவர்களுடைய போதனைகளையும் வழிகாட்டலையும் பெற்றுக்கொள்ளும் விருப்பத்தோடும் படை நகராது மதீனாவிலேயே தரித்து நின்றது. எனினும், சில நாட்களில் நபி (ஸல்) அவர்கள் வபாத்தானார்கள். அல்லாஹ் அவர்களை தன் பக்கம் தெரிவுசெய்து கொண்டான். அவ்வேளையில் அவர்கள் தனது பொறுப்பை நிறைவேற்றி, தன்மீது சுமத்தப்பட்டிருந்த றிஸாலத்தை எத்தி வைத்திருந்தார்கள். இஸ்லாத்தின் கொடியைச் சுமப்பதற்கும், அதன் நாகரிகத்தையும், போதனைகளையும் பூமியின் எல்லாப் பாகங்களிலும் பரப்பிவிடவும் அவ்வேளையில் முழு அறபுத் தீபகற்பத்தையும் தயார்செய்து வைத்திருந்தார்கள்.

வரலாற்றில் பாரிய தாக்கத்தைக் கொண்டு வந்த இந்த அமானிதத்தை சுமக்கும் பணியை மேற்கொள்ளக் கூடிய ஒரு படை உருவாகி இருந்தது. யுத்தங்களில் குதிக்கவென தூய்மையான படை வீரர்களும், அந்த யுத்தங்களை வழிநடாத்திச் செல்லவென தகைமையுடைய தலைவர்களும் தயார்நிலையில் இருந்தார்கள். மாத்திரமன்றி இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் நிருவாகத்தைக் கொண்டு நடாத்தக் கூடிய தூய்மையான உயர்ந்த மனிதர்களும் உருவாகியிருந்தார்கள். எனவே, அல்லாஹ் அவனுடைய தூதர் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக. அல்லாஹ் அவர்களுக்கு எங்கள் சார்பாகவும் முழு மனித இனத்தின் சார்பாகவும் சிறந்த கூலியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவானாக. அவர்களும், தம் மீது சுமத்தப்பட்ட அமானிதத்தை சரிவர நிறைவேற்றிய அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான படை வீரர்களும் இருந்திராவிட்டால் நாம் இப்போது தெளிவான வழிகேட்டி லேயே இருந்திருப்போம்.

அல்லாஹ் இதற்கு முன்னர் வேறு எந்த நபிக்கும் வழங்காத கண்ணி யத்தை தன்னுடைய தூதர் (ஸல்) அவர்களுக்கு வழங்கினான். அவர்கள் தன்னுடைய தஃவாவினதும் போராட்டத்தினதும் விளைவு அறபுத் தீபகற்பம் முழுவதையும் சூழ்ந்து கொள்வதைப் பார்க்கும் வரை அவர் களுடைய வாழ்வு நீண்டு சென்றது. விளைவாக அறபுத் தீபகற்பத்திலிருந்த சிலைகள் அனைத்தும் நிரந்தரமாக அழிக்கப்பட்டன. அச்சிலைகளை தமது கைகளாலேயே தகர்த்தெறிந்த அம்மக்கள் தம்மை வழிகேட்டிலிருந்து காப்பாற்றிய அல்லாஹ்வின் அருளை எண்ணி மகிழ்ச்சியுற்றனர். ஏனெனில், இதற்கு முன்னர் இந்தச் சிலைகளை அவர்கள் தான் வணங்கி வந்தனர். அவற்றுக்கு சிரம் தாழ்த்தி (ஸுஜூது செய்து) தமது முகங்களில் தூசு படிந்திடச் செய்து கொள்ளக் கூடியவர்களாகவும், அவற்றின் நெருக்கத்தை வேண்டக் கூடியவர்களாகவும் இருந்தனர். பின்னர் அவர்கள் அல்லாஹ் தமக்கு அருளாக வழங்கிய நேர்வழியின் ஒளியை ஏந்திக் கொண்டு பூமியில் பரந்து செல்வதற்கு பூரணமாகத் தயாரானார்கள்.

சிலைகளை கடவுளர்களாக எண்ணி அவற்றை வணங்கிய, திறமை களையும், தகைமைகளையும் சிதறவிட்டு பொடுபோக்காய் அறியாமை யில் வாழ்ந்த அதே பரம்பரைதான், சிலைகளை உடைத்தெறிந்து முழு அறபுலக வரலாற்றிலும் முதலாவது அறபு தேசத்தை உருவாக்கிக் கொண் டது. அந்த தேசம் அல்லாஹ்வின் தூதை சுமந்ததாகவும் இலக்குகளை வரையறுத்துக் கொண்டதாகவும் இருந்தது. சூழ இருந்த அனைத்து பலமிக்க சமூகங்களையும் ஒரு ஆசிரியரின், பாதுகாவலரின், நன்மை ஒளி நேர்வழி என்பவற்றைச் சுமந்த பெருமைமிக்க முன்னோடியின் கண் கொண்டு பார்க்கக் கூடியதாக அத்தேசம் காணப்பட்டது. மேலும், அறியாமை, இருள், ஒழுக்க வீழ்ச்சி போன்றவற்றின் காரணமாக வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த சமூகங்களை மிகுந்த கவலையுடன் நோக்குகின்ற தேசமாக அது இருந்தது.

இது இவ்வாறிருக்க, இஸ்லாத்திற்கு முன்னர் அறபு சமூகத்தினர் சூழவிருந்த அந்த சமூகங்களை மிகுந்த கௌரவம் கொடுத்தே நோக்கி வந்தனர். அரசியல், சிந்தனை, சமூக மட்டங்களில் அவர்களை விடத் தம்மைத் தாழ்நிலை அந்தஸ்துடையோராகவே அவர்கள் கருதி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றின் ஆரம்பம் முதல் இன்றுவரை நிகழ்ந்த தனித்துவமான நிகழ்வாக இது காணப்படுகிறது. உஸாமா (றழி) அவர்களின் தலைமையில் படையனுப்பியமை குறித்த நிகழ்வின் முகவரியாகவும், அருள்பாலிக்கப் பட்ட இந்த றிஸாலத்தின் விளைவுகளில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

நபி (ஸல்) அவர்கள், இருபது வயது மாத்திரமே நிரம்பிய இளைஞராக இருந்த உஸாமா இப்னு ஸைதிடம் படையின் தலைமைப் பொறுப்பை வழங்கினார்கள். படையில் அவருக்குக் கீழே அபூ பக்ர், உமர், உஸ்மான், அலி போன்ற அன்ஸாரி, முஹாஜிர்களைச் சேர்ந்த பெரிய ஸஹாபாக்களும் அடங்கியிருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றவர்களில் முதன்மை யானவர்களாகவும், அதற்காக பாரிய தியாகங்கள் புரிந்தோராகவும், வயதிலும் அந்தஸ்திலும் உஸாமாவை விட மேலானவர்களாகவும் காணப்பட்டார்கள்.

இந்த நடவடிக்கையானது இஸ்லாத்தில் காணப்படு கின்ற சிறந்தமொரு முன்மாதிரியை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அதாவது, இஸ்லாம் மனிதர்களில் காணக்கூடிய வயது, அந்தஸ்து, புகழ் வேறுபாடுகளை நீக்கி, பொருத்தமானவர்களை அவர்களது வயது, அந்தஸ்து போன்றவற்றைக் கவனத்திற் கொள்ளாது முன்னிலைப்படுத்தும். வரலாறு என்றுமே தோற்றுவிக்காத, திறமைகளும் கௌரவமும் பொருந்திய இந்த ஸஹாபாக் கள் உஸாமா என்ற இளைஞரின் தலைமைக்கு கட்டுப்பட உடன்பட்டார் கள். இது நபி (ஸல்) அவர்களின் சிறப்பான வழிகாட்டல், பயிற்றுவிப்பின் காரணமாக அவர்கள் அடைந்திருந்த பண்பாட்டு, ஆன்மீக பக்குவ நிலையை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

அபூபக்ர் (றழி), உமர் (றழி), உஸ்மான் (றழி), அலி (றழி) போன்றவர் களுக்குத் தலைவராக உஸாமா (றழி) அவர்களை நியமித்தமையானது, எந்தவொரு சமூகமும் காணாத ஒரு முன்மாதிரிமிக்க நிகழ்வாகும். இது தகைமைகளும், திறமைகளுமிக்க இளைஞர்கள் விவகாரங்களை நிருவகிப் பதற்குப் பொருத்தமானவர்களாக உருவாகும் பொருட்டு அவர்களுக்கு களத்தைத் திறந்து கொடுத்து, வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் அவசியத்தை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. முஸ்லிம் சமூகத்தினர் இந்த உயர்ந்த பாடத்தை தொடர்ந்தும் ஞாபகப்படுத்திக் கொள்ளக் கூடியவர் களாக இருந்திருந்தால் நிச்சயம் இஸ்லாமிய வரலாற்றிலே ஏற்பட்ட சோதனைகளும் அழிவுகளும் ஏற்பட்டிருக்க மாட்டாது.

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தைப் பலவீனப்படுத்தி அதன் நிலைகளை ஆட்டங்காணச் செய்த பிரச்சினைகளும், குழப்பங்களும் ஒருபோதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்திருக்க மாட்டா. வஹியின் வழிகாட்டலைப் பெற்ற, அறிவும் தீர்க்கதரிசனமும், தூரநோக்கும், சிறந்த அரசியல் சாணக்கியமும் வழங்கப் பட்ட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எடுத்த இந்த நடவடிக்கை சிறப்பானது. இத்தகைய திறமைகள் வேறு எந்த நபிக்கும் வழங்கப்பட்டி ருக்கவில்லை. வரலாற்றில் என்றுமே இத்தகையதொருவர் தோன்றவு மில்லை.

இளைஞராக இருந்த உஸாமா (றழி)யை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக. அவரிடம் காணப்பட தலைமைத்துவத்துக்கான தகைமை, உறுதி, இஸ்லாத்துக்கு சேவை செய்வதற்கான திடசங்கற்பம் போன்றனவற் றில் நபி (ஸல்) அவர்கள் வைத்த உறுதியான நம்பிக்கைக்காக அவர் மீது சுபசோபனம் உண்டாவதாக. அல்லாஹ் அவரைப் பொருந்திக்கொண்டு களத்திலே இருக்கின்ற எமது முஃமினான இளைஞர்களுக்கான முன் மாதிரியாக அவரை ஆக்கிவிடுவானாக.

## 6. றஸூல் (ஸல்) அவர்களின் மரணம்

றஸூல் (ஸல்) அவர்கள் வஹியினூடாக தன்னுடைய மரணம் நெருங்கி வருவதை அறிந்து கொண்டார்கள். எனவே, பிரியாவிடை ஹஜ்ஜின்போது (ஹஜ்ஜதுல் வதா) அவர்கள் மக்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார் கள். நபி (ஸல்) அவர்களுடைய இறுதிக் காலம் நெருங்கிவிட்டதோ என்ற அச்சத்தில் ஸஹாபாக்களின் உள்ளங்கள் கலக்கமுற்றன. எனினும், அல்லாஹ்வுடைய காலக்கெடு (அஜல்) நெருங்கிவிட்டால் அது ஒரு போதும் பிற்படுத்தப்பட மாட்டாது.

இதன்படி நபி (ஸல்) அவர்கள் வபாத்தானார்கள். இந்தச் செய்தி பரவியதும் ஒரு பெரும் அனர்த்தம் ஏற்பட்டதுபோல ஸஹாபாக்கள் அனை வரும் குழம்பிப் போய் இருந்தார்கள். மதீனா நகரம் முழுவதும் ஒரு அதிர்வு ஏற்பட்டதுபோல இருந்தது. ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்ற பெரிய ஸஹாபாக்களில் பெரும்பாலானவர்கள் புத்தி பேதலித்துப் போயினர். சிலர் பேச முடியாது போயினர். இன்னும் சிலர் செயலற்றுக் கிடந்தனர். உமர் (றழி) அவர்களோ தனது வாளை உறுவியவாறு, நபி (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என மக்கள் கூறுவதைத் தடுத்துக் கொண்டும், நபி (ஸல்) அவர்கள் மறைந்திருக்கிறார்கள், அவர்கள் நிச்சயம் அவர்களிடத் திலே திரும்பி வருவார்கள் என வாதிட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

ஆனால், அபூ பக்ர் (றழி) அவர்கள் மாத்திரம் உறுதியாக இருந்து, நபி (ஸல்) அவர்களது பொன்னான மேனி வைக்கப்பட்டிருந்த விரிப்புக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அவர்களை முத்தமிட்டு விட்டு, பின்வருமாறு கூறினார்கள்: ''அல்லாஹ்வின் தூதரவர்களே எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! நீங்கள் உயிரோடு இருந்த வேளையிலும், மரணித்த வேளையிலும் எவ்வளவு சிறப்புக்குரியவர்களாக இருக்கின்றீர்கள். உங்கள் மீது அல்லாஹ் எழுதி வைத்த மரணத்தைப் பொறுத்தமட்டில் அதனை நீங்கள் சுவைத்து விட்டீர்கள். இதன் பிறகு உங்களுக்கு மரணம் என்ற ஒன்று ஒருபோதும் ஏற்பட மாட்டாது. அல்லாஹ்வின் தூதரவர்களே! நீங்கள் உங்களுடைய இரட்சகனிடத்திலே எங்களை ஞாபகப்படுத்துங்கள்.''

பின்னர் அபூபக்ர் (றழி) அவர்கள் மக்களிடம் வந்து பின்வருமாறு உபதேசித்தார்கள்: ''மனிதர்களே! யார் முஹம்மதை (ஸல்) வணங்கிக் கொண்டிருந்தார்களோ, நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள். யார் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருந்தார்களோ, நிச்சயமாக அல்லாஹ் உயிரோடு இருக்கிறான். அவன் ஒருபோதும் மரணித்து விட மாட்டான்.''

பிறகு பின்வரும் வசனங்களை ஓதினார்கள்.

''முஹம்மது (ஸல்) (இறைவனின்) தூதரே அன்றி (வேறு) அல்லர். அவருக்கு முன்னரும் (அல்லாஹ்வின்) தூதர்கள் பலர் (காலம்) சென்று விட்டார்கள். அவர் இறந்து விட்டால் அல்லது கொல்லப்பட்டால் நீங்கள் உங்கள் குதிகால்களின் மேல் (புறங்காட்டித்) திரும்பி விடுவீர்களா? அப்படி எவரேனும் தம் குதிகால்கள் மேல் (புறங்காட்டி) திரும்பி விடுவாரானால் அவர் அல்லாஹ்வுக்கு எவ்விதத் தீங்கும் செய்துவிட முடியாது. அன்றியும், அல்லாஹ் நன்றியுடையோருக்கு அதிசீக்கிரத்தில் நற்கூலியை வழங்குவான்.'' *(ஆல இம்ரான்: 144)*

இந்த வசனங்களை அபூபக்ர் (றழி) அவர்கள் ஓதியதும் ஸஹாபாக்கள் அதிர்ச்சியிலிருந்து மீண்டார்கள். உண்மையில் அவர்கள் இந்த வசனங்களை இதற்கு முன்னர் கேட்டிராதது போன்று அவர்களுக்கு இருந்தது. உமர் (றழி) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக அபூபக்ர் (றழி) இந்த வசனங்களை ஓதக் கேட்டபோது நான் திடுக்குற்று குழம்பிப் போனேன். இதனால் எனது இரு கால்களும் என்னைச் சுமக்க மறுத்து பூமியில் விழுந்தேன். இதன் மூலம் றஸூல் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டதை அறிந்து கொண்டேன்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே இரண்டு மிக முக்கியமான பாடங்கள் காணப்படுகின்றன.

**முதலாவதாக:** றஸூல் (ஸல்) அவர்களுடைய வபாத் குறித்து அறிந்த ஸஹாபாக்கள் திடுக்கமடைந்தார்கள். உயிர் வாழும் ஒவ்வொரு படைப்பினத்தினதும் முடிவு மரணமென்பதை அவர்கள் அறிந்திருந்த போதிலும் அது நபி (ஸல்) அவர்களை பீடிக்கவே மாட்டாது என்ற எண்ணம் கொண்டவர்கள் போன்று அவர்கள் இருந்தார்கள். உண்மையில் அவர்களுடைய இரத்தத்தோடும், நரம்பு நாளங்களோடும் இரண்டறக் கலந்து காணப்பட்ட நபி (ஸல்) அவர்கள் மீதான மேலான அன்பு மாத்திரமே இத்தகையதொரு நிலையை அவர்களிடம் தோற்றுவித்தது.

நேசத்துக்குரியவர்களின் இழப்பினால் ஏற்படும் அதிர்ச்சியானது வைத்துள்ள நேசத்தின் அளவினாலேயே தீர்மானிக்கப்படும். ஒருவர் தனது தந்தையை அல்லது குழந்தையை இழக்கின்றபோது அவர் அடைகின்ற கடுமையான மனவேதனையை நாம் கண்டிருக்கிறோம். அவர் பல நாட்களாக தொடர்ந்தும் தனது உறவுக்குரியவர் இறந்ததை நம்ப முடியாதவராக இருப்பதை நாம் அவதானித்திருக்கிறோம். உண்மையான இந்த ஸஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதரவர்கள் மீது கொண்டிருந்த தளராத அன்பின் அளவுடன் உலகில் உள்ள வேறு எந்த அன்பையும் ஒப்பிட்டுக் கூடப் பார்க்க முடியாது.

ஏனெனில், அல்லாஹ் நபி (ஸல்) அவர்களின் மூலமாகவே அவர்களுக்கு நேர்வழி காட்டினான். அவர்களை இருளிலிருந்து ஒளியின் பால் மீட்டெடுத்தான். அவர்களது வாழ்க்கையமைப்பையே மாற்றி விட்டான். அவர்களது பார்வைகளையும் அறிவையும் திறந்து விட்டான். அவர்களை சிறப்புப் பொருந்திய தலைவர்களின் தரத்துக்கு உயர்வடையச் செய்தான். அத்துடன், நபி (ஸல்) அவர்கள் தன்னுடைய வாழ்க்கைக் காலத்தின்போது அவர்களுடைய பயிற்றுவிப்பாளராக, நீதிபதியாக, வழிகாட்டியாக இருந்து செயற்பட்டார்கள்.

எனவே, ஸஹாபாக்கள் ஆபத்துக்களின்போது அவர் களிடமே ஒதுங்கக் கூடியவர்களாகவும், அனைத்து நிகழ்வுகளின்போதும் அவர்களிடமே வழிகாட்டல்களைப் பெறக்கூடியவர்களாகவும் காணப்பட்டார்கள். மேலும், அவர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்தே அல்லாஹ் வினுடைய வஹியின் வழிகாட்டல்களையும், அவர்களுடைய ஹதீஸ் போதனைகளையும் பெறக்கூடியவர்களாக இருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகியபோது இவையனைத்துமே துண்டிக்கப்பட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இதனை விட அதிர்ச்சியும் அதிக தாக்கமும் விளைவிக்கக் கூடிய நிகழ்வு வேறு எதுவாக இருக்க முடியும்.

**இரண்டாவதாக:** நபி (ஸல்) அவர்களுடைய வபாத்தின்போது அபூபக்ர் (றழி) அவர்கள் எடுத்த நிலைப்பாடானது, அவர்கள் துன்பங்களின்போது அமைதியாகவும், உறுதியாகவும் இருந்து செயற்படக் கூடிய -வேறு எந்த ஸஹாபியும் பெற்றிராத- திறமை பெற்றவர்களாக இருந்தார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இதுவே, றஸூல் (ஸல்) அவர்களைத் தொடர்ந்து, கிலாபத் பணியைச் சுமப்பதற்கு மிகவும் பொருத்தமானவராக அவர்களை மாற்றியது. அறபுத் தீபகற்பத்திலே (ரித்தத்) மதம் மாறியோர் பிரச்சினை தலைதூக்கியபோது அவர்கள் எடுத்த நடவடிக்கையானது இவ்வுண்மையை மேலும் உறுதிப்படுத்திக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

குறிப்பு: நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கைச் சரிதை தொடர்பாக இரண்டாம் வருட மாணவர்களுக்கு நிகழ்த்திய சுருக்கமான விரிவுரைகள் இத்துடன் நிறைவுக்கு வருகின்றன. இவ்விரிவுரைகளின் தொடரில் இன்னும் நான்கு பகுதிகள் எஞ்சியுள்ளன. முதலாம் ஆண்டு அறிமுகக் குறிப்பிலே குறிப்பிட்டதைப் போன்று, பாடத் திட்டத்திலே வரையறுக்கப் பட்டுள்ள ஏனைய பகுதிகளை எழுதுவதற்கு காலம் இடம் தரவில்லை. பாடத் திட்டத்திலே உள்ள எஞ்சிய பகுதிகளை எழுதி முடிப்பதற்கு அல்லாஹ் எனக்கு வாய்ப்பேற்படுத்தித் தருவானாக.

இறுதியாக எங்களுடைய பிரார்த்தனை, நிச்சயமாக புகழனைத்தும் உலகங்களைப் பரிபாலிக்கும் இரட்சகன் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரித்துடையதாகும்.

FAIZAL FAREED
AHATHTHIMUGIPU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# السيرة النبوية

## دروس وعبر

الدكتور مصطفى السباعي

تبرع : لجنة السنابل الخيرية – دولة الكويت
تنفيذ : جمعية الرحمة السيلانية

Distributed by: Mercy Lanka

وزع مجاناً ولا يباع

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org